
கவிதைச்
சிரிப்பினிலே!
ஜெய்சக்தி

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : கவிதைச் சிரிப்பினிலே! |
| ஆசிரியர் | : ஜெய்சக்தி |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : செப்டம்பர், 2007 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| மொத்தப் பக்கங்கள் | : 288 |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : ஸ்ரீ செல்வ நிலையம்<br>தபால் பெட்டி எண்: 5571<br>பு.எண்: 32/1, ப.எண்: 107/1,<br>கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-14. |

**விலை: ரூ.90.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர்<br>சென்னை-18. ☎ 94441-01753 |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்<br>சென்னை-14. |


# கவிதைச் சிரிப்பினிலே!

# கவிதைச் சிரிப்பினிலே!

## 1

''ஹலோ! இறைவி.. நல்லாருக்கியா?''

''ம்.. நல்லா இருக்கேன்.. பிரயாணம் நல்லாயிருந்துதா?''

''ம்.. நல்லா இருந்துச்சு.. ஆனாலும்.. நீ இப்படி பதில் சொல்வேன்னு நான் எதிர்பார்க்கலை!''

இறைவிக்குப் புரியவில்லை.

''என்ன.. அறிவழகன்.. சொல்றீங்க..! புரியலை..!?''

''பின்னே! இங்க வந்து மூணு நாள்தான்.. ஆச்சு..! உன்னைப் பாக்காம.. தொந்து நூலாயிட்டிருக்கேன்.. நீ என்னடான்னா.. கூலா.. நல்லாயிருக்கேன்னு சொல்றியே!''

''ஓ..!'' என்று சற்றே தெளிந்தாள் இறைவி.

''இல்லே! நானும் அப்படித்தான்.. அதை வேற சொன்னா.. உங்களுக்கு.. இன்னும் கஷ்டமாகுமே.. அதான்..!''

''அதானே.. பார்த்தேன்! இப்பத்தான் மனசு ஆறுச்சு..!''

''ஆனாலும்.. ரொம்ப நல்ல எண்ணம்ங்க உங்களுக்கு.. நான் மட்டுமில்லே.. நீயும் கஷ்டப்படணும்னு சொல்றீங்களே..!'' என்றாள்.

''ஹேய்! அடிப்படை விஷயமே புரிஞ்சுக்காம பேசறே.. இந்த விஷயத்துல மட்டுமே அவங்களைப் பிரிஞ்சு நாம கஷ்டப் படறோம்ங்கறதைவிட நமக்காக ஏங்கி அவங்களும் கஷ்டப் படறாங்க அப்படிங்கறதுதான் சுகமே.. தெரியுமா..?''

அவள் மௌனித்தாள்.

அறிவழகனின் குரலில் மாற்றம் ஏற்பட்டது.

''ஹேய்! என்ன பேச்சைக் காணோம்?''

''பேச்சு.. வர்லே!'' என்று முணுமுணுத்தாள்.

''தட்ஸ்.. எ குட்.. கேர்ள்!'' என்றான். சற்று நேரம் மெல்லிய குரலில் அவள் முகம் சிவந்து போய்க் கேட்டுக் கொண்டிருக்கும் வகையில் பேசினான். பிறகு அவள் தவிப்பைப் புரிந்தவனாய் வேறு விஷயம் பேச ஆரம்பித்தான்.

''அந்தத் தடியன்.. என்ன ஆனான்?!''

''அண்ணன் ஆபீசுக்குப் போயிருக்காரு!''

''அடடா! பொறுப்பு வந்திருச்சாக்கும். இந்நேரம் அங்கே எட்டு மணியிருக்குமே.. இந்த நேரத்துக்கா.. போயிருக்கான்?''

''தெரியலை! ஏதோ போன் வந்துச்சு.. போனவ. போயிருக்காரு!'' என்றாள்.

''ஹைய்யோ! திடீர்னு வே பொறுப்பு வந்துருச்சு..'' என்றான்.

''இறைவி! உனக்கு இங்கே இருந்து என்ன வேணும்?''

''நீங்க பத்திரமா, சந்தோஷமா திரும்பி வந்தா.. போதும்..!''

''அது இருக்கவே.. இருக்கு! ஆனா, கொஞ்சம் இளைச்சுத்தான் வருவேன்னு நினைக்கறேன்'' என்றான்.



''ஏன்.. அங்க ஃபுட் சரியில்லையோ?''

''ஃபுட்டெல்லாம் நல்லாத்தான் இருக்கு.. ஆனா.. எங்கயும் வெளிய போகவே பிடிக்கலை. எல்லா.. இடத்திலயும்.. சே! இறைவி இல்லாமல் போனாளே! இறைவி.. இருந்தா எவ்வளவு நல்லா இருக்கும்னே.. மனசு மக்கர் செய்யுது..''

''போதும்.. எம்.டி.. சார்! வழியாதீங்க!'' என்றாள்.

''ஹேய்.. அது.. எம்ப்டின்னு காதில விழுருது.. உண்மையாவே.. நீ கூட இல்லாம எம்ப்ட்டியாத்தான் ஃபீல் பண்றேன்..''

இறைவிக்கும் மனம் உருகியது போலும். ''ப்ளீஸ்! கல்யாணத்துக்கப்புறம் சேர்ந்து போனாப் போச்சு.. நீங்க அங்கே ஹாப்பியா என்ஜாய் பண்ணிட்டு வந்தாத்தான் எனக்கு மனசுக்கு நல்லா இருக்கும்..''

''ஓ.கே! அப்ப.. எனக்கு ஒரு சில சலுகைகள் கிடைக்கணும்..''

''என்ன?''

''நைட் டைம்ல கூப்பிட்டாப் பேசணும் என்ன?''

''ம்..! ஆனா.. எக்குத் தப்பா.. பேசக்கூடாது!''

''போச்சுரா! அப்புறம் எதுக்குக் கூப்பிடணும்'' - என்று சோகமானான். பிறகு தெளிந்தவன் போல், ''சரி! குரலை யாவது கேட்கலாமில்லே! பேசறேன்!'' என்றான்.

மேலும் சற்று நேரம் நெகிழ்ந்தாற் போல் பேசி விட்டு,

''அந்தச் செந்தில் தடியனைப் பேசச் சொல்லு!'' என்றான்.

''ம்.. சரி!'' என்றாள் இறைவி.

''வைக்கட்டுமா..?'' என்றவன் ''ஹேய்! சின்னதா.. ஒரு கிஃப்ட் கொடேன்'' என்றான்.

கொடுத்தாள்...

''தேங்க்ஸ்! இப்போதைக்கு இது போதும்!'' என்று போடி வைத்து விட்டு போனை வைத்தான்.

இறைவி மலர்ந்த முகத்துடனும், நிறைந்த சிரிப்புடனும் சிவரை அதன் தொட்டியில் வைத்தாள்.

அந்தப்புறம் அவன் உருகுவது அவளுக்கும் கொஞ்சம் சுகமாகத்தான் இருந்தது.

செந்தில்குமரன் அவள் சகோதரன். அறிவழகன் செந்திலுக்கு இளம் வயதிலிருந்தே நண்பன்.

பள்ளி நாட்களில் இருவரும் ஒன்றாகவே சுற்றிக் கொண்டிருப்பார்கள்.

பள்ளிப் படிப்பு முடித்தவுடன் அறிவழகன் விருப்பப்பட்டு ஆட்டோமொபைல் என்ஜினியரிங் கோர்ஸ் எடுத்தான்.. ஆனால், என்ஜினியரிங் படிப்புக்கு செலவு செய்வதற்கு இறைவி குடும்பத்தில் வசதியிருக்கவில்லை.

அறிவழகன் சென்னைக்குச் சென்று விட்டான். செந்தில் தட்டுத் தடுமாறி ஒரு டிப்ளமாவை முடித்தான்.

லயன்ஸ் கிளப் ஏற்பாடு செய்திருந்த ஒரு நிகழ்ச்சிக்குப் போயிருந்தான் அறிவழகன். செந்தில்குமரன் நண்பன் ஒருவனின் அழைப்பின் பேரில் அந்த நிகழ்ச்சிக்குப் போயிருந்தான்.

அறிவழகன் அந்தக் கூட்டத்தில் உரையாற்றினான். முதலில் செந்திலுக்கு அவனை அடையாளம் தெரியவில்லை. வெட வெடவென்று தன்னோடு சுற்றிக் கொண்டிருந்த ஒருவன், இப்போது பளபளப்புடன் கம்பீரமாய் பணத் திமிரேறிய பெருமையோடு கோட் சூட்டோடு மிகவும் கம்பீரமாக நின்றபடி எல்.சி.டி.யின் உதவியோடு புள்ளி விவரங்களைத் திரையில் காட்டி விளக்குவதை ஒருவித வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் குமரன்.

அதிக பட்சம் நூறு பேர் அந்த அறையில் அமர்ந்திருப்பார்கள். ஆனால், அவர்கள் அத்தனை பேரும் மதுரையின்



முக்கியப் புள்ளிகள். சொல்லப் போனால் அந்த மீட்டிங்கில் எல்லா விதமான மனிதர்களும் இருந்தார்கள்.

செந்தில்குமரனின் புத்திசாலித் தனத்தின் மேல் நம்பிக்கை வைத்திருக்கிற ஒரு தொழில் குடும்பத்தை சார்ந்த நண்பனோடு நட்புக் கொண்டு வந்திருந்தான்.

ஒரு சந்தேகம் அவனுக்குள் இருந்தது.

'இது.. நம்மோட ஃப்ரெண்ட் அறிவழகனா இருக்குமோ!' என்று, முதல் பார்வையில் ஏற்பட்ட குழப்பம் ஓரிரு நிமிடங்களில் தெளிவாகிப் போனது.

'அவனேதான்!' என்று. ஆனால் இப்போது அவன் நிற்கிற தோரணையைப் பார்த்தால் தன்னைத் தெரியும் என்று சொல்லிக் கொள்வது கூட அவசியமா என்ற சந்தேகம் எழுந்தது. அதனால் அமைதியாக இருந்து கொண்டான். அதே சமயம்!

அறிவழகனின் பார்வை அவன் மேல் ஒரு நிமிடம் படிந்தாற் போல் தோன்றியது. தன்னை தெரிந்து கொள்ளக் கூடுமா என்ற நப்பாசை மறுமுறையும் தோன்றியது. தயக்கம் மேலோங்கியது. ஆனால், பேசுபவர்கள் எல்லாரும் பேசி முடித்ததற்குப் பின்பு டின்னர் இருந்தது.

வழக்கம் போல் பஃபே சிஸ்டம் என்பதால் எல்லாரும் சிறு குழுக்களாகப் பிரிந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

செந்தில்குமரனின் நண்பன் யாரையோ பார்க்க அந்தப் பக்கம் போயிருந்த சமயம் செந்தில்குமரன் விட்டத்தை வேடிக்கை பார்க்கிறாற் போல் நடித்துக் கொண்டு நின்றிருந்தான்.

'படு பாவிப் பய! இப்படி அந்துவானமா விட்டுப் புட்டுப் போயிட்டானே!' என்று மனதுக்குள் திட்டியபடி நின்று கொண்டிருந்தான். அப்போது அணிந்திருந்த கோட்டின் இரண்டு முன் பகுதிகளும் அவனுக்கு முன்னாலே நீட்டிக்

கொண்டு வர தனது கம்பீர நடை நடந்து வந்தான் அறிவழகன்.

"நீங்க... நீங்க.. செந்தில்தானே!" என்றான்.

"ஆமா... நீங்க... நீங்க..." என்று அவன் தடுமாறுகையிலேயே.

"டேய்! என்னைத் தெரியலையாடா?" என்று கட்டிக் கொண்டான் அறிவழகன்.

வலது கையில் இருந்த தட்டைப் பிடித்தபடி இடக்கையால் அவன் தோளை வளைத்துப் பிடித்துக் கொண்டான்.

முகமெல்லாம் மலர்ந்தது!

"அறிவு! டேய்!" என்றவன் நாக்கைக் கடித்துக் கொண்டான்.

"கூப்பிடு.. கூப்பிடு... எதுக்குத் தயங்கறே! நான் அதே அறிவழகன்தான்..! நீ அதே செந்தில்குமரன்தான். அப்புறம் எதுக்குத் தயக்கம்..?"

அதைக் கேட்டதும் செந்தில்குமரனின் முகம் மலர்ந்தது.

"இல்லப்பா! என்ன இருந்தாலும் உன்னோட ஸ்டேட்டஸ் வேற!" என்று அவன் முணுமுணுக்க.

அவன் மெல்லிய குரலில் பழைய நண்பனாய் "பல்லை உடைப்பேன்!" என்றான்.

அந்தக் கோபம் செந்தில்குமரனுக்கு இதமாக இருந்தது.

நல்ல வேளையாக, ஓரளவுக்கு எல்லாரும் மதிக்கிற மாதிரி உடைகள் அணிந்து வந்தோம் என்று எண்ணிக் கொண்டான்.

"அப்புறம்.. அம்மா.. எப்படி இருக்காங்க" என்றான் அறிவழகன்.

"அம்மா.. நல்லாயிருக்காங்க..!"

"அப்பா..!"



"அப்பா.. அப்பா.. போயிட்டாரு..!"

"ஓஹ்! எப்ப..?"

"அது.. நாலஞ்சு வருஷமாச்சு.."

"ஐ'ம் சாரிடா! எனக்குத் தெரியவேயில்லை!"

"பரவால்லை! பரவால்லை! நமக்குள்ளே டச் விட்டுப் போச்சில்ல. நீ என்னா பண்ணுவே.." என்றான் செந்தில் குமரன்.

"மிஸ்டர்! அறிவழகன்!" என்று யாரோ அவனிடம் வர.

"டேய்! போயிடாதே! நான் உன்னை பிக்கப் பண்ணிக்கறேன்" என்று முணுமுணுத்து விட்டுப் போனான்.

தன்னுடன் வந்த நண்பனிடம் அறிவழகன் தன் பள்ளித் தோழன். தன்னோடு பேச விரும்புகிறான் என்று சொன்னவுடனே நண்பனின் கண்களில் மரியாதை கூடுவதை ஒருவித சிரிப்போடு ரசித்துக் கொண்டான்.

விழா முடிந்து கிளம்புகிற நேரம் தன்னுடன் காரில் ஏற்றிக் கொண்டான் அறிவழகன்.

"செந்தில்! அப்புறம்!" என்றான் ரிலாக்ஸ்டாக.

"அப்புறம்.. என்ன?! அப்பா போனதுக்கப்புறம் குடும்பத்தை கவனிக்க வேண்டியதாய் போச்சு.. அதனாலே டிப்ளமாவோட படிப்பை முடிச்சுகிட்டு வேலைக்குப் போக ஆரம்பிச்சேன்" என்றான்.

"எங்கே?"

சொன்னான். அது ஒரு மிகச் சிறிய கம்பெனி.

"எவ்வளவுடா.. சம்பளம்?"

அஞ்சாயிரம் ரூபா.. தர்றாக.. என்னோட படிப்புக்கு அதுவே நல்ல சம்பளம்கறாக."

''ம்..!'' என்று இழுத்துக் கொண்டான் அறிவழகன்.

''நான் இப்ப வீட்டுக்கு வரேன்! அம்மாவைப் பாக்க வர்றேன்'' என்றான்.

அப்போது செந்தில்குமாரனுக்குள் தோன்றியது. இப்போது இத்தனை உருகி வழிகிறான். ஏன் இத்தனை நாள் தன்னைச் சந்திக்கவே முயற்சிக்கவில்லை. அதை உணர்ந்தாற் போல் அவனும் சொன்னான்.

''செந்தில்.. அப்பா.. நாலு வருஷத்துக்கு முன்னாடியே பொறுப்பை என்கிட்ட ஒப்படைச்சுட்டாரு. கம்பெனியில கொஞ்சம் பிரச்சினைகள் இருந்தது. அதனால டெக்ஸ்டைல் மில்லைக் குளோஸ் பண்ணிட்டு வேற லைன்ல போனேன். இப்ப ஒரு பத்து பஸ் ஓடுது. அதுவுமில்லாம.. ஒரு பெரிய கார் ஏஜென்ஸி கம் கார் சர்வீஸ் ஸ்டேஷன் இருக்கு. அறிவழகன் ஆட்டோமொபைல்ஸ்ன்னு ஒரு கடை இருக்கு.''

செந்தில் வாயைப் பிளக்காத குறையாகக் கேட்டுக் கொண்டான்.

''இதையெல்லாம் ஸ்டெடி பண்றதுக்கு.. கொஞ்சம் காலம் பிடிச்சது.. பிஸினஸ் விஷயத்துல எங்கடா சொந்த சிந்தனைகளுக்கு நேரம்? அப்படியிருந்தும் உன்னைப் பத்தி விசாரிச்சேன்டா..! ஆனா, நீ அந்த ஏரியாவில இருக்கலை. என்ன ஆச்சு?''

செந்தில் பெருமூச்சு விட்டான்.

''ஆமடா! வீட்டை வித்துட்டு.. வேற இடத்துக்கில்ல போயிட்டோம். அப்பா போனதுக்கப்புறம் அத்தை சொத்துத் தகராறு பண்ண ஆரம்பிச்சுட்டாக.. அதனால அம்மா.. வித்தர்லாம்டா.. அவ பங்கைக் குடுத்தர்லாம்னு சொல்லிட்டாக.''

''ஓ..!''



''இப்ப.. எங்க இருக்கீங்க?''

''இப்ப.. டவுனுக்குள்ளேதான்..! அளவா சின்னதா ஒரு வீடு..!'' என்று அவன் முணுமுணுக்குமுன்னே.

''என்னது சின்ன வீடா?'' என்று கிண்டல் செய்தான்.

''போடா! பெரிய வீட்டுக்கே வழியைக் காணோம். இதுல சின்ன வீடாம்'' என்று அங்கலாய்த்துக் கொண்டான் செந்தில்.

''சரி.. சரி.. ஏன் புலம்பறே! அதான் நாம சந்திச்சுட்டோமில்ல.. நான் எல்லாம் பண்றேன்!''

''எல்லாம்னா.. சின்ன வீடா?'' அதே பிடியில் நின்றான் செந்தில்குமரன்.

''அலையாதடா!'' என்று செல்லமாக அவன் பின்னந்தலையில் ஒரு தட்டுத் தட்டினான் அறிவழகன் இருவரும் சிரித்தார்கள்.

புறநகர்ப் பகுதியில் இருந்ததால் வீடு சற்றுப் பெரியதாகவே இருந்தது.

''அம்மா! யாரு வந்திருக்காகன்னு பாரு!'' என்று உற்சாகமாகக் குரல் கொடுத்தபடி நுழைந்தான் செந்தில்.

''யாரு வந்திருக்கா'' என்றபடி அம்மாவும் வந்தார்.

''அம்மா! நம்ம அறிவழகன்.. இல்லே! அவன்தான் இன்னைக்கு.. லயன்ஸ் கிளப்ல பார்த்தேன்'' என்று உற்சாகமாக விவரித்தான்.

''அம்மா கூட அவனது உயர்ந்த ரக உடைகள் பார்த்து சற்றே தயங்கினார்.

''அம்மா! என்னம்மா.. யோசிக்கறீங்க..! நான் உங்க பழைய அறிவழகன்தான்!'' என்று கைகளைப் பிடித்துக் கொண்டான்.

''அம்மா! சாரிம்மா..! குடும்ப பிஸினஸ் சம்பந்தமா.. அலைய வேண்டியிருந்தது. கொஞ்ச நாள் வெளிநாடு

போயிட்டேன். அதனால டச் விட்டுப் போச்சு..'' என்று விளக்கம் சொன்னான் அறிவழகன்.

''பரவால்லேப்பா! இப்பவாவது மறுபடியும் தொடர்பு ஏற்பட்டுச்சே அதுவே சந்தோஷம். எப்படியோ எங்களை மறக்காம இருக்கியே'' என்றார்.

''என்னம்மா! இப்படி சொல்றீக? உங்களோட சர்க்கரைப் பொங்கலையும், கொழுக்கட்டையையும் மறக்க முடியுமா? 'வாடா பயலே!' என்று கம்பீரமாகக் கூப்பிடற மாமாவைத் தான் மிஸ் பண்றேன்'' என்றான்.

சற்று கனத்த மௌனம் நிலவியது.

''எங்கயோ இருந்து ஆசீர்வாதம் பண்றாகன்னு நெனைச்சுக்க வேண்டியதுதான்'' என்று அம்மாவே ஆறுதல் சொன்னார்.

திலகவதி என்ற பேச்சிற்கேற்ப புனிதமான எண்ணங் களை கொண்டவர்.

''இரு தம்பி!'' ஏதாவது டிபன் செய்யறேன்'' என்று அம்மா கிளம்ப.

''ஆன்ட்டி! நான் கண்டிப்பா அடுத்த வாரத்தில் வர்றேன். நான் இப்பத்தான் டின்னர் சாப்பிட்டு வர்றோம். இவனைக் கேளுக்க..'' என்றான்.

குமரனுக்கு ஒரு சிஸ்டர் இருந்தாளே என்ன ஆனாள்.. என்று அவன் எண்ணிக் கொள்கையிலேயே அம்மா வாய் விட்டுச் சொன்னார்.

''என்டா! செந்திலு..! இந்த இறைவிப் பொண்ணு பக் கத்துத் தெருவுக்குப் போயிட்டு வந்தேர்ன்னு போனா. இம் புட்டு நேரமாச்சே! ஆளைக் காணலியே!'' என்று முணங் கினார்.

''எம்புட்டு நேரமாயிருக்க! அதான் நாங்க இருக்க மில்ல..!'' என்று குரலெழுப்பியபடி வந்த இறைவி அங்கே நின்ற இளைஞனைக் கண்டு தயங்கி நின்றாள்.



''டேய்! அறிவழகா..! இது என் சிஸ்டர். இறைவி!'' என்று அவன் அறிமுகப்படுத்தக் குறும்பாகக் கண்களைச் சுழற்றிக் கொண்டு வந்த இறைவி சட்டென்று அமரிக்கையாக வணக்கம் சொல்வதை ஒரு குறும்பான புன்னகையுடன் அங்கீகரித்துக் கொண்ட தானும் வணக்கம் சொன்னான்.

சட்டென்று வீட்டிற்குள் வெளிச்சம் பரவினாற் போல்... தன் மனதிற்குள் வெளிச்சம் பரவினாற் போல ஒரு எண்ணம் தொடர்ந்து வந்த அந்த இரண்டு மூன்று நாட்களிலும் ஓடிக் கொண்டிருந்ததை அவனால் தடுக்கவே முடியவில்லை.

## 2

ஏழெட்டு வருட இடைவெளியில் ஒரு பெண்ணிடத் தில் இத்தனை மாற்றங்கள் ஏற்படக் கூடுமா?

சிறு பெண்ணாக வித விதமான உடைகளில் துறுதுறு வென்று ஓடிக் கொண்டு இருப்பாள் இறைவி. அப்போதே அவர்கள் டீன் ஏஜில் இருந்ததாலோ என்னவோ அறிவழகன் சற்று விலகியே இருப்பான். ஆனால் செந்தில்குமரனின் அம்மா திலகவதியிடம் நன்றாகப் பழகுவான்.

எந்த விதமான அந்தஸ்து பேதமும் காட்டாமல் அவன் பழகியது அந்த அம்மாவுக்கு மிகவும் பிடிக்கும். அதற்கு விளக்கம் போல் அறிவழகன் சொல்வான்.

''அம்மா..! நட்பு ஒன்றுதான் உலகிலேயே மிகவும் உயர்வான விஷயம். எதையும் எதிர்பார்க்காமல் இரண்டு மனிதர்களுக்கிடையே நிகழ்வது. அது மாதிரியான விஷயம் எதுவுமே இல்லை'' என்று.

அன்றைய நிலையில் செந்தில்குமரனின் குடும்பமும் சற்று வசதியாகத்தான் இருந்தார்கள். குமரனின் அப்பா ஒரு

பள்ளியிலே ஆசிரியராக இருந்தார். அதனால் தேவைக்கு மேல் வருவாய் இருந்தது. செந்தில்குமரனின் தாய் மிகச் சிறப்பாகவும் சிக்கனமாகவும் குடும்பம் நடத்தியதால் பற்றாக்குறை என்பதே ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கவில்லை.

அறிவழகனும், செந்தில்குமரனும் படிப்பதும் நன்றாகப் படிப்பார்கள். விளையாட்டிலும் கெட்டிக்காரர்கள் அதனால் அவர்களை ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் மிகவும் பிடிக்கும்.

இளமைப் பருவத்தின் கொட்டங்களும், குறும்புகளும் எப்போதும் மறக்கவொண்ணாதது அல்லவா...? அந்தப் பொன்னான காலம் முழுவதும் இப்போது அறிவழகனின் மனதில் திரண்டு வந்தது!

புன்னகையோடு படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். மிரண்டு விழிக்கிற மானைப் போல இறைவியின் கண்கள் சுழன்று அவன் மீது பதிந்த அந்தக் கணம் இப்போது நினைத்தாலும் அவனுக்கு இனிமையாக இருந்தது.

இளம் வயதிலே இதெல்லாம் இயற்கைதான் என்று மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டான். புதியதாக, அழகாக ஒன்றைப் பார்க்கும்போது மனிதனுக்குள் ஏற்படுகிற பரவசம் என்று புரிந்தது.

மெல்லக் கண்ணயர்ந்தான்!

• • •

ஒரே வாரத்தில்!

தன்னைப் பார்ப்பதற்காக வீடு தேடி வந்த அறிவழகனைக் கண்டதும் செந்தில்குமரனின் முகமும் அகமும் மலர்ந்து போயிற்று.

''வாடா!'' என்று வரவேற்றான்.



''ஆன்ட்டி! என்ன வச்சிருக்கீக.. சாப்பிட!'' என்று இயல்பாக உள்ளே வந்தான்.

''நீ வர்றது தெரிஞ்சிருந்தா.. நல்ல சமையலாய் பண்ணியிருப்பேன். இன்னைக்கு என்னப்பா.. கொள்ளுப் பருப்பு கடைஞ்சு கொள்ளு ரசம் வச்சிருக்கேன்'' என்றார் திலகவதி தயக்கத்துடன்.

''ஆஹ்ஹா! என்ன அற்புதமான ஐட்டம். ரொம்பத் தப்பு செஞ்ச மாதிரி யோசிக்கறீக.. தட்டை எடுங்க..'' என்று டைனிங் டேபிளுக்கு முன்னால் அமரவும் திலகவதி உற்சாகமாகப் பரிமாற ஆரம்பித்தார்.

''டேய்! சைட் டிஷ்.. ஒண்ணும்.. இல்லே!'' என்று செந்தில்குமரன் முணுமுணுத்து விட்டு ''இரு.. பக்கோடா வாங்கிட்டு.. வரேன்..'' என்று கிளம்ப.

''சும்மாயிர்றா.. டேய்! அம்மா.. நீங்கதான் வகை வகையாய் ஊறுகாய் வச்சிருப்பீகளே'' என்பதற்குள்ளாக திலகவதி கொண்டு வந்து வைத்தார்.

சமையலறைக்கு செல்வதே தெரியாத வண்ணம் உள்ளே நுழைந்த இறைவி உடனடியாக அப்பளம் பொறித்தெடுத்து ''அம்மா!'' என்று குரல் கொடுத்தாள்.

''என்னடி இது! நம்ம அறிவழகன்டி! வெளியில வா!'' என்று அம்மா குரல் கொடுக்கவும் வெளியே வந்தாள்.

அறிவழகனைப் பார்த்துப் புன்னகைத்தாள்!

''குடுங்க.. குடுங்க!'' என்று வாங்கிச் சாப்பிட்டான் அறிவழகன்.

''ஆன்ட்டி! எனக்கு இந்த மாதிரி சிம்பிள் சாப்பாடு ரொம்பப் பிடிக்கும்.. தெரியுமா? எங்கம்மா எங்க வீட்ல எப்பப் பாரு நெய்யைக் கொட்டித்தான் சமையல். கேட்டா.. வயசுப் பையன்டா.. நீ. சாப்பிடுடாம்பாக.. அவுக

வருத்தப்படறாங்களேன்னு சாப்பிடறது. அப்புறம்.. உடம்பை டிரிம்மா வச்சுக்க.. எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கு.. தெரியுமா?'' என்று சிரித்தான்.

இறைவியும் புன்னகைத்தாள்.

செந்தில்குமாரன் நண்பனின் அருகில் அமர்ந்து கொண்டான்.

''டேய்! குதிரைக்குக் கொள்ளு குடுக்கறாங்களே! எதுக்குத் தெரியுமா? கொள்ளு நல்ல எனர்ஜி குடுக்கும். அது மட்டுமில்ல.. கொழுப்பைக் குறைக்கும். அதுதான் ஒரு பழமொழி இருக்கு. கொழுத்தவனுக்கு கொள்ளு.. குடு.. இளைச்சவனுக்கு.. என்ளு குடும்பாக'' என்றான் குமரன். அறிவழகன் இயல்பாக இறைவியைப் பார்த்துச் சிரித்தான்.

''பாத்தீங்களா.. இறைவி! எனக்குக் கொழுப்பு அதிகம்னு.. சொல்லாம சொல்றான்.'' இறைவி என்ன பேசுவதென்று தெரியாமல் மையமாகப் புன்னகைத்து வைத்தாள்.

''இறைவி.. என்ன படிக்கறீங்க..?'' என்று கேட்டான்.

இறைவி ''பி.எஸ்ஸி மேக்ஸ், படிச்சேன் அப்புறம் பி.எட் முடிச்சேன். அண்ணா வேலைக்குப் போக வேண்டாம்கறான். ஆனாலும் சும்மா இருக்க வேண்டாமேன்னு டியூஷன்ஸ் எடுக்கறேன்'' என்றாள்.

''ஆமப்பா! இந்த ஏரியாதான் பணக்கார ஏரியா ஆச்சே! அதனால இந்தக் காலனியில இருக்கிற ரெண்டு மூணு பங்களாவுக்கு மட்டும் போய் ட்யூஷன் எடுக்கறா.. அதிலயே அவளுக்குக் கிட்டத்தட்ட ஏழாயிரம் எட்டாயிரம் கிடைச்சுடுது'' என்றார் அம்மா.

''இல்லடா! அம்மாவுக்கு லோ பி.பி. அதனால அம்மாவுக்குத் துணையா இருக்கச் சொல்லியிருக்கேன். அவளுக்குக் கொஞ்சம் வருத்தம்தான், வேலைக்குப் போக முடியலேன்னு..''



''ஆமா! திறமையைப் பயன்படுத்த முடியலேன்னா யாருக்குமே வருத்தம் இருக்கும்தான்'' என்றான் அறிவழகன்.

''நல்லா சொல்லுங்க.. சார்!'' என்றாள் இறைவி.

''ஆனா, அவன் சொல்றதும் கரெக்ட்தான். அம்மாவுக்கு உடம்பு சரியில்லேன்னா என்ன பண்றது?'' என்று அவன் இந்தப் பக்கமும் பேசவும். இறைவி நொந்து போனாள்.

''என்ன சார்! நீங்க? அந்தப் பக்கமும் பேசறீங்க?'' என்றாள் சிணுங்கலாக.

''பின்னே! உங்களுக்கு சாய்வாக பேசினேன்னு வைங்க. இவன் என்னை வீட்டுக்குள்ளயே விடமாட்டானே!'' என்றான் அவளிடம். கண்ணைச் சிமிட்டிக் கொண்டான்.

''ஐயோ! அண்ணா உன் ஃப்ரெண்டு பயங்கரமான ஆளா இருப்பாரு போல இருக்கு. ரெண்டு பக்கமும் பேசிக்கறாரு'' என்று அவளும் கேலியில் இறங்கினாள்.

''பின்னே? அதனாலதான் ரொம்ப சக்ஸஸ்ஃபுல்லான பிஸினஸ் மேனா இருக்கான்'' என்று செந்தில்குமாரனும் சேர்ந்து கொண்டான்.

இப்படிக் கலகலப்பாக அவர்கள் பேசிக் கொள்வது திலகவதி அம்மாவுக்கு மகிழ்ச்சியாக இருக்கும். வீட்டில் எல்லாரும் அறிவழகனின் வரவை மகிழ்வோடு எதிர்பார்ப்பார்கள்.

மிகவும் இயல்பாக அவர்கள் குடும்பத்தில் கலந்து கொண்டான். அவர்களும் அவர்கள் குடும்பத்தில் இரண்டறக் கலந்து கொண்டார்கள்.

* * *

ஒரு மாதம் போயிருக்கும்!

''அப்பா.. அம்மா'' ரெண்டு பேரும் கவலையே படாதீங்க. நான் என்னை நல்லா பாத்துக்குவேன்'' என்றான் அறிவழகன்.

அம்மா புவனேஸ்வரி கொஞ்சம் கவலையுடன்தான் இருந்தார்.

"இல்லடா! நீ பின்னல், பின்னல்ன்னுகிட்டு இருப்பே! நேரம் காலத்துக்கு சாப்பிட மாட்டே!"

"ஏம்மா! சமையற்காரங்க இருக்காங்க இல்லே! நான் சாப்பிட்டுக்கறேம்மா!" என்றான்.

"நீ சமையற்காரங்களை எல்லாம் மிரட்டுவே.." என்று அதற்கும் விளக்கம் சொன்னார். அறிவழகன் நொந்து போனான்.

சிரித்துச் சமாளித்தான்.

"சரி! ஒன்னு வேணுணா செய்ங்க..! செந்தில் அம்மா இருக்காக இல்லே! அந்த ஆன்ட்டிகிட்டே சொல்லிடுங்க.. எனக்கு ஏதாவதுன்னா அவுக பாத்துப்பாங்க.. நீங்களும் நிம்மதியா இருக்கலாம்.. சரியா!" என்றான்.

புவனேஸ்வரி முகம் மலர்ந்தார்.

"ஆமா! இது நல்ல ஐடியா!" என்று உடனே போன் போட்டுப் பேசினார்.

அறிவழகன் அம்மாவின் உணர்வுகளைப் புரிந்து கொண்டவனாய் ஒரு விதமான புன்னகையுடன் அம்மா திரும்பத் திரும்ப,

"உன்னை நம்பித்தான், விட்டுட்டுப் போறேன்" என்று சொல்லுவதைக் கனிவோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

அறிவழகனுடைய அப்பா சாம்பசிவமும் அதே போல் சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

அம்மாவும், அப்பாவும் காசி, ரிஷிகேஷ், கேதார்நாத் எல்லாமும் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். ஒரு டிராவல்ஸ் மூலமாக பிரயாணம் ஏற்பாடு செய்திருந்



தான். அப்பாவின் குடும்ப நண்பர்களும் அந்தக் குழுவில் இருந்தார்கள். அதனால் துணிவாகவே அனுப்பினான். அங்கங்கே வெளியூர் நண்பர்களை தொடர்பு கொண்டு எல்லா இடங்களிலும் அவர்களைக் கவனித்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்திருந்தான்.

இருபத்தைந்து நாள் பயணம்!

புறப்படுவதற்கு முன்புதான் அம்மா இப்படி உருகிக் கொண்டிருந்தார்.

அம்மாவையும், அப்பாவையும் ஒரு வழியாகத் தேற்றி வழியனுப்பி விட்டு வந்தான்.

வீடு வெறிச்சோடிக் கிடந்தாற்போல் இருந்தது.

உறவினர்கள் யாரையாவது வரச் சொல்லி இருக்கலாமே என்று நினைத்துக் கொண்டிருந்தபோதுதான் செந்தில் குமரன் இரவு எட்டு மணிக்கு வந்து சேர்ந்தான்.

"டேய்! அறிவு! பெரிய தொல்லையாப் போச்சுடா! உன் அம்மா எங்கம்மாகிட்டே உன்னைப் பத்திரமாப் பாத்துக் கணும்னு சொல்லிட்டாங்களாம். அதனால எங்கம்மா என்னை உனக்கு துணைக்கு அனுப்பிச்சிருக்காங்க.." என்றான்.

அறிவழகனும், செந்தில்குமரனும் இரண்டு அம்மாக்களும் செய்கிற கலாட்டாவைப் பற்றி சிரித்துக் கொண்டாலும் அறிவழகனுக்கு செந்திலின் வருகை பிடித்திருந்தது.

சற்று நேரம் செந்திலிடம் அவர்கள் குடும்ப விவரங்களையெல்லாம் சேகரித்துக் கொண்டார்கள்.

அப்பா ரிடையரானதற்குப் பிறகு ஓரிரண்டு ஆண்டுகள் தான் இருந்தாராம். வேலை செய்கிற காலத்தில் தனது உடல்நலத்தைப் பற்றி அவர் கவலை கொள்ளவே இல்லை என்பதும், மேலோட்டமாக நன்றாகவே இருப்பது போல் இருந்தாலும் யாரும் எதையும் பெரிதாக எடுத்துக்

கொள்ளவில்லை. ஆனால், பணியிலிருந்து ஓய்வு பெற்றதும் அவருக்கு ஏனோ ஒரு பக்கத்தை இழந்தாற்போல் ஆகி விட்டது போலும். அதனால் பிரச்சினைகள் ஒவ்வொன்றாக முளைத்தன. திடீரென்று ஒரு நாள் மாரடைப்பு என்றார்கள்.

குடும்பத்துக்குத் தன்னுடைய கடமைகளைச் செய்ய வேண்டும் என்று திருமணத்தைத் தள்ளிப் போட்டதனாலோ என்னவோ லேட் மேரேஜ்தான். அதனால் அப்பா மறைகிற போது செந்தில் இருபத்து இரண்டு வயதில் இருந்தான்.

இப்போது ஐந்து வருடங்களாகி இருந்தது.

அவருடைய மறைவுக் காலம் வரை அமைதியாக இருந்த அவரது சகோதரி சொத்தில் பங்கு கேட்டார்.

திலகவதி "செந்தில்! அவரு இருந்து இவங்க கேட்டாலும் பிரிச்சுத்தான் குடுத்திருப்பாரு. வித்தரலாம்பா" என்று சொல்லிவிட்டார்.

சொத்தை விற்று தங்கள் பங்கு என்று கிடைத்த பணத்துக்கு இந்தப் புறநகர்ப் பகுதியில் எப்போதோ அப்பா வாங்கிப் போட்ட இடத்தில் குடியிருப்பதற்கு அளவாக ஒரு வீடு கட்டினார்கள். அதிலும் ஒரு ஹாலுக்கும், அதன் பக்க வாட்டில் பிரிந்த சமையலறைக்கும் பின்னாலே இருந்த இரண்டு படுக்கையறைக்கு மட்டும் ஆர்.சி. போட்டிருந்தார்கள்.

பெரிய படுக்கையறையை அம்மாவும், மகளும் பகிர்ந்து கொள்ள மகனுக்கு ஒரு படுக்கையறை கொடுக்கப்பட்டிருந்தது.

அப்பாவின் ஓய்வுப் பணத்தில் தங்கைக்கு நகைகள் வாங்கி வைத்ததோடு இரண்டு லட்ச ரூபாயும் அவள் திருமணத்துக்கென்று ஒதுக்கியிருந்தார்கள். அந்த வைப்புத் தொகையில் வருகிற வட்டியை எடுக்காமல் விட்டிருந்தார்கள்.

இன்னொரு இரண்டு லட்ச ரூபாயை அவனுக்கென்று அம்மா ஒதுக்கி விட்டார். அதுவும் வட்டி எடுக்கப்



படாமலே வளர்ந்து கொண்டிருந்தது. மற்றொரு நான்கு லட்சத்தை அம்மாவின் பெயரில் போட்டு விட்டான். செந்தில் அம்மாவுக்கென்று வருகிற குடும்ப பென்ஷனையும், இந்த வட்டிப் பணத்தையும் வைத்துக் கொண்டு அம்மா சிக்கனமாகவே குடும்பம் நடத்தினார்.

செந்திலின் வருவாயைத் தன் பொறுப்பில் வாங்கிக் கொண்டார். ஆனால் அதை சேமித்தார். மகள் இறைவிக்கு அவர் எதுவும் சொல்லவே வேண்டியிருக்கவில்லை. அவளே தன் வருவாயைச் சேமித்தாள். குடும்பத்தில் பணக் கஷ்டம் இல்லை. ஆடம்பர வாழ்க்கை இல்லை என்பதால் வாழ்க்கை சிறப்பாகவே ஓடிக் கொண்டிருந்தது.

செந்தில்குமரன் சொன்ன விவரங்களையெல்லாம் லயித்துக் கேட்டுக் கொண்டான் அறிவழகன்.

திடீரென்று செந்தில் கேட்டான்,

"ஏண்டா! நீ தண்ணியடிக்க மாட்டியோ!" அறிவழகன் சிரித்தான்.

"எப்பவாவது அடிக்கறதுதான்! ஆனால் எனக்குப் பெரிய இன்ட்ரஸ்ட் இல்லை. ஏதாவது ஃபாரினர்ஸ் வந்தாங்கன்னா, ஏதாவது பிஸினஸ் மீட்டிங்குன்னு வை.. குடிக்கலேன்னா.. ஏதோ அதிசயப் பிராணி மாதிரிப் பார்ப்பானுங்க.. அதுக்காகப் பேருக்குக் கையில வச்சுக்கறதுதான்" என்றான்.

"ம்.. நீ முடியுள்ள சீமாட்டி.. எப்படி வேண்ணா முடிவே! எனக்கு ஃபாரின் சரக்கு அடிக்கணும்னு ஆசை!" என்றான் செந்தில்.

"சரி.. விடு! நாளைக்கு ஏற்பாடு பண்றேன். ஆனா, என்னை சாப்பிடச் சொல்லாதே! எனக்கு அம்மா, அப்பா ஊருக்குப் போயிருக்கறப்ப இதெல்லாம் செய்யறது ஏதோ திருட்டு தம் அடிக்கற மாதிரி இருக்கு" என்றான்.

செந்தில் ஒத்துக் கொண்டான்.

"ஆமடா எனவு! எங்க அம்மாவும் சரி ஒண்ணும் சொல்றது கிடையாது. ஆனா, ரெண்டு மூணு நாளைக்கு வருத்தமா நடமாடிக்கிட்டுக் கெடக்கும். அதைப் பாத்தாலே.. நமக்கு மனசுக்கு அம்புட்டு சங்கடமாப் போயிடும். அதேன்.. விட்டுட்டேன்" என்றான்.

"சரி.. நான்தான் சொன்னேனே! ஆசைக்கு ஒரு நாள் சாப்பிடு" என்றபோது டெலிபோன் மணி ஒலித்தது.

"என்னது? இறைவி வர்றாளா? எதுல.. பக்கத்து வீட்டுக் கார்லயா?" என்று செந்தில் குரலெழுப்ப அறிவழகனுக்கு சுவாரசியம் கிளம்பியது.

போனை கட் செய்து விட்டுச் சொன்னான்.

"டேய்! அறிவு! அம்மா.. பால் கொழுக்கட்டை செஞ்சாளாம். அதைக் குடுத்தனுப்பியிருக்காங்க. பக்கத்து வீட்டு ஆன்ட்டி இந்த வழியாப் போறதால அவுங்க டிராப் பண்ணுவாங்களாம். திரும்ப நாம கொண்டு விடறதாம்."

அறிவழகன் நெகிழ்ந்து போய் விட்டான்! அப்போது முடிவு செய்து கொண்டான்.

ஒரு தாய் போல் தன் மேல் அன்பு வைத்திருக்கும் நிலவழியம் மாவின் குடும்பத்துக்கு தான் ஏதாவது செய்ய வேண்டும் என்று.

## 3

"காரை இங்கயே நிறுத்திடவா.. இல்லை.. உள்ளே வரவா!" என்று கேட்டான் அறிவழகன்.

"காம்பவுண்ட் உள்ளேயே போயிரலாம்" என்றாள். குரலில் லேசான பதட்டம் இருந்தது. அறிவழகன் முகத்தில் புன்னகை மலர்ந்தது.



"இறைவி! ஏன் ஒரு மாதிரி பதட்டமாவே இருக்கீங்க!" என்றான்.

"இல்லே! காம்பவுண்டுக்கு வெளியே நிறுத்தி இறங்கினா. எல்லாரும் நோட் பண்ணுவாங்க.. ஊர் வம்பு வளரும்" என்றாள்.

"ஊர் வம்புக்குப் பயப்படுவீங்களா!"

"இல்லே! இருந்தாலும் அநாவசியமான கற்பனைகளுக்கு இடம் குடுக்க வேண்டாமில்லே" என்றாள்.

"தட்ஸ் ட்ரு!" என்றான் அறிவழகன்.

கார் உள்ளே நுழைந்தது.

"உள்ளே வாங்க!" என்று அழைத்தாள் இறைவி.

"இல்லம்மா! நான் திரும்பணும். இன்னும் கொஞ்ச நேரத்துல அம்மாவும், அப்பாவும் போன்ல கூப்பிடுவாங்க.. ஒரு கால் மணி நேரமாவது என்கிட்டே பேசினாத்தான் அவங்களுக்குத் திருப்தி" என்றான் அறிவழகன்.

அவள் சரியென்பது போல் விடைபெற்றுக் கொண்டாள்.

அறிவழகன் திரும்ப வரும்போது யோசித்துக் கொண்டே தான் வந்தான். பாலுக்கு சர்க்கரை இல்லை என்பதும் கவலைதான். கூழுக்கு உப்பில்லை என்பதும் கவலைதான். நமக்கு நாளைக்கு வண்டி டெலிவரி கொடுக்க வேண்டும் என்பது கவலையாய் இருந்தால் கீழ் நடுத்தரக் குடும்பங்களுக்குப் பெயர். ஒழுக்கம் நாகரீகமான வாழ்க்கை என்ற கவலைகள். எங்கோ படித்தது நினைவுக்கு வந்தது.

எப்போதும் வலைகளில் பெரிய மீன்கள் சிக்குவதில்லை. சிக்கினாலும் வலையை அறுத்துக் கொண்டு போய் விடுகின்றன. சிறிய மீன்கள் ஓட்டைகளில் புகுந்து தப்பித்து விடுகின்றன. நடுத்தர அளவுள்ள மீன்கள்தான் சிக்கிக் கொள்கின்றன.

கலாச்சார மீறல்களும், தனிப்பட்ட நிபந்தனைகளும் மேல் மட்டத்திலும், கீழ் மட்டத்திலும் சாதாரணமாக இருக்கையில் நடுத்தரக் குடும்பங்களின் அது தேவையற்ற பேச்சுகளுக்கு இடமளித்து விடும் என்ற பயம் இருக்கிறது.

இறைவியின் குடும்பத்தையும் குறிப்பாக இறைவியை யும் கூட அவனுக்கு மிகவும் பிடித்து விட்டது. ஆனால் தனது உணர்வுகளை ஆராய்வதை அவன் வெகு கவனமாகத் தவிர்த்து வந்தான். இப்போதைக்கு அது அவசியமில்லை என்று தனது மனத்தில் ஒரு பக்கத்துக் கதவை மூடியே வைத்தான் என்று சொல்ல வேண்டும்.

இறைவிக்குத் தன்னால் எந்த விதமான சங்கடங்களும் வரக் கூடாது என்பதில் தெளிவாக இருந்தான். அது மட்டு மில்லாமல்.

''போடா! நான் வர்லே! நீயே கொண்டு போய் இறைவியை விட்டுடு'' என்று தன்னை நம்பி அனுப்புகிற நண்பனையும் எப்போதும் மகிழ்ச்சியாகவே வைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பினான். ஆனால் மெது மெதுவாக இறைவி யிடம் உரிமையோடு போகிற நிலைமைக்கும் வந்தான்.

* * *

''அத்தை!'' என்று உற்சாகமாக அழைத்துக் கொண்டு வந்தான் அறிவழகன்.

''என்ன தம்பி!'' என்றார் திலகவதி.

''அத்தை!'' என்றுதான் இப்போதெல்லாம் அழைக்க ஆரம்பித்திருந்தான். ஒரு நாள் அமர்ந்து பேசிக் கொண் டிருந்தபோது இரண்டு குடும்பத்துக்கும் பொதுவான உறவினர்கள் இருப்பதைக் கண்டு பிடித்தார்கள். அவர் களின் உறவுக்காரர்களுக்கிடையே திருமணங்கள் நடந் திருந்தால் செந்தில்குமாரனும் அவனும் உறவினர்கள் கூட ஆகி விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.



தோண்டித் துருவிக் கண்டு பிடித்ததில் திலகவதி அறிவழக னுக்கு அத்தை முறை ஆக வேண்டும் என்று கண்டு பிடித் தார்கள். அப்போதிருந்தே அறிவழகன் முறை வைத்து அத்தை என்று அழைக்க ஆரம்பித்தான்.

''அத்தை!'' ஒரு நல்ல ஆஃபர் குடுக்கிறேன் ஒத்து வரு மான்னு யோசிங்க'' என்றான்.

''என்னப்பா!'' என்றார்.

''செந்திலுக்கு எங்க ஆபீஸ்லயே வேலை தரேன்'' என்றான்.

திலகவதி சற்றே யோசித்தார்.

''தம்பி! நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே!'' என்று எழுந்து காபி போடப் போனார். அவனும் பின் தொடர்ந்தான். அடுப்படி மேடையில் அத்தையின் அருகில் நின்று கொண்டான்.

''தம்பி! செந்தில் உன்னை மாதிரி மெச்சூரிட்டி உள்ள ஆள் இல்லே. ஒரே இடத்துல உனக்குக் கீழே வேலை செய் யும்போது ஒண்ணு அவன் அதிக உரிமை எடுத்துக்கலாம். அல்லது வேறு விதமான பிரச்சினைகள் வரலாம்'' என்றார்.

அறிவழகன் சற்று யோசித்தான். ''ஆமாம்! அதுக்கான வாய்ப்புக்களும் இருக்கு. ஆனா, எனக்கு நம்பிக்கையான ஒரு ஆள் வேணும் இல்லே!'' என்றான்.

''ஓ!'' என்று திலகவதி சமாதானமானார்.

''சரி..! நீ என்ன வேலை குடுத்தாலும் அவனோட தகுதிக்குக் குடு. படிப்படியா முன்னேறட்டும்'' என்றார்.

உண்மையாகவே அத்தையைக் குறித்து அவனுக்குப் பெருமையாக இருந்தது.

''சரிங்கத்தை! இப்போதைக்கு என்னோட ஆபீஸ்ல சூப்பிரண்டெண்ட் மாதிரி ஒரு முக்கியமான பொறுப்புக் குடுக்கறேன்..'' என்றான்.

பதினைந்தாயிரம் சம்பளம் என்று நிர்ணயித்தான். அவனுடைய அலுவலக ஊழியர்கள் யாருக்கும் அந்த அளவு சம்பளம் கிடையாது என்பதும், முதலாளிக்கு வேண்டியவன் என்பதும் அலுவலகத்தில் எல்லாருக்கும் அவனிடத்தில் ஒரு பயத்தை ஏற்படுத்தியது.

செந்தில்குமாரனுக்கு இந்தப் புதுவிதமான அதிகாரம் மிகவும் பிடித்திருந்தது.

திலகவதியம்மா தான் மிகவும் கவலைப்பட்டார்.

''டேய்! செந்தில் அறிவழகன் என்னதான் உனக்கு ஃப்ரெண்டுன்னாலும் வேலை செய்யற இடத்துல. அவரு உனக்கு முதலாளிங்கறதைப் புரிஞ்சுக்கிடணும். மரியாதை குடுக்கணும். ஆபீஸ்ல தம்பிகிட்டே பேசும்போது ''சார்ன்னு'' தான் பேசணும். ஆபீஸ்க்குள்ளயெல்லாம் நீ ஃப்ரெண்டுன்னு காமிக்கக்கவே கூடாது'' என்று நிறைய அறிவுரை சொன்னார்.

செந்தில்குமாரனும் ஏற்றுக் கொண்டான்.

அலுவலகத்தில் வேலை நேரத்தில் அதில் பொறுப்பேற்றுக் கொண்ட நாள் முதல்.

''சார்!'' என்று பவ்யமாகவே நின்றான்.

முதல் நாள் மட்டும் லேசாகப் புருவத்தைச் சுருக்கிக் கொண்டு பார்த்தான். ஆனால், மாற்றம் ஏதும் சொல்ல வில்லை. ஆனால், தனியாக காரில் போகும்போது அறிவழகன் கேட்டான்.

''என்னடா! மரியாதையெல்லாம் தூள் பறக்குது!'' என்று.

''இல்ல அறிவு! அம்மா ரொம்ப தூரம் சொல்லி அனுப்பிச் சாங்க.. அவுங்க சொன்னதும் கரெக்ட்தான். அதனால நானும் அப்படியே இருந்துக்கறேன்.''

''அது கரெக்ட்தான்!'' என்று ஒத்துக் கொண்டான். ஆனால் செந்தில் வந்தது அவனுக்கு மிகவும் உதவியாக இருந்தது.



செந்தில் எப்போதும் அலுவலகத்தில் இருந்ததால் அலுவலகத் தில் வேலை ஒழுங்காக நடந்தது. அது மட்டுமல்லாமல் செந்தில் அலுவலகம் மட்டுமல்லாமல் சர்வீஸ் சென்டர் கார் சேல்ஸ் செய்வதும் கூட அவன் மேற்பார்வையின் கீழ் வந்தது.

படிப்படியாக அவன் பொறுப்புகளை ஏற்றுக் கொள் வதும் அறிவழகனுக்கு பிடித்துத்தான் இருந்தது.

* * *

''இறைவி! இன்னைக்குக் கொஞ்சம் வர்றியா'' என்று புவனேஸ்வரியிடம் இருந்து போன் வந்தது.

''வர்றேங்கத்தை!'' என்று புறப்பட்டாள்.

புவனேஸ்வரியும்.. காசி போகிறேன் என்று போயிருந்த சமயம் அது நிகழ்ந்தது.

திடீரென்று ஒரு நாள்!

அறிவழகனுக்குக் காய்ச்சல் வந்தது! சளி, காய்ச்சல், இருமல் என்று எல்லாமும் சேர்ந்து வந்தது. அறிவழகனுக்குக் காய்ச்சல் என்றவுடனே திலகவதியும் அங்கேயே வந்து தங்கினார். இறைவியையும் கூட அழைத்து வந்து விட்டார்.

பயணத்தில் இருந்த புவனேஸ்வரி அம்மாவுக்கு போன் செய்து சொன்னதும் அவர்தான் திலகவதியையும், இறைவியை யும் அங்கேயே வந்து தங்குமாறு கேட்டுக் கொண்டார்.

இரவா, பகலா என்றே தெரியாத நிலையில் இரண்டு நாட்கள் அவதிப்பட்டு விட்டான் அறிவழகன். அந்த சமயத் தில் ஜி.எம்முக்கு உதவியாக செந்தில்குமரன் இருக்க வேண்டி யிருந்தது. அதனால் வீட்டின் பொறுப்பை திலகவதி எடுத்துக் கொண்டார்.

மூன்றாம் நாள்!

காலையில் எழுந்து அமர்ந்திருந்த அறிவழகனுக்கு சூடான கஞ்சி கொண்டு வந்து தந்தாள் இறைவி.

''இறைவி! என்னாலே உன்னோட ட்யூஷன் கெட்டு டுச்சோ? என்றான்.

''ட்யூஷன்தானே! அடுத்த வாரம் கொஞ்சம் கூடுதலா டைம் குடுத்து சமாளிச்சுக்குவேன்'' ஆனா, நீங்கதான் துணிமாதிரித் துவண்டு போய்க் கிடக்கிறீங்களே'' என்றாள். குரலில் ஆழ்ந்த வருத்தம் தொனித்தது.

''இறைவி! நான் அந்த கிராமத்துக்கு ஒரு பங்ஷன்ல கலந்துக்கப் போனேன். அங்க வச்ச கொஞ்சம் பச்சை தண்ணி யெல்லாம் குடிச்சேன். அது சேரலே போலிருக்கு.''

''கார் இருக்குல்ல.. அதுல ரெண்டு மூணு பாட்டில்கள் தண்ணி கொண்டு போயிட வேண்டியதுதானே'' என்று கடிந்து கொண்டாள்.

அறிவழகனுக்கு உரிமையான அந்தக் கண்டிப்பு மிகவும் பிடித்திருந்தது.

''ஆகட்டும்! இனிமே எடுத்துக்கறேன். இதுவரைக்கும் இதைப் பெரிய விஷயமா நினைக்கலே. இனிமே உடம் பையும் கொஞ்சம் கவனமாகப் பார்த்துக்கணும்'' என்றான்.

''ஆமா! உங்களை நம்பி எத்தனை தொழிலாளர்கள் இருக் காங்க.. உங்க பிரசன்ஸ் இல்லேன்னா எத்தனை பிரச்சினை கள் வரும்?'' என்றாள்.

அவள் கஞ்சி டம்ளரை டீபாயின் மேல் வைத்தாள்.

''இறைவி! வாய்க்குப் பிடிக்கலே!'' என்று முணுமுணுத் தான்.

''ப்ளீஸ்! கஷ்டப்பட்டுக் கொஞ்சம் குடிச்சுக்குங்க. ரெண்டு நாளா பிஸ்கட் சூப்புதான் சாப்பிட்டிருக்கீங்க.. அப்புறம் எழுந்திருக்கவே முடியாமப் போயிடும்'' என்று குழந்தைக்குச் சொல்வது போல் சொன்னாள்.

''கொஞ்சமா தக்காளிச் சட்னி... தரேன்! தொட்டுக் குங்க..'' என்று அருகிலேயே இருந்து குடிக்க வைத்தாள்.



பாத்திரங்களை எடுத்துக் கொண்டு நகரும்போது அவன் கேட்டான்.

''இறைவி! ஒரு நிமிஷம்! நிறைய தொழிலாளர்கள் இருக் காங்கறதுனால மட்டும்தான் என் உடம்பைக் கவனிச்சுக் கணுமா?'' என்றான்.

இறைவி நின்றாள்.

''ஏன் அப்படிக் கேக்கறீங்க? உங்களுக்காகவும்தான் உங்க உடம்பைப் பார்த்துக்கணும்'' என்றாள் மெல்லிய குரலில் தொடர்ந்து சொன்னாள்.

''எங்களுக்காகவும்தான்!'' என்றாள்.

அவன் உடனே முகபாவத்தை ஒரு விதமாக வைத்துக் கொண்டான்.

''அதானே பாத்தேன்! உங்களுக்கு நான் தேவையில்லை யோன்னு நினைச்சேன்'' என்றான்.

தாயும், மகளுமாகத் தன்னைக் கவனித்துக் கொண்ட விதம் பற்றி தனது தாயிடம் பெருமையாக புகழ்ந்திருந்தான் அறிவழகன். அதையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு தான் இப்போது புவனேசுவரி இறைவியை வரவழைத்தார்.

''இறைவி! தீபாவளி வருதில்லம்மா.. அதான் உனக் குன்னு ஒரு பட்டுப் புடவை வாங்கிட்டேன். கலர் பிடிக்கு தான்னு பாரு'' என்றார்.

இறைவிக்குப் பிடித்த நீலநிறம்.

புவனேஸ்வரி மேலும் சொன்னார்.

''இறைவி! நானும் அறிவழகனும் போய் எடுத்துட்டு வந்தோம்'' என்றார்.

''அத்தான் வந்தாரா?'' என்றாள் இறைவி ஆச்சரியமாக.

''ஆமா! அவன் காய்ச்சல்ல கிடந்தப்போ நான் இல்லாத குறையே தெரியாத மாதிரி பாத்துகிட்டியாம். அதனாலே

நானே பாத்து இறைவிக்கு புடவை செலக்ட் செய்யணும்னு வந்தான்'' என்றார்.

இறைவி கொஞ்சம் மகிழ்ந்துதான் போனாள்.

''உனக்குப் பிடிச்ச நிறம் நீலமாம். அவனுக்கும் நீலநிறம் பிடிக்கும். அதனால கூடவே இருந்து செலக்ட் செய்தான்.''

இறைவி நெகிழ்ந்து போனாள்.

அன்றிரவு!

அறிவழகன் போனில் அழைத்தான்!

''இறைவி! புடவை பிடிச்சதா..?!'' என்றான்.

''ம்.. ரொம்பப் பிடிச்சது'' என்று அவள் முடிக்கு முன்னே அவன் இடை புகுந்தான்.

''எத்தனையோ தொழிலாளர்கள் உங்களுக்காக காத்துகிட்டிருக்காங்க. அதை விட்டுட்டு புடவை செலக்ஷனுக்கு போறீங்கன்னு அறிவுரை சொல்ல ஆரம்பிச்சுடாதே. எல்லாத்துக்கும் தான் நேரம் ஒதுக்கணும்'' என்றான் கிண்டல் போல.

அவள் என்ன பேசுவதென்று தெரியாமல் விழித்தாள்.

''என்ன பேச்சைக் காணோம்?''

''இல்லே! நீங்க இப்படி யாருன்னு தெரியாமப் போச்சு'' என்றாள்.

''எப்படி ஆளு?''

''எப்பவாவது யதார்த்தமா சொல்றதை மனசுல வச்சுகிட்டு இப்படி நேரம் பாத்துக் கிண்டல் செய்வீங்கன்னு தெரியாது?'' என்று முணுமுணுத்தாள்.

அவன் கலகலவென்று சிரித்தான்.

''இல்லம்மா! கிண்டல் செய்யணும்கிறதுக்காகச் சொல்லலே அம்மாதான்..'' என்று சமாதானம் செய்தான்.



''இறைவி! நீயும் அத்தையும் செந்திலும் என்கிட்ட காட்டிய அன்பு கலப்படமில்லாதது. அதுக்கு எந்த விதத்துல கைமாறு செய்யறது. இந்த மாதிரி ஏதாவது வகையில என்னோட அன்பை வெளிப்படுத்தறதுதான்'' என்றான்.

''தேங்க்ஸ்!'' என்றாள்.

இரண்டு பேரும் சிரித்துக் கொண்டார்கள்.

மறுநாள்!

ஏன்.. அறிவு! அம்மாவுக்கு இறைவிக்கு எல்லாம் ஏதோ தீபாவளிப் பரிசு இருக்கு போல இருக்கு. ஆனா எனக்கு ஒண்ணும் இல்லையோ!'' என்றான் செந்தில்.

''என்னடா நீ! கேக்காமயே குடுக்கற சான்லை எனக்குக் குடுப்பியோன்னு பார்த்தேன். ஆனா, நீ அந்த மாதிரி வாய்ப்பைக் குடுக்கவே மாட்டேங்கறே!'' என்றான்.

செந்தில்குமரன் தன் தலையிலயே அடித்துக் கொண்டான்.

''மக்குடா நான்!'' என்றான்.

''சரி.. சரி.. விடு.. விடு..! அதை வேற அடிக்கடி சொல்லிக் கலைன்னா.. என்ன?'' என்றான்.

அறிவழகன் எடுக்கிற பல்வேறு அவதாரங்கள் குறித்து செந்தில்குமரனுக்கு வெகுவான ஆச்சரியம்.

அலுவலகத்தில் சரியாக நேரம் கடைபிடிப்பான். கடுமையாக உழைப்பான்.

எல்லாருக்கும் அவனிடம் பயம் இருந்தது. ஆனால் அவன் பேசுகிற நகைச்சுவைக்கு எல்லாருக்கும் பிடித்துதான் இருந்தது.

எப்போதும் நன்றாக உழைக்கிறவர்களை பாராட்டுவான். ஆனால் ஏமாற்றுகிறவர்களைக் கண்டால் கடித்துக் குதறி விடுவான். தொழிலில் ஏமாற்றுவதையும் பொய் சொல்லுவதையும் அறவே வெறுத்தான்.

கண்டு பிடித்தால் உடனடியாக ''கல்தாதான்'' அதனால் அந்த பயமும் இருந்தது.

அதே சமயம் நன்றாக வேலை செய்கிறவர்கள் முகம் வாடி இருந்தால் கேட்பான்.

''என்ன, கவிதா இன்னைக்கு ஒரு மாதிரி இருக்காப்ல. வரச் சொல்லுங்க'' என்று வரவழைப்பான்.

''எனி பிராப்ளம்?'' என்று விசாரிப்பான்.

''இல்லை.. சார்! குழந்தைக்கு உடம்பு சரியில்லை'' என்று கவிதா இழுத்தாள்.

''சரி.. லீவு குடுத்துட்டுப் போங்க!'' என்பான்.

தன்னு கதவை அடைகிற நேரம்.

''கவிதா மேடம்! தேவைப்பட்டா காம்பன்ஸேட் பண்ணனும்'' என்பான்.

''கண்டிப்பா.. சார்!'' என்று உற்சாகமாகப் போவாள் கவிதா. மனிதர்களின் மனோபாவங்களை படித்து வைத்திருப்பான்.

எங்கே கடுமை காட்ட வேண்டுமோ அங்கே கடுமை காட்டுவதும் எங்கே விட்டுக் கொடுக்க வேண்டுமோ அங்கே விட்டுக் கொடுப்பதும் இயல்பாக இருந்தது.

செந்தில்குமாரனும் அதையெல்லாம் நன்றாகப் புரிந்து கொண்டதோடு பின்பற்றவும் செய்தான். அனைத்து நிறுவனங்களையும் பற்றி தெளிவான அறிவும் உடையவனாக இருந்தான்.

செந்தில்குமரன் வேலை கற்றுக் கொள்வதில் காட்டிய கெட்டிக்காரத்தனம் அறிவழகனுக்குப் பிடித்திருந்தது.

ஓரிரு சமயங்களில் சொல்ல மறந்து போன விஷயங்களைக் கூட முதல் நாள் பேச்சு வாக்கில் சொன்னதை வைத்துக் கொண்டு அவன் முடித்து வைத்திருப்பதைப் பார்க்கும்



போது அறிவழகனுக்கு அவன் மீது நல்லபிப்பிராயம் தோன்றியது.

படிப்படியாக அவனை மேலுக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் வாய்ப்பு கிடைத்தால் ஷைன் பண்ணுவான் அவனைப் பற்றிக் கருத்து வைத்திருந்தான். அந்த அடிப்படையிலேதான் அந்தத் தீபாவளிக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு அவன் அழைத்தான்.

''செந்தில்! யு ஆர் ப்ரொமோட்டட் ஆஸ் மேனேஜர்'' என்றான்.

செந்தில்குமரன் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ''ரியலி!'' என்றான் ஆச்சரியமாக.

அறிவழகன் சுற்று முற்றும் பார்த்து விட்டு அருகில் யாரும் இல்லையென்று உறுதி செய்து கொண்டு ''ஆமடா! தீபாவளிப் பரிசு கேட்டயில்ல.. அதான்.. மார்த்தாண்டம் ரிடையர்மென்ட் கேட்டிருக்காரு. ஜி.எம். வேலுமணி ரெண்டு வருஷத்துல போயிடுவாரு.. அவருக்கும் இப்பவே அறுபதுக்குப் பக்கமாயிருச்சு.. என்னோட வற்புறுத்தல்ல இருக்காரு. நீ ரெடியாயிரிக்க'' என்றான்.

செந்தில் உள்ளம் பூரித்துப் போனான். என்றால் இரண்டு நாள் கழித்து தீபாவளிக்கென்று அவனுக்குத்தான் வரைந்த ஓவியத்தைப் பரிசாகக் கொடுத்து.

''அண்ணனுக்கு ப்ரொமோஷன் குடுத்திருக்கீங்க.. ஃபாமிலியே சந்தோஷத்துல இருக்கோம்'' என்று இறைவி சொன்னபோது இன்னும் கொஞ்சம் பூரித்துப் போனான்.

# 4

''முதலாளிகிட்ட எது கேட்கணும்னாலும் செந்தில் சார் மூலமாக கேட்டால் போதும்'' என்று குரல் அரசல்

புரசலாக செந்தில்குமரனின் காதுகளில் விழுந்தபோது செந்தில்குமாரனுக்கு உள்ளம் குளிர்ந்து போனது.

அலுவலகத்திலும் சரி.. மற்ற தொழிற்சாலைகளிலும் சரி திடீரென்று ஏதாவது கேட்டால் அறிவழகன் கூட,

''ஒரு நிமிஷம்..'' என்று சொல்லி விட்டு செந்திலை அழைத்துக் கேட்பான். அந்த அளவுக்கு செந்தில்குமாரனும் அலுவலக விவரங்களை சேகரித்து விரல் நுனியில் வைத்துக் கொண்டிருந்தான்.

''அம்மா! கிட்டத்தட்ட என்னை எல்லாரும் முதலாளி மாதிரி நடத்த ஆரம்பிச்சுட்டாங்க'' என்று சொன்னபடி காலை டிபனுக்கு அம்மா பரிமாறியிருந்த இட்டிலியை பிட்டு வாயில் போட்டான். ''என்ன சட்டினி!'' என்று முன்னாலிருந்த கிண்ணங்களைப் புரட்டுகையில்,

''உனக்குப் பிடிச்ச மிளகாய்ச் சட்டினி'' என்று வந்தாள் இறைவி.

அம்மா தன் கவலையை மறைத்துக் கொண்டு சொன்னார்,

''தம்பி! செந்திலு! அறிவழகன் தம்பி நமக்கு எல்லா மரியாதையும் குடுக்குது. நல்ல இடம் குடுத்து வச்சிருக்கு. ஆனா, நம்ம உண்மையான தகுதி என்னாங்கறதை நாம மறந்துடக் கூடாது. என்ன விஷயம்னாலும் அறிவழகன் தம்பியை கலந்துக்காம சுயமா முடிவெடுக்காதே. சொத்து அவுகளுதுங்கறதை நீ ஞாபகம் வச்சுக்கணும்'' என்றார் அம்மா.

செந்தில்குமரன் சற்றே சலிப்புடன் அம்மாவைப் பார்த்தான்.

''அம்மா! நீ என்னையும் புரிஞ்சுக்கலை. அறிவழகனையும் புரிஞ்சுக்கலைன்னு நினைக்கறேன்'' என்றான்.



''தம்பி! எனக்கு ரெண்டு பேரையும் புரியுது. அதே சமயத்துல உலக நடப்பு என்னான்னும் எனக்குப் புரியுது'' என்றார் திலகவதி.

ஒரு விஷயத்தைத் திரும்பத் திரும்ப சொன்னால் கேட்பவர்களுக்கு சலிப்பேற்பட்டு விடும் என்பதை உணர்ந்ததாலோ என்னவோ திலகவதி மேற்கொண்டு அதைப்பற்றிப் பேசுவதை விட்டு விட்டார். ஆனால், உள்ளுக்குள்ளே கவலை இருந்து கொண்டே இருந்தது.

ஒரு பெருமூச்சு விட்டபடி பேச்சை மாற்றினான்.

''ஹேய்! இறைவி! அறிவழகன் எப்படி? பாத்தியா? நான் முன்னேயெல்லாம் அருமையான ஃபிரண்டுன்னு சொன்னா பணக்காரங்கன்னா ஒரு விதமாத்தான் இருப்பாங்கன்னு சொல்லுவியே!'' என்று தங்கையிடம் பேச்சை வளர்த்தான் செந்தில்குமரன்.

''நான் ஒண்ணும் அவரைப் பற்றித் தப்பாச் சொல்லலையே. பொதுவா பணக்காரங்கன்னா நம்மை மதிக்க மாட்டாங்க.. நாம நம்ம எல்லை தெரிஞ்சுக்கணும்னுதான் சொன்னேன். சும்மா சொல்லக் கூடாது அண்ணா! உன்னோட ஃபிரண்டு ரொம்ப நல்லவருதான்'' என்றாள்.

''எனக்கென்ன ஆச்சரியம் தெரியுமா? அவனுக்கு நம்ம ஃபாமிலியே ரொம்பப் பிடிச்சிருக்கு. அவங்க அம்மா கூட ரெண்டு மூணு தடவை வந்துட்டாங்களே'' என்றான் செந்தில் குமரன். பிறகு குபீரென்று சிரித்தான்.

''என்னடா!'' என்றார் அம்மா.

''அம்மா.. அறிவழகன் காய்ச்சலாய் கிடந்தப்ப நம்ம இறைவி திறமையைக் காட்டறதுக்கு இதுதான் சந்தர்ப்பம்னு உப்பு சப்பில்லாம ஒரு கஞ்சி வச்சுக் குடுத்தா இல்லே! அதைப் போய் அவங்கம்மா கிட்டே பாராட்டோ பாராட்டுன்னு பாராட்டியிருக்கான். அதுக்கு ஆன்ட்டி ஒரு பட்டுப்

புடவை வாங்கிப் பரிசாக் குடுத்துருக்காங்க..'' என்று கேலி செய்தான்.

இறைவி மெதுவாக அவன் தலையில் தட்டி விட்டுச் சொன்னாள்.

''ஐயோ! ஞானசூன்யமே! அது கஞ்சிக்காக வாங்கிக் குடுத்த பட்டுப் புடவை இல்லே! நாம காட்டின அன்புக்கு அவங்க எடுத்த ரெகக்னிஷன்'' என்றாள் இறைவி.

''அப்படிச் சொல்லு! இறைவி!'' என்று உள்ளே நுழைந்தான் அறிவழகன்.

அம்மா, அண்ணன், தங்கை மூவருமே ஒரு கணம் திணுக்குற்றாலும் உடனடியாக சமாளித்துக் கொண்டார்கள்.

''அத்தை! இன்னைக்கு என்ன டிபன்?'' என்றான்.

செந்தில்குமரன் பரபரப்பானான்.

''என்ன அறிவழகன்..! ஏதாவது பிராப்ளமா?'' என்று எழுந்தவன்.

''ஆமடா! பிராப்ளம்தான்! ஆனா தலை போகிற அவசரம் எல்லாம் ஒண்ணும் இல்லே! சாப்பிட்டு முடிச்சட்டே போய்ப் பாக்கலாம்'' என்றான்.

சமையலறைக்குள் எட்டிப் பார்த்துவிட்டு ''இறைவி! தங்கள் திருக்கரங்களால் ஏதாவது சமைத்து சூடாக எமக்கு வழங்கலாமே!'' என்றான்.

''என்ன வேண்டும்? கறியமுதா, துணையமுதா..'' என்றாள் இறைவியும் சளைக்காமல்.

''டேய்! போச்சு.. அவ்வளவுதான் இனிப் பாரு தூய தமிழ்லயே அசத்தித் தள்ளுவா! தமிழாசிரியர் மகள்டா!'' என்றான் செந்தில்குமரன் பரமரகசியம் போல்.

''அப்படீங்களா! இது புதுசா இருக்கே?'' என்றான் அறிவழகன் குறும்பாகச் சிரித்தபடி!



''அதென்ன? கறியமுது.. அப்புறம் துணையமுது'' என்று கேட்டான்.

''அதுவா! கறியமுதுன்னா.. காய்கறி வகைகள்; துணையமுதுன்னா சைட்டிஷ்'' என்றாள்.

''ஓஹோ! வார்த்தைகள் எல்லாம் அழகா இருக்கே?'' என்றான்.

''ஆமா! இதுக்குத் தமிழறிவு ரொம்ப ஜாஸ்தி. படிச்சது பி.எஸ்ஸின்னாலும் தமிழ் இலக்கியம்னா ரொம்ப இஷ்டம்'' என்றான் செந்தில்குமரன்.

''தட்ஸ் எ ரேர் காம்பினேஷன்'' என்று சொல்லிக் கொண்டான். மறுபடியும் தோழனை நோக்கித் திரும்பினான்.

''டேய்! செந்தில் டிஸ்ட்டிரிபியூஷன்ல சூப்பர்வைசர் இடமிருக்குன்னு நிக்கறேன்கறார். மகன் நல்லாப் படிச்சு வந்துட்டான். போதும்ப்பா நீ வேலை செஞ்சதுங்கறானாம். யாராவது ஒரு நல்ல ஆளாப் பிடி. யாரோ ஒரு ஆள் இருக்காங்கன்னு சொன்னியே!'' என்றான்.

''அடப்பாவி! இதுக்காகவா அரக்கப் பரக்க இப்படி காலங் காத்தாலே வந்தே?'' என்றான் செந்தில்.

''அது ஒரு காரணம். அப்புறம் இங்கே வீட்டுக்கு வந்து பத்து நாளைக்கு மேல ஆச்சு. அம்மா வேற எங்கே இறைவி வரவேயில்லை. நீ ஏதாவது சொன்னயான்னு என்கிட்டே ஒரே விசாரணை!'' என்றான்.

அதற்குள்ளாக இறைவி சூடாக அடை வார்த்துக் கொண்டு வந்து கொடுத்தாள்.

''சூப்பர் இறைவி!'' என்று பாராட்டிக் கொண்டு சாப்பிட்டான்.

''சரி நான் கிளம்பறேன். நீ என்ன செய்யறே! ஆள் கொண்டு வர்றியா?'' என்றான்.

"கண்டிப்பா! நேத்துக் கூட அவன் போன் பண்ணி உங்க கம்பெனியில வாய்ப்பு இருக்கான்னு கேட்டுகிட்டிருந்தான். உடனே புடிச்சுப் போட்டுர்றேன்" என்றான் செந்தில்குமரன் உற்சாகமாக.

"அத்தை! நான் கிளம்பறேன். இறைவி வர்றியா! கொண்டு போய் அம்மாகிட்டே விட்டுட்டுப் போறேன்" என்றான்.

இறைவி அம்மாவைப் பார்த்தாள். அம்மா சரியென்று தலையாட்டவே புறப்பட்டாள்.

வழியில் இறைவி சிந்தனையோடு வந்தாள்.

"என்ன இறைவி யோசனை!" என்றான் அறிவழகன்.

"இல்லே! உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாதுன்னு சொல்வாக. நீங்க அண்ணனுக்கு அவனோட இடத்தை சரியாப் புரிய வைக்கறது நல்லது" என்றாள்.

அறிவழகன் ஆச்சரியமாய் அவளைப் பார்த்தான்.

இறைவி வெளியே பார்த்துக் கொண்டு சொன்னாள்.

"இல்லைங்க! அவனுக்கு ரொம்ப இடம் குடுக்கறீங்க. கிட்டத்தட்ட எல்லாரும் அவனை முதலாளி மாதிரி நடத்த ஆரம்பிச்சுட்டாங்க. நீங்களும் அவனுக்கு இந்த அளவு இடம் கொடுக்கறீங்க. கஷ்டப்பட்டுக் கிடைக்காத எதோட அருமையும் யாருக்கும் தெரியாது!" என்றாள்.

"புரியலே!" என்றான்.

"நான் ஒரு கதை சொல்றேன். புரியுதான்னு பாருங்க! ஒரு சமயம் பீர்பாலும், அக்பரும் உப்பரிகை மேல நின்னுகிட்டிருந்தாங்களாம். அப்ப அரண்மனைக்குள்ளே ஒருத்தன் நுழைஞ்சானாம். அவன் தோள் மேல ஒரு பட்டுச் சால்வை போத்தியிருந்தானாம். ஆனா, அந்தச் சால்வையை அலட்சியமா போத்தியிருந்தானாம். அதே சமயம் கால்ல ஒரு புதுச் செருப்பும் போட்டிருந்தானாம். செருப்பை மட்டும்



பெருமையாக குனிஞ்சு குனிஞ்சு பாத்துகிட்டானாம். அக்பர் பீர்பால்கிட்டே ஆச்சரியமாய் இதைக் குறிப்பிட்டுச் சொன்னாராம். அப்போ பீர்பால் சொன்னாராம். 'அரசே! கண்டிப்பா அந்தச் செருப்பு அவன் சம்பாத்தியத்துல வாங்கினதா இருக்கும். அந்தச் சால்வை அவங்கப்பா குடுத்ததா இருக்கும்'னு. அக்பர் உடனே அந்த ஆளை வரவழைச்சு விசாரிச்சாராம். உண்மை அப்படித்தான் இருந்ததாம்."

"ஓ...!"

"ஆமா! எதுவும் அவங்கவங்க உழைப்புல கிடைச்சா அதோட மதிப்பு வேறயா இருக்கும். உரிமைக்காரங்களா இல்லாம உரிமை கொண்டாடறதுங்கறது சரியில்லே! பிரச்சினைகள்ல முடியும். அம்மா ரொம்பக் கவலைப் படறாங்க" என்றாள்.

"நீ என்னை சந்தேகப் படறியா? இல்லை உங்கண்ணனை சந்தேகப் படறியா?"

"ரெண்டு பேரையுமே சந்தேகப்படலே. ஆனா, விதின்னு ஒண்ணு இருக்கே அது ரொம்ப வலியது."

"இறைவி! கொஞ்சம் பாஸிடிவ்வா திங்க் பண்றது நல்லது."

"பாஸிடிவ் திங்கின்னா அதுக்கு அர்த்தம் எல்லாமே நல்லதா நடக்கும்னு நம்பிக்கறது மட்டுமே இல்லை. ஹார்ட்ல்ஸ்ம் பாங்களே அதையெல்லாம் எப்படி டாக்கிள் பண்றதுங்கறதுலயும் இருக்கு" என்றாள் இறைவி.

"வெல் ஸெட்!" என்றான் அறிவழகன். பிறகு சட்டென்று சிரித்தான்.

"இறைவி! எப்பவுமே இப்படி வயசுக்கு மீறிப் பேசவியோ?" என்றான்.

அவள் அவனைப் பார்த்து மந்தகாசத்துடன் புன்னகைத்தாள்.

"மறைமுகமாக மொழின்னு சொல்றீங்களோ?" என்றாள்.

அவள் முகம் மாறியது. சட்டென்று பார்வை ரோட்டை நோக்கித் திருப்பிக் கொண்டாள்.

"இறைவி, மொழியாய் இருக்கும்போதும் நீ அழகாத் தான் இருப்பே!" என்றான்.

அவள் முகம் சிவந்தது.

அறிவழகன் ஓரக்கண்ணால் அதைப் பார்த்து ரசித்துக் கொண்டான்.

சற்று நேரம் கனமான ஒரு மௌனம் நிலவியது. சூழ்நிலையில் நட்பைத் தாண்டி வேறு ஏதோ ஓர் உணர்வு கலந்தாற்போல் இருந்தது.

தனது பங்களாவில் இறக்கி விட்டான்.

"இறைவி! எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு. நீ அம்மாவோட இரு. புறப்படும்போது அம்மா கார்ல அனுப்பி வைப்பாங்க" என்றான்.

சரியென்பது போல் தலையாட்டினாள். அவள் இறங்குவதற்காகக் கார்க் கதவைத் திறக்கும்போது அவன் ஆழ்ந்த குரலில் அழைத்தான்.

"இறைவி! கொஞ்சம் அதிகமா லிபர்ட்டி எடுத்துக்கிட்டேனோ?" என்றான்.

"ஏன் அப்படிக் கேட்கறீங்க?" என்றாள்.

"இல்லே! நம்ம ஊர்ல பொண்ணுங்ககிட்டே அழகா இருக்கீங்கன்னு சொன்னாலே தப்பா எடுத்துக்கறாங்க.." என்றான்.

"அப்ப அடிக்கடி பொண்ணுங்ககிட்டே அப்படிச் சொல்லிப் பழக்கமோ?" என்று கேட்டாள்.



"அப்படிப் போடு! மடக்கற பாத்தியா!" என்று கபகபவென்று சிரித்தான். பிறகு சொன்னான்.

"சில நேரங்கள்ல கர்ட்டஸிக்காக அப்படிச் சொல்ல வேண்டியிருக்கும்" என்றான்.

"ஆனா, அது உண்மையில்லேன்னா தெரிஞ்சுடும்" என்றாள் இறைவி.

"எப்படி?" என்றான் குறும்புப் பார்வையுடன்.

"குரல்ல. பார்வையில."

"ம்..! குரல் எப்படி மாறும்?"

"ஆழ்ந்த குரல்ல பேசுவாங்க. கண்கள்ல ஒரு பாராட்டு இருக்கும்.. ஆனா, எனக்கு இந்த அழகைக் காட்டிலும் அறிவு மேல நம்பிக்கை அதிகம்" என்றாள்.

"அறிவுன்னா.. என்னையா.. சொல்றே!" என்றான் மறுபடியும் குறும்பாக.

"அப்படியும் வச்சுக்கலாம்!" என்றாள்.

இரண்டு பேருக்குமே பேச்சை வளர்க்கிறோம் என்பது தெரிந்திருந்தது. ஆனால், பேச்சை நிறுத்தவும் மனமில்லை.

"ஆனா.. இன்னொன்னும் தெரியும்" என்றாள் இறைவி.

"என்ன?"

"அவங்கவங்க.. அவங்கவங்க.. தகுதி தெரிஞ்சு நின்னுக்கறதுதான் நல்லதுன்னு.." என்றாள்.

அறிவழகன் ஏதும் பதில் சொல்லு முன் இறங்கி நடந்தாள்.

பின்னல் அசைய அவள் நடந்து செல்வதை அவன் ஆழ்ந்த பார்வையில் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த நிமிடத்தில் அவனுக்கு ஒரு விஷயம் புரிந்தது. அது தன் மனத்தில் இறைவி இடம் பிடித்து விட்டாள் என்பதுதான் அது.

அதே சமயத்தில் அவன் குறிப்பாகச் சொன்ன விஷயங்களும் அவள் சிந்தனையில் உழன்றன. எல்லாவற்றுக்கும் அவள் சில தீர்வுகளை மனத்துக்குள் எடுத்தாள்.

அந்த முடிவுகளினால் ஏற்படப்போகும் விபரீதங்கள் பற்றி அப்போது அவளுக்கும் புரிந்திருக்கவில்லை. புரிந்திருந்தால் கலங்கிப் போயிருப்பாள்.

* * *

அன்றிரவு!

இறைவி புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள்.

இறைவி உள்ளுக்குள் ஏதோ கலக்கம் நிறைந்திருந்தது. அறிவழகன் பார்வையில் நாளுக்கு நாள் ஏற்படுகிற வித்தியாசம் அவளுக்குப் புரிந்தது. அதிலும் இன்றைக்குக் காலையில் காரில் இருந்து இறங்கும்போது அவன் பார்த்த பார்வை இப்போது கூட நினைத்தால் என்னவோ செய்கிற மாதிரி இருந்தது.

புரண்டு படுத்தாள். ஒரு மகிழ்ச்சி, பயம், பரவசம் எல்லாம் கலந்து உணர்வுகள் அவன் தனது பார்வை வட்டத்துக்குள் நுழைகிற போதே அவளுக்குள் ஏற்பட்டது.

இன்றைக்குக் காலையில் அவன் ரசித்துப் பார்த்தபோது ஏனோ மகிழ்ச்சியில் கூத்தாட வேண்டும் போல் இருந்தது. "இறைவி" என்று அவன் ஆழ்ந்த குரலில் அழைக்கிற போதெல்லாம் அவளுக்குள் ஏதோ செய்கிறாற் போல் இருந்தது.

கண்டிப்பாக இனி வரும் நாட்களில் ஏதோ ஒரு நாள் அவன் தன் மனத்தை வெளியிடப் போகிறான். அதற்குள்ளாக அவள் ஒரு முடிவு சொல்லத் தயாராக இருக்க வேண்டும். அவள் சிந்தித்து முடிவெடுப்பதற்கு அவளது மனம் எந்த விதமான சுதந்திரத்தையும் அவளுக்கு அனுமதிக்கிறாற் போல் தெரியவில்லை. அது பாட்டுக்குக் கூத்தாடுகிறது



போனில் அவன் குரல் கேட்டாலே பரபரப்பாகி விடுகிறாள்.

வீட்டுக்கு வந்தாலே ஏதோ ஆகாயத்தில் மிதப்பது போல் பரபரப்பாகி விடுகிறாள். லேசாக அவன் பார்வை தன் முகத்தில் பட்டாலே போதும் முகம் மலர்ந்து போய் விடுகிறது.

'ஏய்.. இறைவிப் பொண்ணே! இதெல்லாம் நல்லதுக்கு இல்லே! அவங்க லெவல் என்ன? உங்க லெவல் என்ன? அவங்க தகுதிக்கு உன்னால என்ன கொடுக்க முடியும்?' என்று அவளது அறிவு கேட்டது.

'என்ன கொடுக்க முடியும்? பொன்னா பொருளாக கொடுக்க முடியாது. ஆனா மனசைக் கொடுக்க முடியும். அவரு வாழ்க்கையில நிம்மதியைக் கொடுக்க முடியும். அன்பை வாரி வாரி இறைக்க முடியும். அதுக்கு மேலே வாழ்க்கையில என்ன வேணும்?'

'யாருக்குத் தெரியும்? பணக்காரங்களுக்கு அதுக்கு மேல வேற ஏதாவது தேவையிருக்கலாம்.'

'அப்படித் தேவையிருக்கறவங்க எதுக்காக எங்கிட்டே ஒட்டி ஒட்டிப் பழகறாங்க.'

அவளது மனதும், அறிவும் அவளைக் கேட்காமலேயே இப்படி வாக்குவாதம் நடத்திக் கொண்டன.

இறைவி எதிர்பார்த்ததைப் போலவே அடுத்த வாரத்தில் ஒரு நாள் அறிவழகன் அழைத்தான்.

"இறைவி! உன்கிட்ட பேசணும்!" என்றான்.

இறைவி ஏகப்பட்ட எதிர்பார்ப்புக்களோடும் அச்சத்தோடும் அவனோடு பேச, அவன் எதிர்பார்த்ததற்கு நேர் மாறாக வேறு விஷயம் பேச அவள் கலங்கிப் போனாள். ஆனால், அவனோ அவளுடைய எந்த விதமான மறுப்புக்களையும் ஏற்றுக் கொள்கிறவனாக இல்லை.

காலத்தின் கையில் விஷயங்களை விட்டு விட்டு வேடிக்கை தான் பார்க்க வேண்டியிருந்தது.

# 5

''உங்க அண்ணனுக்குப் பார்ட்னர்ஷிப் கொடுக்கலாம்னு இருக்கேன்'' என்றான் அறிவழகன்.

இறைவி சற்றே விழித்தாள். அவன் சொல்கிற விஷயம் அவளது தலைக்குள் இறங்கி மனதுக்குள் இடம் பிடிக்க ஓரிரு வினாடிகள் ஆனது.

புரிந்தபோது அடி வயிற்றில் இருந்து பயம் கிளம்பியது.

''அறிவழகன்.. ப்ளீஸ்! நல்லா யோசிச்சுக்குங்க..! இது தேவையில்லாதது..'' என்றாள் இறைவி.

அறிவழகன் அதை ஏற்றுக் கொள்கிற மனநிலையில் இருக்கவில்லை என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது. ஆனாலும் சொல்ல வேண்டிய கடமை அவளுக்கு இருந்தது.

''அறிவழகன்... ப்ளீஸ்! நீங்க எங்க அண்ணனுக்கு பொஸிஷன் குடுக்கணும்னு நினைச்சிங்கன்னா.. ஜி.எம். மாதிரி போடுங்க. நல்ல சம்பளம் குடுங்க..! ஆனா, பார்ட்னர்ஷிப் அளவுக்கு அவன்கிட்ட பணம் ஏதுங்க..?'' என்றாள்.

''ஹல்லோ! நான் பணம் எதுவும் எதிர்பார்க்கவே இல்லை. வொர்க்கிங் பார்ட்னர்ஷிப்.. சரியா?''

''ஓ..!''

''ஆமா! ரொம்பப் பெரிய அளவிலான பங்கு எல்லாம் இல்லே! ஜஸ்ட் ஒரு இருபது சதவீதம். ஆனா, அது அவனுக்கு ஒரு கம்பெனியில ஒரு பார்ட்னர்ங்கற அளவுக்கு ஒரு அந்தஸ்து கொடுக்கும்.''



இறைவி உற்சாகமாக பதில் எதுவும் கொடுக்கவில்லை மாறாக மௌனமே சாதித்தாள்.

''இறைவி! இந்த மாதிரி ஆஃபர் நான் குடுக்கறதுக்கும் பல காரணங்கள் இருக்கு'' என்றான்.

இறைவி மௌனமாகவே அமர்ந்திருந்தாள்.

''என்ன இறைவி! ஒன்னுமே பேச மாட்டேங்கறே!''

''எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலே!'' என்றாள்.

அறிவழகனுக்குக் கொஞ்சம் கோபம் கூட வந்தது. இந்த ஏற்பாட்டுக்கு அப்பாவிடம் ஒப்புதல் வாங்குவதற்கு அவன் பட்ட பாடு நினைவுக்கு வந்தது.

அப்பாவிடம் கெஞ்சிய கெஞ்சல்!

அம்மாவிடம் செய்த தாஜா எல்லாமும் நினைவுக்கு வந்தது.

ஒரு விதமாக அப்பாவிடம் பேசினான்.

''அப்பா! செந்தில்குமரன் நல்லா வொர்க் பண்றான் இல்லப்பா. நான் இல்லேன்னாக் கூட ஃபாரின் போனாக் கூட எல்லாத்தையும் அவனே மேனேஜ் பண்ணிடறான்.. தெரியுமா?'' என்றான்.

''அப்படின்னா.. நல்ல போஸ்ட் குடு. நல்ல சம்பளம் குடு..'' என்றார் சாம்பசிவம்.

''இல்லப்பா! நான் வேற மாதிரி யோசிக்கறேன்!'' என்றான்.

''எப்படி?'' என்றார் கண்கள் சுருங்க.

''இல்லப்பா! இந்த மாதிரி நல்ல வேலைக்காரங்களை எல்லாம் நம்ம கையில இருந்து நழுவ விடாம நம்ம பொறுப்பில வச்சுக்கணும்'' என்றான் அறிவழகன்.

"நல்ல யோசனைதான்!" ஆனா, பையன் கொஞ்சம் ஓவர் அம்பிஷியனா இருக்கானே.." என்றார் அப்பா சிந்தனையுடன்.

"அப்பா! வளர்ச்சின்னு வரும்போது மனிதர்கள்.. அப்படி இருக்கறது இயற்கைதானேப்பா..! நான் கூட அப்படித்தான் இருந்தேன்.. நீங்க அப்பப்ப எனக்கு வழி காட்டலையா?" என்றான்.

"அதெல்லாம் சரிதான்ம்ப்பா! ஆனா, சபார்டினேட்டா இருக்கற வரைக்கும் எல்லாத்தையும் நாம விளக்கிட்டு இருக்கணும்கறது இல்லே! நாம சொல்றதை அவங்க செய்யப் போறாங்க.. ஆனா, பார்ட்னர்ன்னு வந்தா.. எல்லாத்துலயும் கலந்தாலோசிக்கணும். உரிமை குடுக்கணும். யோசிக்கக்கப்பா..!"

அறிவழகனின் முகம் வாடியது. அவன் தனது நன்பனுக்காக கண்டிப்பாக ஏதாவது செய்ய வேண்டுமென நினைத்தான். அதை அப்பாவும் புரிந்து கொண்டார். கடந்த ஏழெட்டு மாதங்களில் செந்தில்குமாரனின் வேலையும் நன்றாகத்தான் இருந்தது. சுறுசுறுப்பாக இருந்தான். அறிவழகனின் கேள்விகளுக்கு ஈடு கொடுத்தான். அறிவழகனின் கோபத்துக்கும் ஈடு கொடுத்தான். அந்த விதங்களில் எல்லாம் அவருக்கும் செந்தில்குமரனைப் பிடித்துத்தான் இருந்தது.

"உனக்கு அவனை மிகவும் பிடித்துப் போய் இருந்தால் அவனுக்கு ஒரு இளை மாதிரி ஏற்படுத்தி அவன் பொறுப்பில் விடு" என்று அழுத்தமாகச் சொல்லி விடலாமா என்று நினைத்தார். ஆனால் வாடிக் கிடந்த மகனின் முகத்தைப் பார்த்தவுடன் தனது கருத்தை மாற்றிக் கொண்டார்.

பல சமயங்களில் அனுபவம் சிறந்த பாடமாக அமைகிறது. அது நல்ல விதமான அனுபவமாக இருந்தாலும் சரி, கெட்ட விதமான அனுபவமாக இருந்தாலும் சரி.



ஒருவேளை அந்தப் பையன் நமது கம்பெனிக்குக் கிடைத்த சொத்தாகக் கூட மாறிப் போவதற்கு வாய்ப்புண்டு என்று எண்ணிக் கொண்டவர் லேசான ஒரு பெருமூச்சு விட்டார்.

"தம்பி! எது உன் மனசுக்குச் சரின்னு படுதோ அதைச் செய்! ஆனா, ரொம்பப் பெரிய லெவல்ல எல்லாம் பங்கு குடுக்காதே. சும்மா வொர்க்கிங் பார்ட்னர் மாதிரி ஏதாவது போட்டுக் குடு. நாட் மோர் தேன்.. ட்வெண்டி பர்ஸன்ட்?" என்று சொல்லிவிட்டார்.

இப்போதைக்கு இந்த மட்டும் ஒத்துக் கொண்டாரே என்று எண்ணிக் கொண்டான். ஆனால், அப்பா சிந்தனையில் ஆழ்ந்து விட்டார்.

மனைவியிடம் பேசினார்.

"ஏம்மா! புவனேஸ்வரி! அறிவழகன் என்ன இப்படி இமோஷனலா மாறிப் போனான். அந்த செந்தில்குமாரனுக்கு வேலை குடுத்தான். சூப்பரின்டெண்டாக்கினான். அப்புறம் மானேஜராக்கினான். அவனும் அந்த அளவுக்கு உழைக்கறான்.. சரி.. ஆனா, பார்ட்னராக்கிக்கறேன்கறானே.. அது சரிவருமா?" என்று கேட்டார்.

புவனேஸ்வரியின் முகத்தில் ஒரு விதமான புன்னகை மலர்ந்தது.

"ஏங்க! அவன் செந்தில்குமரனோட திறமைக்காக மட்டுமில்ல வேற ஏதோ காரணத்துக்காகவும் பார்ட்னர்ஷிப் குடுக்கலாம்னு நெனக்கறான் போல் இருக்கு" என்றார்.

"அப்படியா.. சொல்லேன்!"

"ஆமாங்க..! அந்த இறைவிப் பொண்ணு.. அவளை இவனுக்கு ரொம்பப் பிடிக்கற மாதிரித் தெரியுது. அதுதான்.. ஒரு மாதிரிப் பார்ட்னர்ன்னு ஆயிட்டா.. நாளைக்கு பொண்ணு கின்னு கேட்கலாம்னும்.." என்று இழுத்து நிறுத்தினார்.

''ம்..!'' என்று உறுமிக் கொண்டபடி சிந்தனையில் ஆழ்ந்தார் சாம்பசிவம்.

அவருக்கு இந்த ஐடியாவே பிடிக்கவில்லையோ என்று கலங்கிப் போனார் புவனேஸ்வரி.

''ஏங்க! அந்தப் பொண்ணு ரொம்ப நல்ல பொண்ணாத் தான் தெரியுது. பக்குவம் இருக்கு. நம்ம அறிவுக்கும் ரொம்பப் பிடிச்சிருக்கு..'' என்றார் வற்புறுத்துவது போல்.

சாம்பசிவம் பெருமூச்சு விட்டார்.

''புவனேஸ்வரி! நான் அதைத் தப்பு சொல்லலே! அவனுக்குக் கல்யாணம்னு ஒன்னு செய்யும்போது அது கண்டிப்பா அவன் மனசுக்குப் பிடிச்ச பொண்ணா இருக்கணும். அதுதான் முக்கியம். எனக்கும் அந்த இறைவிப் பொண்ணைப் பிடிக்கத்தான் இருக்கு. நடுத்தரக் குடும்பத்தில் இருந்து கொண்டு வர்றது குடும்பத்துக்கு நல்லதுதான்.. ஆனா.. இந்தப் பார்ட்னர்ஷிப் ஐடியா.. எனக்கு அவ்வளவா நல்லதாத் தெரியலே!'' என்றார்.

''அது சரிங்க..! வேண்டான்னா.. அவன் மனசு கஷ்டப்படும்.. நீங்கதான் இருபது பர்செண்ட்டுக்கு மேல போகக் கூடாதுன்னு சொல்லிட்டீங்களே!'' என்றார்.

''சரி! ஆகறது.. ஆகட்டும்!'' என்றார். ஆனால், மனது சமாதானம் ஆகவில்லை. இப்போது அதெல்லாம் நினைவுக்கு வந்தது அறிவழகனுக்கு. அப்பா அப்படிச் சொன்னால் பரவாயில்லை. ஆனால், இறைவியே இப்படி இருக்கிறாளே என்று கோபம் வந்தது. அதைப் புரிந்து கொண்டவள் போல் இறைவி சொன்னாள்.

''நீங்க இப்படி ஒரு ஆஃபர் குடுக்கணும்னா எங்க ஃபாமிலி மேல எவ்வளவு பிரியம் வச்சிருக்கீங்கன்னு எனக்குப் புரியுது. ஆனா, இதனால..'' என்று அவள் முடிக்குமுன் அவன் குறுக்கிட்டான்.



உணர்வு மயமான நிலையில் தான் என்ன சொல்கிறோம் என்பதை முழுவதும் உணர்ந்து கொள்ளாதவனாக மனதில் இருப்பதைக் கொட்டி விட்டான்.

''இறைவி! அப்பா அந்த ஆஃபரை பிஸினஸ் ஆஃபராய் பார்த்தார். அதனால அதுல இருக்கக்கூடிய சாதக பாதகங்களைப் பத்தி ரொம்ப யோசிக்கிறார். ஆனா, இதை நான் என் வாழ்க்கைப் பிரச்சினையாய்ப் பாக்கறேன்'' என்றான்.

''புரியலே!'' என்றாள் இறைவி.

அறிவழகனின் பார்வை மாறியது. ஆழமான பார்வையுடன் அவளைப் பார்த்தான். குரல் குழைந்தது. உணர்வுகள் நிறைந்த குரலில் கேட்டான்.

''இறைவி! உண்மையா இன்னும் புரியலையா?'' என்றான்.

இறைவி ஏதோ கட்டுண்டவள் போல் அவன் பார்வையில் கவரப்பட்டு நின்றாள். ஒரு நிமிடம் ஓடியதா? பல நிமிடங்கள் ஓடியதா தெரியவில்லை. இருவரும் மீட்டுக் கொண்டார்கள்.

''இறைவி! என் மனசு உனக்குப் புரிஞ்சிருக்கும்னு நினைச்சேன். புரியாத மாதிரியே இருக்கியே? நிஜமாப் புரியலியா? இல்லே நடிக்கிறியா?'' என்றான்.

அவள் வேறுபுறம் பார்த்தாள்.

சட்டென்று எழுந்தாள்.

''உங்களுக்கு காபி போட்டுட்டு வரேன்'' என்று நகர்ந்தாள்.

அன்றைக்கு அவனது அப்பாவும், அம்மாவும் ஏதோ விசேஷத்துக்குப் போயிருந்தார்கள். தனது சகோதரனை எங்கோ அனுப்பி விட்டு நேரம் பார்த்து வந்திருக்கிறான் என்று புரிந்தது. ஆனால் இப்படிப் போட்டு உடைப்பான் என்று தெரியவில்லை.

முகத்தில் விதவிதமான உணர்வுகள் விளையாடிக் கொண்டிருக்க அவள் ஏதோ உலகத்தில் மிதப்பது போன்ற உணர்வுகளில் கரைந்தபடி காபி தயாரித்தாள்.

பின்னாலேயே உள்ளே வந்து விடுவானோ என்று பயந்து போனாள். ஆனால் அவன் வரவில்லை. ஒருவேளை சினிமாக்களில் வருகிறாற்போல் சமையலறை வாசலில் வழியை அடைத்துக் கொண்டு நிற்பானோ என்ற எண்ணம் தோன்றினாற்போல் சற்றே படபடப்பாகவே இருந்தாள். ஆனால், காபியோடு வெளியே வருகையில் அவன் ஹாலில் இருந்த அலமாரியில் இருந்த புத்தகம் ஏதோ ஒன்றைப் புரட்டிக் கொண்டு நின்றிருந்தான்.

இறைவி வரும் சத்தம் கேட்டுத் திரும்பினான். அவளைப் பார்த்துப் புன்னகைத்தான். படபடப்போடு கூடிய ஒரு அரைப் புன்னகையுடன் அவள் அவன் முகம் பார்க்காமல் காபியை நீட்டினாள். அவன் சாஸரோடு கூட கப்பை வாங்கிக் கொண்டான்.

''உனக்கு?'' என்றான்.

''இல்லே! இப்பதான் சாப்பிட்டேன்!'' என்றாள்.

''இல்லல்லே! கொஞ்சம் ஷேர் பண்ணிக்க!'' என்றான்.

அவள் உள்ளே போய் மற்றொரு கப்பை எடுத்து வர அதில் கொஞ்சம் ஊற்றிவிட்டுத் தனது கப்பில் இருந்து காபியை மெல்ல மெல்ல பருகியபடி அவள் முகம் பார்த்தான்.

தனது பார்வையைச் சந்திக்க மறுத்து அவள் தவிப்பதை ஒருவிதமான புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

''இறைவி! நீ பதிலே சொல்லலை!'' என்றான்.

மறுபடியும் அவள் மௌனமாகவே காபியைப் பருகினாள்.

மறுபடியும் அவன் தொடர்ந்து பேசினான்.



''இறைவி! நான் உங்க வீட்லயும், எங்க வீட்லயும் நம்ம விஷயம் பேசும்போது அவங்க முதல்ல சொல்லப் போற காரணம் ஸ்டேட்டஸ்தான். அதில எந்தக் குறைபாடும் வரக்கூடாதுங்கறதுக்காகத்தான் இப்படி ஒரு ப்ரபோஸல்.''

இறைவி அவனை நேராகப் பார்க்காமல் சொன்னாள்.

''இந்தக் காரணத்துக்காக ஒரு பார்ட்னர்ஷிப் குடுக்கறீங்கன்னு தெரிஞ்சா.. நியாயப்படி பார்த்தா எங்கண்ணன் ஏத்துக்கக் கூடாது..'' என்றாள்.

அவன் காபியைக் குடித்து முடித்தவன் டீபாயின் மேல் கப் அண்ட் சாஸரை வைத்தான்.

''இங்க பாரு! ஏதோ உங்கண்ணனுக்குத் திறமையில்லேன்னு இதுக்கு அர்த்தமில்லே. இந்த ஏழெட்டு மாசமா அவனோட பர்ஃபாமென்ஸ் நல்லாத்தான் இருக்கு. நீதான் இலக்கியவாதி ஆச்சே! நம்ம தமிழ்நாட்டுல காதலுக்கும், நட்புக்கும் முக்கியமான இடம் கொடுத்துருக்காங்க இல்லே!'' என்றான்.

''ஆமா!'' என்றாள். ''ஆனா, நிதர்சன வாழ்க்கையில எதுவும் பிரச்சினை வந்துரக் கூடாதுங்கறதுதான் என் பயம்'' என்றாள்.

''ஹேய்! நான் எவ்வளவு முக்கியமான விஷயம் சொல்லியிருக்கேன். அதை விட்டுட்டு வேற ஏதேதோ பேசிகிட்டிருக்கே?'' என்றான்.

இறைவி சட்டென்று தலையைக் குனிந்து கொண்டாள். முகத்தில் சிவப்பேறியது. அறிவழகன் ஒரு விதமாகச் சிரித்தான்.

''இறைவி! எவ்வளவு அறிவார்ந்த பொண்ணும் இந்த விஷயம்னு வரும்போது இப்படி வெட்கப்படறீங்களே.. அது ஏன்?'' என்றான் குறும்பு நிறைந்த குரலில்.

சற்று அருகில் வந்து நின்றான். அவன் பார்வை அவள் முகத்தில் லயித்திருந்தது. இறைவி மெல்ல விலகிக் கொண்டாள்.

''உங்க பார்வை சரியில்லேன்னு அர்த்தம்..'' என்று முணுமுணுத்தாள்.

''தப்பாச் சொல்றே.. இறைவி! இரண்டு மனசு இணைஞ்சாச்சுன்னா.. இதுதான் சரியான பார்வை'' என்றான் கிசுகிசுப்பான குரலில். அவள் மறுபடியும் அமைதி காத்தாள்.

''ஹேய்! முக்கியமாப் பேச வேண்டிய நேரங்களில் அமைதியாயிடறியே'' என்றான் குற்றம் சாட்டும் குரலில்.

''நான் என்ன செய்யட்டும்? நீங்க பார்க்கிற பார்வையில எனக்குப் பேச்சே வரமாட்டேங்குது'' என்றாள்.

''சரி..! சரி!'' என்று பார்வையை மாற்றிக் கொண்டான். எதிரில் அமர்த்திக் கொண்டான்.

''இறைவி! நானும் எத்தனையோ பெண்கள்கிட்டே பழகியிருக்கேன்'' என்றவுடன் அவள் திணுக்குற்றாற்போல் பார்த்தாள்.

அவன் சட்டென்று சிரித்துவிட்டான்.

''ஹேய்! நீ நினைக்கிற மாதிரி இல்லே! தொழில் முறையில, கல்லூரியில படிக்கும் போது இந்தக் கிளப் அந்தக் கிளப்னு போயிருந்தபோதும்.. ஆனா, உன்னோட எளிமை எனக்குப் பிடிச்சது. எல்லா விஷயங்களைப் பத்தியும் தெளிவா ஒரு முடிவு வச்சிருக்கே..'' என்றான்.

அவள் அன்புடன் புன்னகைத்தாள்.

''ஹேய்! இன்னொரு தடவை அதே மாதிரி பாரு!'' என்றான்.

''போங்க!'' என்றாள். பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

சற்று நேரம் கூர்ந்து பார்த்துக் கொண்டு அமர்ந்திருக்க அவள் நெளிந்தாள். அவன் சட்டென்று எழுந்தான்.

''சரி.. நான் கிளம்பறேன்.. இறைவி! தனியா ரொம்ப நேரம் இருக்கறது நல்லதில்லே!'' என்றான்.



இறைவியும் வெட்கத்தோடு வழியனுப்பினாள். ஆனால், அவன் கிளம்பிப் போனதற்குப் பிறகுதான் பார்ட்னர்ஷிப் விஷயம் அப்படியே அந்தரத்தில் நின்று போனது புரிந்தது.

அறிவழகன் வைத்துவிட்டுப் போயிருந்த அந்த கப்பை எடுத்துக் கொண்டு அதன் மேல் பருகியதைத் தடவியபடியே சமையற்கட்டை நோக்கி நகர்ந்தாள்.

## 6

''அத்தை! செந்தில் இன்னும் வீட்டுக்கு வர்லையா?'' என்று கேட்டான் அறிவழகன்.

''இல்லையே! கம்பெனியில இருக்கறதா போன் பண்ணினானே! என்ன பிராப்ளம். கொஞ்சம் லேட்டாகும்னான்'' என்றார் திலகவதி.

அறிவழகன் செல்போனை ஆஃப் செய்தான்.

''கம்பெனியில பிராப்ளமா? அது பத்தி எனக்கு எதுவும் சொல்லலியே!'' என்று எண்ணிக் கொண்டவன் டிரைவரிடம் காரைக் கம்பெனிக்குத் திருப்பச் சொன்னான்.

இன்றைக்கு அறிவழகனுக்கு அவர்கள் ஊரில் லயன்ஸ் கிளப் சார்பாக பாராட்டு விழா நடத்தினார்கள். கம்பெனியில் இருந்து நேராக வந்து விடு என்று செந்தில்குமாருக்கு தகவல் சொல்லிவிட்டு அவன் வங்கியில் ஒருவரைப் பார்க்கச் சென்று விட்டான்.

வங்கியில் வேலை முடிந்து அவன் தன் வீட்டுக்கு வந்து பெற்றோரை அழைத்துக் கொண்டு புறப்பட்டான். இறைவி வரவேண்டுமென்று விருப்பப்பட்டான். கார் அனுப்பியிருந்தான். திலகவதி ''செந்திலோடு வருகிறேன். நீ

முன்னால் போ...!'' என்று இறைவியை மட்டும் அனுப்பி வைத்தார். இறைவி புவனேஸ்வரியின் அருகில் அமர்ந்து கொண்டு விழாவைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இளம் சாதனையாளர்கள்'' என்கிற வகையில் எழுத்தாளர் ஒருவருக்கும், அறிவழகனுக்கும், சமூகசேவையாளர் ஒருவருக்கும் ஆக மூவருக்குப் பாராட்டு விழா நடந்தது.

எழுத்தாளர் சற்றே பெரிய உரையாக நிகழ்த்தினார். அரை மணி நேரம் நீண்ட அவரது பேச்சை இறைவி ஆழ்ந்து கவனித்து ரசிப்பதை அவன் கண்டு கொள்ளாதவன் போல் நடித்துக் கொண்டு கவனித்துக் கொண்டான்.

நகைச்சுவையோடு கூட நிகழ்காலச் சம்பவங்களை அவர் மிக நன்றாகவே பேசினார். அறிவழகனை பேசச் சொன்னார்கள்.

''நான் பேச்சாளர் அல்ல என்ற பீடிகையோடு ஆரம்பித்தான். ஆனாலும் தனது பத்து நிமிடப் பேச்சில் ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னேயும் எவ்வளவு போராட்டங்கள் இருக்கிறது என்பதைப் பல உதாரணங்களோடு அழகாகவே சொன்னான்.

அறிவழகன் பேசும்போதும், பேசி முடிக்கும் வரையும் கூட இறைவி ஒரு டென்ஷனிலேயே இருப்பதையும் கூட அவன் கண்கள் கவனித்துக் கொண்டன. ஆனால் விழா நிகழ்வின் போதும் சரி, அதற்குப் பிறகு நடந்த விருந்தின் போதும் சரி செந்தில் குமரன் வந்து சேரவில்லை.

''என்... இறைவி! செந்தில் ஏதாவது போன் செய்தானா?'' என்று விருந்துக்கு நடுவே ஓரிரு நிமிடங்கள் நின்று பேசகையில் விசாரித்தான்.

''இல்லைங்க...! என்னன்னு தெரியலை!'' என்றாள்.

''அப்புறம்...!'' என்று தயங்கினான்.



''சொல்லு!'' என்றான் கண்களில் சுவாரசியம் தெரிய.

''எழுத்தாளரோட அரைமணி நேரப் பேச்சும் சரி! உங்களோட பத்து நிமிஷம் பேச்சும் சரி!'' சமமான வெயிட்டோட இருந்தது'' என்றாள்.

''தேங்க்ஸ்!'' என்றான். கூடவே குறும்பாகச் சிரித்துக் கொண்டு ''நாங்க செயல்வீரர்கள்ங்கறதைப் போகப் போகப் புரிஞ்சுக்குவே...'' என்றான்.

''ஐயோ...! போதுமே!'' என்று அவள் மெதுவாக நகர்ந்து விட்டாள்.

விழா முடிந்து புறப்பட்ட போதும் சரி... செந்தில்குமரன் வரவில்லை. அதனால்தான் இறைவியையும் தங்கள் வீட்டுக்கு அழைத்து வந்து விட்டான்.

அங்கிருந்து செந்தில்குமரனுடைய செல்போனுக்கு அடித்தான். கிடைக்கவில்லை. கம்பெனி அலுவலகத்துக்கு அடித்தான். மணி ஒலித்துக் கொண்டேயிருந்தது. யாரும் எடுக்கவில்லை.

''சரிப்பா! நீ இறைவியைக் கொண்டு போய் விட்டுட்டு வந்துடு...'' என்றார் சாம்பசிவம்.

புறப்பட்டார்கள்!

இறைவி அவனைப் பார்த்துச் சொன்னாள். ''பாஸ்! எனக்கு ரொம்பப் பெருமையா இருந்துச்சு. என்ன இருந்தாலும் உங்க கம்பீரமே தனிதான்!'' என்றாள்.

இப்போதெல்லாம் விளையாட்டாக பாஸ் என்று அழைக்க ஆரம்பித்திருந்தாள்.

''ஹேய்! நான் பாஸ் எல்லாம் கிடையாது'' என்று அவன் தடுத்த போது அவள் ஒரு விளக்கம் சொன்னாள்.

''தமிழிலக்கியத்தில் இறைவன்னா தலைவன்னு அர்த்தம். இந்த இறைவிக் கேத்த தலைவன் இல்லையா நீங்க?

அதனாலதான் உங்களை பாஸ்ன்னு கூப்பிடறேன்'' என்றான். அவனும் கண்டு கொள்ளாமல் விட்டு விட்டான்.

''இறைவி! நானும் எத்தனையோ ஃபங்ஷன் அட்டெண்ட் பண்ணியிருக்கேன். சீஃப் கெஸ்ட்டா இருந்திருக்கேன். ஆனா, எப்பவுமே இப்படி ஃபங்ஷன் கலர் ஃபுல்லா இருந்த மாதிரி நான் உணர்ந்ததேயில்லை. ஏன்னா? மேடம்... இருந்தீங்க...'' என்றான். உடனே சட்டென்று ''அதெல்லாம்... சரி! உங்க அண்ணன் ஏன் வர்லை?'' என்றான்.

''அதான் தெரியலே!'' என்றாள்.

''சரி... உன்னை இறக்கி விட்டுட்டு நான் போய்ப் பார்க்கறேன்'' என்று கம்பெனிக்கு வந்தான். கம்பெனிக்குள் நுழைந்தவன் அந்தக் காட்சியைக் கண்டான்.

தொழிலாளர்கள் ஐந்தாறுபேர் கும்பலாக இரண்டு பக்கமும் நின்று கொண்டிருந்தார்கள். அந்தப் பெரிய ஃபாக்டரிக்கு முன்னாலே இருந்த வெற்றிடத்தில் அவர்கள் நின்றிருந்தார்கள்.

எதிரில் செந்தில்குமரன் ஒரு சேரிலும், ஜி.எம். மற்றொரு சேரிலும் அமர்ந்து ஏதோ காரசாரமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அறிவழகனது கார் நுழைந்ததும் செந்தில்குமரனும் ஜி.எம்....மும் எழுந்து நின்றார்கள். உதவியாளர்கள் ஓடிப் போய் ஒரு பெரிய சேர் கொண்டு வந்து போட்டார்கள்.

''என்னப்பா நடக்குது இங்கே?'' என்று கேட்டான் அறிவழகன்.

''சார்! இந்த முனியப்பனும், இந்தக் கண்ணபிரானும் ஒரே அடிதடி சண்டை! சாயங்காலத்துல இருந்து பஞ்சாயத்து நடக்குது'' என்றான் செந்தில்குமரன்.



''ஓ!'' என்றவன் அவர்கள் இருவரையும் பார்த்தான். கண்ணபிரான் என்ற அந்த இளைஞன் சொன்னான்.

''சார்! போக வர ஜாடை பேசறான்... சார்! எங்க தெருவிலதான் குடியிருக்கான். அவன் வைஃபுக்கும் என் வைஃபுக்கும் ஆகாது... லேடீஸ் பிரச்சினையை விட்டோடு விடணும். ஆனா, இதை சாக்கு வச்சகிட்டு இவன் இங்க ஜாடை பேசனா... எத்தனை நாளைக்குப் பொறுக்கறது'' என்றான்.

அறிவழகன் உச்சுக் கொட்டினான்.

''ஏம்ப்பா! உங்க வீட்டுச் சண்டையெல்லாம் நடத்திக்கிறதுக்கு என் ஃபாக்டரிதான் கிடைச்சுதா?'' என்றான்.

செந்தில்குமரன் தலையிட்டான்.

''சார்! பிராப்ளம் ஆரம்பிச்சிருக்கிறது முனியப்பன். இந்நேரம் வரை பஞ்சாயத்து பேசி இப்பத்தான் முடிஞ்சது. இனிமே பிராப்ளம் பண்றதில்லேன்னு சொல்லீட்டாக'' என்றான்.

''ம்... சரி! பாருங்கப்பா! ஏதாவது பிராப்ளம்னு போலீஸுக்குப் போயி... எஃப்.ஐ.ஆர் கீர்ன்னு போட்டாங்கன்னு வைங்க... அந்த நிமிஷம் டிஸ்மிஸ்தான்'' என்று எச்சரித்தான் அறிவழகன்.

இரண்டு சாராரும் பதறிப் போனார்கள். உடனிருந்தவர்கள் ''இல்ல... சார்! நாங்க பாத்துக்கறோம்'' என்று உறுதி அளித்து விட்டுக் கிளம்பிப் போனார்கள்.

ஜி.எம்மை அனுப்பி விட்டு செந்தில்குமரன் பக்கம் திரும்பினான் அறிவழகன்.

''ஏண்டா! நீ ஃபங்ஷனுக்கு வருவேன்னு நானும் இறைவியும் ரொம்ப எதிர்பார்த்தோம்...'' என்றான்.

"நானும் வரலாம்னுதான் இருந்தேன்... ஆனா, அதுக்குள்ள இவனுங்க தகராறை ஆரம்பிச்சுட்டானுங்க.... பத்தே நிமிஷத்துக்குள்ள இந்தப் பக்கம் பத்து பேர் அந்தப் பக்கம் பத்துப் பேர்னு சேர்ந்தாச்சு. சண்டை வேற விதமா மாற ஆரம்பிச்சுடுச்சு.

"உன் செக்ஷனைப் பத்தித் தெரியாதா? ன்னு வேற விதமாத் திரும்பிருச்சு. அதான் பார்த்தேன். பாதியில கிளம்பி வரணும். அதான் நானே இருந்து பஞ்சாயத்து பண்ணினேன்" என்றவன் "பேசாம அந்த முனியசாமியை வேற பிராஞ்சுக்கு மாத்திறணும்" என்றான்.

"சரி... செய்!" என்றான் அறிவழகன்.

"சரி... வா! நானே டிராப் பண்றேன்!" என்று அழைத்துப் போனான்.

வீட்டிற்குப் போன பின்னர் செந்தில்குமரன் மீண்டும் ஒரு முறை தான் வர இயலாமல் போன காரணத்தை விளக்கினான்.

சற்று நேரம் இருந்து விட்டுப் புறப்பட்ட அறிவழகனை வழியனுப்ப வாயில் வரை வந்த இறைவியிடம் "பாத்தியா! உங்கண்ணன் எவ்வளவு சின்சியரா வொர்க் பண்றான்னு. அவனுக்குப் பார்ட்னர்ஷிப் குடுக்கறேன்னா... யோசிக்கிறியே!" என்றான்.

இறைவி மையமாகப் புன்னகைத்தாள்.

"நான் வேண்டாம்னு சொல்லலியே! அந்த விஷயத்தைப் பொறுத்த வரை முடிவு உங்களதுதான்" என்றாள்.

அறிவழகன் அதையே சம்மதமாக எடுத்துக் கொண்டான். அடுத்த வாரத்தில் அதை முறைப்படி அறிவிக்கவும் செய்தான்.

• • •



காலை உணவருந்திக் கொண்டே சிந்தனையில் ஆழ்ந்தான் செந்தில்குமரன்.

"டேய்! சாப்பாட்டு நேரத்துல சாப்பாட்டைப் பாத்து சாப்பிடுடா" என்று அதட்டினார் அம்மா.

அவன் அதைச் சட்டை செய்யாதவன் போல் அம்மாவிடம் ரகசியமாகக் கேட்பது போல் கேட்டான்.

"அம்மா... இறைவி... எங்கே?" என்று.

"இன்னைக்கு வெள்ளிக்கிழமையாச்சே! கோவிலுக்குப் போயிருக்கா...!" என்றார் இலகவதி.

"அம்மா! இப்பல்லாம் இறைவி ரொம்ப சந்தோஷமா நடமாடறா மாதிரித் தெரியலே?" என்றான்.

"ஆமா! நீ நல்ல பொஸிஷனுக்கு வந்துட்டே! பட்ட கவலையெல்லாம் தீர்ந்து போச்சுன்னு மனசு தெளிவாகியிருக்குமாயிருக்கும்" என்றார் இலகவதி.

மகன் எதையோ சொல்ல வருகிறான் என்பது தாய்க்குப் புரிந்தது. மகனின் முகத்தில் சமீப காலமாக ஏற்பட்டிருந்த மகிழ்ச்சியும் புரிந்தது. தாய் அறியாத சூலா என்பது போல் மகனுக்குள் ஏற்பட்டிருந்த மலர்ச்சியும் புரிந்தது. ஆனால் எதுவும் தன் வாயால் ஆரம்பிக்கப் பட வேண்டாம் என்பது அவர் எண்ணமாக இருந்தது. மகனே அதைப் பற்றிப் பேசட்டுமே என்பது போல் பரிமாறினார்.

"அம்மா! அறிவழகன் கூட ஃப்ரீயாய் பேசறா. அவனும் இவ கிட்டே நெருங்கிப் பழகறான் போலத் தெரியுது" என்றான்.

"தம்பி! பணக்காரர் தொடர்புங்கறது என்னைக்கிருந்தாலும் ஆபத்துதான். உனக்கே இந்த பார்ட்னர்ஷிப் அது இதுன்னு கொடுத்திருக்கிறதே அதிகம்னு தோணுது. அதுல இந்தப் பொண்ணு வேற..."

"ஏன்...? ஏன்? என்ன தப்பு...? அம்மா ஈரேழு பதினாறு லோகத்திலயும் சல்லடை போட்டுச் சலிச்சாலும் அறிவழ கன் மாதிரிக் கிடைக்காதும்மா... என்றான் செந்தில்குமரன்.

"அதென்னமோ... நிஜம்தான்ப்பா! ஆனா நாமளா எப்படி ஆரம்பிக்கறது? அவங்களாத்தான் பொண்ணு கேட்கணும்?"

"கேட்பான்ம்மா! அறிவழகன் மனசுக்குப் புடிச்சிருந்தா கண்டிப்பா... வந்து பொண்ணும் கேட்பான். அதுக்கு நாம என்ன பதில் சொல்றதுன்னு யோசிக்க வேண்டாமா?" என்றான்.

"பாருப்பா! இப்பக் குடும்ப நிர்வாகம் உன் கையில! உங்க அப்பா போனதுக்கப்புறம்... நீதான் இந்தக் குடும் பத்தைத் தாங்கறே! நீதான் முடிவு செய்யணும். அது மட்டுமில்லப்பா... இப்படி ரொம்ப நெருங்கறது என்னமோ... பயமாயிருக்கு...." என்றார்.

"அட போம்மா! நானா அவன் மேல போய் விழுந்து பழகினேன். அவன் வந்து பழகினான். நானா அதைக் குடு... இதைக் குடுன்னு கேட்டேன். அவனாக் குடுத்தான். குடுத்த வேலையை ஒழுங்கா செஞ்சேன். அவனுக்கும் நம்மளைப் பிடிச்சுப் போச்சு. கை தூக்கி விடறான். இதுல என்ன தப்பு?" என்றான்.

நிலகவதிக்கு பேசுவதற்கு ஒன்றும் இருக்கவில்லை.

"சரி... எதுக்கும் யோசிக்க வைங்க... அறிவழகன் மட்டும் பொண்ணு கேட்டான்னு வைங்க... மறு பேச்சுப் பேசாம சரின்னு சொல்லிடுவேன்" என்றான்.

கோவிலில் இருந்து வந்த இறைவியின் காதிலும் அது விழுந்தது. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கியது. ஆனாலும் அன்றைக்கு அறிவழகன் பிற்பகல் போனில் அழைத்த போது வேண்டுமென்றே அவனைச் சீண்டினாள்.



பிற்பகல் நேரங்களில் நிலகவதி சற்று நேரம் அக்கம் பக்கத்து வீடுகளுக்குப் போவார். அல்லது உறவினர் வீடு களுக்குப் போவார். அதிக பட்சம் ரெண்டு தெருவுக்குள் இருக்கும் வீடுகளுக்குத்தான் போவார்.

அம்மா இல்லா அந்த நேரங்களில் இறைவி மிஸ்ட் கால் கொடுக்க வேண்டும் என்பது அறிவழகனின் கட்டளை.

இன்றைக்கு சகோதரன் சொல்லிக் கொண்டிருந்த விஷயம் பற்றிச் சொல்லலாமா? என்று நினைத்தாள். பிறகு எண் ணத்தை மாற்றிக் கொண்டாள்... தானாக எதற்கு ஆரம்பிக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

"ஹேய்! உன் போட்டோ ஒண்ணு லாமினேட் பண்ணி வாங்கியிருக்கேன்.. தெரியுமா?" என்றான் அறிவழகன்.

"எப்படி? நீங்கதான் எந்த போட்டோவும் என்னை எடுக்கலையே?"என்றாள்.

"நான் எடுக்கலேன்னா... என்ன? அந்த ஃபங்ஷன்ல போட்டோ கிராஃபர் கிட்டே சொல்லி உன்னை மட்டும் எடுக்கச் சொன்னேன்" என்றான் ஒரு விதமா வைத்துக் கொண் டான். ஆனா, சூப்பரான ஆங்கிள்ல எல்லாம் ஒரு பத்துப் போட்டோவுக்குப் பக்கம் எடுத்துத் தள்ளிட்டான்" என்றான்.

அவள் பொய்க் கோபம் காட்டினாள்.

"இது உரிமை மீறல் தெரியுமா?" என்றாள்.

அவன் அலட்டிக் கொள்ளாமல் சிரித்தான்.

"என்ன இருந்தாலும்... அது மாதிரி... மறுபடியும் பார்க்கக் கிடைக்காது தெரியுமா? ஒரு பெருமையான உணர்வோட அன்பா பாத்துகிட்டிருந்தே! மனசுல எழுதி கிட்டேன். ஆனா, தேவைப்படறப்ப... போட்டோவையும் பார்க்கலாமே?" என்றான்.

"அது சரி! எப்ப எங்கண்ணன்கிட்டே சொல்லப் போறீங்க?" என்றாள் பேச்சை மாற்றி.

''சொல்லணும்... அவன் இந்த பார்ட்னர்ஷிப் ஐடியாவுல கொஞ்சம் செட்டில் ஆகட்டும். அதுக்கப்புறம்... சொல்விடு வோம்...'' என்றான்.

இறைவி சிரித்தாள்.... ''நான் ஒரு கவிதை படிச்சேன். சந்திரன் என்கிற என்ஜினியர் எழுதினது. சொல்வேன் கோபிச்சுக்கக் கூடாது'' என்றாள்.

''சொல்லு!''

''காதல் தவறில்லை...

காதல் புனிதமானது...

காதல் தெய்வீகமானது...

என் தங்கை காதலிக்காமல்

இருக்கும் வரைக்கும்...!''

என்று சொல்லி விட்டு நிறுத்தினாள்.

ஒரு நிமிடம் அந்தப்புறம் மௌனம் நிலவியது.

''என்ன பதிலைக் காணோம்...!''

''என்னமோ மறைமுகமாய் பயமுறுத்தற மாதிரித் தெரியுதே? ஹலோ... மேடம்! உங்க அண்ணன் உனக்கு அண்ணன் மட்டுமல்ல.. என் ஃபிரண்டு. நம்ம ரெண்டு பேரோட வெல் விஷரும் கூட'' என்றான்.

அப்போதே தனது சகோதரனுக்கு சம்மதம்தான் என்று சொல்லி விடலாமா என்று நினைத்தாள். உடனே வேண் டாம் என்று முடிவெடுத்தாள்.

''வேண்டாம்! அவரே கேட்கட்டும். சம்மதம் பெறுவதற் குள் வருகிற தவிப்பெல்லாமும் ஒரு சுகம்தானே! அவரும் அனுபவிக்கட்டுமே!'' என்று எண்ணிக் கொண்டாள். அதே சமயம் அறிவழகன் அந்தப் புறம் சொன்னான்.



''இறைவி! அந்த போட்டோக்கள்ல ஒரு போட்டோ மட்டும் எக்குத் தப்பான கோணத்துல புடிச்சிருக்கான் தெரியுமா?'' என்றான்.

அவள் ஒரு நிமிடம் பயந்து போனாள்.

''எக்குத் தப்பான கோணம்னா?''

''நாளைக்கு நான் குடுக்கறேன் பாரு...!'' என்றான். மறுநாள் வரை பயத்தோட காத்திருந்தாள். ஆட்காட்டி விரலால் நடுமண்டையை லேசாகச் சொறிந்தாற் போல் இருந்தது போட்டோ. ஆனால் பார்த்தவுடன் அவளும் வாய் விட்டுச் சிரித்து விட்டாள்.

## 7

பௌர்ணமி நிலா காய்ந்து கொண்டிருந்தது.

அறிவழகனுக்குத் தன்னைக் குறித்தே சிரிப்பு வந்தது. போன வாரத்தில் யாராவது இப்படி ஒரு காட்டுப் பகுதிக் குள்ளாக வெட்டார வெளியைப் பார்த்துக் கொண்டு படுத் திருப்பாய் என்று சொல்லியிருந்தால் அவன் கேலியாகச் சிரித்திருப்பான். ஆனால், இன்றைக்கு ஒரு பெரிய ஜமுக் காளத்தில் கிடைத்த ஏதோ ஒரு சின்னத் தலையணையைக் கழுத்துக்குக் கொடுத்தபடி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவன் கொட்டு மேள சத்தம் கேட்டு திடுக்கிட்டு விழித்தான்.

''ஆத்துல இருந்து கரகம் வந்துகிட்டிருக்கு'' என்று ஆளாளுக்குக் குரல் கொடுத்தார்கள். படுத்துக் கொண்டிருந் தவர்கள் எல்லாரும் விழித்தார்கள். சிலர் எழுந்து தூக்கக் கலக்கத்தில் சோம்பலாக ஒரு பார்வை பார்த்து விட்டு மீண்டும் படுத்துக் கொண்டார்கள்.

அறிவழகன் எழுந்து அமர்ந்தான். சின்ன வயதில் எப்போதோ உறவினர்களோடு வந்த அனுபவம் இருந்தது. ஆனால், கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன் இப்போதுதான் வர முடிந்தது. சொல்லப் போனால் இப்படி இரண்டு நாட்களை ஒதுக்குவதற்கு அவனுக்கு நேரம் இருக்கவில்லை. இருந்த போதும் அந்த கூட்டத்தில் இறைவியும் இருந்தாள் என்பதே அவனுக்கு நேரம் ஒதுக்குவதற்குக் காரணமாகப் போய் விட்டது.

கோவையிலிருந்து மிக அருகில் உள்ள வெள்ளியங்கிரி மலைத் தொடரில் அடிவாரத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய அம்மன் கோயிலில் சித்திரா பௌர்ணமி விழா. மற்ற நாட்களில் வெறிச்சோடிக் கிடக்கிற அந்தக் காட்டுப் பகுதியில் இந்த மூன்று நாட்களும் கூட்டம் இருக்கும்.

ஒரு குறிப்பிட்ட குழுவினர் தொடர்ந்து மூன்று நாட்களுக்கும் அன்னதானம் செய்வார்கள் என்பதால் மூன்று நாட்களும் அங்கே தங்கி ''அவுட்டோர்'' அனுபவம் பெறுவது வழக்கம் என்று செந்தில் விவரித்த விதத்திலே அவனுக்கும் கொஞ்சம் ஆர்வமாகிப் போனது.

செந்திலின் உறவினர் குடும்பத்தினர் அந்த விழாவில் கரகம் எடுத்தார்கள் என்பதால் திலகவதி அம்மாவும், இறைவியும் ஆர்வமாகப் பங்கெடுத்துக் கொள்வதை அவனும் ஆர்வத்தோடு கவனித்துக் கொண்டிருந்தான்.

''இவர்ன்னு முழிச்சுப் பாக்கும்போது... நம்மைச் சுத்திலும் கருவேல முள்ளுக்காடு. நிமிந்து பாத்தா... வானம். வானமே கூரைன்னு படுத்திருப்போம். நட்சத்திரங்கள் மின்னும். நிலா சிரிக்கும். அது ஒரு அற்புத அனுபவம் தெரியுமா'' என்று இறைவி சொன்ன விதத்திலே. அவனுக்கும் ஆர்வம் தொற்றிக் கொண்டது.

''சும்மா... சொல்லக் கூடாது... அனுபவம் நன்றாகத்தான் இருக்கிறது'' என்று எண்ணிக் கொண்டான்.



''டேய்! போன வாரம் இங்க ஒரு காட்டெருமை வந்துச்சாம். அதுக்கு முந்தி யானை வந்துச்சாம்... போன வருஷத்துல இருந்து இங்க ஒரு ஒத்தை யானை சுத்திகிட்டிருக்காம்'' என்று ஆளாளுக்கு ''த்ரில்லர்'' ரேன்ஜுக்கு கதை கிளப்பிக் கொண்டிருந்தார்கள். அதையெல்லாம் கவனிக்காதவன் போல் படுத்துக் கொண்டு வானம் பார்த்தபடி அந்த அனுபவத்தை உள் வாங்கிக் கொண்டிருந்தான் அறிவழகன்.

ஏதோ சத்தம் கேட்கிறதே என்று எழுந்து அமர்ந்தான். ''எல்லாம் எந்திரிங்க ஆத்துல இருந்து கரகம் எடுக்கப் போறாங்க'' என்று குரல்கள் கிளம்பின.

ஒரு சாரார் கூட்டமாக ஆற்றுக்குக் கிளம்பினார்கள். அவன் எழுந்து அமர்ந்திருந்தான்.

அறிவழகன் வருகிறான் என்றவுடனே அவனுக்காக ஒரு ஓலைக் குடிசை மாதிரிப் போட்டு இருப்பிட வசதி ஏற்படுத்திக் கொடுத்தார்கள். ஆனால், அறிவழகன் அதைப் பெரிதாகப் பயன்படுத்தாமல் வெட்டார வெளியிலே தங்கிக் கொண்டு விட்டான். ஒரு பெரிய ஜமுக்காளம் விரித்துக் கொடுத்தார்கள். ஆனால், சற்று நேரத்தில் குழந்தைகள் பட்டாளம் ஒன்று வந்த ஜமுக்காளத்தை ஆக்கிரமித்துக் கொண்டது. அவனும் கண்டு கொள்ளவில்லை.

''அங்கிள்! சீட்டு விளையாட வர்றீங்களா?'' என்று அழைத்தது டீன் ஏஜ் பட்டாளம்.

''வந்தாப் போச்சு!'' என்று அவனும் கூட அமர்ந்து விளையாடினான். அவர்களுக்கு இணையாக அவனும் விளையாடி வம்புப் பேச்சு பேசிக் கொண்டிருந்தான். செந்தில்குமாரனும், இறைவியும் ஏற்பாடுகளில் இருந்தார்கள்.

அகஸ்மாத்தாக அந்தப் பக்கம் வந்த இறைவி நின்று அவன் குழந்தைகளுக்குள் சமமாகச் சிரித்துக் கொண்டிருப்பதை நின்று பார்த்தாள். அவன் மற்றவர்கள் அறியாத

வண்ணம் நொடிப் பொழுது கண் சிமிட்டி விட்டு மீண்டும் முகபாவத்தை அப்பாவியாய் வைத்துக் கொண்டான்.

முகத்தைச் சாதாரணமாக வைத்துக் கொள்வதற்குள் இறைவி சற்றுத் திணறித்தான் போனாள். மெல்ல அருகில் போய் நின்று வேடிக்கை பார்க்கலானாள்.

''இறைவி! த்ரீ டேஸ் தங்கறதுன்னு முடிவாயிருச்சு. அதனால கம்ப்ளீட்டா என்ஜாய் பண்றதுன்னு முடிவு பண்ணிட்டேன்'' என்றான்.

''தட்ஸ் ரியலி குட்!'' என்று பாராட்டினாள். சிரித்துக் கொண்டே நகர்ந்தவள்.

''பாஸ்! ஏதாவது வேணும்னா கேளுங்க!'' என்றாள்.

''ரியலி? கேட்டாக் கிடைக்குமா?'' என்றான்.

இறைவி முறைத்து விட்டு அந்தப்புறம் போனாள். அதற்குப் பிறகு சற்று நேரம் படுத்து விட்டான்.

இப்போது நேரம் என்ன என்று பார்த்தான். இரவு மணி ஒன்று!

''அது சரி! இன்னைக்கு சிவராத்திரிதான்'' என்று எண்ணிக் கொண்டான். ஆனால், இந்த அனுபவம் அவனுக்குப் பிடித்துத்தான் இருந்தது.

கூட்டமாகக் கிளம்பினார்கள்!

இறைவி அவசரமாக வந்து ''கரகம்'' ஜோடிக்கறதுக்காக ஆத்துக்குப் போறாங்க ''நீங்க வேண்ணா ரெஸ்ட் எடுங்க'' என்று கெகெத்தாள்.

''இல்லே! நான் வரேன்!'' என்றான். அவள் நம்ப முடியாதவள் போல் ஆச்சரியமாய் பார்த்து விட்டுப் போனாள்.

அறிவழகன் சிரித்துக் கொண்டான்.



ஒரு தேங்காய்ப் பூத்துவாலை ஒன்றை தோளில் போட்டுக் கொண்டு காஷுவலாக சிரித்துக் கொண்டு அந்த இருட்டில் பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் நடந்து செல்கிற அறிவழகன் இறைவிக்குப் பெருத்த ஆச்சரியமாய்த் தெரிந்தான்.

செந்தில்குமரனும், மற்றும் ஓரிரு நண்பர்களுமாக அவர்கள் கலகலவென்று சிரித்துக் கொண்டு நடந்தார்கள்.

ஆற்றங்கரையிலே கரகங்கள் ஜோடிக்கப் படுகிற விதத்தையும், அதற்காக செய்யப்படுகிற பூஜைகளையும் அவன் ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

திலகவதியம்மாவும், இரண்டு மூன்று பெண்களும் அக்கினிச் சட்டி எடுக்கிறேன் என்று எடுத்தார்கள்.

கரகம் அழைத்து வரும்போது பூசாரிகள் பாடுகிற பாடல்களையும் அருள் வந்து கரகமெடுப்போர் ஆடுகிற விதத்தையும் அவள் உற்சாகத்தோடு கவனித்துக் கொண்டு வந்தாள்.

மனிதர்களின் ஆழ்ந்த நம்பிக்கைகளையும், இயல்புகளையுமே இது போன்ற நிகழ்வுகளில் அவன் கண்டான். அவனும் எந்த விதத்திலும் அந்த நிகழ்வுகளை விமர்சிக்காமல் மகிழ்ந்து கொண்டான்.

கரகம் அழைத்து வந்து கோயிலில் சேர்த்த பின்பு கோவிலைச் சுற்றி வந்து இறக்கினார்கள்.

பெண்கள் கூட்டம் கூட்டமாக அமர்ந்து மாலைகள் தொடுப்பதையும், சமையலுக்கு உதவுவதையும் பார்க்க இதமாக இருந்தது. எல்லா இடங்களிலும் பெண்கள் திலகவதியின் அம்மாவின் கருத்துக்களைக் கேட்பதையும் அவரும் பொறுப்பாகவும் ஆர்ப்பாட்டம் இல்லாமலும் நிர்வாகம் செய்வதையும் கவனித்துக் கொண்டான்.

இறைவியும் கூட முழுமையாகத் தன்னை முன்னிறுத்திக் கொள்ளாமல் ஆனால் எல்லா நடவடிக்கைகளிலும் பங்கு

கொண்டான். கரகம் கோயிலைச் சுற்றி வரும்போது கூடவே வந்து அவர்கள் பாடுவதை ஆர்வமாகக் கவனித்துக் கொண்டான்.

கரகம் இறக்கப்பட்ட பின்பு பெண்கள் எல்லாரும் கும்மி ஆடினார்கள். ஒரு பெண் இயற்கையாக வார்த்தைகளைப் போட்டு சொந்தமாக நாட்டுப் பாடல் போல பாடல்களைப் பாட மற்ற பெண்கள் எல்லாரும் தாளம் தப்பாமல் ஆடினார்கள்.

இறைவியும் கூடக் கொஞ்ச நேரம் கலந்து கொண்டு ஆடினாள்.

யாகத்துக்கான ஏற்பாடுகள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பெண்கள் ஆடி முடித்தவுடன் மலைப்பகுதியைச் சேர்ந்த பழங்குடி ஆண்களின் நடனம் நடைபெற்றது. அறிவழகன் அதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த போது இறைவி அவன் அருகில் வந்து நின்றாள்.

''இறைவி! இவுக நடனம் பார்த்தியா! எவ்வளவு எளிமையா அழகா இருக்கு நான் மேகாலயா, அஸ்ஸாம்னு எல்லா ஸ்டேட்லயும் இந்த மாதிரி ட்ரைபல் டான்ஸ் பார்த்திருக்கேன். இங்கயும் பார்க்கறேன் இறைவி... எல்லா நடனங்களையும் ஒருவித ஒத்துமை இருக்கற மாதிரி எனக்குத் தோணுது'' என்றான்.

இறைவி அவனது வெளிமாநில அனுபவங்களை மெல்லிய குரலில் சொல்லக் கேட்டுக் கொண்டாள்.

அவன் திடீரென்று,

''இறைவி! என்ன திடீர்னு கும்மியடிக்கறே! அவங்க பாடறதையெல்லாம் ரொம்ப ஆர்வமாக கேட்டுக்கறே. ரொம்ப சின்சியரா அவங்களோட சுத்தி வரே! அக்கினிச் சட்டி சுமக்கறே!'' என்றான்.

இறைவி அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். அந்த இரவில் அந்தப் பின்னணியில் அவள் புன்னகைப்பது ஏதோ தேவதையின் சிரிப்புப் போல் இருந்தது.



''அறிவழகன்! நம்ம மக்கள் ரொம்ப எளிமையானவர்கள். ஏதோ ஒரு சக்தி இருக்குன்னு எனக்கும் ரொம்ப நம்பிக்கையிருக்கு. அந்த சக்திக்கு மனிதன் தன்னுடைய அறிவுக்கேற்பப் பேரு குடுக்கறான். விழாக்கள். கரகம் எடுக்கறது. பாடறது. ஆடறது இதெல்லாம் கலாச்சாரச் சின்னங்கள். கொஞ்சமும் சந்தேகம் இல்லாமல் யாரையும் பற்றிக் கவலைப்படாமல் பாமர மக்கள் இதெல்லாம்... செய்யறதைப் பார்க்கும் போது எனக்கு வியப்பாக இருக்கும்'' என்றாள்.

முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டு கேட்டுக் கொண்டிருந்தவன் குபீரென்று சிரித்தான்.

''இறைவி! பயங்கரமான ட்யூஷன் டீச்சர்...!'' என்றான்.

இறைவி செல்லமாக முறைத்தாள்.

''ஹேய்! இப்படி முறைக்கறது ரொம்ப நல்லாருக்கு. அப்படியே கொஞ்ச நேரம் பாரேன்!'' என்றான் முணுமுணுப்பாக.

''சும்மாயிருங்க!'' என்று அவளும் முணுமுணுத்தாள். ரசித்துக் கொண்டான்.

யாகம் நடைபெறும் போது அவனையும் அழைத்து அமரச் செய்தார்கள். அவனுக்கென்று சேர் கொடுத்து அமரச் சொன்னார்கள். அவன் வேண்டாமென்று மறுத்து விட்டு கீழேயே அமர்ந்து கொண்டான்.

எல்லா நிகழ்வுகளும் முடிய அதிகாலை ஆகிவிட்டது. நான்கு மணியளவில் அவன் தன்னுடைய காரில் போய் படுத்து விட்டான்.

களைப்பாக இருந்தது. ஆனால், உறக்கம் வரவில்லை. கண்ணை மூடினால் பெட்ரோமாக்ஸ் விளக்கு வெளிச்சத்தில் இறைவியின் முகம். ஆற்றில் குளிக்கையில் நடந்து வருகையில், அக்கினிச் சட்டியை வெகு தீவிரமான முக

பாவத்துடன் கையில் ஏந்திக் கொண்டு நடந்து வந்தது. அது பற்றிய அவனுடைய கருத்துக்கள் என்று அவளை பற்றிய சிந்தனையே அவனுக்குள் இருந்தது.

தன்னைக் குறித்தே அவனுக்கு சிரிப்பு வந்தது. தன்னை நம்பி இந்தாறு நிறுவனங்கள் இருக்கையில் அதையெல்லாம் விட்டு விட்டு நண்பனுக்காகவும், அவன் தங்கைக்காகவும் இந்த அத்துவானக் காட்டில் மூன்று நான்கு நாட்கள் செலவழிக்க முடிவு செய்தது குறித்து அவனுக்கே ஆச்சரியம்தான். அந்த முடிவு குறித்து முதலில் சற்றே குழப்பம் இருந்தாலும் இப்போது மகிழ்ச்சி அடைவது போல் உணர்ந்தான். தனது மகிழ்ச்சி குறித்து அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

*அதே சமயம்!*

இறைவியும் யோசனையில் ஆழ்ந்திருந்தாள்! அறிவழகன் தனக்காகவே இங்கே மூன்று நாட்களாகத் தங்கியிருக்கிறான் என்பது புரிந்தது. அது மகிழ்ச்சியாகவும் இருந்தது. ஒரு புறம் கலக்கமாகவும் இருந்தது. செந்தில்குமரனும் ஏற்பாடுகளில் தீவிரமாக நடமாடிக் கொண்டிருந்தான். தனது சகோதரனிடம் அறிவழகன் உண்மையாகவே மிகச் சிறந்த நட்பு பாராட்டுகிறான் என்பது புரிந்தது. அவன் காட்டுகிற நட்புணர்வுக்கும் தன் மேல் காட்டுகிற அன்புக்கும் அவள் கடவுளுக்கு நன்றி சொல்லிக் கொண்டாள்.

*அதே சமயம்!*

செந்தில்குமரன் மிகவும் பெருமையுடன் நடமாடிக் கொண்டிருந்தான்.

சமீப காலமாக நகரத்தின் மிகப் பெரிய தொழிலதிபருடன் மிக நெருக்கமாக இருக்கிறோம் அவன் தன்னுடைய பேச்சுக்கு மதிப்புக் கொடுக்கிறான் தன் நட்பை விரும்புகிறான் என்பதெல்லாம் ஏதோ ஒரு போதையைப் போல் தலைக்கேறியது.



''எங்க பாஸ்! எங்க பாஸ்!'' என்று எல்லா இடத்திலும் அறிவழகனை முன்னிலைப் படுத்தினாலும் மற்றொரு புறத்தில் மெல்ல மெல்லக் கூடுதல் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டான். தொழிலின் நெளிவு, சுளிவுகள் தெரிந்தவுடனே இன்னும் துணிச்சல் அதிகமாகியது.

நட்பின் காரணமாக அறிவழகன் தனக்கு சலுகை கொடுக்கிறான் என்பதையும், அறிவழகனும் தொழிலின் நுனி முதல் அடிவரை தெரிந்து வைத்திருக்கிறான் என்பதும் அவனுக்கும் புரியவில்லை. புதுப்பணக்காரனின் செருக்கு என்பது போல் அவனுக்கு புதிதாகக் கிடைத்த இந்தப் பதவிகளின் அதிகாரம் போதை இவை எல்லாம் தலைமேல் ஏறிக் கொண்டு அவனை ஆட்டிப் படைத்தன.

''மனிதனை ஆட்டிப் படைக்கிற விஷயங்கள்ல கேர்ஃபுல்லா இருக்கணும். பணம், பெண்தொடர்பு, நிலத்துல மேல ஆசை இதெல்லாம் மனிதனைத் தன்னோட ஆதிக்கத்துக்குள்ளே கொண்டு வர்ற விஷயங்கள். இதுல எச்சரிக்கையா இருக்கணும்'' என்று திலகவதி சொல்கிற விஷயங்கள் எதுவும் அவன் மனதுக்கு முக்கியமாகப் படவில்லை.

இப்போதைய சந்தோஷமே முக்கியமாகத் தெரிந்தது. இது எப்போதும் நிலைக்கப் போகிற சந்தோஷம் போலவும் அவன் முடிவு கட்டிக் கொண்டான். அந்த நிலையிலேயே நடமாடிக் கொண்டிருந்தான்.

இங்கே வந்ததற்குப் பிறகு அவனுக்கு இன்னொரு சந்தேகமும் எழுந்தது. அது தனது தங்கை இறைவியைப் பார்க்கும் போதெல்லாம் அறிவழகனின் முகம் மிகவும் மலர்ந்து விடுகிற மாதிரி இருந்தது. இறைவியும் கூட அவனிடம் கொஞ்சம் ஃப்ரீயாய் பழகுகிற மாதிரித் தோன்றியது.

இது நல்லதற்கா? கெட்டதற்கா? என்று ஒரு பக்கம் ஒரு மனது பயப்பட்டது. இன்னொரு மனது சொன்னது. அப்படி நிகழ்ந்தால் அதுவும் நல்லதுதானே?

இறைவியும் அப்பா இறந்ததிற்குப் பிறகு மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறாள். நல்ல பெண் அவளுக்கு அப்படியொரு அதிர்ஷ்டம் கிடைத்தால் அதில் என்ன தவறு?

இப்போதைக்குத் தெரிந்து கொண்ட மாதிரிக் காட்டிக் கொள்ளலாமா வேண்டாமா என்றும் சந்தேகம் எழுந்தது. இருவருக்கும் ஒருவர் மேல் மற்றவருக்கு சர்ப்பு இருப்பதாகத் தெரிந்தது? ஆனால், இருவரும் ஒரு முடிவுக்கு வந்து விட்டார்களா? என்று தெரியவில்லை. ஆனால், அறிவழகன் தன்னைக் கலந்தாலோசிக்காமல் எந்த முடிவும் எடுக்க மாட்டான் என்பதில் மனது உறுதியாக இருந்தது.

அந்த விஷயம் பற்றி அறிவழகன் பேசட்டும். அவனை மாதிரி ஒரு மாப்பிள்ளை கிடைத்தால் இறைவிக்கு வேறென்ன அதிர்ஷ்டம் வேண்டும். நாம ஏன் அதைத் தடுக்க வேண்டும்? எப்படியும் இறைவியும் தன்னிடம் அது பற்றிப் பேசுவாள். பேசட்டும் பிறகு முடிவு செய்து கொள்ளலாம் என்ற எண்ணம் தோன்றியவுடன் மனது தெளிவாகியது. ஆனால் அடுத்த நாள் பார்த்த காட்சியில் அவன் மனது உறுதியாக முடிவுக்கே வந்து விட்டது. அதன் அடுத்த நாள் திடீரென்று அலுவலக வேலை அவன் முன்னரே கிளம்பி விட நேரிட்டது. கிட்டத்தட்ட ஒரு வாரத்திற்கு அறிவழகனுக்கும், அவனுக்கும் அலுவலக வேலை சரியாக இருந்தது.

முடித்துவிட்டு நிமிரும் போது அவன் எதிர்பார்த்த அந்தச் செய்தியும் அவன் முகத்தில் வந்து மோதியது. அதற்குப் பின்னே ஏற்படப் போகிற சுனாமிகளைத்தான் அப்போது அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

## 8

"ஏன்டா செந்தில் குளிக்கப் போறதுக்கு இப்படி ஊர்வலமாப் போகணுமா?" என்று முணுமுணுப்பாகக் கேட்டான் அறிவழகன்.



"இல்லப்பா! வழக்கமா எல்லாரும் குளிக்கப் போற இடத்துல கூட்டம் இருக்கும். இந்தப் பக்கம் போனா ஒரு அருமையான இடம் இருக்கும். வந்து பாரு!" என்றான் செந்தில்.

"எப்போதோ சின்ன வயதில் நண்பர்களோடு வந்து சுற்றியது" என்றான் அறிவழகன்.

ஒத்தையடிப் பாதை வழியாகப் பத்து. இருபது பேருக்குப் பக்கம் போய்க் கொண்டிருந்தார்கள். குளித்து விட்டுச் சாப்பிடுவதற்காக இரண்டு பக்கெட்டுகளில் கலவை சாதம் எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

குழந்தைகள் எல்லாம் குஷியாக நடந்தார்கள். அதில் ஒரு சிறு குழந்தை அறிவழகனிடம் ஒட்டிக் கொண்டது.

வரிசை நகர்ந்து தனது விருப்பத்தின் காரணமாகவோ அல்லது சூழ்நிலையின் காரணமாகவோ இறைவி பின் தங்கினாள்.

செந்திலும் மற்றும் இரண்டு நண்பர்களும் முன்னால் வழி நடத்துவதற்காக சென்று விட்டார்கள். அறிவழகன் பின்னால் வந்தான்.

அவனுக்கு சூழ்நிலையை ரசிக்க வேண்டியிருந்தது. அடர்ந்து கிடந்த மரங்கள். திடீரென ஒத்தையடிப் பாதையின் வலது புறத்தில் பெரிய பள்ளம் இருந்தது. மழை காரணமாகப் பள்ளம் ஏற்பட்டிருந்தது.

"ஹேய்! அங்க பார் இறைவி... மான்கள்" என்று காட்டினான் அறிவழகன்.

எல்லாரும் நின்று பார்த்தார்கள்.

"இறைவி! அந்தக் குட்டி மான் முழிக்கறதைப் பார்த்தா.. நீ முழிக்கற மாதிரியே இருக்கு..." என்றான் அறிவழகன் அவளுக்கு மட்டும் கேட்கும்படியாக.

''ஆமாமா! கோட்டை முழி முழிக்கறேன்னு சொல்றீங்க!'' என்றான்.

''ஹேய்! நான் உன் பார்வை அழகா இருக்குன்னு சொல்றேன். நீ கதையையே மாத்தறியே!'' என்றான். பிறகு குறும்பாகப் புன்னகைத்தபடி.

''எனக்குப் புரிஞ்சிருச்சு'' என்றாள்.

''என்ன புரிஞ்சது?''

''நீங்க இப்படி ஏதாவது சொன்னாத்தானே நாங்க திரும்பத் திரும்ப நீங்க அழகா இருக்கிங்கன்னு சொல்லு வோம். அதானே...'' என்று அவன் சொல்லிக் கொண்டிருக் கும் போதே அவன் முகத்தில் தீவிரமான பாவம் ஏற்பட்டது.

''பாஸ்! இங்க பாருங்க!'' என்று ஒரு இடத்தைக் காட்டி னான். அங்கே யானையின் காலடித் தடம் பதிந்திருந்தது. மண்ணோ ஈரமாக இருந்தது.

''ஏங்க... இந்தக் காலடித் தடத்தைப் பார்த்தா இப்பக் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடித்தான் போயிருக்கும் போல இருக்கு...'' என்றாள்.

முன்னே போய்க் கொண்டிருந்தவர்களில் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணியை அழைத்து.

''அத்தை! இங்க பாருங்க!'' என்று காட்டினான்.

''ஆமா! ஆனை.. போயிருக்கு போல இருக்கு'' என்றவர் இறைவியிடம்

''வா... இறைவி வந்தது. வந்தாச்சு. நாம யானை மிதிச்சு சாகணும்னு இருந்தா விதி விட்டா போகும்...'' என்று தத்துவம் பேசி விட்டு முன்னே போனார்.

''ஏய்... இந்தம்மா... என்ன இப்படி சொல்விட்டுப் போறாங்க... இப்பத்தான் மேடம் நம்மகிட்டே சம்மதமே



சொல்லிருக்காங்க... இன்னும் எத்தனை இருக்கு...'' என் றான் அறிவழகன் பொய்க் கோபத்துடன்.

இறைவி நின்றாள்.

''சரி...! திரும்பிப் போயிரலாமா?'' என்றான் அறிவழகன்.

''திரும்பிப் போறப்ப... எதிரில வந்துச்சுன்னா... என்ன பண்ண முடியும்?'' என்று மேலும் பயமுறுத்தினாள் இறைவி.

அறிவழகன் சிரித்தான். ''சரி.. விடு...! ரிஸ்க் எடுப்போம்... அதுக்கு முன்னால குளிச்சு முடிச்சுட்டு சாப்பிடுவோம்'' என்றான்.

எதற்கும் இருக்கட்டும் வழியில் பார்த்த ஒரு கிராமத்துப் பெண்மணியைக் கேட்டார்கள்.

''ஏங்க... இந்த நேரத்துல யானை கீனை வர்றதுண்டா...!'' என்றான்.

''இல்லை. இந்த நேரத்துல வராது. இரண்டு மணி வாக்கில சில நாளைக்கு வருது'' ஆண்கள் எல்லாரும் முன் னாலே ஒரு பகுதியில் ஆற்று வளைவில் குளிக்கிறோம் என்று ஒதுங்கினார்கள்.

பெண்களும் இன்னும் சற்று தள்ளி ஒரு வளைவில் ஆறு வளைந்தோடிய பகுதியில் இடம் பார்த்துக் கொடுத்தார்கள்.

குழந்தைகள் கும்மாளம் போட்டார்கள்.

பெண்களும் துளைந்து துளைந்து நீராடி விட்டு மனமில்லாமல் கரையேறுவதும் மறுபடியும் குதிப்பதுமாக நேரம் போனதே தெரியவில்லை.

ஒரு வழியாக வயதான பெண்களின் மிரட்டலுக்குப் பிறகுதான் வெளியே வந்தார்கள். அதற்குள்ளாக ஆண்கள் வட்டாரத்தில் இருந்து ''வரலாமா?'' என்று கேட்டுத் தூது ஒரு சிறு பையனின் வடிவில் வந்தது.

வரலாம் என்று செய்தியனுப்பினார்கள் பெண்கள். இங் கிலை மடித்துக் கட்டிக் கொண்டு தேங்காய்ப்பூத் துவாலையை அலட்சியமாய்த் தோளில் போட்டுக் கொண்டு வெடிச் சிரிப்பு சிரித்துக் கொண்டு வந்தான் அறிவழகன். அந்த காட்சியை பெண்களின் வரிசையில் பின்னால் நின்றபடி பார்த்து ரசித்துக் கொண்டாள் இறைவி.

அலுவலகத்தில் பார்க்க நேருகிற கம்பீரத்துக்கு நேர் மாறாக இங்கே விளையாட்டாய் இருந்தான். ஒரு பாறை யின் மீது ஒரு காலை மேலாக வைத்துக் கொண்டு ஒரு காலை கீழே இறக்கினாற் போல் வைத்துக் கொண்டு அமர்ந்து ரிலாக்ஸ்டாக இருந்தான். பேப்பர் பிளேட்டில் அவர்கள் பரிமாற,

''எனக்கும் ஒரு ஷேர் குடுங்க...!'' என்று நீட்டி வாங்கிக் கொண்டான்.

செந்தில்குமரன் கூட ஆச்சரியப்பட்டுப் போனான்.

''அறிவழகா! உண்மையாவே நீ இவ்வளவு ஜாலியா என்ஜாய் பண்ணுவேன்னு நான் நினைக்கவே இல்லை'' என்றான்.

''செந்தில்! இது கூட ஒரு மாதிரி தெரபிதான். என்றான். தொடர்ந்து ''என் ஃபிரண்டு ஒருத்தன் அமெரிக்காவில இருந்து வந்தப்ப சொன்னான் வெள்ளிக்கிழமை சாயங்காலமே வீக் எண்டுக்குத் தயாராவாங்களாம். சனி, ஞாயிறு ரெண்டு நாளும் எங்கயாவது போயி அவுட்டோர்ல தங்கி... அனுபவிச்சுட்டு வருவாங்களாம். அது மாதிரி விழான்னா நம்ம மக்கள் கொஞ்சம் ஆன்மீகம் கலந்து செஞ்சிருக்காங்க. கோயில்களுக்கு யாத்திரை போறது இது மாதிரி மலைப் பிரதேசங்கள்ல தங்கறது... அப்படீன்னு...'' என்றான்.

''பேசாம... இங்க எங்கயாவது கொஞ்சம் இடம் வாங்கி ஒரு கெஸ்ட் ஹவுஸ் கட்டிடு'' என்றான் செந்தில்குமரன்.



''விடு... ஃபார்ம் ஹவுஸ் போட்டுர்லாம்'' என்றான். பேசிக் கொண்டே சாப்பிட்டார்கள். யாரைப் பற்றியும் கவலைப்படாமல் இறைவியுடனும் நின்று பேசினான்.

''இறைவி! நான் எப்பவுமே மலைகளின் ரசிகன் தெரி யுமா? ஒவ்வொரு மேகம் ஒவ்வொரு மாதிரிக் காட்சி கொடுக்கும். மேகங்கள் எல்லாம் கவிந்து கிடக்கும்போது கருநீல நிறத்துல அது ஒரு அழகு. சாயங்கால நேரங்கள்ல பச்சைச் செடிகள் மரங்கள் அடர்ந்து இருக்கும்போது ஒரு அழகு. இந்த மாதிரி ஒரு பெரிய மலையின் அடிவாரத்தில் இருந்து பார்க்கும்போது... மலைகளின் பிரம்மாண்டம் தெரியுது. அதே சமயம் நாம எவ்வளவு சின்னவங்கன்னு நமக்குள்ள ஒரு பணிவு உணர்வும் தோன்றும்'' என்றான்.

''ஆஹா! நீங்க இவ்வளவுக்கெல்லாம் யோசிப்பவரா?'' என்று பார்த்தாள் இறைவி.

''ஆமா! இறைவி... நமக்குக் கல்யாணம் ஆச்சுன்னா அதுக்குப் பிறகு அப்பப்ப... இந்த மாதிரிக் கொஞ்சம் எஸ்கேப் ஆயிட வேண்டியதுதான்... உனக்கு என்ன இதெல் லாம் பிடிக்குமா?''

''என்ன இப்படிக் கேட்டுட்டீங்க! இந்த மாதிரி அனுப வங்கள் எனக்கு ரொம்பப் பிடிக்கும்'' என்றாள்.

''ஆமா, பார்த்தேன்! அக்கினிச் சட்டி எடுத்ததென்ன... கும்மி யடிச்சதென்ன... கோயில்ல சாமி சுற்றி வந்த போது... கூடவே நடந்துகிட்டு அந்தப் பாட்டுகளைக் கேட்டதென்ன... எல்லாத்துலயும் ஒரு இன்வால்வ்மெண்ட்'' என்று சிரித்தான்.

பேசிக் கொண்டே வந்தவர்கள் அப்போதுதான் கவனித் தார்கள். தாங்கள் பின் தங்கி விட்டோம் என்று. உடனே வந்த கூட்டத்தினர் மெதுவாக நடந்து போய் விட்டார்கள்.

கண் பார்வையில் பட்டுக் கொண்டிருந்தவர்கள் திடீ ரென்று காணவில்லை.

''என்னங்க... பாஸ்! ஒருத்தரையும் காணோம்!'' என்றாள் இறைவி. குரலில் சற்றே திகில் இருந்தது.

''ஆமா! இறைவி... சம்திங்... ஃபிஷி!'' என்று முணு முணுத்தவனுக்கு காரணம் புரிந்தது. அத்தனைபேரும் சத்தமில்லாமல் ஆங்காங்கே ஒளிந்து கொண்டு விட்டார்கள் என்று.

பார்வையைச் சுழற்றியவனுக்கு அதற்கும் காரணம் புரிந்தது. சற்று தூரத்தில் அந்த ஒற்றை யானை நின்று கொண் டிருந்தது.

சமீபமாக அடுத்தடுத்து ஏழெட்டு பேரை மிதித்தே கொன்று விட்டதாகப் பேச்சு அடிபட்ட யானை நல்ல வேளையாக இறைவியும், அறிவழகனும் பக்க வாட்டில் இருந்தார்கள். சற்றுத் தொலைவிலும் இருந்தார்கள்.

அறிவழகன் சட்டென்று தனது இடத்தோளோடு சேர்த்து இறைவியை இறுக்கிக் கொண்டான். வாயில் ஒற்றை விரலை வைத்து ''உஷ்'' என்பது போல சைகை செய்து அவளைத் தன்னோடு சேர்த்து இறுக்கிக் கொண்டு மெல்லப் பின்னால் நகர்ந்தான். ஒரு பெரிய மரத்தின் பின்னே நின்று கொண்டார்கள்.

அதே நேரம்! யானை திரும்பியது!

இறைவி சட்டென்று அவன் மார்பில் முகம் பதித்துக் கொண்டாள். அவனும் அணைத்துக் கொண்டு யானையை நோட்டம் விட்டான்.

அரை வட்டமாகத் திரும்பி ஒரு முறை பார்த்த யானை இவர்கள் திசையை நோக்கித் திரும்பவில்லை. ஆனால் நகரவும் இல்லை.

ஒரு முறை பிளிறியது!



நடுங்கிப் போன இறைவி இன்னும் நெருங்கி அவன் கழுத்தில் முகம் பதித்துக் கொண்டாள். அவனும் வாய் விட்டு எதுவும் பேசாமல் கைகளாலேயே தட்டிக் கொடுத் தான். ஆசுவாசப் படுத்தினான். பத்து நிமிடங்களுக்கு மேல் நின்ற யானை மெதுவாக நகர ஆரம்பித்தது.

நல்ல வேளையாக எதிர்த்திசையில் சென்றது. கண்பார்வையி லிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

தலையை அவன் தோளில் இருந்து எடுக்காமலே யானை சென்ற திசையைப் பார்த்துக் கொண்டிருந்தாள் இறைவி. பிறகு மருண்ட கண்களோடு அவனை நிமிர்ந்து பார்க்கத் தன்னையே மறந்த அறிவழகன் சட்டென்று அந்தக் காரி யத்தைச் செய்தான்.

இறைவியின் முகம் முழுக்க தனது முத்திரைகளாய் பார்த்தான். அடுத்தடுத்து நடந்த தாக்குதல்களில் சிக்குண்டு திணறிப் போன இறைவிக்குத் தடுக்கவே தோன்றவில்லை.

திகைத்துப் போய் நின்று விட்டாள்!

இன்னமும் லேசாக உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

''சரிம்மா...! சரிம்மா! கெட் யுவர் செல்ஃப் ஸ்ட்ரெய்ட்'' என்று தேற்றினான். மெல்ல நடுக்கம் நின்றது!

''ஐயோ! இந்தப் பக்கம் மட்டும் திரும்பிப் பார்த்திருந்தா...'' என்று பதைப்போடு சொன்னாள்.

''திரும்பிப் பார்த்திருந்தா.. யார்றா... ஒரு பொண்ணு இவ்வளவு அழகாய் இருக்காப்ல... என்று திகைச்சுப் போயிருக்கும்.''

''ஜோக்கடிக்காதீங்க... பாஸ்! அப்படி மட்டும் ஏதாவது ஆயிருந்தா... உங்கம்மா, அப்பாவுக்கு என்ன பதில் சொல்றது?'' என்றாள் மறுபடியும்.

''ஏய்! எங்கம்மா அப்பாவுக்கு சொல்றது இருக்கட்டும். உன்னோட ரியாக்ஷன் எப்படி இருக்கும்?'' என்றான்.

அவள் அவனை முறைத்துப் பார்த்தாள். ''ரியாக்ஷனா? உயிரே போயிருக்கும்!'' என்றவள் அவனே சற்றும் எதிர்பாராத விதமாக அவன் முகத்தைத் தன்னை நோக்கி இழுத்தாள். அவன் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் சரியான விதத்தில் பதில் கொடுத்தாள்.

திகைப்பும், ஆனந்தமுமாகத் திணறிப் போனான் அறிவழகன். பணிந்து கொடுத்தான். பிறகு மெல்ல விடுவித்தான்.

''ஹேய்! இன்னொரு தடவை யானையைக் கூப்பிடுவோமா?'' என்று அவன் கிறக்கமாகக் கேட்கவும் அவள் அவன் தோளில் பொத்தென்று அடி அடித்தாள். அவன் ரசித்துச் சிரித்தான்.

''ஒற்றை யானை வாழ்க! இந்த மலைப்பகுதியும் ஆறும் நீடுழி வாழ்க!'' என்று கிண்டல் செய்தான். ஆனால், முகத்தில் எல்லையில்லா ஆனந்தம் குதித்தாடியது. இறைவி வெட்கத்துடன், ''சரி... போலாம்!'' என்றாள்.

''ஆமாமா! போகணும் இல்லே!'' என்று சொன்னவன் மெல்ல இழைந்தபடியே நடந்து வந்தான். அவளும் தடுக்கவில்லை.

கொஞ்ச நேரம் சென்றவுடன் அந்த யானை மிதிச்சிருந்தாக் கூட ஒரு சந்தோஷம் இருந்திருக்கும். இரண்டு பேரும் ஒன்னாத்தான் போயிருப்போம்'' என்றான் அறிவழகன்.

இறைவி நின்றாள். இரண்டு கண்களும் கலங்கியது.

''ப்ளீஸ்... பான்! என்ன இப்படிக் கூலாப் பேசறீங்க! இப்பத்தான் அதிர்ச்சியில் இருந்து மீண்டிருக்கேன். நீங்க இப்படிப் பேசினா எனக்கு அடிவயிறே கலங்குது'' என்றாள்.



அறிவழகனும் நின்றான். அவன் முகபாவம் தீவிரமாகியது. கண்களில் கண்ணீர் நிறைந்திருக்க நிற்கிற அவள் கண்களின் மேல் இதழ் பதித்தான். பிறகு சொன்னான்.

''ஹேய்! இறைவி... ரிலாக்ஸ்! இனிமே உன்னைச் சீண்ட மாட்டேன். உலகத்துலயே விலை மதிக்க முடியாத வைரம் எது தெரியுமா? நம்ம மனசைக் கவர்ந்துவிட்ட பெண்களின் கண்ணில் இருந்து நமக்காக விழற இரண்டு சொட்டுக் கண்ணீர்தான் போதும். தட்ஸ் இனஃப்'' என்றான்.

மறுபடியும் அவள் நெற்றியில் இதழ் பதித்தான். பிறகு சிரித்தான்.

''இப்படி கண்ணீர் விட்டுக் கலவரப் படுத்தறதுக்குக் காம்பன்சேஷனா செகண்ட் டோஸ்... அமிர்தம் கொடுத்து சந்தோஷப்படுத்தலாம்...'' என்றான்.

இந்த முறை தயக்கத்துடன் அவளும் பதில்கொடுத்தாள். அதற்குள்ளாக ஆண்கள் வருகிற அரவம் கேட்டது.

இருவரும் விலகிக் கொண்டு யானை போன திசையைப் பார்த்துக் கொண்டு நிற்பது போல் நின்றார்கள்.

''எந்தப் பக்கம் போச்சு?'' என்று எல்லாரும் விசாரித்தார்கள்.

''இந்தப் பக்கம்தான்!'' என்று கை காட்டிய அறிவழகன் அது நின்ற விதத்தையும், பிளிறிய விதத்தையும் வருணித்து சொல்லி விட்டு.

''அது சரி! நீங்கள்ளாம் எங்க போனீங்க!'' என்று கேட்டான்.

''ஐயோ! அதையேன் கேட்கறப்பா? யானை கண்ணுக்குப் பட்டதும்... ஆளாளுக்கு ஓடிப்போய்க் கிடைச்ச இடத்துல ஒளிஞ்சாச்சு. சத்தம் போடாதீங்கன்னு வேற சொல்றாங்க'' என்றார்கள்.

பேசிக் கொண்டே வந்து தாரம் நடந்ததற்குப் பிறகுதான் செந்தில் வந்து கலந்து கொண்டான். தங்கையையும், நண்பனையும் தேடிக் கொண்டு வந்த செந்தில்குமரன் பத்து நிமிடத்திற்கு முன்னாலேயே வந்து விட்டான்.

இரண்டு பேர்களும் நடத்திக் கொண்ட நாடகம் பார்த்து இனிய அதிர்ச்சி போல் உணர்வுடன் அப்படியே திரும்பிப் போய் ஒருபுறம் நின்று கொண்டான்.

நண்பனுடன் தான் இன்னும் நெருங்கி உறவினனாகப் போகிறோம் என்ற எண்ணமே அவனை உற்சாகப்படுத்தியது. காற்றில் மிதப்பது போல் நடமாடிக் கொண்டிருந்தான். காலத்தின் கணக்குப் புரியாமல்.

## 9

செந்தில்குமரனுக்கு அயர்ச்சி மேலீட்டினாலோ என்னவோ தூக்கமே வரவில்லை.

நேற்றுப் பார்த்த காட்சி அவன் மனத்துக்குள் ஓடிக் கொண்டே இருந்தது. மிகவும் சந்தோஷமாக இருந்தது!

நண்பனுக்கே தன் சகோதரியைக் கொடுப்பதில் அவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி... அதைக் காட்டிலும் மிகப் பெரிய பணக்காரனுக்கு அவளைக் கொடுப்பதில் இன்னும் மகிழ்ச்சி.

"ஒரு வேளை அதனால்தான் தன்னைப் பார்ட்னராகச் சேர்த்துக் கொண்டானோ?" என்ற எண்ணம் தோன்றியது. ஆனால், மற்றொரு புறம் தான் அந்த நிறுவனத்திற்கு



முக்கியமாகத் தேவைப்படுகிறோம் என்ற பெருமிதமும் தோன்றியது.

எப்படியோ அறிவழகனைச் சந்தித்ததுதான் தன் வாழ்க்கையின் திருப்புமுனை என்று அவன் நினைத்தான்.

நண்பன் இனி முற்றாகத் தன்னைச் சார்ந்துதான் இருக்க வேண்டும் என்ற கர்வமும் லேசாகத் தோன்றியது. ஊரில் இருந்து வந்தவுடன் முதன் முதலாகத் தாயிடம் கோடி காட்டினான்.

"ஏம்மா! உன் மகனுக்குப் பெரிய கோடீசுவர மாப்பிள்ளை அமைஞ்சா... வேண்டாம்னு சொல்லிடுவியா?"

"அடப்போடா! இப்ப என்னவோ கோடீஸ்வர மாப்பிள்ளை வந்து வாசல்ல நின்னு பொண்ணு கேட்கப் போற மாதிரியும் நான் என்னமோ வேண்டாம்னு சொல்ற மாதிரியும்... அளவாக் கற்பனை பண்ணிக்கறது என்னைக்கும் நல்லது..."

"அட ஆண்டவா! கற்பனையில் எதுக்கும்மா... அளவு? இப்ப எல்லாமே அன் லிமிடட்தான். அதனால கற்பனையும் அளவா இருக்கக் கூடாதும்மா..."

"அதுசரி! அப்படிக் கோடீஸ்வர மாப்பிள்ளை வந்தா அவங்க தகுதிக்கு நாம செய்யணுமில்லே!"

"அம்மா! என்ன இருந்தாலும் வரப்போற மாப்பிள்ளையை அவன் இவன்னு ஏக வசனத்தில் பேசாதே!"

அம்மா சிரித்தார். மகன் ஏதோ இன்னைக்கு நல்ல மூடில் இருக்கிறான் போலும் என்று எண்ணிக் கொண்டார். அவரும் வேடிக்கைப் பேச்சைத் தொடர்ந்தார்.

"அடேய்! அண்ணனுக்கும் தங்கச்சிக்கும் அந்தக் காட்டுல போய் ஒத்தை யானையைப் பாத்ததிலிருந்து புத்தி பேத

விச்சப் போச்சு போல இருக்கு. உன் தங்கச்சியும் இப்படியேதான் நடமாடறா.''

''அங்கதான் இருக்கு விஷயம். அதுக்குத்தான் நானும் வர்றேன்.''

''வேண்டாம்... வேண்டாம்... எங்கயும் வர வேண்டாம். அங்கயே உட்கார்ந்து சொல்லு!''

''சரி... அம்மா... அந்த ஒத்தை யானையை தூரத்திலிருந்து பார்த்து ஆளாளுக்கு சிதறி ஓடினீகளே. அப்ப நான் ஒரு ஸீன் பார்த்தேன்.''

''ம்...!'' என்றார் அம்மா அரிசி களைந்தபடியே.

''ரெண்டு பேர்... உலகம் மறந்து நின்னுகிட்டு இருந்தாங்க... அந்த ஒத்தை யானையே அவர்களை டிஸ்டர்ப்... செய்யலேன்னா... பாத்துக்கயேன்.''

''ம்...!''

''அந்த இரண்டு பேருல ஒண்ணு உன்னோட மகள். இன்னொன்று ஒரு ஆண்...!''

அம்மா அரிசி களைவதை நிறுத்தினார். உற்றுப் பார்த்தார்.

செந்தில்குமரன் முகத்தில் எதையும் காட்டாமல் அமர்ந்து கொண்டான். அம்மா கலீரென்று சிரித்தார். பிறகு சொன்னார்.

''போடா! இப்படி அடிவயித்தைக் கலக்கறதே உனக்கு வேலையாப் போச்சு! கடைசியில கூட நின்னது பத்து வயசுப் பையன் அப்படீம்பே!'' என்றார்.

''இல்லம்மா... அவனுக்கு இருபத்தைஞ்சு இருக்கும்.''

''அப்ப... நீயாத்தான்... இருக்கும்!''



''இல்லம்மா... நான் இல்லே!''

இப்போது அம்மா நிஜமாகவே கவலையாகப் பார்த்தார்.

''என்னப்பா... சொல்றே!''

அவன் அம்மாவின் முகத்தை ஆழப் பார்த்தான். பிறகு சொன்னான்.

''ஆமாம்மா! நம்ம அறிவழகனும், நம்ம இறைவியும் தான்'' திலகவதி பாத்திரத்தை அடுப்பு மேடையில் வைத்தார். பக்கத்தில் ஒரு சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தார்.

''தம்பி! தொட்டுக் கிட்டுப் பேசிகிட்டாங்களா?'' அவள் முகத்தில் ஒரு சங்கடமான முகபாவம் நிலவியது.

''ஆமம்மா!''

''இருக்காதுப்பா. அந்தப் பையன் நல்ல பையன்ப்பா! அப்படியெல்லாம்... அத்து மீற மாட்டாம்பா...!''

''அம்மா... அத்து மீறினான்னு நான் சொல்லலையே!''

''ஒருவேளை யானையைப் பார்த்து நம்ம இறைவி பயந்துருப்பா... அந்த சமயத்துக்கு தொட்டு ஆறுதல் செய்யறது யார் வேண்ணா செய்யலாம்... இல்லே!''

''பொதுவா... அப்படியும் சொல்லலாம். ஆனா, அவங்க... பார்வையும் பேச்சும் அப்படி இருக்கலே!'' அம்மா அவனை ஆழப் பார்த்தார்.

''நீ விலா வாரியா சொல்றதைப் பார்த்தா, உனக்கு ஒண்ணும் வருத்தம் இல்லை மாதிரித் தெரியுது.''

''அம்மா! வருத்தப்படறதுக்கு இதில என்ன இருக்கு? இறைவியும் புத்திசாலிப் பொண்ணு. அறிவழகனும் கெட்டிக்காரன். அவுகளுக்கு ஒருத்தரை யொருத்தர் பிடிச்சுப் போனதுல என்ன அதிசயம்? இதுல என்ன இருக்கு!''

''என்னப்பா... இப்படி சொல்றே! எவ்வளவு பெரிய அந்தஸ்து வித்தியாசம்... இருக்கு!''

''அம்மா! அறிவழகன் அந்தஸ்துப் பாக்கறவன் இல்லே! அப்படியிருந்தா என்னைப் பார்ட்னராக்கியிருக்க மாட்டான்.'' திலகவதி பெருமூச்செறிந்தார்.

''தம்பி! இதெல்லாம்... ரொம்ப வேகமா நடக்குது. இதெல்லாம்... நிலைக்கணுமேன்னு ரொம்பக் கவலையா இருக்கு.''

''பெரியவங்கங்கற முறையில உங்க கவலையும் நியாயம்தான். சின்னவங்க அப்படீங்கற முறையில அவங்க வேகமும் நியாயம்தான்.''

''தம்பி! பணக்காரங்க சகவாசம் தம்பி! பாம்புன்னு தாண்டவும் முடியாது. பழுதுன்னு மிதிக்கவும் முடியாது.''

''போம்மா! நீ எப்பவுமே நெகடிவ்வாவே பாக்கறே! ஒண்ணு புரிஞ்சுக்க. அறிவழகனைப் பொறுத்தவரை நான் ரொம்ப தவிர்க்க முடியாத சக்தி ஆயாச்சு தெரியுமா?'' அம்மா மறுபடியும் கவலையாகப் பார்த்தார். பிறகு சொன்னார்.

''தம்பி! நீ வர்றதுக்கு முன்னாலயும் அவங்க நிறுவனம் ரொம்ப சக்ஸஸ்ஃபுல்லாகத்தான் இருந்தது. நீ இணைஞ்சதாலே எதுவும் மாறிடலே. அங்க நுழைஞ்சதுல... உனக்குத்தான் நன்மை அதிகம். அதை எப்பவும் மனசுல வச்சுக்க...'' என்றார்.

செந்திலுக்கு அம்மாவிடம் இருந்து அந்த நேரம் தப்பித்தால் போதும் என்றிருந்தது போலும்.

''சரிம்மா!'' என்று நகர்ந்து விட்டான். அம்மா கொடுத்த அறிவுரை எவ்வளவு முக்கியமானது என்பதையும் அதை மட்டும் சரியாகப் புரிந்து கொண்டு தன் வாழ்க்கையை



நடத்தியிருந்தால் எவ்வளவு பிரச்சினைகளைத் தவிர்த்திருக்கலாம் என்பதும் அப்போது அவனுக்குப் புரியவில்லை. அந்தப் புள்ளியில்தான் அவன் இடறி விட்டான்.

* * *

சாம்பசிவம் தனது அறையிலிருந்து வந்தார்!

''புவனேஸ்வரி! பூஜை முடிச்சாச்சா... இல்லையா... பசிக்குது...'' என குரல் கொடுத்தார்.

''முடிச்சாச்சுங்க...! சமையல் ரூம்லதான் இருக்கேன்'' என்று பதில் குரல் கொடுத்தார் புவனேஸ்வரி.

''அதுதானே பார்த்தேன்! ஆசாமிக்கு அப்புறம்தானே சாமி!'' என்றார் சாம்பசிவம்.

புவனேஸ்வரி டிபன் டிரேயை எடுத்துக் கொண்டு வந்தார். சமையல்காரரரும் உடன் வந்து பரிமாறினார்.

''நேரத்துக்குத் தகுந்த மாதிரி விளக்கம் சொல்லுவீகளே!'' என்றார் புவனேஸ்வரி.

''இல்லை! புவனி! வாரியார் சாமிதான் சொல்லுவாக... ஹெட் போஸ்ட் ஆபீஸ்ல லெட்டர் போட்டா போஸ்ட் பாக்ஸுக்கு லெட்டர் வராதாம். ஆனா, போஸ்ட் பாக்ஸ்ல லெட்டர் போட்டா... போஸ்ட் ஆபீசுக்குப் போயிருமாமே!''

''புரியலியே!''

''புரியலியா! ஆசாமிக்கு அதாவது மனுஷனுக்கு நல்லது செஞ்சா... கடவுளுக்குப் போய் சேருமாம். ஆனா, கடவுளுக்கு நல்லது செஞ்சா கீழே மனுஷனுக்கு வராதாம்.''

''இதென்ன ஒன் வே டிராஃபிக்கா... இருக்கு?'' என்றார் புவனேஸ்வரி. சுவாரசியமாகச் சாப்பிட்டவர் புவனேஸ்வரியை முகத்தைப் பார்த்தார்.

''ஏன்... புவனேஸ்வரி! பையன் எங்கே!''

''தூங்கறான்!''

''என்ன! முந்தியெல்லாம் நேரத்துல எழுந்திருச்சுக்கு வான்!''

''தெரியலே! நேத்து என்னவோ நைட் செல்போன்ல பேசிக்கிட்டிருந்தான். அப்புறமாக் கொஞ்ச நேரம் வெளியே உலாவிகிட்டிருந்தான். மெதுவாகத்தான் தூங்கினான் போல் இருக்கு.''

சாம்பசிவம் சிந்தனையுடன் மனைவியைப் பார்த்தார்.

''ஏன்... புவனி! அவனுக்கும் இருபத்தேழு ஆச்சல்ல...! கல்யாணம் பண்ணனும் இல்லே!''

''ஆமா! அவன் அப்படியெல்லாம் நாம ஒரு பொண்ணைப் பார்த்துக் கொண்டு வந்து நிறுத்தினா ஒத்துக்கறவன் இல்லையே!''

''ஒத்துக்குவான்! ஆனா, அது அவனுக்கு மனசுக்குப் பிடிக்கணும்.''

''ஏன்! ஏதாவது பொண்ணு கிண்ணு பாத்து வச்சிருக்கி களா?'' என்றார் புவனேஸ்வரி ஆர்வமாக.

''இல்ல... புவனி! எனக்கென்னமோ அவன் பொண்ணு பாத்து வச்சிருக்கிற மாதிரித் தெரியுது...''

''அப்படியா... சொல்றீக!''

''ஆமா! தூக்கம் வரதில்லேங்கறே! செல்போன்ல பேச றாங்கறே! நானும் கவனிச்சேன். முகத்துல ஒரு சிரிப்பு, கண் ணுல ஒரு கனவு'' என்றார். சிந்தனையுடன், நிறுத்தினார்.

''யாரா இருக்கும்?''

''எனக்கென்னமோ... அந்தப் புள்ளை இறைவியா இருக்குமோன்னு தோணுது.''



''ஏன்? என்ன யோசிக்கறே!''

''பொண்ணு நல்ல பொண்ணுதான்! ஆனா, வசதிக் குறைவான...!''

''வசதி எதுக்கு... புவனி! அவன் மனசுக்குப் புடிச்சா... சரின்னு எனக்குத் தோணுது...''

''அவனாச் சொல்லட்டுமே?''

''எனக்கு அதுவரைக்கும் பொறுமையில்லே! அவன் வரட்டும் இன்னைக்கே ஜாடை மாடையாக் கேட்கப் போறேன்...''

''ஒருவேளை... இல்லைன்னு சொன்னா!''

''சொல்லட்டுமே! நாம உடனே வேற பொண்ணு பார்க்க லாம். இல்லே...!''

''அதுவும் சரிதான்! அப்ப மெதுவா அவன்கிட்டே கேட்டார்லாம்கறீங்க'' அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே அவன் மாடியிலிருந்து அவசர அவசரமாக இறங்கி வந்தான். பொறுமையில்லாமல் வாட்சைப் பார்த்துக் கொண்டு வந்தான்.

''ஏம்மா! எழுப்பி விட்டிருக்கலாமில்லே!''

''இல்ல தம்பி! ராத்திரியும் ரொம்ப நேரம் தூங்காத மாதிரி தெரிஞ்சது. அதான் எதுக்கு கொஞ்சம் காலையில யாவது தூங்கட்டும்னு விட்டுட்டேன்'' என்றார் அம்மா. அறிவழகனின் முகம் லேசாக சிவந்தாற் போலிருந்தது.

''அதும்மா! முக்கியமான டிஸ்கஷன்'' என்றான்.

''இருக்கும்! இருக்கும்!'' என்றார் அப்பா. அதில் ஏதோ கிண்டல் தொனித்தாற்போல இருந்தது. லேசாகத் துணுக்குற் றாற் போல் அறிவழகன் அவர் முகத்தைப் பார்த்தான்.

ஆனால் சாம்பசிவம் முகத்தை மட்டும் சீரியஸாக வைத்துக் கொண்டிருந்தார்.

மேற்கொண்டு பேச்சை வளர்த்தாமல் அவன் சாப்பிடுவதில் மூழ்கினான்.

''அம்மா! என்ன சொல்லு... உன் கைமணம் யாருக்கும் வராதும்மா!'' என்றான் ஏதோ பேசவேண்டுமென்பதற்காக.

''ம்'' இப்படியே சொல்லீட்டு எத்தனை நாளை ஓட்டறதா உத்தேசம்?'' என்றார் அப்பா.

மகன் நிமிர்ந்து அவர் முகத்தைப் பார்த்தான்.

''இல்லே! உனக்குன்னு ஒருத்தி வந்து அவ சமையலை நாங்க ருசி பார்க்க வேண்டாமா?'' என்றார்.

''ஓ...!'' என்று மௌனமானான்.

''இல்லே! நாங்க ஒரு பொண்ணு பாத்து வச்சிருக்கோம் சொல்றோம். அது பிடிக்கலேன்னா... சொல்லு... வேற பொண்ணு பார்க்கறோம்'' என்றார். அவன் மௌனமாய் தொடர்ந்து சாப்பிட்டான். ''அப்பா எதுவரைக்கும் போகிறார் என்று பார்க்கலாம். அதற்குப் பிறகு பேசலாம் என்பது போல் மௌனம் காத்தான்.

''நாங்க பாத்திருக்கிற பொண்ணு கொஞ்சம் வசதிக் குறைவுதான். ஆனா, நல்ல பொண்ணு...''

அவன் கவனமாகக் கேட்டது போன்ற பாவனையில் தொடர்ந்து சாப்பிட்டான்.

''நமக்குத் தெரிஞ்ச பொண்ணும்கூட'' என்றார். நிறுத்தினார். மனைவியைப் பார்த்தார். இருவர் கண்களிலும் சிரிப்பு.

அவன் புரியாதவனாய்ப் பார்த்தான்.

அம்மா சிரித்தார். ''சும்மா அவன்கிட்ட வம்பு செய்யாதீங்க'' என்றார்.

''இல்ல தம்பி! நம்ம இறைவியைப் பத்தி நீ என்ன நினைக்கறே?'' என்று கேட்டார் சாம்பசிவம்.



அறிவழகன் உண்மையாகவே திகைத்துப் போனான். உணவை வாயருகில் கொண்டு போன கை அப்படியே நிற்க.

''அப்பா!'' என்றான்.

''இல்ல! உங்கம்மாதான் சொல்றா... நீ ஏதோ அந்தப் பொண்ணு கூட ரொம்ப இன்ட்ரஸ்டாப் பழகறேன்னு'' என்றார்.

''நான் எப்ப சொன்னேன்?'' என்பது போல் புவனேஸ்வரி பார்க்க... கண்ணமர்த்தி சிரித்தார்.

''அப்பா! அது... வந்து!'' என்று மகன் இழுக்க... அப்பா தீவிரமான முக பாவத்தோடு சொன்னார்.

''அறிவழகா! வாழ்க்கை உன்னோடது. மனசுக்குப் பிடிச்ச வாழ்க்கை நீ வாழணும். அதுதான் எங்களுக்கு முக்கியம். மத்த எதுவுமே முக்கியம் இல்லே! அதனால நீ எதையும் தைரியமா சொல்லலாம்.''

''இல்லப்பா! இறைவிக்கு சம்மதமான்னு தெரிய வேண்டியிருந்தது.'' புவனேஸ்வரி சற்றே கோபத்துடன் சொன்னார்.

''என்னப்பா... பேசறே! உன்னை கட்டிக்கறதுக்கு எந்தப் பொண்ணுக்குக் கசக்கும்?'' என்றார்.

''அப்படியில்லம்மா! இந்த விஷயத்துல ஒவ்வொருத்தரோட விருப்பம் ஒவ்வொரு மாதிரி இருக்கும். அவங்க விருப்பம் என்னன்னு தெரிஞ்சதான் முடிவெடுக்கணும்'' என்றான் அறிவழகன். அம்மாவும், அப்பாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''சரி...! இப்ப என்ன முடிவாயிருக்கு...!'' என்றார் அப்பா.

''அப்பா! இப்ப வரைக்கும் எதுவும் முடிவாகலே. அந்தப் பொண்ணுக்கு அப்ஜக்ஷன் இல்லேங்கற மாதிரித்தான்... தெரியுது'' என்றான்.

மகன் அடக்கி வாசிக்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட தந்தை தமுட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டார். பிறகு சொன்னார்.

''தம்பி! பொண்ணு நல்ல பொண்ணுதான். குடும்பத்துக்கு ஏத்த பொண்ணாத்தான் இருக்கும்'' என்றவர் சற்று நிறுத்தி விட்டு.

''ஆனா... நான் சில ஆலோசனைகள் சொல்றேன் கேட்டுக்க... இந்தப் பாயிண்ட்ல நான் சொல்ற விஷயங்களையெல்லாம் கிளியர் பண்ணிகிட்டின்னா... பின்னால நல்லது'' என்று சில குறிப்புகள் கொடுத்தார்.

அறிவழகன் எப்போதும் போல் முழுமையாகக் கேட்டுக் கொண்டான். தீவிரமாக மனதில் வாங்கிக் கொண்டான். பிறகு சொன்னான்.

''அப்பா! நீங்க சொல்றதெல்லாம் பொதுவா கரெக்ட் தாம்பா... ஆனா, என்னோட விஷயத்துல அது விதிவிலக்கா இருக்கும்னு நினைக்கறேன். ஐ கேன் மேனேஜ்பா...'' என்றான்.

''ஓ.கே! ஓ.கே! ஆனா, எதுக்கும் எப்பவும் ஒரு கண்ணு வச்சுக்கறது நல்லது'' என்றார் சாம்பசிவம் கண்டிப்பான குரலில்.

''ஐ கேன் அண்டர்ஸ்டாண்ட்'' என்றான். உடனே மீண்டும் இறைவி பற்றிய பேச்சுக்குத் தாவினார் சாம்பசிவம்.

''என்னப்பா! நாங்க போய்ப் பொண்ணுக் கேட்கவா...! இல்லே...''

''இல்லப்பா! நானே அவங்ககிட்ட பேசி சம்மதம் வாங்கிடறேம்ப்பா... நீங்க கௌரவமா நடத்திக் குடுத்தாப் போதும்...''



''டேய்! என்னடா பெரிய வார்த்தையெல்லாம் பேசறே! நீதான்டா... எங்க குடும்ப கௌரவமே!'' என்றார். மகனைத் தட்டிக் கொடுத்துத் தழுவிக் கொண்டார்.

அப்பாவும், அம்மாவும் அந்தஸ்து கருதி சம்மதிக்க மாட்டார்கள் என்று நினைத்தான். ஆனால், அவர்கள் சம்மதம் எளிதாகக் கிடைத்ததுமே எல்லாம் இயல்பாகப் போய்விடும் என்ற நினைத்தான். ஆனால், வாழ்க்கையின் கணக்கு வேறாக இருந்தது போலும்...!

## 10

''ஹேய்!'' என்ற அறிவழகனின் கிசுகிசுப்பான குரல் கேட்டு ஆச்சரியப்பட்டுப் போனாள் இறைவி.

காலை நேரத்தில் அதுவும் பத்துப் பதினொரு மணி வாக்கில் மும்முரமான வேலை நேரம். இந்த நேரத்தில் கூப்பிடுகிறாரே? ஏதாவது பிரச்சினையாக இருக்குமோ? இல்லையே! குரல் குதூகலமாக இருக்கிறதே என்று எண்ணியபடி.

''சொல்லுங்க!'' என்றாள்.

''ஹேய்! நம்ம கல்யாணத்துக்கப்புறம் என்னை எப்படிக் கூப்பிடுவே?'' என்றான்.

''என்ன இப்ப! ஆபீசில வேலை ஒண்ணும் இல்லையாக்கும்?''

''இந்தக் கேள்வியெல்லாம் விட்டுட்டு... நான் கேட்டதுக்கு பதில் சொல்லு...'' அவளுக்குள் குறும்பு கொப்பளித்தது.

''தாதா! ம்ஹூம்... ரொம்பப் பழசா... இருக்கு... ஆரு யிரோ! ரொம்ப முத்தின தமிழா இருக்கு... டியர்... ம்ஹூம் எதுக்கு நம்ம ஊரு மொழியிலயே கூப்பிடலாம்... டேய்...! இது ரொம்ப நல்லாயிருக்குல்லே!'' என்றாள்.

அவன் கிளுகிளுவென்று சிரித்தான்.

''ம்... டேய்ன்னு எப்படா கூப்பிடலாம்னு காத்துகிட்டிருந்திருக்கே?'' என்றான்.

அவள் பதறிப் போனாள்.

''ஐயய்யோ! அப்படியெல்லாம்... இல்லே!'' என்றாள்.

''ஓ.கே...! ஓ.கே...! எதுக்கும் எப்படிக் கூப்பிடப் போறோம்னு முடிவு பண்ணிக்க...''

''ம்...! அறிவழகன்னு கூப்பிட்டா... ரொம்ப வித்தியாசமா இருக்கு...'' அறிவுங்கறதையே கொஞ்சம் மாத்தி ஹரின்னு கூப்பிடவா...''

''ம்... என்னமோ... செய்! ஏய்... மக்கு... இத்தனை வாயடிக்கறே! இப்ப எதுக்கு இந்த டாபிக் வந்துச்சுன்னு கேட்க மாட்டியா?''

''அதானே! நான் அதை யோசிக்கவே இல்லை பாருங்க! சொல்லுங்க... அறிவு...!'' என்றாள்.

''குட்... இது நல்லா இருக்கு... அப்படியே கூப்பிடு. இ...ன்...னை...க்கு.... எங்க அம்மாவும் அப்பாவும் நம்ம கல்யாணத்துக்கு பச்சைக் கொடி காட்டிட்டாங்க...''

''நிஜமா?'' என்று உண்மையிலேயே மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனாள் இறைவி.

''ஆமா! அப்பாவே காலையில பேச்சை ஆரம்பிச்சு... ஏம்ப்பா... இறைவியை வேண்ணா பொண்ணு பாக்கலாமான்னு கேட்டாரு'' என்றான்.



''என்னால நம்பவே முடியலே!''

''எனக்கும்தான் கெஸ் பண்ணிட்டாங்கன்னு நினைக்கறேன். அதான் ஆழம் பார்த்தாங்க... நானும் உள்ளதைப் போட்டு உடைச்சுட்டேன்.''

''என்னத்தை உடைச்சீங்க?''

''அதான்! இறைவிங்கற ஒரு பொண்ணு என் உள்ளத்தைப் போட்டு உடைச்சிட்டாங்கற உண்மையை உடைச்சுட்டேன்'' என்றான்.

''ஐயே... வசனம் போதுமே!''

''அதுவும் சரிதான்!''

''புரியலே!''

''கும்மா... எதுக்குடா... வசனம் பேசறே! செயல்ல இறங்குடாங்கறே... அதுவும் நல்ல விஷயம்தான்'' என்றான்.

''போங்க... அறிவு...!'' என்று நிறுத்தினாள்.

''எங்க போலாம்னு... சொல்லு... ரெண்டு பேருமாப் போலாம்'' என்றவன் சிரித்து விட்டு மேலும்,

''இத பார்! இறைவி... இனி உங்கம்மாகிட்டயும், உங்கண்ணன்கிட்டயும் பேசணும். உங்கண்ணனை விடு. நான் கன்வின்ஸ் பண்ணிடறேன்... உங்க அம்மாகிட்டதான் பேசணும்'' என்றான்.

''ஆமா...! அம்மா நீங்க ரொம்ப வசதியான இடம்னு கவலைப்படுவாங்க'' என்றாள் இறைவி கவலையுடன்.

''நான் பேசறேன். எல்லா விதத்திலயும் நான் உங்களுக்கு வசதியான இடம்தான்னு நான் கன்வின்ஸ் பண்றேன்'' என்றான் இரு பொருளில்.

பேசினான்!

அறிவழகன் நினைத்ததற்கு நேர் மாறாக இறைவியின் அம்மாவை சம்மதிக்கச் செய்வதுதான் பெரிய விஷயமாகப் போயிற்று. திலகவதி பயந்தார்!

''உங்க தருதி எங்கே? எங்க தருதி எங்கே?'' என்று திரும்பத் திரும்பச் சொன்னார்.

''அத்தே! ரொம்ப ஒண்ணும் கவலைப்படாதீங்க... எத்தனையோ வசதியான பொண்ணுங்க எனக்குக் கிடைப் பாங்க... ஆனா... குணம்...? எனக்குப் பிடிச்ச மாதிரியான குணம் உங்க பொண்ணுகிட்டே இருக்கு. இறைவியைக் கல்யாணம் பண்ணிகிட்டா என்னோட ஆயுசுக் காலத் துக்கும் நிம்மதியா இருப்பேங்கறது மட்டுமில்ல... எங்க அம்மா அப்பாவையும் இறைவி தன்னோட சொந்த அம்மா... அப்பாவா நினைப்பாங்கற நம்பிக்கை இருக்கு...'' என்றான்.

அப்போதும் திலகவதி பயத்துடனேயே இருந்த மாதிரி இருந்தது. தொடர்ந்து சொன்னான்.

''அத்தே! பணம் என்னங்கத்தே! வேணுங்கற அளவுக்கு நான் சம்பாதிக்கறேன். எனக்குத் தேவை குணமும், அறிவும், பொறுமையும் உள்ள பொண்ணுதான். இறைவிகிட்டே நான் எதிர்பார்க்கிற எல்லாமும் இருக்கு. வேறென்ன வேணும்?'' என்று விதவிதமாகப் பேசினான்.

ஒரு வழியாகத் திலகவதி சம்மதித்தார். அதற்குள் வேறு ஒரு பிரச்னை முளைத்தது.

அம்மா என்னவோ ஜாதகம் பார்த்து விட்டு ஆறு மாதம் கழித்துத்தான் திருமணம் வைத்துக் கொள்ள வேண்டும் என்றார். அதனால் முக்கியமானவர்களை வைத்து ஒரு நிச்சயதார்த்தம் நடத்திக் கொண்டார்கள்.

நிச்சயதார்த்தம் நடந்து இரண்டு மாதம் ஓடியிருந்தது. இப்போது ஒரு முக்கியமான பேச்சு வார்த்தைக்காகவும் ஒரு



பேக்கேஜாகவும் அமைத்துக் கொண்டு மலேஷியா வந்திருந்தான்.

படுக்கையில் படுத்தபடி கடந்து போன எல்லாவற்றை யும் மீண்டும் நினைவு படுத்திக் கொண்டான்.

அதிகாலை நேரம்

மகிழ்ச்சியோடு புரண்டு படுத்தான்.

பொழுது ரம்மியமாக இருந்தது. எழுந்து அவனது அறை ஜன்னலில் இருந்து பார்த்தான். கட்டிடங்கள் சுற்றிலும் திரளாக. தீப்பெட்டிகள் போல அவை காட்சியளிக்க காட்சி ரம்மியமாக இருந்தது.

பத்து மணிக்கு நடக்க இருக்கிற தொழில் முறை பேச்சு வார்த்தையையும் மீறி இறைவியே அவன் மனதை ஆக்கிர மித்துக் கொண்டாள்.

மெத்து மெத்தென்ற தலையணை ஒன்றை அருகில் இழுத்துக் கைகளுக்குள் அடக்கிக் கொண்டு சுகமான கற் பனைகளில் ஆழ்ந்தான்.

* * *

''ஹலோ சார்! நாங்க வேல் முருகன் கம்பெனியில இருந்து பேசறோம். எங்க கார் சர்வீஸுக்கு அனுப்பி யிருந்தோம். எப்பக் கிடைக்கும்?'' செந்தில்குமரன் சுற்று முற்றும் பார்த்தான். நல்லவேளையாக யாரும் இருக்க வில்லை.

''சார்! நாளைக்கு சவ்னிக்குக்குள்ள வந்துரும். நான் செந்தில்குமரன் மேனேஜர் பேசறேன். என்னை மட்டுமே காண்டாக்ட் பண்ணுங்க... சரியா?'' என்றான்.

அந்தப் பக்கம் கம்பெனி மேனேஜரின் நெற்றியில் முடிச் சுக்கள் விழுந்தன.

''இது என்ன புதுவிதமான ஸ்டேட்மெண்ட்டாக இருக்கிறதே. இப்படி யாரும் அந்தக் கம்பெனியில் இதுவரை சொல்லவில்லையே?'' என்று எண்ணிக் கொண்டார்கள்.

ஒரு வேளை ஆட்கள் எடுத்தால் தகவல் சரியாகப் போவதில்லை என்பதால் அந்த முடிவுக்கு வந்திருப்பார்களோ என்று தோன்றியது.

செந்தில்குமரனின் முகம் போனை வைத்தவுடன் வியர்த்து விட்டது.

'இது சரியா? இது நமக்குத் தேவையா?' என்று யோசித்தான். ஆனால், கூடவே அறிவழகன் கண்டிப்பாக ஆட்சேபிக்க மாட்டான் என்று தோன்றியது. அதிலும் இப்போது உறவினன் வேறு ஆகப் போகிறான். அதனால் கண்டிப்பாகத் தன்னை தூக்கி விடத்தான் பார்ப்பான் என்று தேற்றிக் கொண்டான்.

''சார்!'' என்று பவ்யமாக வந்து நின்றார் ஜி.எம்.

''என்ன சார்!'' என்று அவரிடம் பேசுவதிலும், மறுநடவடிக்கைகளைத் திட்டமிடுவதிலும் தீவிரமானான்.

ஜி.எம். அந்தப்புறம் போனவுடன் மீண்டும் பழைய நினைவுகளுக்குப் போனான். இப்போது அறிவழகன் மலேஷியாவில் இருக்கிறான் என்ற போதும் தினமும் தங்கையிடம் பேசினான்.

குறைந்தது அரைமணி நேரமாவது பேசுகிறான். தன் வீட்டிலும் அதே நேரம் பேசுகிறான். நட்பு ரீதியாகப் பேசுகிறான் என்ற போதிலும் அலுவலக விஷயங்களும் பேசுகிறான். அதனால் அத்தனை நேரம் பேசுவதில் பொருள் இருக்கிறது. ஆனால் தங்கையிடம் பேசுவதற்கு என்னதான் இருக்குமோ தெரியவில்லை.



சிரித்துக் கொண்டான்.

அம்மாவிடம் வந்து பெண் கேட்கையில் முகத்தில் மண்டியிருந்த வெட்கமும், தயக்கமும் இப்போது நினைத்தால் கூட செந்தில்குமரனுக்கு சிரிப்பாக வந்தது.

முதலில் அறிவழகன் வந்து சம்மதம் கேட்டுப் போன மறுநாளே அறிவழகனின் பெற்றோர்கள் வந்தார்கள்.

அவர்கள் பங்குக்கு அவர்கள் பெண் கேட்டு அடுத்த வாரத்திலேயே நிச்சயதார்த்தம் செய்தார்கள்.

நிச்சயதார்த்தத்தையே தடபுடலாக நடத்தினான் செந்தில்குமரன். அவனுக்குத் தங்கையின் திருமணம் சிறப்பாக நடக்க வேண்டும் என்பதைக் காட்டிலும் பெரிய இடத்துப் பிள்ளை தங்கள் வீட்டுக்கு மருமகனாக வர இருக்கிறார் என்பதைப் பறை சாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது.

கிட்டத்தட்ட ஐநூறு பேரை நிச்சயதார்த்தத்துக்கே அழைத்தான். அவர்கள் வீட்டுக்கு அருகிலே இருந்த மண்டபம் பிடித்து ஏற்பாடு செய்தான்.

பகலுணவு நேரம் அமைகிற மாதிரி பார்த்து கொண்டு கிராண்டாக ஒரு விருந்தளித்தான் அறிவழகன் கூட....

''எதுக்குப்பா...உனக்கு செலவு?'' என்றான்.

''இல்லை அறிவு! உனக்கும், மாமாவுக்கும் வேண்டிய பெரிய மனுஷர்கள் வருவாங்க. நம்ம வீட்ல இடம் பத்தாது செய்யறதே உண்டு... நல்லாச் செய்துக்கிடலாமே'' என்றான்.

''உங்க இஷ்டம்'' என்று சொல்லிவிட்டான் அறிவழகன். பரிசம் போடுகிறேன் பேர்வழி என்று நகை செட்டே கொண்டு வந்தார் புவனேஸ்வரி. உறவினர்களில் சிலருக்கு இவர்கள் அதிர்ஷ்டம் பார்த்து உள்ளூரப் பொறாமை என்றுகூட சொல்லலாம்.

நிலகவதி ஆனால் பொறுமையாக வந்தவர்களை எல்லாம் நன்கு உபசரித்தார். அந்த உபசரிப்பிலும் பண்பாட்டிலும் கொஞ்சம் உறவினர்கள் குளிர்ந்து போனார்கள் என்று சொல்ல வேண்டும்.

அறிவழகன் தனது நண்பன் ஒருவரிடம் தனது ஹாண்டி கேமராவைக் கொடுத்து அவற்றையும் பதிந்து கொண்டான்.

மறுநாள்!

அம்மாவிடம் ''கொஞ்சம் உன்னோட எதிர்கால மருமகனை வரச் சொல்லக் கூடாதா?'' என்று ஐஸ் வைத்தாள்.

இறைவியோடு அமர்ந்து அந்த வீடியோவைப் பார்த்தான் அறிவழகன்.

''இறைவி! அந்த நிச்சயதார்த்தத்தில் நடந்து வந்தப்ப... தன்ளுங்கப்பான்னு எல்லாரையும் தள்ளி விட்டுட்டு ஓடி வந்து...'' என்று நிறுத்த அவள் வெட்கத்துடன் புன்னகைத்தாள்.

''இங்க பாரு அந்தக் கூட்டத்துல உன்னோட எந்த அலங்காரத்தையும் சரியாப் பார்க்க முடியல. ஒரு நாளைக்கு அழகாகப் பண்ணிக் காட்டறே!'' என்றான்.

''ம்... கல்யாணத்துக்கப்புறம்...!''

''ம்ஹூம்... அதுக்கு முன்னாலேயே!'' என்று வற்புறுத்தவும் ''சரி'' என்றாள்.

''என்ன... ஸ்வீட்டி! அம்மா ஆறு மாதம் கழிச்சுக் கல்யாணம்னு சொல்லிட்டாங்க'' என்று அங்கலாய்த்துக் கொண்டான்.

இதையெல்லாம் பாதி விழுங்கிக் கொண்டு துண்டு துண்டாக அம்மாவிடம் இறைவி சொல்லிக் கொண்டிருந்ததை ஜாடை மாடையாகக் கேட்டான்.



அப்போதே தோன்றியது அறிவழகன் சத்தமாகத் தன் தங்கையின் அழகில் விழுந்தே விட்டான்.

இப்போதெல்லாம் மனதில் ஒரு பெருமிதம் தோன்றியிருந்தது.

அறிவழகன் குழுமங்களில் தானும் ஒரு பங்குதாரர் என்ற எண்ணம் ஒரு மிதப்பைத் தோற்றுவித்திருந்தது.

பெரிய பணக்காரர்கள் பழகுகிற வட்டங்களில் எல்லாம் தொடர்பு கொள்ள ஆரம்பித்தான்.

தானும் ஏதோ பிறவியிலேயே பணக்காரன் மாதிரி எண்ணம் அவனுக்குள் விழுந்திருந்தது. அதற்கேற்றாற்போல் அறிவழகனும் தன் மேல் முழு நம்பிக்கை வைத்திருப்பது அவனுக்கு வசதியாகப் போய்விட்டது.

எல்லா விஷயங்களும் இப்படியேதான் தொடரும் என்று நினைத்துக் கொண்டிருந்தான் செந்தில்குமரன் எதிர்வரப் போவது என்ன என்று புரியாமல்.

* * *

நிலகவதி சமையல் மேடையைக் கழுவிக் கொண்டிருந்தார்.

''ஏம்மா! நான் வந்து செஞ்சுக்குவேன் இல்ல!'' என்றாள் மகள்.

''ஆமா! நான் இப்ப செஞ்சா... என்ன?'' என்றார் நிலகவதி. நிச்சயம் ஆனவுடனேயே இந்த ட்யூஷன் எல்லாம் வேண்டாம் என்று முடிவெடுத்தார்கள். ஆனால், அவள் பாடம் எடுத்த குழந்தைகளின் பெற்றோர்கள் எல்லாரும், ''நாங்க குழந்தைகளை வீட்டுக்கே கொண்டு வந்து விடறோம். ஜஸ்ட் நீ அவர்ஸ் எடுத்தாப்போதும். கல்யாணம் இன்னும் ஆறு மாசம் கழிச்சுத்தானே நடக்கப் போகுது...?'' என்று வற்புறுத்தினார்கள்.

அம்மாவும் அவளும் ஆலோசித்தார்கள். "ஆமாடி! அகடமிக் இயர்ல நடுவில அனுப்புனா திடீர்ன்னு அம் போன்னு விட்டா... அவங்க புதுசா ஆள் தேடணுமில்லே. நீ எதுக்கும் மாப்பிள்ளையைக் கேளு" என்றார்.

அவளும் கேட்டாள்.

"இத பார் இறைவி! நீ படிப்பு சொல்லிக் குடுக்கறே! இதுல எந்தத் தப்பும் இல்லே! அவங்கதான் வீட்லயே குழந்தைகள் கொண்டு விடறேங்கறாங்களே எனக்கொண்ணும் அப் ஜக்ஷன் இல்லே... அப்புறம்... தாங்க்ஸ்! என்றான்.

"எதுக்கு?"

"இப்படி என்கிட்டே கேட்கணும்னு தோணிச்சே! அதுக்குத்தான்."

"இல்லே! இனிமே நாங்க எது செய்யறதும் உங்க கௌரவத்தையும் பாதிக்காம இருக்கணும் இல்லே" என் றாள்.

"குட்... குட்!" என்று சிரித்தான். "நாங்களும் உங்க கௌரவத்தை பாதிக்காத வகையில் அப்பப்ப ஏதாவது கேட்போம்..." என்றான். குறும்பாக சிரித்தான்.

"என்னடா... இன்னும் டிராக் மாறலையேன்னு யோசிச் சேன்..." என்றாள்.

"ஹேய்! அப்ப நீ நான் அப்படிப் பேசவேன்னு உள்ளூர எதிர்பார்த்திருக்கே... தானே?" என்றான்.

அவள் திடுக்கிட்டாள்.

"ஐய்யோ..." என்று உளறினாள்.

"சரி... சரி...! அது ஒண்ணும் தப்புக் காரியம் இல்லே! அது எங்களுக்குக் கௌரவமான விஷயம்தான்" என்றான்.



"உங்ககிட்ட பேசவே முடியாது!" என்று முணுமுணுத் தாள்.

"பேசாதே...!" என்று நிறுத்தினான்.

அதற்கும் அவளால் பதில் கொடுக்க முடியவில்லை? அதுசரி! நான் எதுக்குக் கூப்பிட்டேன் தெரியுமா? அடுத்த வாரம் மலேஷியா போறேன்" என்றான்.

"ஹோ!" என்று சோகமானாள்.

அவனும் சோகமானான். என்ன செய்வது? இந்த டிரிப் பிஸினஸ் டிரிப்பாப் போச்சு போய்த்தாம்மா ஆகணும்... நீயும் வரியா?"

"ம்... ஆசை!" என்றாள்.

"அட ஆமா! நிஜமாவே ஆசைதான்" என்றான்.

"கல்யாணம் முடியட்டும். நீங்க எங்க கூப்பிட்டாலும் வருவேன்" என்றாள்.

"நீ என்ன வர்றது. நாங்க குண்டுக் கட்டாக் கட்டித் தூக்கிட்டுப் போயிடுவோம். இல்லே!"

"போன பிறவியிலே வெயிட் லிஃப்டரா இருந்துருப்பீங் களோ!"

"நீ எனது பூஞ்சோலையாச்சே! உன்னைத் தூக்கிட்டுப் போறது எனக்கு சுகமான சுமையாத்தான் இருக்கும்."

சென்ற வாரத்தில் தன்னிடம் மலேஷியா செல்வதற்கு முன்பாக பேசின வார்த்தைகளை நினைத்தபடியே இப்போது வேலைகளை முடித்தாள் இறைவி.

'இன்னும் இரண்டே நாள்ல வந்துடுவாரு அப்புறம் நாள் பறந்து விடாதா? இன்னொரு நாலு மாதம் ஓடி விடும்' என்று எண்ணிக் கொண்டாள்.

பாவம்! அப்போது இறைவிக்கு தெரியவில்லை வரப் போகிற ஆறு மாதங்கள் தன் வாழ்க்கையின் மிக மோசமான

சோதனைக் காலமாகவும் தன் வாழ்க்கையின் சந்தோஷங்களையே கேள்விக் குறியாக்கி விடுகிற அளவுக்கும் இருக்கப் போகிறது என்பதும்.

# 11

''இறைவி! அறிவு நாளைக்குக் காலையில வர்றான். நாங்க ஏர்போர்ட்டுக்குப் போறோம். நீ வர்றியா?'' என்றான் செந்தில்குமரன்.

இறைவிக்கு ஆசையாகத் தானிருந்தது. ஆனால் தயக்கமாகவும் இருந்தது.

''இல்லே! நான் வர்லே! அவங்க வந்ததும் அவங்க அம்மாகிட்டே பேசி முடிக்கட்டும். அப்புறமா நான் சாயங்காலமா வர்றேன்'' என்றாள்.

திருமணத்திற்கு முன்பாகவே இவ்வளவு உரிமை எடுத்துக் கொள்வது அவசியமா என்றிருந்தது. நிலகவதியின் பொறுப்பும் சிந்தனையும் அவளிடம் இயற்கையாகவே படிந்திருந்தது.

''அறிவு கேட்டா நான் என்ன சொல்ல?''

''இப்ப நான் சொன்னதையே சொல்லுண்ணா!'' என்றாள் இறைவி.

மலேஷியாவில் ஏர்போர்ட் வந்தவுடனே அறிவழகன் போன் செய்தான்.

''இறைவி! ஏர்போர்ட் வர்றியா?''



''எனக்கு வர்றதுக்கு ஆசைதான் ஆனா உங்கம்மா, அப்பா வருவாங்க... நீங்க பாட்டுக்கு என்னோட பேச ஆரம்பிப்பீங்க... அவங்களுக்கு சங்கடமாகும்'' என்றாள்.

அறிவழகனுக்கும் அது சரியென்றே தோன்றியது.

''அப்ப... சரி! சாயங்காலம் கார் அனுப்பறேன்... வந்து சேரு'' என்றான்.

''சரி!'' என்றாள்.

''எப்போதடா மாலை வரும் என்று காத்திருந்தாள். கார் வந்ததும் உற்சாகமாய் புறப்பட்டாள்.

முன்னாலிருந்த ஹாலில் மாமனார், மாமியார் இருவருடனும் அவள் சற்று நேரம் பேசுவதை அவன் பின்னாலிருந்தபடி பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு தனது அறைக்கு அழைத்துப் போனான்.

உள்ளே நுழைந்ததுமே தன் கைகளுக்குள் சிறைப்படுத்திக் கொண்டான். விடுபடுவதற்குள் இறைவிக்குப் போதும் போதுமென்றாகி விட்டது.

அவனது படுக்கையறைக்கு முன்னாலே ஒரு டிராயிங் ரூம் இருந்தது. அங்கே சோபாவை விரித்துப் போட்டு மலேஷியாவில் இருந்து வாங்கி வந்திருந்த பரிசுப் பொருட்களையெல்லாம் பரப்பியிருந்தான்.

''இறைவி! இது பூராவும் கிஃப்ட் பொருட்கள். உறவுக்காரங்க எல்லாம் பாக்க வந்தா ஏதாவது கையில கொடுக்கணும். நீதான் பிரிச்சு குடுக்கறதுக்கு ஹெல்ப் பண்ணணும்'' என்றான்.

அவளும் ஆர்வமாக அமர்ந்தாள்.

''இந்த சென்ட் வகையறாவெல்லாம் இளவயசு ஜென்ட்ஸ்க்கு குடுங்க. இந்த ஷேவிங் க்ரீம்... இந்த டவல் துட்டம்...

இது குழந்தைகளுக்கு'' என்று அவன் வகை பிரிக்கையில் அவன் அதையெல்லாம் கவனிக்காமல் அவள் முகத்தை விழுங்கினாற்போல் பார்த்துக் கொண்டிருந்தான் அவளுக்குப் புரிந்தது.

தான் வந்தால் ரொம்ப நேரம் தங்க மாட்டேன் என்று புரிந்து கொண்டு வேண்டுமென்றே இப்படிக் கடை பரப்பி வைத்திருக்கிறான். இதையெல்லாம் பிரித்தெடுக்கிற வாக்கில் கொஞ்ச நேரம் தன்னைத் தங்க வைப்பது அவன் நோக்கம் என்று.

அவளும் அதைப் புரிந்து கொண்டவளாய் அவனிடம் அவர்களது உறவினர்களையும் நண்பர்களையும் பற்றி விசாரித்துக் கொண்டாள்.

அவரவர்களின் வயது, விருப்பு வெறுப்புக்கள் எல்லாவற்றையும் அவனது அம்மாவிடம் வேறு கேட்டுக் கொண்டாள்.

சாம்பசிவம் கூட வந்து வகை பிரிப்பதை சற்று நேரம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். சிறிய பொருட்கள் ஆனால் அழகான பொருட்கள் என்று அவனது ரசனை அவர்களுக்கு மிகவும் பிடித்திருந்தது.

அழகான ஒரு டேபிள் வெயிட். அதில் மலேஷியாவில் உள்ள ட்வின் டவரின் மாதிரி வடிவம் இருந்தது.

''இறைவி, உலகத்துலயே மிக உயரமான கட்டிடமாம் இது'' என்றான் அறிவழகன்.

''ரொம்ப அழகா இருக்கில்லே!'' என்றாள்.

''கோலாலம்பூர்ல நிறைய இடம் பார்க்கறதுக்கு ரொம்ப அழகா இருக்கு தெரியுமா?'' என்று சற்று நேரம் விவரித்தான். ''ஜென்டிங்னு ஒரு இடம் போனேன். அப்புறம் பட்டு கேவ்ஸ்ன்னு ஒரு இடம்.''



''என்னது? பட்டுகேவ்ஸா?''

''ஆமா! ஆச்சுவலா அது ஒரு முருகன் கோயில். பத்து மலைன்னு பேரு. அதை அந்த ஊர்ல பட்டுகேவ்ஸ்ன்னு கூப்பிடறாங்க.''

''அப்புறம்?''

''நிறைய காஸினோக்கள். ஒரு மாதிரியான ஓட்டல்கள்.''

''ஓஹோ! அங்கயெல்லாம் போனீங்களா?''

''ஹல்லோ! ரொம்பக் கவலைப்படாதீங்க. கூட அந்த பிஸினஸ் பார்ட்டிக எல்லாம் இருந்தாக. இத்தனை இருந்தும்... தும்... தும்...'' என்று எதிரொலி இஃபெக்ட் கொடுத்தான்.

அவள் சிரித்தாள்.

''நீங்க இல்லாம நல்லாவே இல்லை தெரியுமா'' என்று அவன் இழைய அவள் தடுத்தாள். பேசாம இருங்க அத்தை மாமா திடீர்ன்னு வருவாங்க'' என்றாள்.

வெகு நேரம் பேசிக் கொண்டிருந்த பின் ''இறைவி! என்னோட ஒரு இடத்துக்கு வரணும்... வருவியா?'' என்றான்.

''இப்பவா?'' என்றாள்.

''ஹேய்! நான் செந்தில்கிட்டே பர்மிஷன் வாங்கிடறேன்'' என்றான்.

''அம்மா...!''

''அதுவும் நான் பாத்துக்கறேன்!'' என்றான்.

உடன் அழைத்துப் போனான். அவர்களது பண்ணை இடத்துக்கு அழைத்துப் போனான். மதுரையிலிருந்து அது ஒரு மணி நேரம் பயணத்தில் இருந்தது. மிக அழகாக இருந்தது. இரண்டு பக்கமும் தென்னை மரங்கள் அந்தத்

தோப்பிலேயே சற்று தூரம் பயணம் செய்த பின் அந்த வீடு தென்பட்டது. அதைப் பார்த்தவுடனே இறைவியின் மனம் துள்ள ஆரம்பித்து விட்டது.

மிகச் சிறிய பங்களா! ஆனால், வெளிச்சுற்று முழுவதும் கண்ணாடியால் ஆகியிருந்தது.

அலுமினியத் தகடுகளால் இணைக்கப் பெற்று காட்சியளித்தது. வட்ட வடிவில் இருந்தது கட்டிடம். ஆங்காங்கே கூரையில் இருந்து கொடிகள் தொங்கிக் கொண்டிருந்தன.

முன்னாலே அழகான பச்சைப் புல்வெளி லேண்ட்ஸ்கேப் என்பார்களே... அது மாதிரி... அதைச் சுற்றி வட்ட வடிவமான அந்தப் புல்வெளிக்குக் கரை கட்டினாற் போல் குரோட்டன்ஸ் செடிகள்.

கார் போய் உள்ளே நுழைகிற இடத்திலிருந்து இரண்டாகப் பிரிந்த பாதை ஓரம் முழுவதும் விதவிதமான நிறத்தில் செம்பருத்திச் செடிகள். சிறியசிறிய செயற்கைக் குன்றுகள்.

நடுவில் இருந்த புல்வெளிக்கு நடுவேயும் ஒரு சிறிய செயற்கைக் குன்று உருண்டையான சிறு பாறைகளை அடுக்கினாற் போல் உருவாக்கப்பட்டு இருந்தது?

சிவபெருமானின் தலையில் இருந்து கங்கை கிளம்பினாற் போல் அந்த செயற்கைக் குன்றிலிருந்து ஊற்றுக் கிளம்பியது.

''ஐயோ! எவ்வளவு அழகா இருக்கு!'' மாய்ந்து போனாள் இறைவி. கண்களை அழகாக விரித்தபடி சுற்றிச் சுற்றி அவள் பார்ப்பதை அவனும் மெல்லிய புன்னகையுடன் ரசித்துக் கொண்டிருந்தான்.

தொலைவில் மற்றொரு கட்டிடத்தைக் காட்டினான்.

''பார்த்தியா! அந்த ஓட்டு வீடுதான். நிலம் வாங்கும் போது இருந்த வீடு. அதை அப்படியே விட்டு வச்சிருக்கார் அப்பா.



உள்ளே எல்லாம் மாடர்னைஸ் பண்ணிருக்கு. பெயிண்டிங் எல்லாம் பண்ணியிருக்கு. ஆனாலும், எனக்கு இந்த மாதிரி லான் வீடு கட்டணும்னு ஆசை...''

அவள் வியப்புடன் பார்த்து ஒவ்வொன்றையும் ரசிப்பது குறித்து அவனுக்கும் சந்தோஷமாக இருந்தது.

''பியூட்டிஃபுல்'' என்று முணுமுணுத்துக் கொண்டாள் இறைவி.

''வெளியே மட்டும்தான் இப்படி! உள்ளே சின்னதா அழகா ஒரு கெஸ்ட் ஹவுஸ்'' என்று அழைத்துப் போனான்.

வட்ட வடிவில் இருந்த வரவேற்பறை. அதிலிருந்து உள்ளே சென்றால் ஒரு படுக்கையறை. இறைவிக்கு இதெல்லாம் ஏதோ சினிமாவில் பார்க்கிற மாதிரி இருந்தது. அந்தப் பக்கமும் வரலாம். ''அந்தப் பகுதியிலயும் இதே மாதிரி ஒரு கெஸ்ட் ஹவுஸ் இருக்கு. கொஞ்சம் சின்னது. முக்கியமான கெஸ்ட்னா யாராவது வந்தால் மட்டும் அங்கே தங்க வைப்போம்'' என்றான். அவள் ஆர்வமாகக் கேட்டுக் கொண்டாள்.

''இந்தப் பகுதி பிரத்தியேகமா நமக்கு. நேர் எதிர்புறம் இருக்கற கதவைத் திறந்தா இன்னொரு பெட்ரூம் அது அப்பா, அம்மாவுக்கு'' என்றான்.

''ரொம்ப செலவாகியிருக்குமோ?''

''இல்லே! பெரிய செலவு இல்லே! அதனாலதான் சின்னதா கட்டினோம்'' என்றான்.

வட்ட வடிவ வரவேற்பறையில் நடுவில் ஒரு டேபிள் போட்டு ''கேண்டில் லைட் டின்னர்'' என்று ஒரு ஏற்பாடு செய்திருந்தான்.

இறைவிக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

''நல்ல அனுபவம் இல்லே!'' என்றான்.

''இறைவி வாழ்க்கையை நியாயமான முறையில் ரசிக்கலாம். அனுபவிக்கலாம். இந்த கெஸ்ட்ஹவுஸ் என்னமோ ஆடம்பரம் மாதிரித் தெரிஞ்சாலும் சிக்கனமா பிளான் பண்ணிக் கட்டினதுதான். உங்க வீட்ல எனக்கு பிடிச்ச விஷயம் என்ன தெரியுமா? இருக்கற நாலு ரூமை நல்லா சிச்சா வச்சிருக்கீங்க! நான் கவனிச்சுப் பார்த்தேன். எல்லா அலங்காரப் பொருட்களுக்கும் ஒண்ணும் பெரிய அளவில விலை இல்லை. ஆனா, அழகா இருக்கு. எல்லாமே உன் கைவண்ணம்னு சொன்னாங்க... அதுதான் உன்னை நோக்கி என் கவனத்தைத் திருப்புச்சு'' என்றான்.

அவள் கன்னம் சிவக்கக் கேட்டுக் கொண்டாள்.

''அப்புறம்... அம்மாவுக்கு உடம்பு சரியில்லே. வேலைக்கும் போக முடியலேன்னவுடனே அதுக்காக வருத்தப்பட்டுகிட்டிருக்காம ட்யூஷன் எடுத்து உனக்குத் தேவையானதை நீ சம்பாதிக்கறே பாரு... அந்த செல்ஃப் டிபண்டன்ஸ்... அப்புறம்... உங்க வீட்டுக்கு முன்னால இருக்கற இடத்தை நீங்க அழகா வச்சு... காம்பவுண்டுக்குள்ளே கார் நுழையும் போதே ஏதோ பண்ணை வீட்டுக்குள்ளே வர்ற மாதிரி ஒரு ஃபீலிங்... வர வைக்கறீங்களே... அது...'' என்றான்.

இறைவி புன்னகைத்தாள்.

''அதெல்லாம்... என் ஃப்ரெண்டு ஒருத்திகிட்டே நான் கத்துகிட்டது. அவங்கப்பா... மெக்கானிக்... இரண்டே, ரெண்டு ரூம்தான். புறம்போக்கில பட்டா போட்டு வாங்கினது. ஆனா, ரோட்டோரம். அவங்க வீட்டுக்குப் போனா... தேங்காத் தொட்டியில டேபிள் வெயிட் பண்ணி வச்சிருக்கா... அப்புறம் மூணு பழைய கார் டயரை ஒண்ணு மேல ஒண்ணு வச்சு அதுக்கு மேல ஒரு பிளைவுட்டை வச்சு... ஒரு டீபாய் மாதிரி அரேஞ்சு பண்ணி வச்சிருக்கா... உடைஞ்சு போன



மர டேபிளை ஒட்ட வச்சு... கை வேலைப்பாடுள்ள ஒரு டேபிள் கிளாத் போட்டு வச்சிருக்கா. இதுல அலங்காரத்தையெல்லாம் மாசத்துக்கு ஒரு தடவை மாத்துவா. இந்த மாசம் என்ன செஞ்சுருக்கான்னு பாக்கவே, நாங்க மாசத்துக்கு ஒரு வாட்டி அவ வீட்டுக்குப் போவோம்'' என்றாள்.

அறிவழகன் ரசித்துக் கேட்டுக் கொண்டான். தனது தொழிலைப் பற்றி அவளிடம் விரிவாகச் சொன்னான். தனது கனவுகளைப் பற்றிச் சொன்னான். பேச்சுக்கு நடுவே தனக்கு அவள் மேல் இருக்கிற காதலையும் சொன்னான்.

''இறைவி! ட்யூப் லைட் வெளிச்சத்தை விட இன்ட்டி கேண்டில் லைட்ல... உன் முகம் தங்கம் மாதிரி ஜொலிக்குது... தெரியுமா?'' என்று மயங்கினான்.

இறைவி அவன் தாபத்தைக் கொட்டுவதை வெட்கத்துடன் கேட்டுக் கொண்டாளே தவிர பெரிதாகத் தடுக்கவில்லை.

சுவாரசியமான பேச்சுக்கு நடுவே கனமான அர்த்தமுள்ள மௌனங்களும் நிலவி. கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு வெளியே வந்தார்கள்.

''நேரம் போனதே தெரியலே இல்லே?'' என்று அவளைப் பார்த்து சிரித்தான்.

''ம்...!'' என்றாள் இறைவி!

''அதை இவ்வளவு சிக்கனமான வார்த்தையே இல்லாம சொல்றதுக்கு... கொஞ்சம் விளக்கமா சொல்றது?'' என்றான் அறிவழகன் மனத்தாங்கலுடன்.

''சில நேரங்களில் வார்த்தைகளுக்கு அவசியமேயில்லே'' என்றாள் இறைவி.

காரை ஓட்டிக் கொண்டிருந்தவன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

''இறைவி! நீ சொன்ன வாக்கியத்துக்கு வேற வேற இடத்துல வேற வேற அர்த்தம் வரும்'' என்றான் அறிவழகன்.

பெரிதாகச் சிரித்தான்.

''இதுக்குத்தான் பேசாதேங்கறது'' என்று இறைவி தனக்குத் தானே ஒரு செல்லக் குட்டு வைத்துக் கொள்ள கலகலவென்று சிரித்துக் கொண்டு வந்து சேர்ந்தார்கள்.

இறைவி இறங்கிச் செல்லும் பொழுது அவ்வளவு மன நிறைவோடு இறங்கினாள்.

அறிவழகன் மீண்டும் ஒரு முறை சொன்னான்.

''தட் வாட் எ வெரி நைஸ்... டின்னர்... இல்லே!'' என்று.

இருவருக்குமே அப்போது தெரியவில்லை. தங்களது மனப்பெட்டகத்தில் பதித்துக் கொண்ட அந்த அனுபவத்தை பின்னொரு நாளில் வெளியே எழுந்து வருத்தத்தோடும் ஆதங்கத்தோடும் நினைத்து வாட வேண்டிய நிலையும் வரும் என்று.

* * *

''என்னடா... நீ இவ்வளவு யோசிக்கறே'' என்று சற்றே கடிந்து கொண்டான் செந்தில்குமரன்.

''இங்க பாரு! செந்தில், உனக்கு நல்ல பொஸிஷன் குடுத்து வச்சிருக்காங்க. பார்ட்னர்ங்கறே! அப்புறம் எதுக்கு இந்த வேலையெல்லாம்'' என்றான் மற்றொரு நண்பன் ஜோசப்.

''இங்க பாரு! நான் எந்தத் தப்பும் செய்யலே. சொல்லப் போனா அறிவழகன் குழுமத்துக்கு நாம நல்லதுதான் செய்ய



றோம். கஸ்டமரைத் திருப்பி அனுப்பறதைக் காட்டிலும் இது தப்பு இல்லே!''

''அது சரி! நீ சொல்றது சரிதான். அப்ப அவருகிட்டே பேசி அஃபிஷியலா ஏற்பாடு பண்ணு. யாரும் யாருக்கும் பயப்பட வேண்டியதில்லைதானே!''

''டைம், வரட்டும்... சொல்லிக்கறேன். இங்க பாரு ஜோசப் எங்க ஃபாமிலி வேற! அவுகளது வேற இல்லே! என் சிஸ்டரைத்தான் அவனுக்கு நிச்சயம் செஞ்சிருக்கு... தெரியுமில்லே!''

''தெரியும்! தெரியும்! அப்புறம் எதுக்கு மூடு மந்திரம்?''

''மூடு மந்திரம் இல்லடா...! நூத்துக்கணக்கான வண்டிங்க... அங்க சர்வீஸுக்கு...வருது... சிலதை இப்ப முடியாது அடுத்த வாரம் வாங்கன்னு அனுப்ப வேண்டியிருக்கு. அப்படியிருக்கிலே... இப்படி ஒரு ஏற்பாடு செஞ்சா... என்ன தப்பு...? நான் அவன்கிட்டே பேசிக்கறேன்?'' என்றான் செந்தில் குமரன்.

''இத பாரு! செந்தில் எனக்கொண்ணும் கஷ்டமே இல்லே. நான் செய்யற வேலைக்கு பணம் குடுக்கப் போறே. ஆனா, நீதான் அவனுக்கு சொந்தக்காரனாகப் போறே. ஒரு நல்ல ஃபிரண்டா உனக்கு ஒரு விஷயம் சொல்றேன். கேளு... பணக்காரங்க எந்த விஷயத்துக்கு எப்படித் திரும்புவாங்கன்னு சொல்ல முடியாது. நீ எது செஞ்சாலும் எழுத்து மூலமாப் பேசி முடிவு பண்ணிக்க. நானும் உனக்கு ஒரு ஃபிரண்டு... அந்த உரிமையில சொல்றேன். அதுக்கப்புறம் உன் இஷ்டம்!'' என்றான்.

செந்தில்குமரனும் புன்னகைத்தபடி சொன்னான். ''டேய்! நீ என்னோட வெல் விஷர். அதனால என்னோட நல்லதுக்குத்தான் சொல்றேன்னு எனக்குத் தெரியும். அதே மாதிரி

அறிவழகனும் என்னோட வெல்விஷர்தான். அவனுக்கும் இதனால எதுவும் கோபம் வராது'' என்றான் செந்தில் குமரன்.

ஜோசப் அதற்கு மேல் இந்த விஷயம் குறித்து எதுவும் பேசவில்லை.

''நமக்கென்ன வந்தது?'' ''தொழில் நடக்கிறது. பணம் வருகிறது'' என்றெண்ணியபடி விட்டு விட்டான்.

வியப்பான விஷயம் என்னவென்றால் செந்தில்குமரன் இந்த விஷயம் பற்றித் தாயிடமோ... தங்கையிடமோ கூட விவாதிக்கவில்லை. அதிலும் அறிவழகன் மலேஷியா சென்றிருந்த கால கட்டத்தை ஆரம்ப கட்ட ஏற்பாடுகளுக் காகப் பயன்படுத்திக் கொண்டான்.

அறிவழகன் வந்தும் கூட பத்து நாட்களுக்கு மேல் ஓடி விட்டது. எல்லாம் சுமுகமாகப் போய்க் கொண்டிருந்தது.

அறிவழகன் திருமணம் தொடர்பான கனவுகளிலும், இடைவிடாமல் கம்பெனிக்காகத் திட்டமிடுவதிலும் நேரத்தைச் செலவிட்ட அந்தக் காலகட்டம் செந்தில்குமர னுக்கு வசதியாக இருந்தது. ஆனால், அதற்கும் ஒரு முடிவு வந்தது.

ஒரு நாள்!

அறிவழகன் தனது பிரீஃப்கேஸைக் கையில் எடுத்துக் கொண்டு போர்ட்டிகோவிலிருந்து உள்ளே நுழைந்து தனது அலுவலகத்தை அடைவதற்காக நடந்து கொண்டிருக்கை யில் ஏதோ பலத்த விவாதம் கேட்கிறாற் போல் இருந்தது.

டிரைவர் கையில் பிரீஃப்கேஸைக் கொடுத்து விட்டு மெல்ல நடையின் வேகத்தைக் குறைத்தான். பேசிக் கொண் டிருந்தவர்கள் ஜி.எம்.மும் மேனேஜரும்.



''நான் எப்படி சார் சொல்றது? என்ன இருந்தாலும் நாளைக்கு நெருங்கிய உறவுக்காரங்க ஆகப் போறாங்க... மாமன், மச்சான் விவகாரம். நான் எப்படி சார் தலை விடறது?''

ஜி.எம். கவலையான குரலில் சொன்னார்.

''பாருப்பா! உறவு வேற... பிஸினஸ் வேற... கண்டிப்பா... சாருக்கு சொல்லணும்'' என்றார். ஆனால் இருவருமே அவன் நடந்து வருவதைப் பார்த்தவுடன் குரலைக் குறைத்துக் கொண்டார்கள்.

அறிவழகன் சிந்தனையிலாழ்ந்தான்.

'சரி, பொறுப்போம். சரக்கு மலிந்தால் சந்தைக்கு வந்து தானே ஆக வேண்டும்' என்று எண்ணிக் கொண்டான். ஆனால், சரக்கு சாதாரணமான சரக்காக இல்லாமல் வீரிய மிக்க சரக்காக இருந்ததுதான் விதியின் விளையாட்டாய்ப் போய்விட்டது.

# 12

ரீசிவரை சிந்தனையுடன் வைத்தான் அறிவழகன். இந்தப் பதினைந்து நாட்களுக்குள்ளாக இதுபோல பத்திருபது தொலைபேசி அழைப்புக்கள் வந்து விட்டன. எல்லாமேவா தவறான அழைப்புக்களாக இருக்கும். எல்லாமேவா ஒரே ஒரு விஷயத்தைக் குறித்தாக இருக்கும்? யோசிக்க ஆரம்பித்தான்.

அன்றைக்குத் தான் வருவதைப் பார்த்தவுடன் பேச்சை நிறுத்திக் கொண்ட ஜி.எம்.மையும் மேனேஜரையும் அழைத் தான்.

''மிஸ்டர் கணேசன். நான் நேரடியா விஷயத்துக்கு வர்றேன். பத்து நாளாவே நீங்க ஏதோ ஒரு விஷயத்தை சொல்லணும்னு நினைக்கறீங்க. ஆனா, சொல்லவும் முடியாம மெல்லவும் முடியாம தவிக்கிற மாதிரித் தெரியுது. என்ன விஷயம்?'' என்று கேட்டான்.

ஜி.எம். கணேசனும், மேனேஜர் குருமூர்த்தியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அளவு கடந்த தயக்கம் முகத்தில் தெரிந்தது. மீண்டும் அறிவழகன் உறுதி கொடுத்தான்.

''பயப்படாம... சொல்லுங்க... அது என்னைப் பற்றிய விஷயமா இருந்தாலும் சரி. அல்லது எனக்கு ரொம்ப வேண்டியப்பட்டவங்க சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் சரி... சொல்லுங்க...''

ஜி.எம். மெல்லிய குரலில் ஆரம்பித்தார்.

''சார்! எங்களுக்கு இன்னும் உறுதியாத் தெரியலே. ஆனா, நாங்க சந்தேகப்படறோம். ஆனா, உங்க பர்மிஷன் இல்லாம விசாரிக்கவும் பயமாயிருக்கு. ஏன்னா சம்பந்தப்பட்டிருக்கிற ஆள் அப்படி. சம்பந்தப்பட்டிருக்கிற விஷயமும் அப்படி...'' என்று பீடிகை போட்டார்கள். ஆனால் சொன்னார்கள்.

அறிவழகன் கொக்கி போல் கேள்விகள் போட்டு விஷயத்தை வாங்கிக் கொண்டான்.

உள்ளே பெரிய கொதிப்பும் கோபமும் இருந்த போதும் எதையும் வெளிக்காட்டாமல் முழுவதும் கேட்டுக் கொண்டான்.

அழுத்தமும் வருத்தமுமாக ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். பிறகு சொன்னான்.

''சரி! தொடர்ந்து விசாரிங்க... என்னோட முழு பர்மிஷன் உண்டு. ஆனா, விசாரிக்கறது வெளிப்படையாத் தெரியக்



கூடாது. உங்களுக்கு வேண்டிய பார்ட்டிங்களை வச்சு அப்ரோச் பண்ணுங்க. சம்பந்தப்பட்டவர்களுக்கும் எனக்கும் என்ன ரிலேஷன்ஷிப்னு உங்களுக்குத் தெரியும். அதனால விஷயம் ரசாபாசமாகாம விசாரித்து ஃபாக்ட்ஸை மட்டும் என்கிட்டே கொண்டு வந்து சேத்துடுங்க. மேற்கொண்டு என்ன செய்யறதுங்கறதை நான் முடிவு பண்ணிக்கிடறேன்?'' என்றான்.

''சரிங்க... சார்!'' என்றார்கள் சுரத்தே இல்லாமல். இரண்டு எட்டு எடுத்து வைத்துப் போன கணேசன் திரும்ப வந்து.

''சார்! இது எங்களுக்கு ரொம்ப வருத்தமா இருக்கு. ஆனா, நிறுவனத்தோட நன்மை முக்கியம்'' என்றான்.

''ஆமா! நிறுவனமா தனி மனிதரான்னு கேள்வி வந்தா தனிமனிதனைத்தான் காட்டி குடுக்கணும். டோன்ட் வொர்ரி. ஐ ஹேவ் டேக்கன் எவ்ரிதிங் இன் தி ரைட் ஸென்ஸ்'' என்றான் அறிவழகன்.

அன்புடன் புன்னகைத்தான்.

''தேங்க்யூ... சார்!'' என்றார்கள். பின்னும் கணேசன் சொன்னார்.

''சார்! இது எவ்வளவு டெலிகேட்டான விஷயம். உங்களுக்கு எவ்வளவு எம்பாரசிங்கா இருக்கும்கறது எங்களுக்கும் புரியுது. பட் வி கான்ட் ஹெல்ப் இட். ஐ ம் சாரி... சார்'' என்றார்.

''ஜி.எம். சார்! நீங்க எதுக்கு இவ்வளவு வருத்தப் படறீங்க... பார்க்கப் போனா மனுநீதிச்சோழன் மாதிரி ஒரு வேலை செஞ்சிருக்கீங்க... டோன்ட் வொர்ரி'' என்றான்.

அவர்கள் முழுவதும் சமாதானமாகாமல்தான் போனார்கள். அவர்கள் அந்தப்புறம் போனவுடனேயே அறிவழகன்

"பர்ஸனல்...?"

"பர்ஸனல்... அல் வெல் அல் பிஸினஸ் டாக்."

"ஓ...! சரி... வர்றேன்" என்றாள்.

வந்தாள்.

சொன்னான்.

நிதானமாக... முழுமையாகச் சொன்னான். இறைவி பெருத்த வேதனையுடன் அவனைப் பார்த்தாள்.

"இப்ப என்ன செய்யப் போறீங்க?"

சொன்னான். மேலும் கேட்டாள்.

"நீ ஏதாவது சொல்ல விரும்பினா சொல்லு. உனக்காக நான் எதுவும் செய்வேன். ஆனா, இது பிஸினஸ். இதுல நம்பிக்கைத் துரோகத்தை என்னால அனுமதிக்க முடியாது" என்றான். குரல் இரும்புக் குரலாக இருந்தது.

இறைவியின் முகமும் உணர்ச்சியற்றாற் போல் மாறியது.

"எது நியாயமோ... அதைச் செய்ங்க...!" என்றாள்.

"இறைவி! என்னைப் புரிஞ்சுக்கறியா?"

"கண்டிப்பா! ஆனா, இந்தச் சிக்கலால வர்ற கோபத்தையெல்லாம் அண்ணன் என் மேலதான் காட்டுவாங்க."

"அது... அதுதான்... எனக்குக் கவலையாயிருக்கு. எனக்கு வேற வழியில்லே...!" என்றான். முகத்தில் தெரிந்த ஆழ்ந்த வேதனையை அவளும் உருக்கத்தோடு பார்த்தாள்.

சற்று நேரம் மௌனமாக நின்றார்கள்!

"எப்பக் கேக்கப் போறீங்க?"

"நாளைக்கு... நீ முன்கூட்டியே அவனுக்குச் சொல்றியா?"



"இல்லே! நீங்க நிமிர்ந்து கேளுங்க. அப்பத்தான் உண்மையான பதில் வரும்" என்றாள். அவன் நேரம் பார்த்தான். இறைவி வந்து இரண்டு மணி நேரமாகி இருந்தது.

"சரி... இறைவி! நீ கிளம்பு...!" என்றான்.

அவள் எழுந்து நகர்ந்தவளை சட்டென்று அருகில் இழுத்தான். உணர்ச்சிகளைக் கொட்டினான்.

"இறைவி! இறைவி!" என்றான் அரற்றினாற்போல். அவளும் கலக்கமான முகத்தோடு இணங்கிக் கொடுத்தாள்.

"இறைவி! ஒன்னு புரிஞ்சுக்க... எது எப்படிப் போனாலும், நீதான் என் லைஃப்...! நான் இப்ப மனசால... உன்கூடதான் வாழ்ந்துகிட்டிருக்கேன்" என்றான்.

"நானும்தான்..." என்றாள். கூடவே வேறொரு வாக்கியமும் சொன்னாள். அந்த வாக்கியத்தைக் கேட்டவுடன் அவன் சட்டென்று அவளை விடுவித்தான்.

"சரி... போ!" என்றான்.

அவள் கண்களைத் துடைத்துக் கொண்டு வெளியேறுவதை நெஞ்சம் நிறைந்த துக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

• • •

முத்து முத்தாக வியர்வைத் துளிகள் பூத்திருக்க அடிக்கடி முகத்தைத் துடைத்தபடி என்ன சொல்வது என்று தெரியாமல் தனது சகோதரன் விழிப்பது போன்ற காட்சி அவன் முகத்தில் வந்து அறைந்தது.

திடுக்கிட்டு விழித்தாள் இறைவி! எழுந்து அமர்ந்து கொண்டாள். இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

சுற்றிலும் இருட்டு சூழ்ந்தாற்போல் இருந்தது. இரவு விளக்கைப் போடாமலே படுத்துவிட்டது நினைவுக்கு வர எழுந்து விளக்கைப் போட்டாள்.

கொஞ்சம் வெளிச்சம் பரவியது!

எவ்வளவு அருமையான பரிசு தங்கத்தட்டில் ஏந்தி நீட்டப்பட்ட பரிசு. கைக்கெட்டுகிற நேரத்தில் யாரோ தட்டி விட்டால் எப்படி இருக்கும்! அதுபோல் உணர்ந்தாள் இறைவி.

யாருக்கென்று பேசுவது?

நியாயத்துக்கென்றுதான் பேச வேண்டும். ஆனால், நியாயத்துக்கென்று பேசினால் இதுநாள் வரை வாழ்ந்த வாழ்க்கைக்கு நன்றிக்கடன் செலுத்த வேண்டாமா?

மகாபாரதத்தில் படித்ததில் துரியோதனன் பக்கம் நின்ற நியாயஸ்தர்கள் எப்படி கஷ்டப்பட்டிருப்பார்கள் என்று இப்போது தோன்றியது.

அம்மா என்ன சொல்வார்கள்? ஆரம்பத்தில் இருந்தே அம்மாவுக்கு இதுபோன்ற ஒரு உள்ளுணர்வு இருந்தது. இப்போது அதே மாதிரி ஒரு சிக்கல் தோன்றி உள்ளதே என்று மாய்ந்து போனாள்.

திருமணம் என்ன ஆகும்? தான் எந்த முடிவை எடுக்க வேண்டும்.

யோசித்தாள். தீர யோசித்தாள். சில முடிவுகளை எடுத்துக் கொண்டாள். ஆனால், ஒரு விஷயம்தான் அவளுக்குக் கஷ்டமாக இருந்தது.

''நானாக இதைப் பற்றிப் பேசும் வரை நீ இது பற்றி யாரிடமும் பேசக் கூடாது'' என்று அறிவழகன் உறுதி வாங்கிக் கொண்டது ஒன்று. இன்னொரு பக்கம் இந்தப்



பிரச்சினை விவாதிக்கப்படும்போது நீயும் உடன் இருக்க வேண்டும். ஒரு பார்வையாளராக என்று நிபந்தனை போட்டிருந்தான் அறிவழகன். அப்படியொரு நிபந்தனையில் இருந்து தன்னை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டாள். மன்றாடிப் பார்த்தாள். ஆனால் அறிவழகன் உறுதியாக நின்றான். அதற்காக அவன் சொன்ன காரணங்களும் நியாயமானவைதான்.

ஆராய்ச்சி செய்து, ஊறிக் ஊறி யோசித்துத் தலைதான் வலித்தது. மண்டை வெடித்து விடும்போல் இருந்தது.

உறக்கமும் வரமாட்டேன் என்றது.

புரண்டு படுத்த அம்மா திடுக்கிட்டு விழித்தார்.

''என்னடி... தூங்கலியாக்கும்?'' என்றார்.

''தூக்கம் வரலைம்மா'' என்றாள்.

''அட! பொசு கெட்டவளே! என்னாச்சு உனக்கு. நாளும் பொழுது சாய்ஞ்சாப்ல இருந்து பாத்துகிட்டுத்தான் இருக்கேன். என்னமோ பேயடிச்ச மாதிரியே இருக்கியே... என்னா சமாச்சாரம்?'' என்றார்.

இறைவிக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. சட்டென்று அந்தப் பொய் தோன்றியது.

''அம்மா! வயித்து வலி'' என்றாள்.

''ஓ...! சரி... ஏதாவது வலி மாத்திரை போட்டுப் படு...'' என்றார்.

''சரிம்மா!'' என்று உள்ளே போய் ஏதோ மாத்திரை எடுத்துப் போடுவது போல் பாவனை செய்து விட்டு வந்து படுத்தாள்.

கொஞ்ச நேரம் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள்! மெதுவாக உறக்கம் வந்தது.

மீண்டும் அந்தக் கனவு!

அதிகாலை நான்கு மணியிருக்கும்!

அறிவழகனுக்கும், செந்தில்குமரனுக்கும் வாக்குவாதம் நடக்கிற மாதிரியும், அறிவழகன் கடுமையான வார்த்தைகளை எடுத்து வீசுவது போலவும், செந்தில்குமரன் அவமானத்துடன் நிற்பது போலவும் கனவு வரவேதான் தூக்கி வாரிப் போட்டாற் போல் விழித்தாள்!

அப்படி மட்டும் நடந்தால்!

எல்லாரும் சொல்கிறார்கள்... அறிவழகன் எவ்வளவுக்கெவ்வளவு பெருந்தன்மையாக இருக்கிறாரோ அவ்வளவுக் கோபமும் வரும்... ஆனால், எப்போதும் அவருடைய கோபத்தில் நியாயம் இருக்கும் என்று.

சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பார்களே! அவன் ஒன்றும் சாது அல்ல! கம்பீரமானவர்தான். ஆனால், துரோகம் என்பதை மட்டும் அவரால் சகித்துக் கொள்ள முடியாது.

அதற்காகத் தன்னை இழப்பாரா! தன்னால் அவரை இழந்துவிட்டு நிம்மதியாக இருக்க முடியுமா! நிம்மதி என்ன? அதற்கப்புறம் ஒரு வாழ்க்கை இருக்க முடியுமா?

நினைத்துப் பார்க்கவே உள்ளமும், உடலும் நடுங்கியது. உயிரோடு நடைபிணமாக நடமாட வேண்டும். ஐயோ! இதையெல்லாம் ஏன் அண்ணன் யோசிக்கவேயில்லை. தன்னிடமாவது ஆலோசனை கேட்டிருக்கலாம். எப்போது கேட்டான்? இப்போது கேட்பதற்கு?

மறுபடியும் அம்மா விழித்தார்.

''ஏண்டி! என்னடி ஆச்சு?'' என்று எழுந்து அவள் நெற்றியில் கை வைத்துப் பார்த்தார்.



''சாமக் கோடாங்கி கணக்கா. தூக்கத்தையும் கெடுத்துப் புட்டியில்ல... படு தாயி!'' என்றார்.

மறுபடியும் படுத்துக் கொண்டாள்.

நடக்கப் போகிற விஷயங்கள் குறித்து விதவிதமான கற்பனைகள், படங்கள் அவளுக்குள் தோன்றிக் கொண்டேயிருக்க கண்கள் சிவந்து தூக்கமின்மை காரணமாக இமைகள் கனத்தன.

பொழுது விடிந்தது!

எப்போது அழைப்பு வரப்போகிறதோ என்று பயந்து கொண்டே குளித்து முடித்துத் தயாரானாள்.

அழைப்பு வந்தது!

ஒன்பது மணியிருக்கும்!

செல்போனில் உற்சாகமாகப் பேசின செந்தில்குமரன்.

''ஏய்... இறைவி! அறிவு கூப்புடறான். என்னாத்துக்கு இப்பக் காலங்காத்தாலே வரச் சொல்றானோ தெரியலை. நீயும் வரணுமாம். புறப்படு'' என்றான்.

அவன் உற்சாகம் பார்த்து அவளுக்கு பாவமாக இருந்தது.

அழகாக மாலை அணிவித்து அழைத்துப் போகப்படுகிற பலியாற்றின் தோற்றம் உள்ளே தோன்றியது. உடனே அறிவு சொன்னது.

''இவரு பலியாடு இல்லை கறுப்பாடு. வழி தப்பிப் போன கறுப்பாடு'' என்றது மனசாட்சி.

போனார்கள்!

அவர்கள் மூவர் மட்டுமே இருந்தார்கள். அறிவழக ஒரு ஃபைலை எடுத்து செந்தில்குமரன் பார்வைக்கு மேஜை யின் மேல் போட்டான். அந்த ஃபைலை எடுத்துப் படித் செந்தில்குமரனின் முகம் வெளிறிப் போனது.

எப்போதும் தவறு செய்பவர்கள் கையும், களவுமாகப் பிடிபடும்போது தற்காப்பு உணர்வோடு தவறுகளை எதன் மீது போடலாம் என்று பார்ப்பார்களே ஆங்கிலத்தில் "டிஃபன்ஸ் மெக்கானிஸம்" என்று அதைச் சொல்வார்கள். அப்படி ஒரு காட்சி அங்கே நடந்தது. ஆனால் அந்தக் காட்சி இறைவியின் கற்பனையில் இருந்ததற்கு நேர் மாறாக இருந்தது."

இறைவி நொடிக்கு நொடி மேலேறுகிற அந்தக் குரலின் ஆதிக்கத்தில் வாயடைத்துப் போய் உட்கார்ந்து விட்டாள். அந்த மௌனத்தில் அவளது வாழ்க்கையும் பந்தாடப்பட்டுக் கொண்டிருந்தது.

## 13

யாருடைய கட்டுப்பாட்டுக்குள்ளும் அடங்காதது போல் அந்த நிகழ்ச்சி வேகமெடுத்தவுடன் இறைவியும், அறிவழகனும் திகைத்துப் போனார்கள்.

இத்தனைக்கும் அறிவழகன் மெதுவாகத்தான் ஆரம்பித்தான்.

"செந்தில்! சில முக்கியமான விஷயங்கள் நான் உன்கிட்ட பேச வேண்டியிருக்கு" என்றான்.

செந்தில்குமரன் மிக உற்சாகமாகத்தான் எதிரில் அமர்ந்தான். அநேகமாக திருமண விஷயம் பேசுவான் என்று எதிர்பார்த்தான். ஆனால் நேர்மாறாக அறிவழகன் வேறு [illegible]



"செந்தில்... நான் மறுபடியும் சொல்றேன். இது தொழில் தொடர்பான விஷயம். இதுக்கும் நம்ம நட்புக்கும் சம்பந்தமேயில்லை. அது என்னைக்கும் ஒரே மாதிரித்தான். ஏற்கனவே நாம உறவுக்காரங்க. நாம இன்னும் நெருக்கமான உறவுக்காரங்களாகணும்கற ஆசை எனக்கு இருக்கு. அந்த ஆசைக்கும் இந்தப் பிரச்சினைக்கும் சம்பந்தமில்லை. ஆனா எனக்கு இந்த விஷயம் தெளிவாகணும். புரியுதா?"

செந்தில்குமரன் புரியாதவனாகப் பார்த்தான். பிறகுதான் அறிவழகன் அந்த ஃபைலை எடுத்து நீட்டினான்.

"பாரு" என்றான்.

செந்தில்குமரன் ஃபைலைப் புரட்டியவன் முகம் வெளிறிப் போனது. யாருக்கும் தெரியாது என்ற நினைப்பிலோ அல்லது இது பெரிய விஷயமே இல்லை என்ற நினைப்பிலோ அவன் செய்த விஷயங்கள் எல்லாம் அந்த ஃபைலில் தெள்ளத் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

மலேஷியாவில் இருந்து வந்ததில் இருந்தே கவனித்தான் அறிவழகன். அலுவலகத்தில் ஜி.எம்மும் இருக்கற இரண்டு மூன்று மேனேஜர்களும் தொண்டையில் ஏதோ விக்கிக் கொண்டாற் போலவே நடமாடிக் கொண்டிருந்தார்கள் முதலில் அவனும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

ஒரு நாள்!

ஒரு வாடிக்கையாளர் போன் செய்து ஏதோ கேட்க நினைத்த போது அது மதிய உணவு நேரமாக இருந்ததனாலோ என்னவோ மற்றவர்கள் உணவுக்குப் போயிருக்க கையில் அந்த போன் கால் வந்தது.

"சார்! அந்தக் கார் சர்வீஸ் முடிஞ்சுதா? டெலிவரி எடுத்[illegible]" என்று கேட்டார்கள்.

"எல்லாரும் லஞ்சுக்குப் போயிருக்காங்க. ஒரு ஹாஃப் அன் அவர் கழிச்சுக் கூப்பிடுங்க."

"நீங்க... சார்?"

"நான் எம்.டி..."

"ஓ...! சார், செந்தில்குமரன் சார் இல்லையா?"

"அவரும் வேலையா வெளில போயிருக்காரு. ஒண்ணும் வொரி பண்ணிக்க வேண்டாம். செக்ஷன்ல நான் தகவல் குடுத்துடறேன். நீங்க அப்புறமாப் பேசுங்க..." என்றான் இனிமையாக.

"சாரி... சார்! நீங்க எம்.டி.யே லைன்ல வருவீங்கன்னு தெரியலே... உங்களுக்குத் தொந்தரவு குடுத்துட்டோம்."

"நோ... பிராப்ளம்! உங்களுக்கெல்லாம் திருப்திகரமா சர்வீஸ் பண்ணிக் குடுக்க வேண்டியதுதானே... எங்க கடமை!" என்றான்.

உணவு இடைவேளை முடிந்தவுடன் வந்த அந்தப்பிரிவு உதவி அலுவலரை அழைத்து அந்தக் கார் எண்ணைக் குறித்துக் கேட்டான்."

"இதோ! இப்ப சொல்றேன்... சார்" என்று போனவுடன் திரும்பி வந்து

"சார்" அந்தக் கார் நம்ம வொர்க்ஷாப்புக்கு சர்வீஸ்க்கு வரவே இல்லை! சார்" என்றான்.

"சரி... போங்க! என்று அனுப்பி வைத்தான். சிந்தனையில் ஆழ்ந்தான். அது ஏன் குறிப்பாக செந்தில்குமரனைக் கேட்டார்கள் என்ற எண்ணமும் தோன்றியது.

அந்த மாதிரி சமயத்தில்தான் ஜி.எம். கணேசனும் கிளைகளின் மேனேஜர் குருமூர்த்தியும் பேசிக் கொண்டதைக் கேட்டான்.



தோண்டச் சொன்னான். அதில் கிடைத்த விவரங்கள் அவனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

மாதத்திற்கு ஒரு குறிப்பிட்ட அளவு கார்கள் கம்பெனியின் சர்வீஸ் சென்டருக்கு வராமலே ஆனால் கம்பெனியின் பெயரில் சர்வீஸ் செய்யப்பட்டு டெலிவரி ஆகிக் கொண்டிருந்தன.

தோராயமாக கம்பெனிக்கு வரவேண்டிய பணம் ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேலாக வேறு எங்கேயோ போய்க் கொண்டிருந்தது.

அறிவழகனின் அனுபவமும், தொழில் முறையும் விஷயத்தைத் துல்லியமாகப் புரிந்து கொள்ளச் செய்தது. செந்தில் தனியான டிராக்கில் ஏதோ செய்கிறான் என்பதும், கம்பெனியின் பெயரைப் பயன்படுத்திக் கொண்டு தனிப்பட்ட ஆதாயம் தேடுகிறான் என்பதும் புரிந்தது.

இப்படிச் செய்கிற துணிவு அவனுக்கு எங்கிருந்து வந்தது என்பதைப் பற்றி யோசித்த போது அவனுக்குக் கொஞ்சம் வருத்தம்.

தனக்கும், இறைவிக்கும் இடையே உறவு மலர்ந்து கொண்டிருக்கிறது என்பது செந்திலுக்குத் தெரிந்திருக்கிறது என்பதும், ஜாடை மாடையாக அவன் கேலி செய்த போதும் கூட அறிவழகனுக்கு சுகமாகத்தான் இருந்தது. ஆனால், நிச்சயம் என்று ஆனவுடன் செந்தில்குமரனுக்கு இந்தக் கம்பெனியே கிட்டத்தட்ட தனக்கு சொந்தமாகிவிட்டது போல் ஒரு மிதப்பான உணர்வு தோன்றிவிட்டது என்பது அவனுக்குப் புரிந்தது.

எப்படியும் தன் மீது நடவடிக்கை எடுக்க மாட்டான் என்ற துணிவுதான் இந்த அளவுக்கு அவனைப் போகச் செய்துவிட்டது என்பது புரிந்தது.

ஆழ்ந்து யோசித்த போது அறிவழகனுக்கு மனதுக்குள் வேதனை தோன்றியது. அப்பாவிடம் செந்தில்குமரனைப் பங்குதாரராகச் சேர்த்துக் கொள்ளப் போகிறேன் என்று சொன்ன போது அப்பா சொன்னது நினைவுக்கு வந்தது.

''ரொம்ப அம்பிஷியஸ் மாதிரித் தெரியுதுப்பா... பாத்துச் செய்'' என்று.

அப்போது அவரிடம் நாம் எவ்வளவு நம்பிக்கையாகப் பதில் சொன்னோம். ஆனால், இப்போது நடப்பது என்ன? ஆனால் அவனுக்கு இன்னொன்றும் புரிந்தது. இறைவிக்கு இதில் எந்தப் பங்கும் இல்லை என்பதுதான் அது.

நேற்று அவளிடம் விஷயம் சொன்னபோது துடித்துப் போய் விட்டாள். இரவெல்லாம் உறங்கவில்லை என்று வேறு காலையில் போன் செய்தபோது சொன்னாள். இப்போதும் இறைவி ஒருவிதமான அவமான உணர்வுடன் அமர்ந்திருக்கிற நிலையைப் பார்த்து அவனுக்குள்ளும் வேதனை தோன்றியது.

அந்த நேரத்தில்தான் செந்தில்குமரன் அந்த வார்த்தையைச் சொன்னான்.

''சரி! இப்ப நாம இதைப் பத்திவெல்லாம் பேசறப்ப இவ எதுக்கு?'' என்றான்.

''பாரப்பா! நீ எனக்கு இப்ப ஃப்ரெண்டு. நாளைக்கு மச்சான் ஆகப் போறே. இறைவி நமக்கு ரெண்டு பேருக்கும் நெருங்கிய உறவு. அதனால இந்தப் பிரச்சினையின் போது இறைவி கண்டிப்பா இங்க இருந்தாகணும். ஏன்னா, நாளைக்கு நான் அதைச் சொன்னேன். இதைச் சொன்னேன்னு நீ சொல்லிடக்கூடாது... இல்லே!''

''ஆக மொத்தம் என்னை ஃப்ராடு... பொய்யன் அப்படீன்னெல்லாம் குற்றச்சாட்டு வைக்கறே...!''



''அப்படித்தானே!''

அறிவழகனின் குரல் லேசாக உயர்ந்தது.

''செந்தில்குமரா! மேட்டரை டைவர்ட் பண்ணாதே! உன்னை நம்பி நான் உனக்கு பார்ட்னர்ஷிப் குடுத்தேன். உன் தங்கையை நம்பி என் வாழ்க்கையையே ஒப்படைக்கப் போறேன். ஆனா, நீ கம்பெனியோட பேரை யூஸ் பண்ணி கம்பெனிக்கு வர வேண்டிய வண்டிகளை வேற எங்கயோ சர்வீஸ் செஞ்சு... நீ தனியா பணம் வாங்கறே... இது எப்படி நியாயம்.''

''நான் ஒண்ணும் தனியாப் பணம் தேத்தல. எல்லாம் பேங்க்லதான் இருக்கு. இன்ஃபாக்ட் நான் கம்பெனியில இன்னைக்கு முடியாதுங்க... அடுத்த வாரம் வாங்கன்னு சொல்லித் திருப்பியனுப்பிச்ச வண்டிகளைத்தான் வெளிய குடுத்து சர்வீஸ் பண்ணி வாங்கிக் குடுத்தேன்.''

''வேண்டாம்... குமரா! நான் எல்லாத்தையும் விசாரிச்சுட்டுத்தான் பேசறேன்'' என்றான் அறிவழகன்.

''சரிடா! இப்ப என்னங்கறே! நான் வேணும்னா பணத்தை உனக்குக் குடுத்தர்றேன்.''

அறிவழகன் வேதனையோடு இறைவியைப் பார்த்தான்.

''நான் செஞ்சது தப்புடா'' என்று வருந்தியிருந்தால் கூட... அறிவழகன் அதோடு விட்டிருப்பான். ஆனால் செந்தில்குமரன் எப்படியாயினும் தன் தங்கை வேண்டுமென்றால் தன்னிடம் கெஞ்சத்தான் வேண்டும் என்ற எண்ணத்திலேயே இருக்கிற மாதிரி இருந்தது.

''செந்தில்குமரா...! திருப்பிக் குடுக்கறதில்ல... பாயிண்ட்! சரியான காரணம் சொல்லு. பணத்தைத் திருப்பிக் குடுன்னே நான் கேக்கலை... போதுமா...!'' என்றான்.

செந்தில்குமாரனுக்கு சொல்வதற்கு எங்கே காரணம் இருந்தது? சரியான பதில் இல்லையென்றபோது காரமான வார்த்தைகளாலும் எந்த விதமான வாதிக்கு எனவும் அடங்காத நடத்தையாலும் அறிவழகனை அவமானப் படுத்த முயன்றான்.

அறிவழகன் ஒன்றும் பேசவில்லை. செந்தில்குமரனைப் பார்த்தபடி.

'நீ கத்துகிற வரைக்கும் கத்து. ஓய்ந்ததற்குப் பிறகு பார்க்கலாம்' என்பது போல் தனது விசித்திரமான பார்வையை ரியபடி தலைக்கு இடது கையை முட்டுக் கொடுத்தபடி மர்ந்திருந்தான்.

இறைவியும் அவனைக் கெஞ்சுகின்றாற்போல் பார்த்த டி அமர்ந்திருந்தாள். அவள் கண்களில் கண்ணீர் முட்டிக் காண்டு நின்றது.

கடைசியில் ஒரு வழியாகக் கத்தி ஓய்ந்த செந்தில்குமரன் ட்டான்.

"கடைசியிலே என்னைக் கத்த விட்டு பஃபூன் மாதிரி ண்ணிட்டயில்லே!" என்று.

அதற்குப் பிறகுதான் அறிவழகன் வாயை திறந்தான்.

"பாரு! குமரா! நீ செஞ்சிருக்கிறது மகாப்பெரிய தப்பு. பவாவது நான் செய்தது தப்புன்னு சொல்லு. விஷயம் ம மூணு பேரோட முடிஞ்சுடும். நான் இதை வேற விதமா ல் பண்ணிக்கறேன்."

"நான்தான் பணத்தைத் திருப்பித் தரப் போறேனே! நான் க்கு சாரி சொல்லணும்?" என்றான் செந்தில்குமரன்.

"சரிப்பா! பணத்தை ஏன் எடுத்தேன்னு கேட்கறேன்.



"அது அப்படித்தான்!" என்றான் செந்தில்குமரன்.

ஆணித்தரமாக எடுத்து வைப்பதற்கு எந்த விதக் காரணமு மில்லாததால் ஒருவிதமான கையாலாகத்தனமான கோபத் தால் தன் பக்கமிருக்கிற ஓட்டையை இட்டு நிரப்புவதற்கு சகோதரன் முயற்சி செய்வது புரிந்த இறைவியும் ஒரு கையாலாகாத தனத்துடன் மௌனமாக அமர்ந்திருந்தாள்.

செந்தில்குமரன் திடீரென்று தன் பேச்சின் போக்கை மாற்றினான்.

"சரி! இப்ப என்ன? உனக்குக் கீழே வேலை செய்யறேங் கறதுனாலதானே இப்படியெல்லாம் அவமானப்படுத்தறே. தொழில் இருக்கறவனுக்கு எங்க போனாலும் பொழப்பு நடக்கும். ஓ.கே! ஐ க்விட்!" என்றான்.

"குமரா! ப்ளீஸ் புரிஞ்சுக்கோ! அது இல்ல தீர்வு. அட் லீஸ்ட் இனிமே இந்த மாதிரித் தப்பு நடக்காதுன்னாவது உறுதி குடு" என்றான்.

"தப்பே நடக்கலேங்கறேன். இப்ப நடக்காது, அப்ப நடக்காதுன்னு உறுதி குடுங்கறே! வேண்டாம்ப்பா! உன் சங்காத்தமே வேண்டாம். பணக்காரன் புத்தி என்னன்னு காமிச்சிட்டே!" என்று மேலும் மேலும் செந்தில்குமரன் பேசவும், ஒரு கட்டத்துக்கு மேல் அறிவழகனுக்கும் கோபம் வந்தது.

இறைவியைப் பார்த்துச் சொன்னான்.

"இறைவி... திஸ் இஸ் தி லிமிட். கம்பெனியோட தேவை என் பர்மிஷன் இல்லாம லூன் பண்ணியிருக்கான். பணத்தைக் கணக்கில் கொண்டு வராம பர்ஸனல் கஸ்டடி யில வச்சிருக்கான். இதெல்லாம் என்ன விளையாட்டுக் காரியமா? ஆஸ்க் ஹிம் டு ஸ்டாப் டாக்கிங் நான்சென்ஸ்"

''டேய்! என்கிட்டே பேசடா! அவளை என்ன மிரட்டறே!'' என்றான் செந்தில்குமரன்.

''பிகாஸ் அவ எனக்கு வைஃப் ஆகப் போறவ. அவ என்னைப் புரிஞ்சுகிட்டாப் போதும்.''

''ஓ! உனக்கு இன்னும் அந்த நம்பிக்கை வேற இருக்கா! ஏய்... இறைவி... எந்திரிடி! இவ்வளவு தூரம் என்னை சரியில்லாத முறையில் பேசறான். நீ பாத்துகிட்டு உட்கார்ந்துகிட்டிருக்கே!''

இப்போதுதான் இறைவி வாயைத் திறந்தாள்.

''அண்ணா! அவரு எவ்வளவோ பொறுமையாத்தான் பேசினாரு. உன் பக்கம் தப்பையும் வச்சுகிட்டு நீ தான் எகிறி எகிறிக் குதிக்கறே!'' என்றாள்.

''ஓஹோ! பணக்காரப் புருஷன் கிடைக்கப் போறான்னவுடனே இதுவரைக்கும் வளர்த்த அண்ணன் இல்லாமப் போயிடுவானா? வெட்டிப் பொலி போட்டுடுவேன் எந்திரிடி!'' என்றான்.

இறைவி ஒன்றும் செய்ய இயலாதவளாக அறிவழகனைப் பார்க்க அவன் கண்ணமர்த்தி நம்பிக்கை கொடுத்தான்.

இறைவி எழுந்தாள்.

செந்தில்குமரன் திரும்பி அறிவழகனைப் பார்த்தபடி, ''இதோட எல்லாம் முடிஞ்சுது...! நமக்குள்ளே நட்பு இல்லே. எதுவும் இல்லே!'' என்றான்.

''அப்படீன்னு நான் சொல்லலே!'' என்றான் அறிவழகன்.

''ஆமா... நீ எதுக்குச் சொல்றே! உனக்கு வேண்டியது என் தங்கை. கல்யாணத்துக்கப்புறம் என்னைக் கழட்டி விட்றலாம்னு பாத்தே! அதுக்கு முன்னாலயே நான் இப்ப முடிச்சுகிட்டேன்'' என்றான்.



''வாடி!'' என்று தங்கையை இழுத்துக் கொண்டு வெளியேற முற்படுகையில் அறிவழகன் மீண்டும் சொன்னான்.

''குமரா! ரொம்ப வருத்தப்படப் போறே! உனக்கு நட்போட மதிப்பும் புரியலே. வாழ்க்கையோட அர்த்தமும் புரியலை.''

''சே போடா!'' என்றபடி வெளியேறினான் செந்தில் குமரன்.

அவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி அவனுடன் போனாள் இறைவி.

மறுநாள் முதல் செந்தில்குமரன் அலுவலகத்துக்கு வரவில்லை. ஒரு ராஜினமாக் கடிதம் மட்டும் வந்தது.

வீட்டுக்குப் போனவுடனே இறைவி அவனுக்கு அவன் நடத்தையின் அபத்தத்தைப் புரிய வைக்க முயன்றாள். மாறாக அவன் அவளுக்குச் சொன்னான். ''சும்மாயிரு! நம்மகிட்டே பணம் இல்லேன்னா என்ன? நாம யார்னு அவனுக்குக் காட்டணும்.''

இறைவிக்கு அந்த நேரத்திலும் சிரிப்பு வந்தது. ''அண்ணா! நாம யாருன்னு காட்டற அளவுக்கு நாம ஒண்ணும் பெரிய மனுஷங்க இல்லே! என்ன இருந்தாலும் நீ அவரோட பர்மிஷன் இல்லாம நீ அப்படி மடல் செய்தது தப்புத்தான்'' என்றாள்.

அவன் முறைத்தான்.

''இப்ப... என்னடி.... சொல்றே! நீயும் அவன் பக்கம் போய்ச் சேரப் போறியா... போ... போ...'' என்றான்.

இறைவி நின்றாள். நேர்ப்பார்வை பார்த்தாள்.

''அண்ணா! அப்பா போனதுக்கப்புறம் ஒரு தகப்பன் மாதிரி இருந்து என்னை வளர்த்தவன் நீ. உன்னை விட்டுக்

குடுத்துட்டு அவர்கிட்டே போயிட மாட்டேன். அஃப் கோர்ஸ் அவருக்கும், எனக்கும் நிச்சயம் ஆயிருக்கு. ஆனா, இன்னும் கல்யாணம் ஆயிடலே! நான் உன் பக்கம்தான் நிப்பேன். ஆனா நீயும் தப்பை உணரணும்'' என்றாள்.

அந்த வார்த்தைகள் செந்தில்குமரனுக்கு பெரிய சந்தோஷத்தைக் கொடுத்தன.

உள்ளத்தில் கர்வம் கூடப் பொங்கியது.

''போதும்! தன் தங்கை தன்னிடம் இருந்தால் போதும். தான் அவன் கண்ணில் விரலை விட்டு ஆட்டிவிட முடியும். கதறிக் கொண்டு தன்னிடம் வரவேண்டும்'' என்று கர்வத்துடன் நினைத்துக் கொண்டான்.

இறைவி சொன்னதை அவன் தவறான கோணத்தில் புரிந்து கொண்டான்.

''எனக்கும் அவருக்கும் நிச்சயம்தான் ஆகியிருக்கிறது. இன்னும் கல்யாணம் ஆகவில்லை'' என்று சொன்னதை அவன் வேறு விதத்தில் எடுத்துக் கொண்டான்.

வேண்டுமென்றால் தன் தங்கையின் திருமண நிச்சயதார்த்தத்தைக் கூடத் தூக்கியெறிந்து விடலாம் என்று எண்ணிக் கொண்டான். அது மட்டுமல்லாமல் அறிவழகனுக்கு அடி கொடுப்பதென்றால் இந்த வழியில்தான் கொடுக்க முடியும் என்று முடிவு கட்டிக் கொண்டான்.

சிந்தனையில் ஆழ்ந்தான்.

இறைவியும் சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தாள். அன்று வெளியே வந்தற்குப் பிறகு ஒரே ஒருமுறைதான் அறிவழகனிடம் பேசினாள். அந்தப் பேச்சில் அறிவழகன் அதிர்ச்சியாகிப் போனாலும் தன் வருங்கால மனைவி குறித்துப் பெருமையும், பெருமிதமும் கொண்டான்.



அறிவழகன், இறைவி இருவருக்குமே செந்தில்குமரன் தங்கள் தலையில் இடிபோல் கல்லை இறக்குவதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தான் என்பது புரியவில்லை.

## 14

''தாம்... தூம்... தையா... தக்கா!'' என்று குதிக்கிற மகனை கோபத்தை அடக்கிக் கொண்டு பார்த்துக் கொண்டிருந்தார் திலகவதி.

''என்ன இருந்தாலும் பணக்காரன் புத்தியைக் காமிச்சுட்டான். நான் எத்தனை செய்திருப்பேன் அவன் கம்பெனிக்கு? கடைசியில இப்படிக் கேட்டுட்டானே?'' என்றே திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தான்.

''என்னடி நடந்தது?'' என்றார் அம்மா மகளிடம். மகள் நடந்ததைச் சொன்னாள்.

''ஓ...!'' என்றார் திலகவதி. அவர் முகம் வாடிவிட்டது. தன் மகனிடம் இப்படி ஒரு நடத்தையை எதிர்பார்க்கவில்லை.

''டேய்! அந்தத் தம்பி உனக்குப் பார்ட்னர்ஷிப்பே குடுத்துச்சு... நீ அந்த நம்பிக்கையைக் காப்பாத்தியிருக்கணும் இல்லே!''

''அம்மா! புரியாமப் பேசாதம்மா. என்னால அவன் கம்பெனிக்கு எவ்வளவு லாபம் தெரியுமா?''

''அதுக்காக? நீயும் சைட்ல அடிச்சுக்கலாம்னா விட்டுவாங்களா?''

''ஏன்... அப்படி விட்டாத்தான் என்ன?'' என்றான். அம்மாவின் முகம் வாடிவிட்டது. ஆழ்ந்த குரலில் சொன்னார்.

''தம்பி! உன்னை சேத்திக்கறதுக்கு முன்னாலயும் அந்தக் கம்பெனி செழிப்பாத்தான் இருந்தது. அந்தக் கம்பெனியாலதான் உனக்கு லாபமே ஒழிய... உன்னால அங்க எதுவும் பெருசா நடந்துடலை...'' என்றார்.

''ம்... உனக்கு மருமகனாப் போறான். பெரிய பணக்காரன் வேற?'' என்றான்.

கையும் களவுமாகத் தான் பிடிபட நேர்ந்த அவமானத்தை அவன் வேறு வேறு வழிகளில் கோபமாகப் பேசி துடைத்துக் கொள்ளப் பார்க்கிறான் என்பது புரிந்து பாவமாகவும் இருந்தது.

''பாரு தம்பி! நீ என் மகன். நீ எல்லாரைக் காட்டிலும் எனக்கு முக்கியமானவன்'' என்றார்.

''சரி! இப்ப நீ சொன்ன இந்த வார்த்தையை ஞாபகம் வச்சுக்க. அப்புறம் மாத்திப் பேசக் கூடாது.''

மகன் தனது ஆறுதலுக்காக மீண்டும் தன் வாயால் அந்த வார்த்தைகளைக் கேட்க விழைகிறான் என்றே திலகவதி எண்ணிக் கொண்டார். ஆனால், அந்த வார்த்தைகளை வைத்துக் கொண்டு அவன் எத்தனை பெரிய சூறாவளியை ஏற்படுத்தப் போகிறான் என்பது அப்போது புரியவில்லை.

* * *

அன்றிரவு!

திலகவதி, வாசலைப் பார்த்தபடி போன மகனைக் காணவில்லையே என்ற கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.



உள்ளே இறைவி தனது அறையில் சகோதரன் வந்தால் தெரிகிற வாக்கில் ஜன்னலோரம் அமர்ந்தபடி அறிவழகன் அழைக்கக் கூடுமோ என்று காத்துக் கொண்டிருந்தாள்.

அழைத்தான்!

''இறைவி! செந்தில் எப்படியிருக்கான்?'' என்றான்.

''எப்படியிருக்கிறான். என்னமோ தான் தப்பே செய்யாத மாதிரி வாதாடிகிட்டிருக்கான்'' என்றாள் வருத்தம் தோய்ந்த குரலில்.

''ம்...!'' என்று உள்வாங்கிக் கொண்டான். பிறகு கேட்டான்.

''அத்தை என்ன சொல்றாங்க?''

''அம்மாவும் நீ செஞ்சது தப்புடான்னுதான் சொன்னாங்க...'' என்றாள்.

''ஐ..ம்... சாரி இறைவி! நான் உன்னை வச்சுகிட்டு அவனைக் குற்றவாளி மாதிரி விசாரிக்க வேண்டியதாய் போச்சு... ஒரு வார்த்தை... ஒரே வார்த்தை... நான் செஞ்சதெல்லாம்... தப்பு! எனக்குத் தொழில் முறை எதிக்ஸ் தெரியலேன்னு சொல்லியிருந்தாப் போதும். நான் அதோட விட்டிருப்பேன். ஆனா, எனக்கும் ஈகோ இருக்குமில்ல... இவ்வளவு கை தூக்கி விட்டிருக்கோம் நமக்கே வேட்டு வக்கிறானேன்னு... கோபம்... வருமில்லே'' என்று குரல் உயர்ந்து கொண்டே போனது.

சட்டென்று உணர்ந்தாற்போல் தாழ்த்திக் கொண்டான். ''ஐ ம் சாரி இறைவி... இது உனக்கு ஒரு சங்கடமான நேரம்... பட் ஒன் திங்... இது தொழில் பிரச்சினை. அது எதனாலயும் நம்ம உறவு மாறாது புரியுதா?'' என்றான்.

''ம்...! ஆனா நான் ஒண்ணு சொல்வேன். நீங்க புரிஞ்சுக்கணும்.''

''ம்...''

''இந்தப் பிரச்சினை சமயத்துல நான் அண்ணன் பக்கத் துலதான் நிக்கணும். அதனால கொஞ்ச நாளைக்கு நாம பேசவோ சந்திக்கவோ... வேண்டாம்... என்ன?'' என்றாள்.

''இறைவி...!'' என்றான் அதிர்ந்து போய்.

''ஆமாங்க... நமக்கு நிச்சயம் நடந்திருக்கு. என்னை மீறி எங்கண்ணன் எதுவும் செய்ய முடியாது.''

''அப்படி மட்டும் ஏதாவது செஞ்சான்னா. வெட்டிப் பொலி போட்டுற மாட்டேன்?''

''பாத்தீங்களா? அந்த மாதிரி வெடிப்புக்கள் வரும். இப்ப அவனுக்கு இருக்கிற கோபத்துக்கு எப்படியாவது உங்களைக் காயப்படுத்தணும்தான் பார்ப்பான். அதுக்கு வசதியா அவனுக்கு இருக்கற ஒரே கருவி நான்தான். வெறி பிடிச்ச வன் மாதிரி கத்திட்டு வெளியே போயிருக்கான். அம்மாவும் கவலையாத்தான் இருக்காங்க. ஆனா... சமாளிப்போம்...'' என்றாள்.

''இறைவி...!'' என்றான் தாபத்துடன்.

''என் உள் மனசு சொல்லுது. எல்லாக் கோபத்தையும் வேற வழியாக் காட்டுவான். எனக்குப் பரீட்சை வைப்பான். ஆனா, எங்கப்பா போனதுக்கப்புறம் என்னை ஒரு தகப் பனைப்போல பாத்துகிட்டான். இந்த மாதிரி ஒரு பிரச்சினை நேரத்துல நான் அவனைக் கைவிட முடியாது...'' என்றாள்.

''சரி... ஆனா... எந்த நேரத்துல வேண்ணாலும் உதவி... கேளு...!''

''இல்லைங்க...! கேட்க மாட்டேன்! இது எனக்கும் எங்கண்ணனுக்கும் உண்டான பிரச்சினை. நானே சமா ளிப்பேன்... மீண்டு வருவேன்'' என்றாள்.



''இறைவி... ஐ ம்... பிரவுட் ஆஃப் யு'' என்றான். ஒரு நிமிட மௌனத்துக்குப் பிறகு.

''அவன்கிட்டே சொல்லு.. நான் அந்தப் பிரச்சினையை இதோட வுட்டர்றேன். எப்பவும் எனக்கு அவன் ஃபிரண்டு தான்'' என்றான்.

''வேண்டாம்...! அப்படியெல்லாம் நீங்க விட்டுக் கொடுக்க வேண்டாம். யார் இந்தத் தப்பு செய்தாலும் என்ன ட்ரீட்மெண்ட் கொடுப்பீங்களோ அதே மாதிரி நடத்துங்க... அப்பத்தான் அவனுக்கு வாழ்க்கைன்னா என்ன தெரியும்...?'' என்றாள்.

அந்தப் பக்கம் ஒரு வினாடி மௌனம் நிலவியது. பிறகு உணர்ச்சி நிறைந்த குரலில் மீண்டும் ஒருமுறை அறிவழகன் சொன்னான்.

''இறைவி! ஐ ம் பிரவுட் ஆஃப் யூ...! அப்புறம்... என் மனசுக்கு சொந்தக்காரி... எப்பவும்... எப்பவும் நீ மட்டும் தான்!'' என்றான்.

''ம்...!'' என்றாள். கண்களில் கண்ணீர் நிறைந்தது. அவள் செல்லை வைக்கும்போது வீட்டு முன் கேட்டைத் திறந்து கொண்டு சகோதரன் உள்ளே வருவதைப் பார்த்தாள்.

உள்ளே வந்தவன் ''இந்தா... பாரு! இதை அனுப்பிட் டேன்!'' என்று ஒரு காகிதத்தை வீசினான்.

''இறைவி...'' எடுத்துப் பார்த்தாள்.

''ராஜினாமாக் கடிதம். திலகவதியும் அவளும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். வருத்தத்துடன்தான்!''

''என்னா... இவன் இல்லேன்னா... நான் பொழைக்க மாட்டேனா? பிழைச்சுக்காட்டறேன்... பாருங்க'' என்றான்

திலகவதி ஏதோ சொல்ல வாய் திறந்தார். இறைவி ''எதுவு பேசாதே'' என்று கண்ணைக் காட்ட அமைதியாகிவிட்டார்

''என்னடிபன் சென்றிருக்க? சாப்பிடக் குடுங்க... என்ன... நீ சாப்பிடலையா? சாப்பிடு... அவன் கிடக்கிறான்'' என்று இறைவியைச் சாப்பிட அழைக்க அவள் அமைதியாக எதுவும் பேசாமல் போய் சாப்பிட அமர்ந்தாள்.

* * *

இரண்டு மூன்று நாட்கள் ஓடிவிட்டது!

''மனோகரன்... நாயர்தானே? நான் செந்தில் பேசறேன்...'' என்றான்.

''ஹல்லோ... எப்படியிருக்கீங்க...! அறிவழகன் மலேஷியாவிலிருந்து வந்துருச்சா?'' என்றார் நாயர்.

நாயருக்கு எப்போதுமே தமிழில இருக்கிற ''அன்'' விகுதிகள் தகராறுதான்! எல்லாருமே ''வந்துச்சா... போச்சா... தான்'' அதைக் குறித்து எப்போதுமே அறிவழகனும் அவனும் கேலி செய்து சிரிப்பார்கள். இப்போதும் புன்னகை மலர்ந்தது செந்திலுக்கு.

''ம்... வந்துட்டாரு...!''

''ம்... அதென்ன? இந்த தரம்... நம்ம கம்பெனி கார் சர்வீஸ் செய்தப்போ... உங்க கம்பெனியிலிருந்து ரசீது வர்லையே?''

''அது... அந்த சமயத்துல... நம்ம கம்பெனியில பொஸிஷன் ரொம்ப டைட்... அதனால வெளிய குடுத்து வேலை செஞ்சது...''

''ஓஹ் அங்ஙென இனிச் செய்யண்டா எங்களோட கம்பெனி டைரக்டர்ஸ் ஒத்துக்கமாட்டாரு. அதனால இனிமே அப்படிச் செய்யண்டா... கேட்டங்களா!'' என்றார்.

செந்திலுக்கு முகம் வாடிப் போனது. ''இது இன்றைக்கு மட்டும் இது நாலாவது அனுபவம்.'' ஆனாலும் விடாப்பிடியாகச் சொன்னான்.



''சார்! நான் அந்தக் கம்பெனியில இருந்து வெளிய வந்துட்டேன். நான் இப்பத் தனியா ஒரு நல்ல வொர்க் ஷாப் கூட ''டை அப்'' போட்டு... நல்ல முறையில் சர்வீஸ் பண்ணித் தரலாம்னு இருக்கோம்...''

''ஓ... தட்ஸ் எ குட் ஐடியா! ஆனா, எங்க கம்பெனியில எதுக்கு அறிவழகன் குருப்ல குடுக்குதுன்னா, அவிட காரெண்டியுண்டு. ஏதாவது மிஸ்டேக் இருந்தாலும் ரிப்பேரும், செஞ்சு குடுக்கும். அதுதன்னே ரீசன்... ''ஷெரி! யாராவது என்கிட்டே கேட்டா நான் டைரக்ட்... செய்யும்...'' என்று இனிமையாகவே பேசி போனை வைத்தார் நாயர்.

லாவகமாகக் கழட்டி விடப்பட்டோம் என்பது புரிந்தது.

''போய்யா... இவனே!'' என்று திட்டிக் கொண்டான்.

ஒரு நாளைக்குள்ளேயே சலிப்புத் தோன்றிவிட்டது. கிடைத்த நல்ல வாய்ப்பை விட்டு விட்டோமோ என்ற எண்ணமும் உள்ளே வெகு ஆழத்தில் ஒரு ஓரமாகத் தோன்றியது. ஆனால் அவனுக்கே உரிய தான் என்ற எண்ணமும் மேலெழுந்தது.

யோசிக்க ஆரம்பித்தான்!

கடந்த ஆறு மாதங்களாக வந்த சம்பளம் சேமிப்பில் இருந்தது. அதனால் இன்னும் ஆறு மாதங்களுக்கு தாக்குப் பிடிக்கலாம். வீட்டுக்கும் செலவுக்கும் கொடுக்க வேண்டிய இல்லை. அதனால் பெரிதாகக் கவலைப்படுவதற்கு எதுவும் இருக்கவில்லை.

அப்போதுதான் ''ணங்'' கென்று தலையில் யாரோ குட்டு வைத்தாற்போல் அந்தக் கேள்வி எழுந்தது.

''ஏண்டா! நீ பாட்டுக்கு ராஜினாமாக் கடிதத்தை வீசிட்டே! தங்கைக்குக் கல்யாணம் நடக்க வேண்டாமா?'' என்று.

உடனேயே தனது தங்கையையும் அருகில் வைத்துக் கொண்டு அவன் தன் மீது குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசியது நினைவுக்கு வந்தது.

அவமான உணர்வுடன் தங்கையின் பார்வை பட அவன் முன்னாலே தவித்தது நினைவுக்கு வந்தது.

உள்ளே கொதிப்பாய் உணர்ந்தான்.

''பழி வாங்கியே ஆக வேண்டும்'' என்ற வெறி உந்தித் தள்ளியது.

''என்ன சொல்லு...? என்ன செய்யலாம்...?'' என்று யோசித்தபோதுதான் அந்தத் திட்டம் தோன்றியது.

''நடக்குமா...? அம்மா... ஒத்துக் கொள்வாரா?'' அவர்கள் என்ன ஒத்துக் கொள்வது? இந்த வீட்டின் தலைவன் நான். நான் சொல்வது நடக்க வேண்டும்'' என்ற ஈகோவும் தோன்றியது.

தங்கை... ஒத்துக் கொள்வாளா?

குழப்பத்துடனேதான் வீட்டுக்குப் போனான். போகும் போதே வித விதமாகத் திட்டம் போட்டுக் கொண்டான். வீட்டுக்குப் போனவுடன் சோகமாக நடமாடிக் கொண்டிருந்தான்.

இறைவிக்கும் பாவமாக இருந்தது. பெரிய பாறையோடு மோதிக் கொண்டு, ''காயம்'' ''காயம்'' என்று அலறுகிற அறியாச் சிறுவனைப் போலத் தோன்றியது. அவன் செய்தது எவ்வளவு பெரிய தவறாக இருந்தாலும் இந்த நேரத்தில் அவன் மனம் உடைந்து விடாமல் இருப்பதற்குகூட இருந்து உதவி செய்ய வேண்டியது அவசியம் என்று தோன்றியது.

''அண்ணா! ஒரு மாதிரி இருக்கே! பிரச்சினையை சமாளிக்கலாம் விடு...'' என்றாள். இறைவி ஆறுதலாக.



''போ! இறைவி! எனக்குன்னு யாருமே இல்லாத மாதிரி இருக்கு'' என்றான் சோகமாக.

இறைவியின் கண்கள் கலங்கின.

''அண்ணா! அப்படியெல்லாம்... சொல்லாதே! நான் இருக்கேன் உனக்கு...'' என்றாள். திலகவதியார் கண்களும் குளமாகின.

''போம்மா! என்ன இருந்தாலும் அவனுக்கு வைஃப் ஆகப் போறவ. உனக்கு அவன்தான் பெருசு'' என்றான்.

''அண்ணா! அவனுக்கு வைஃப் ஆகப்போறவள். ஆனா, அதுக்காக உன்னை அவமானப்படுத்திட்டு அவரைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன். எத்தனை நாள் ஆனாலும் நீ பாத்து... கல்யாணம் செஞ்சு குடுத்தாத்தான்... பண்ணிக்குவேன்'' என்றாள்.

திலகவதி திடுக்கிட்டுப் போனார். தன் மகள் ஏதோ பொறியில் சிக்கிக் கொள்கிறாற் போல் உணர்ந்தார். ஒருவிதமான கையாலாகாத் தனத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

அண்ணனை உற்சாகப்படுத்துவதாக நினைத்துக் கொண்டு மேலும் ஒரு தவறு செய்தாள் இறைவி.

''நீ முக்கியம்னு நினைக்கலேன்னா... நான் அவர்கிட்டே அப்படி சொல்லியிருப்பேனா?'' என்றாள்.

செந்தில்குமரனின் கண்களில் ஆர்வம் மின்னியது. ''என்ன சொன்னே?''

''இந்தப் பிரச்சினையெல்லாம் தீர்ற வரைக்கும் என்கிட்டே பேசாதீங்க...ன்னு சொல்லிட்டேன்'' என்றாள்.

செந்தில்குமரன் முகமெல்லாம் சிரிப்பானது.

# 15

''நான் வெளியே வந்துட்டேன்'' என்று சொன்னபோது அவனுக்கு பகீர் என்றது. இவனாக வெளியே வந்தானா, இல்லை வெளியேற்றப்பட்டானா என்பது யாருக்குத் தெரியும் என்று எண்ணிக் கொண்டான். ஆனால், சொல் லாமல் விசாரித்தான்.

செந்தில்குமரன் தானாகத்தான் வெளியேறி வந்தான் என்பது தெரியவும் கொஞ்சம் சமாதானமானது. ஆனால், இத்தனை வாய்ப்புகள் கொடுத்த அறிவழகனையே விட்டு விட்டு வெளியே வருகிறான் இப்படி பக்குவமில்லாத நடத்தையுடையவனோடு தொழில் தொடர்பு வைத்துக் கொள்வது எவ்வளவு தூரம் சரியென்று அவனுக்குப் புரிய வில்லை. அதனால் சாக்குப் போக்குகள் சொல்ல ஆரம்பித் தான்.

மெல்ல செந்திலை ஆசுவாசப்படுத்தும் விதமாகச் சொன் னான்.

''பாரு... செந்தில்! நீ அவசரப்பட்டிருக்கக் கூடாது. எதையாவது சொல்லிச் சமாளிச்சு அங்கயே இருந்திருக் கணும்'' என்றான்.

இப்படி ஒரு அறிவுரையை அவன் ஜோசப்பிடம் எதிர்பார்க்கவில்லை.

''சரி... அதை விடு... சும்மா அதையே பேசிப் பேசி என்னத்துக்கு ஆகுது?''

''அப்படியில்லப்பா... அறிவழகன் குழுமம்னா சும் மாவா?''

''என்ன நீ? இம்புட்டுத் தடவை அதையே சொல்றே! எதுக்காகவும் ஒருத்தன் மானம் மரியாதையை விட்டுப்புடக் கூடாது'' என்றான் ஜோசப்பின் பாஷையிலேயே.



''சரி... செந்திலு! கொஞ்ச நாளைக்கு பேசாம இரு. அப்புறம்... என்னா செய்யறதுன்னு யோசிக்கலாம்'' என்றான் ஜோசப்.

செந்தில் அவனை உறுத்துப் பார்த்தான். ''ஏம்ப்பா! அந்த அறிவழகன் உன்கிட்டா எதுனா பேசுனானா?''

ஜோசப் எங்கோ பார்த்தபடி பேசினான். ''ஆமாப்பா! பேசுனாரு... ஆனா, நீ நினைக்கறா மாதிரியில்லே... தாரா ளமா செய்ங்க... நானே வேணும்னாலும் உங்களுக்கு ரெகமண்ட் பண்ணி பார்ட்டி அனுப்பறேன். ஆனா, வேலை மட்டும் சுத்தமா இருக்கணும்னாரு'' என்றான்.

செந்தில்குமரன் காற்றுப்போன பலூன் போல ஆகி விட்டான்.

''அப்புறம் என்னாப்பா?''

''இல்லப்பா... எனக்கு மனசு சரியாகலை. கொஞ்ச நாள் போகட்டும்'' என்றான்.

செந்தில்குமரன் வெறுத்துப் போய் வீட்டுக்குத் திரும்பி னான்.

தேடிப் பிடித்த வாடிக்கையாளர்கள் எல்லாரும் ''அறிவழகன் குரூப்ஸ்'' என்பதால்தான் தொடர்பு வைத்துக் கொள்கிறோம் என்றுதான் சொன்னார்கள். சொன்ன விதங்கள்தான் மாறியிருந்ததே தவிர விஷயம் அதேதான். சிலர் நேரடியாகச் சொன்னார்கள். சிலர் சர்க்கரை தடவினாற்போல் சொன்னார்கள்.

படுக்கையில் சாய்ந்தபடி யோசித்துக் கொண்டிருந்தான். எந்த விதத்திலும் தான் அறிவழகனுக்கு நிகராக முடியாது. போட்டி போட முடியாது என்பது புரிந்தது.

அப்போதுதான் அந்த யோசனை தோன்றியது. கோபமும், இல்லாமையும் சேர்ந்து அபத்தமான எண்ணங்களை அவன் மனத்துக்குள் திணித்து விட்டன.

தன்னிடத்திலேயும் ஒரு துருப்புச் சீட்டு இருக்கிறது என்ற எண்ணம் தோன்றியவுடனே அவமானத்துடன் நிற்கிற அறிவழகனின் முகம் அவனுக்குள் படமாய் விரிந்தது.

உடனே உற்சாகம் கிளம்பியது.

* * *

''என்னடா... ஒரு மாதிரி இருக்கே?'' என்று அருகில் வந்து அமர்ந்தார் சாம்பசிவம். அம்மாவும் வந்தார். நடந்தது எல்லாம் ஓரளவுக்கு அவருக்குத் தெரிந்திருந்தது. ஆனால், முழுமையான விவரங்கள் மகனிடம் இருந்து பெற வேண்டும் என்று நினைத்தார்.

அறிவழகன் நடந்ததையெல்லாம் அப்பாவிடம் சொன்னான். அப்பா பெருமூச்சு விட்டார்.

''இப்படி ஏதாவது நடக்கும்னு நான் நெனைச்சேன். அவன் ரொம்ப சாதாரண நிலைமையில் இருந்தவன். நீ அவனுக்கு திடீர்னு பொஸிஷன் குடுத்துட்டே. அதுவே அவன் கஷ்டப்பட்டு அந்த இடத்துக்கு வந்திருந்தா அதோட அருமை தெரிஞ்சிருக்கும். சின்ன வயசு, அனுபவம் பத்தல...'' என்றார்.

அறிவழகன் ஒன்றும் பேசவில்லை. அப்பாவே மேலும் சொன்னார்.

''ம்... உன்னைச் சொல்லியும் குத்தமில்லே. பிஸினஸ் உலகத்துல செயற்கையான அணுகுமுறைகளையே பாத்து அலுத்துப் போயிட்டே. பழைய நண்பன் சின்ன வயசு நண்பன் கிடைச்சவுடனே இயல்பாய் பழக முடிஞ்சது. அப்படி ஒருத்தன் பக்கத்துல இருந்தா நல்லதுன்னு நினைச்சுட்டே. அவ்வளவுதான்'' என்றார்.

இரண்டு பக்க நியாயங்களையும் அவரே பேசிக் கொள்வதையும் மௌன வேதனையுடன் பார்த்தபடி சற்று நேரம்



அமர்ந்திருந்தவன். பிறகு முகத்தை அழுத்தத் துடைத்துக் கொண்டான்.

''சரி... விடுங்கப்பா... இப்ப என்ன செய்யறதுன்னு பாக்கலாம்...'' என்றான்.

தந்தை அவனைக் கவலையுடன் பார்த்தார்.

''ஏம்ப்பா... அப்ப இந்தக் கல்யாணம்?''

அவன் திரும்பி அப்பாவைப் பார்த்தான். அதில் அளவு கடந்த வேதனை இருந்தது. ஆனால் கூடவே உறுதியும் இருந்தது.

''கண்டிப்பா... நடக்கும்... தானா நடக்கலேன்னு வைங்க... நாம நடத்திக்க வேண்டியதுதான்'' என்றான்.

தந்தைக்கு சந்தேகம் எழுந்தது. ஒன்றும் பேசவில்லை. அம்மா சொன்னார்.

''ஏம்ப்பா! அவன்தான் மூர்க்கத்தனமான இருக்கானே. அதிலயும் அந்தப் பொண்ணு அவனை மீறிட்டு வராதே...!'' என்றார்.

''எனக்கென்னமோ அப்படித் தோணலே. அவனுக்கும் தன்னைத் திருத்திக்கறதுக்கு ஒரு வாய்ப்புக் குடுக்கணும் இல்லே! ஒருவேளை அவன் திருந்துவதற்குண்டான வாய்ப்புக்கள் இல்லேன்னா... என்ன செய்யறதுன்னு பார்க்கணும்'' என்றான்.

''ஏம்ப்பா... அப்ப ஏற்பாடுகள்?!'' என்றார்.

''அப்பா! இன்னும் நாலு மாசம் டைம் இருக்கு. அதுக்குள்ளே உலகத்தையே புரட்டிப் போட்டர்லாம்'' என்றான்.

அப்பாவுக்கு ஆனால் நம்பிக்கையிருக்கவில்லை. ''மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா'' என்ற பழமொழி

தான் தோன்றியது. சொன்னால் மகன் வேதனைப்படுவான் என்பதால் எதுவும் சொல்லவில்லை.

மறுபடியும் ஆறுதல் சொல்வது போல் சொன்னான். "அப்பா...! நான் பழகின வரைக்கும் இறைவியும் ஸ்ட்ராங் பர்ஸனாலிட்டிதான். போராடுவா... விட்டுரமாட்டா..." என்றான்.

"புரியுதுப்பா... என் பிரச்சினையை நான் பாத்துக்கறேன்னு சொல்லுறதுங்கறியே அதுலயே தெரியுதே... தைரியமான பொண்ணுதான்னு" என்றார்.

அந்த நிமிடத்தில் மகனுடைய முகத்தில் ஜொலிக்கிற பெருமையை அப்பா ரசித்துக் கொண்டார். பிறகு சொன்னார்.

"ஒன்னும் கவலைப்படாதப்பா! எதுவும் தீர்க்கப்பட முடியாத பிரச்சினைன்னு உலகத்துல இல்லை!" என்றார்.

"அது உண்மைதான்ப்பா! ஆனா, இது ஒரு டெலிகேட்டான நிலைமையாப் போச்சு... இப்ப செந்தில்குமரன் மட்டும் இறைவியோட பிரதர்ன்னு இல்லைன்னு வைங்க... நான் இதை வேற விதமாத் தீர்த்துருப்பேன்."

அப்பா பெருமூச்சு விட்டார்.

"அவளும் அது தெரிஞ்சுகிட்டுத்தான்ம்ப்பா... தன்னை காட்டறான்" என்றான்.

"அப்பா... என் இறைவிக்கு நல்ல மெச்சூரிட்டி இருக்கு. தன்னையே அண்ணன் பகடைக்காயா பயன்படுத்தறான் கறதை அவ நல்லாப் புரிஞ்சு வச்சிருக்கா... கண்டிப்பா... பிரச்சனையைத் தீர்க்கறதுல உறுதியா... திப்பா என்றான்.

மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு "சரிப்பா... ரெஸ்ட்... எடு" என்று விலகிப் போனார்கள் பெற்றோர்கள்.



பெற்றோர்களிடம் பகிர்ந்து கொண்டதாலோ என்னவோ பாரம் இறங்கினாற் போல் உணர்ந்தான். நான்கைந்து நாட்களுக்குப் பிறகு அன்றைக்கு நிம்மதியாக உறங்கினான்.

ஆனால், அதே நேரம் செந்தில்குமரன் வேறு விதமான தாக்குதலுக்குத் தயாராகிக் கொண்டிருந்தான்.

* * *

அதிகாலை ஐந்து மணிக்கே எழுந்தான்.

அவசர அவசரமாகக் குளித்தான். எங்கேயோ புறப்படுகிறாற் போல் தெரிந்தது.

"அம்மா! என்னாவது டிபன் கிடைக்குமா? நான் கொஞ்சம் அவசரமா வெளிய போக வேண்டியது இருக்கு..." என்றான்.

திலகவதி ஒன்றும் பேசவில்லை. ஃப்ரிட்ஜில் இருந்த மாவை எடுத்து தோசை வார்ப்பதற்குத் தயாரானார்.

செந்தில்குமரன் உற்சாகமாக ஒரு தட்டை எடுத்துக் கொண்டு வந்து டைனிங் டேபிளின் மேல் வைத்துக் கொண்டு தாளம் போட்டான்.

"நினைத்ததை முடிப்பவன்... நான்!" என்று பாட்டு வேறு.

"எம்ப்பா! புளிச்சட்னி இருக்கு... போதுமா?" என்றார் திலகவதி.

"ஆஹா! அம்மா... கையால் எது கிடைச்சாலும் சரி... அமிர்தம்தான்" என்று ஐஸ் வைக்கிற மகனைப் பார்த்து அம்மா மையமாகப் புன்னகைத்தார்.

"எங்கடா போறே" என்று கேட்கலாமா என்று நினை[illegible]தார். இப்போது இருக்கிற நிலைமையில் எதைக் கே[illegible]டாலும் தவறாக முடியுமோ என்றிருந்தது.

பஞ்சு போல அம்மா வார்த்துக் கொடுத்த தோசையை அவன் ரசித்துச் சுவைத்து உண்கையில் மெதுவாகக் கேட்டார்.

''எப்போ... வருவே?'' என்று அவன் உற்சாகமாக அம்மாவைப் பார்த்து சிரித்தான்.

''வந்துருவேன்ம்மா... மத்தியானத்துக்குள்ள வந்துருவேன்'' என்றான்.

நடக்கிற எல்லாமும் அறிந்திருந்த போதும் கூட இறைவி உறங்குவது போல் படுத்துக் கொண்டிருந்தாளே தவிர எழுந்து வரவில்லை.

''என்னம்மா...! இறைவிக் குட்டி என்ன தூங்கறாளா? வேண்டாம். சரி... எழுப்பாதே... அவளுக்கும் பாவம் மென்டல் ஸ்ட்ரெஸ்'' என்றான்.

திலகவதி மௌனமாகவே பரிமாறினார். தாயாருக்குத் தன் மேல் கோபம் என்பது அவனுக்குப் புரிந்திருந்தது.

வழக்கமாக வேலைக்குச் செல்லும் போது, போவது போல் ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும், விசிலடித்துக் கொண்டும் புறப்பட்டான். ஆனால் எல்லாவற்றிலும் அவனை மீறிய செயற்கைத் தனம் தெரிந்தது.

நான்கைந்து தோசைகளை வார்த்துக் கொடுத்து விட்டு அவர் அடுப்பை அணைத்து விட்டு இந்தப் பக்கம் வருகையில் மகன் அவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

''அம்மாவுக்கு... என் மேல கோபம்... இறைவியோட லைஃப்ல ப்ராப்ளம் பண்ணிட்டேன்னு... இல்லை? கவலைப் படாதே... நானே எல்லாத்தையும் சரி பண்ணிடறேன்'' என்றான்.

மகன் உற்சாகமாகப் புறப்பட்டுப் போனதை வெறுமையாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.



செந்தில்குமரன் புறப்பட்டுப் போனதற்குப் பிறகுதான் இறைவி வெளியே எழுந்து வந்தவள்.

முன்னாலே இருந்த திண்ணைப் பகுதியில் அம்மா ஒரு சேரில் கவலையுடன் அமர்ந்திருப்பதைப் பார்த்தாள்.

''என்னம்மா...?'' என்றாள்.

''இல்லடி... என்னமோ காலையில ரொம்ப உற்சாகமா எழுந்திருச்சான். இம்புட்டு நேரமும் ஒரே ஆட்டம்... பாட்டம்தான். என்னமோ புறப்பட்டுப் போறான். இதுல போற நேரத்துல இறைவியோட வாழ்க்கையை கெடுத்துப் புட்டேன்னுதானே கவலைப்படறே... எல்லாத்தையும் நானே சரி பண்றேன்னுட்டும் போறான்...'' என்றார் திலகவதி.

இறைவி உற்சாகமானாள்.

''ஏம்மா...ஒரு வேளை... அவரைப் போய்ப் பார்ப் பாரோ.''

''க்கும்... அப்படி வேற உனக்கு ஒரு நினைப்பாக்கும். இருத்திருவம் புடிச்சவன்டி உங்கண்ணன். எனக்கென்னமோ இது அம்புட்டும் சரியாத் தோணலே...'' என்றார்.

இறைவியும் அம்மாவின் அருகில் அமர்ந்தாள்.

''அம்மா... என்னோட நிலைமையில வேற என்ன செய்யட்டும்?'' என்றாள். அம்மா அப்போதுதான் சொன்னார்.

''ஆரம்பத்துல இருந்தே ரெண்டு பேரும் தப்பு செய்யறீக. பெரிய இடத்துத் தொடர்புடா வேலை மட்டும் போதும். பார்ட்னர்ஷிப் வேண்டாம்னேன். கேக்கலை. இப்ப துரோகம் பண்ணிட்டு வந்து நிக்கறான். அவன் நட்புக்குத் துரோகம் செய்யறான்னா... நீ... வேற மாதிரி... துரோகம்...'' என்றார். பிறகு கவலையுடன் அவளைப் பார்த்தார்.

''பாருடி! அவன் எனக்கு மகன்தான். நீயும் மகள்தான். நான் ஒன்னு சொல்றேன். நல்லாப் புரிஞ்சுக்க. அவனுக்கு உன்னோட வாழ்க்கையைக் கையிலெடுத்துக் கிட்டு விளையாட உரிமையும் இல்லே. நீ ஊமையும் இல்லே. நீயும் பைத்தியக்காரத் தனமா உன்னோட லைஃப்பை அவன் கிட்டே விளையாட்டுப் பொருள் மாதிரிக் குடுத்துட்டு முழிச்சுகிட்டுக் கெடக்கறே. நல்லதுக்கில்லடி...'' என்றார்.

குலுங்கி அழுதார்.

இறைவி சிந்தனையில் ஆழ்ந்தாள்.

''அம்மா... சொல்வது சரி... துரோகம் செய்தது தனது சகோதரன். அதில் ஏற்படுகிற அவமானத்தை இட்டு நிரப்பு வதற்காக தன்னுடைய வாழ்க்கையைப் பணயம் வைக்கப் பார்க்கிறான்.

அம்மாவைத் தேற்றினாள்.

''அம்மா! அப்பா போனதுக்கப்புறம் ஒரு தகப்பன் போல என்னைப் பாத்துகிட்டான். அதனால என்னால விட்டுக் கொடுக்க முடியலியேம்மா'' என்று அவளும் கதறினாள்.

சற்று நேரம் அழுதார்கள். பிறகு தேறிக் கொண்டார்கள்.

''அம்மா! இது நட்புக்கும், காதலுக்கும் நடுவில நடக்கிற போராட்டம்'' என்றாள்.

''அம்மா... பெரிய பெரிய வார்த்தையெல்லாம் போடாதடி. கடைசியில இளிச்சவாய் ஆயிடாம பாத்துக்க...'' என்றார்.

அவளைத் தீர்க்கமாகப் பார்த்தார். பிறகு சொன்னார்.

''பார்த்தி! இப்ப என்னவோ அண்ணன் அண்ணன்கிறே. நாளைக்கே அவனுக்குக் கல்யாணம்னு ஒன்னு ஆயி புட்டா... அவன் வாழ்க்கைதான் அவனுக்குப் பெருசாத் தெரியும். உன்னுக்குள்ளே அழுதுகிட்டே நடை பொணமா நடமாடப் போறது நீதான்...'' என்றார்.



எழுந்து உள்ளே போய்விட்டார்.

இறைவி வெகுநேரம் சிந்தனையில் ஆழ்ந்தாள். அவர்கள் கவலைப்பட்டாற் போலவே அப்படி ஒரு திட்டத்தைத் தான் செந்தில்குமரன் நிறைவேற்றப் போய்க் கொண் டிருந்தான். அது மட்டுமல்ல, அதில் வெற்றியும் பெற்று விட்டான் என்று தான் சொல்ல வேண்டும். அதே நேரம்!

இறைவியும் தெளிவான இரண்டு முடிவுகளை எடுத்தாள்.

அம்மாவிடம் சொன்னாள். அவளும் வெளியே போய் வந்து உற்சாகமாக வந்தாள். இறைவியின் முடிவுகளைக் கேட்டதற்குப் பின்பு அம்மாவின் முகத்தில் சற்றே தெளிவு ஏற்பட்டது. அன்றைக்குப் பெரிதாக ஒன்றும் சமைக்க வில்லை.

''பருப்பு கடைஞ்சு... அப்பளம் பொரிச்சுக்கலாமாடி?'' என்றார்.

''சரிம்மா!'' என்று சாப்பிட வருகையில் ''உள்ள வரலாமா... தாயி!'' என்று வந்து நின்ற அந்தப் பெரியவரைக் கண்டவுடன் அம்மா உற்சாகமானார்.

''வெங்கடாசலம்... அண்ணே!'' என்று உற்சாகமாக வரவேற்றார்.

''வாங்க... மாமா!'' என்று வரவேற்றாள் இறைவியும்.

''என்னம்மா... சாப்பாடு... இப்பாடு... உண்டா'' என்றார்.

அவரும் அமர்ந்து உண்டார். ''இலகா... நானும் இந்த ஊருக்கு வந்துட்டேன்... ரெண்டு தெரு தள்ளி வீடு பாத் திருக்கேன்...'' என்றார்.

''மதனி... வந்திருக்காகளா...''

"பின்னே? மதனி... வராமலா... அவன் ரெண்டு நாள் கழிச்சு வர்றேன்னா" என்று சற்று நேரம் பேசிக் கொண்டு இருந்துவிட்டு புறப்பட்டார்.

"பரவால்லைடி... நம்ம பெரியவங்க ரெண்டு பேர் வந்திருக்காங்க... இவனைத் திருத்தப்பாக்கலாம்" என்றார். ஆனால் மகன் யாருடைய கட்டுப்பாட்டுக்கும் அடங்கப் போவதில்லை என்று அப்போது அந்த அப்பாவி அம்மாவுக்குத் தெரியவில்லை.

## 16

"அம்மா! இன்னைக்கு விருந்தாளிங்க வராக... கொஞ்சம் வீடெல்லாம் ரெடி பண்ணி வைங்க..." என்றான் செந்தில்குமரன் உற்சாகமாக.

அம்மாவும், இறைவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"என்ன பாக்கறீங்க? என் ஃப்ரெண்டும் அவன் அம்மாவும் வராக..."

"எதுக்கு?" என்றார் அம்மா.

"என்னமா வம்பாப் போச்சு... யாராவது ஒருத்தர் வீட்டுக்கு வந்தா... ஏதாவது காரணத்துக்குத்தான் வரணுமா?" என்றான். முகத்தில் லேசான சிரிப்புத் தெரிந்தது.

அம்மாவும் புன்னகைத்தார்.

"எப்ப... வராக...?" என்றார் திலகவதி.

"சாயங்காலமா... ஒரு நாலு மணிக்கு மேலே" என்றான்.



"சரி...!" என்றார்.

"நீங்க எதுவும் சிரமப்பட்டு டிபன் எல்லாம் செய்ய வேண்டாம். நான் ஸ்வீட், காரம்... வாங்கிக்கறேன்" என்றான் மறுபடியும்.

இறைவியின் அறைக்குள் எட்டிப் பார்த்தான்.

"ஹாய்! இறைவிக் குட்டி... என்ன செஞ்சுகிட்டிருக்கே?" என்றான்.

அதிகாலை நேரம் அவள் சற்று நேரம் ஏதாவது நல்ல புத்தகங்களைப் படிப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள். அரை மணி நேரம் மட்டும்தான் படிப்பாள்.

எழுந்தவுடன் வாசல் பெருக்கிக் கோலம் போட்டு விட்டு அரை மணி நேரம் படிப்பாள். பிறகு எழுந்து வந்து டிபன் செய்வாள்.

இப்போது புத்தக நேரம்!

முகத்துக்கு நேராக வைத்துக் கொண்டிருந்த புத்தகத்தை நகர்த்தி விட்டு அண்ணனைப் பார்த்தாள்.

"ஒண்ணுமில்லை. வழக்கம் போல படிக்கறேன்" என்றாள்.

செந்தில்குமரன் மெதுவாக சென்று அவள் கட்டிலின் மேல் அவளருகில் அமர்ந்தான்.

"இறைவி! அந்தத் தடியன் ஏதாவது போன் செய்தானா?" என்றான்.

அவள் இல்லையென்று தலையாட்டினாள்.

"பண்ண மாட்டானுங்க... அவனுங்களுக்கு நம்ம தேவை இருக்கிற வரைக்கும் பயன்படுத்திக்குவானுக... அப்புறம் தூக்கி எறிஞ்சுடுவானுக..." என்றான்.

அவன் ஒன்றும் பேசவில்லை.

''சரி... நீ விடு இவன்தான் நமக்கு உலகமா என்ன? நமக்கும் வாழ வழியில்லாமயா போயிடும். நமக்கும் மனிதர்கள் இல்லாமயா போயிடுவாங்க?''

மறுபடியும் இறைவி ஒன்றும் பேசவில்லை. சற்று நேர மௌனத்துக்குப் பின் சொன்னாள்.

''அண்ணா! பக்கத்துல இருக்கிற மெட்ரிகுலேஷன் ஸ்கூல்ல என்னைக் கூப்பிடறாக! நாலாயிரம் சம்பளம் தர்றேங்கறாக...!''

''எதுக்கும்மா?''

''இல்லண்ணா... லீவ் வேகன்ஸிதான். கொஞ்ச நாளைக்குப் போறேன். மனசுக்கு மாறுதலா இருக்கும்'' என்றாள்.

''சரி... உன்னிஷ்டம் எப்பலருந்து போறே?''

''இன்னைக்கிருந்தே!''

''சரி...! ஆனா, இன்னைக்கு என் ஃப்ரெண்டும், அவன் அம்மாவும் வந்தப்போ... நீ பளிச்சுன்னு சிரிச்ச முகமா இருக்கணும் என்ன? நம்ம சங்கடங்களை வந்தவங்ககிட்டே காட்டிக்கணும்னு என்ன அவசியம் இருக்கு?''

அவள் சம்மதம் என்பது போல் தலையசைத்தாள். செந்தில்குமரன் பைக்கை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

நேற்று அவன் போன இடம்!

மற்றொரு நண்பன் சபரீஷ் வீடு! ஏற்கனவே அவனுக்கு இறைவி மீது ஒரு கண் உண்டு என்பதை அறிவான். ஓரளவு வசதியான குடும்பம்.

ஒரு முறை பெண் கேட்டான். அந்த நேரம்தான் அறிவழகனோடு பழகத் துவங்கியிருந்த நேரம். நாசுக்காக மறுத்து விட்டாள்.



அவனிடம் போய் சொன்னான். அறிவழகனுக்கும் இறைவிக்கும் நடந்த நிச்சயதார்த்தம் அவனுக்குத் தெரியும் என்பதால் பார்ட்னர்ஷிப் தகராறில் திருமணம் நின்று விட்டதைச் சொன்னான்.

சபரீஷ் அவன் பங்குக்கு ''அப்பவே நினைச்சண்டா... இது மீறின இடமா இருக்கேன்னு'' என்றான்.

''என்ன செய்யறது? எங்க வீட்ல எல்லாருக்கும் பிடிச்சிருச்சு. எனக்கும் ஃப்ரெண்டுங்கறதாலே நல்லாயிருக்கும்னு நினைச்சேன். ஆனா, பணம்னு வரும்போது எல்லாரும் சுயநலவாதிகளா ஆயிடறாங்க....'' என்றான்.

''அது அப்படித்தான்'' என்றான் சபரீஷ்.

''நல்லவேளை! இப்பவே விஷயம் புரிஞ்சது சம்பந்தத்தை நிறுத்திரலாம்னு பாக்கறேன்'' என்றான்.

''அது சரி! உன் தங்கைக்கு அந்த சம்பந்தத்துலதான விருப்பம்?''

''அட போப்பா! அவ சின்னப் பொண்ணு. அவளுக்கு என்ன உலகம் தெரியும்? ஏதோ பணக்காரன். ஆளும் அம்சமா இருக்கான்னு ஏமாந்துட்டா...'' என்றான்.

சபரீஷ் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான். அவனும் நண்பர்களிடம் நடந்த விஷயங்களையெல்லாம் விசாரித்துத்தான் வைத்திருந்தான். ஆனால், அதையும் இதையும் பேசி கிடைக்கிற வாய்ப்பை ஏன் விட வேண்டும்? இறைவியே மனம் மாறி சம்மதிக்கும்போது நமக்கென்ன வந்தது என்று எண்ணிக் கொண்டான்.

''சரிப்பா! இறைவிக்கு சம்மதம்னா எனக்கும் சம்மதம் தான்.''

''சரி... நாளைக்கே நல்ல நாள். நீயும் உங்கம்மாவும் எங்க வீட்டுக்கு வாங்க... பொண்ணு பாக்கன்னு வேண்டாம்.

சும்மா வர்ற மாதிரி வாங்க... நீ கொஞ்சம் இறைவிகிட்டே பேசிப் பழகு... அப்புறம் சம்மதம் வாங்கிடலாம்'' என்றான்.

இனிமேல்தான் சம்மதம் வாங்கறதா என்று சபரீஷுக்கே கொஞ்சம் சுருக்கென்றது. ஆனால் மறுபடியும் சபலமே வென்றது.

''கண்டிப்பா வர்றேம்ப்பா'' என்றான்.

இப்போது அவர்கள் தான் வர இருக்கிறார்கள். எதுக்கும் நம்ம பக்கமும் பெரியவர்கள் வேண்டுமே என்ற எண்ணத்தில்தான் வெங்கடாசலம் மாமாவை வரச் சொல்லியிருந்தான். அதையெல்லாம் நினைத்துக் கொண்டே பழைய முதலாளியைப் பார்க்கப் போய்க் கொண்டிருந்தான்.

• • •

''என்னம்மா! எல்லாம் அமைதியா இருக்கு? நான் என்னமோ கலகலப்பா இருக்கும்னு நினைச்சுகிட்டு வந்தேன்'' என்றார் வெங்கடாசலம்.

''வாங்க அண்ணா'' என்று வரவேற்ற திலகவதி உற்சாகமில்லாமல் பார்த்தார்.

''என்ன சொல்றீக?''

உள்ளறையிலிருந்து இறைவியும் வந்தாள். புதிதாகச் சேர்ந்திருந்த பள்ளிப் பணியிலிருந்த முதல் நாள் பணி முடிந்து அப்போதுதான் வந்தாள்.

முகம் திருத்திக் கொண்டு இப்போதுதான் ரிலாக்ஸ்டாக அமர்ந்தாள். அதற்குள் வெங்கடாசலம் வந்துவிட்டார்.

''வாங்க'' என்று வரவேற்றாள்.

''என்னம்மா! யாரோ பொண்ணு பாக்க வர்றதா சொன்னான். இங்க என்னமோ ஒண்ணும் நடப்பதைக் காணோம்'' என்றார் ஆச்சரியமாக.



''பொண்ணு பாக்கவா?'' என்றார் திலகவதி ஆச்சரியமாக.

''அப்படித்தான் எங்கிட்ட ஏதோ சொன்னான்'' என்றவர் உடனே நாக்கைக் கடித்துக் கொண்டார்.

''இன்னும் அம்மாவுக்கும் இறைவிக்கும் சொல்லலைன்னு சொன்னானே!'' என்றார்.

திலகவதி வெறுமையாக மகளைத் திரும்பிப் பார்த்தார். ''அப்பவே சொன்னேன் இல்ல?'' என்ற கேள்வி அதில் தொனித்தது.

இறைவியின் முகம் வாடி விட்டது. அன்றைக்கு அறிவழகன் சொன்னது உண்மையாகி விட்டது. அண்ணன் தன்னுடைய அவமானத்தை சரிக்கட்டிக் கொள்ள தங்கையைப் பகடைக் காயாகப் பயன்படுத்துவான் என்பதுதான் அது.

கொதித்துப் போனாள்.

என்னதான் மனதுக்குள் கோபம் இருந்தாலும் வருகிறவர்கள் முன்னிலையில் எதுவும் காட்டிக் கொள்ள வேண்டாம் என்று முடிவு செய்து கொண்டாள்.

சபரீஷும், அவன் அம்மாவும் வந்தார்கள். சபரீஷ் தனக்கு இறைவியின் மேல் இருக்கும் ஆர்வத்தை வெளிப்படையாகவே காட்டினான்.

''நடந்து போனது எதுவாக இருந்தாலும் சரி, நான் உன்னை நன்றாக வைத்துக் கொள்வேன்'' என்று ஜாடையாக பேசினான்.

இறைவிக்குக் கோபம் வந்தது. ஆனால் இவனிடத்திலே நமக்கு என்ன இருக்கிறது? நாம் பேச வேண்டியதெல்லாம் சகோதரனிடத்தில்தான் என்று மௌனமாகப் பல்லைக் கடித்துக் கொண்டு சகித்துக் கொண்டாள். அவள் பொறுமையும் உடைந்து போகிற அளவுக்கு எல்லை மீறுகிற அளவுக்கு விஷயங்கள் நடந்தன.

தேதி குறிக்கிற அளவுக்குப் பேச ஆரம்பித்தான் செந்தில். அப்போதுதான் இறைவி கோபத்தின் உச்சிக்கே போனாள்.

சகோதரனை உள்ளே அழைத்துக் கேட்டாள். ''அண்ணா என்ன நடக்குது?''

''என்ன நடக்குது? சபரீஷ்கிட்டே எல்லா விஷயமும் சொன்னேன். அவன் பெருந்தன்மையா உன்னைக் கல்யாணம் செய்யறதுக்கு சம்மதம் சொல்லியிருக்கான்.''

''யாரைக் கேட்டுட்டு இந்த ஏற்பாடு செஞ்சே?''

''யாரைக் கேட்கணும்? நீ தானே சொன்னே? அண்ணா நீதான் எனக்கு எப்பவும் உசத்தின்னு. அதான் தைரியமா ஏற்பாடு செஞ்சேன்.''

''அண்ணா! இப்பவும் நீ எனக்கு உசத்திதான். எப்பவும் உசத்திதான். அதுக்காக இப்படி எல்லாம் முடிவு பண்ண வேண்டிய அவசரம் என்ன வந்தது?''

''நாம இதெல்லாம் அப்புறம் பேசக் கூடாதா?''

''சரி - முதல்ல அவங்களுக்கு எந்தவிதமான உறுதி மொழியும் குடுக்காம அனுப்பு. நல்ல விதமா பேசியனுப்பு. அப்புறம் பேசலாம்!''

இறைவியின் கண்ணில் தெரிந்த உறுதியைப் பார்த்து செந்தில்குமரனுக்குக் கொஞ்சம் கலக்கமாகிப் போனது.

சற்றுநேரம் அளவளாவினாற்போல் பேசி விட்டு நண்பனை அனுப்பி வைத்தான். உள்ளே திரும்பி வரும் போது அவள் கண்களில் கனல் தெறிக்க நிற்பதைப் பார்த்தான்.

''அண்ணா! என்ன இப்படியெல்லாம் செய்யறீக.''

''பின்னே? இனிமே அறிவழகனுக்கு உன்னைய கல்யாணம் பண்ணி வைப்பேன்னு நினைக்கிறியா?''



''அவரைத் தவிர வேற யாரையாவது கல்யாணம் பண்ணிக்குவேன்னு நீ நினைக்கறியா?'' என்றாள் இறைவியும் காட்டமாக.

செந்தில்குமரன் கோபமாக உறுத்துப் பார்த்தான்.

''அண்ணா இதுவரையும் நான் பொறுமையா இருக்கேன். தப்பு பூராவும் உன்மேலதான். உன்னை நம்பி பார்ட்னர்ஷிப் குடுத்தவங்களுக்கே தெரியாம நீ துரோகம் செய்யறே! அதுக்குக் காரணம் என்ன? நான் என் மேல இருக்கிற பிரியத்துல எல்லாத்தையும் பொறுத்துக்குவாரு. நீ அவரைக் கைப்பொம்மையா வச்சுக்கலாம்னு நினைச்சே! அவுக தப்பைக் கண்டு பிடிச்சுக் கேட்டுட்டாக. அதுக்காக நீ என்னோட லைஃபைக் கெடுப்பியா? போய் அவுககிட்டே மன்னிப்பு கேளு. அதோட விஷயத்தை முடிச்சுக்குவாக'' என்றாள்.

''அந்த வேலையெல்லாம் நம்ம கிட்டே வேண்டாம். உனக்கு நான் வேணுமா... இல்லே அவன் வேணுமான்னு நீ முடிவு செஞ்சுக்கோ'' என்றான்.

''அண்ணா... எனக்கு எப்பவும் நீ வேணும்தான். ஆனா... அதுக்காக அவரை இழக்க மாட்டேன். அப்படியே இழந்தாலும் வேற கல்யாணம் பண்ண மாட்டேன்'' என்றாள்.

''அப்ப வீட்டை விட்டு வெளியே போ!''

''தாராளமா!'' என்றாள்.

உள்ளே போய் விட்டாள். கதவை அறைந்து சாத்திக் கொண்டாள்.

அம்மா இப்போது கோபமாக முறைத்தார்.

''என்னடா பேசறே நீ!''

''ஆமாம்மா! இது என் கௌரவப் பிரச்சினை. நான் சொல்ற மாப்பிள்ளைக்கு அவ கழுத்தை நீட்டித்தான் ஆகணும்'' என்றான்.

மறுபடியும் இறைவி கதவைத் திறந்தாள்.

''அதெல்லாம் நடக்காது. மனசு என்ன சிலேட்டா? அழிச்சு அழிச்சு எழுத?'' என்றாள்.

செந்தில்குமரன் கோபத்தோடு வெளியேறினான்.

இறைவி அழுத்தமாகவே நடமாடினாள். பிறகு சற்று நேரம் அம்மாவிடம் பேசினாள்.

அம்மா அதிர்ந்து போய்ப் பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் மகள் பேசுவதில் உள்ள நியாயத்தை உணர்ந்து கொண்டார்.

மறுநாள் மாலை செந்தில்குமரன் சற்று வெளியே போய் விட்டு வீட்டுக்கு வந்த போது அவனுக்குப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

* * *

''நீங்க யாரைப் பாக்கணும்?'' என்றான் ஹாஸ்டல் வார்டன்.

''இங்க புதுசா ஒருத்தர் வந்து சேர்ந்திருக்காங்களே! அவுகளைப் பாக்கணும்'' என்றான்.

''நீங்க யாரு?''

''நான் அவுக பிரதர்'' என்றான் செந்தில்குமரன்.

இறைவியை அழைத்தார்கள்.

வந்தாள்.

''என்ன இறைவி! இப்படிப் பண்றே!'' என்று சாதாரணமாக ஆரம்பித்தவன் சட்டென்று கோபத்திற்குத் தாவினான்.

இறைவி அழுத்தமாகச் சொன்னாள்.

''அண்ணா! இது வொர்க்கிங் விமன்ஸ் ஹாஸ்டல். நீ வெளியே போன்னு சொல்லிட்டே! எப்பப் போனாலும்



எப்படிப் போனாலும் அவுக என்னை ஏத்துக்குவாக. ஆனா உன்னை நான் விட்டுக் கொடுக்க விரும்பலே! இரண்டு பேரையும் விட்டுக் கொடுக்க என்னாலே முடியலே! என்னை விட்ரு! எனக்குக் கல்யாணமே வேண்டாம்'' என்றாள் வருத்தம் தோய்ந்த குரலில்.

உடன் வந்த சபரீஷ் இந்தச் சூழ்நிலையை எதிர்பார்க்கவில்லை.

''இறைவி உங்கண்ணன் சொல்றதைக் கேளு! என்னதான் இருந்தாலும் இத்தனை பிரச்சினைக்கப்புறம் எப்படி இந்தக் கல்யாணம் நடக்க முடியும்? உங்கண்ணனுக்கு குறிப்பிட்ட முகூர்த்தத்திலே உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கணும்னு ஆசை. அதுக்காகத்தான் நானும் ஒத்துகிட்டேன்.''

''தேவையில்லை. அப்படியெல்லாம் நீங்க எங்களுக்கு எந்தவித அனுதாபமும் காட்டத் தேவையில்லை. எங்கண்ணனுக்கும் அவருக்கும் ஏற்பட்டது பிஸினஸ் பிரச்சினை. ஆனா அவருக்கும் எனக்கும் இருக்கிற உறவு வேற தளத்துல இருக்கு. ரெண்டையும் போட்டுக் குழப்பிக்காதீக.''

செந்தில்குமரனின் முகத்தில் கடுப்பேறியது.

''உனக்கும் சபரீஷுக்கும்தான் கல்யாணம். உன்னை இந்த நிலைமைக்கு ஆளாக்கி விட்டவன் நான். நான் சொல்றதைக் கேட்டுத்தான் ஆகணும்.''

''அண்ணா அந்த நன்றிக் கடன் இருக்கறதுனாலதான் நான் இங்க வந்திருக்கேன். அந்த நன்றிக் கடனுக்காக தோலை செருப்பாக்கி உனக்காக உழைக்கிறேன். ஆனா மனசால நினைச்சவரை விட்டுட்டு இன்னொருத்தனுக்கு உடம்பை விக்கமாட்டேன்.''

சட்டென்று உள்ளே போய் விட்டாள்.

சபரீஷுக்கு அந்த வார்த்தைகள் சுருக்கென்று தைத்தன.

''வேண்டாம். செந்தில் விட்ரு'' என்றான்.

''அதெப்படி விடறது? கண்டிப்பா உனக்கும் அவனுக்கும்தான் கல்யாணம். இது மட்டும் நடக்கட்டும். நான் என் சொத்தையும் உனக்கே விட்டுக் குடுக்கறேன்.''

ஏதடா வம்பில் மாட்டிக் கொண்டோம் போல இருக்கே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்த சபரீஷுக்கு இந்த வார்த்தைகள் உரம் போல இருந்தன.

''அடுத்த வாரம் இந்நேரம் கல்யாணம் முடிஞ்சுடும்'' என்று அறிவித்தான் செந்தில். ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்தான்.

அந்தப் பக்கம் இறைவி எந்த விதமான பிரதிபலிப்பையும் காட்டாமல் அமைதியாகவே இருந்து விட்டுக் கடைசியாக அந்த வீரிய மிக்க வெடி குண்டை எடுத்து வீசினாள்.

செந்தில் நிலை குலைந்து போனான்.

## 17

போன முறை நிலவதி இறைவியிடம் ஜாடைமாடையாக உன் வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியது நீதான் என்று சொன்னதிலிருந்தே இறைவி யோசிக்க ஆரம்பித்திருந்தாள்.

செந்தில்குமரன் தன்னுடைய கௌரவப் பிரச்சினையை சமாளிப்பதற்காக தங்கையின் நல்வாழ்வைப் பற்றி யோசிக்காமல் மேலும் மேலும் திட்டங்கள் போடுவது தாய் மகள் இருவருக்குமே பிடிக்காமல் போயிற்று. அதைப் புரிந்து கொள்ளாமல் மேலும் மேலும் தவறுகள் செய்தான் செந்தில்.



முதலாவதாக நடக்க இருந்த திருமணத்தை நிறுத்தி விடுவது என்று அவளாக முடிவெடுத்தது. இரண்டாவதாக வேறு திருமணத்திற்கு ஏற்பாடு செய்ய ஆரம்பித்தது.

ஏதோ ஒரு கட்டத்தில் அவனுக்கும் பாடம் புகட்ட வேண்டியது அவசியம் என்று யோசிக்க ஆரம்பித்தாள். அதற்கேற்றாற் போல் தனது எதிர்ப்பைத் தெரிவித்துப் பார்த்தாள். எதிர்ப்புக்குப்பிறகாவது அவன் வேகம் மட்டுப்படும் என்று நினைத்தாள். அவனது வேகம் மட்டுப்படாதது மட்டுமல்ல, அவளது விருப்பத்துக்கு சற்றும் மதிப்பே கொடுக்கவில்லை என்பது அவளுக்கு எரிச்சலையும் வெறுப்பையும் மூட்டியது. அதனால்தான் அந்த முடிவைச் செய்தாள்.

பக்கத்திலேயே ஒரு பள்ளியில் பகல் வேலைக்கு சேர்ந்தாள். வேலை செய்வதால் பாதுகாப்பான ஒரு பணி செய்யும் மகளிர் தங்கும் விடுதியில் சேர்ந்து கொள்ள முடிந்தது.

இறைவி முதல் நாளே அம்மாவிடம் அந்த முடிவைத் தெரிவித்தாள். அம்மா வெகுவாக யோசித்தார்.

''இது தேவையாடி. வேணும்னா நானும் கூட வர்றேன். ரெண்டு பேருமாத் தனியாப் போயிடலாம்'' என்றார்.

''வேண்டாம்மா! ரெண்டு மூணு தெரு தள்ளியிருக்கிற ஹாஸ்டல்ல தானே சேரப் போறேன். அதுமட்டுமில்லே நீயும் வெளியே வந்தா அண்ணன் ரொம்ப டிப்ரஸ் ஆயிடுவாப்ல. நீயாவது கொஞ்ச நாளைக்குக்கூட இருந்து இருக்க முடியுமான்னு பாரு'' என்று சொல்லி விட்டாள்.

மறுநாள் பேச்சு நடித்தவுடனே கிளம்பி விட்டாள். புறப்படும்போதே சொல்லி விட்டுத்தான் கிளம்பினாள்.

''அண்ணா - புதுசா நீ செய்யற கல்யாண ஏற்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவிக்கத்தான் நான் வெளியே கிளம்பறேன்

ஆனா அதுக்காக நீயில்லாம அறிவழகன் நான் கல்யாணம் பண்ண மாட்டேன். அதுமட்டுமில்ல. உனக்கும் அவருக்கும் சமாதானம் ஆகற வரைக்கும் நான் அவர்கிட்டே பேசக் கூட மாட்டேன். போதுமா?''

இறைவி சொன்ன எதுவுமே அவன் காதில் ஏறவில்லை. அவன் எளிதாகத்தான் எடுத்துக் கொண்டான். பெட்டியைத் தூக்கிக் கொண்டு எங்கே போய்விடப் போகிறாள். ஏதாவது தோழிகள் வீட்டில் தங்கி விட்டு அடுத்த நாள் வந்து விடுவாள் என்றுதான் நினைத்தான்.

இறைவி வெளியேறியே விட்டாள்.

நிலகவதிக்குத்தான் மனது பதைபதைத்துப் போனது. வெங்கடாச்சலத்துக்கு போன் செய்து, ''அண்ணா நீங்க கார்டியனா இருந்து ஹாஸ்டலில் சேர்த்து விடுங்க'' என்று வேண்டிக் கொண்டார்.

''அம்மா உன்னை ஒழுங்கா கவனிச்சுக்க - என்ன அவசரம்னாலும் கூப்பிடு. எங்க ஸ்கூல் பிரின்சிபல்கிட்டே சொல்லியிருக்கேன். எல்லா விவரமும் அவுகளுக்குத் தெரியும். உடனே அனுப்பி வைப்பாக'' என்றாள்.

''நான் என்னைய பாத்துக்கறேன். நீ உன்னைக் கவனிச்சுக்க'' என்று அனுப்பி வைத்தார் நிலகவதி.

இப்போது விக்ரமாதித்யனின் தளராத முயற்சியைப் போல் செந்தில்குமரன் அவளைப் பார்க்க வந்திருந்தான்.

ஒரு வழியாகப் பேசி அனுப்பி விட்டாலும் இறைவிக்கு உள்ளூர கொஞ்சம் அச்சமாகவே இருந்தது. மறுபடியும் மறுபடியும் வரமாட்டான் என்பது என்ன நிச்சயம்! பேசாமல் அறிவழகனிடம் சொல்லலாமா என்று யோசித்தாள்.



வேண்டாம் வேண்டாம் நாமே சமாளிப்போம் என்று முடிவு கட்டிக் கொண்டாள்.

ஒரு வாரம் ஓடி விட்டது!

செந்தில் திருமண ஏற்பாடுகளை நிறுத்தவில்லை. மும்முரமாக ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தான்.

இறைவிக்கு பயமாய்ப் போய் விட்டது.

அப்போதுதான் இறைவி தனது லாயர் தோழியிடம் யோசனை கேட்டாள்.

அப்போது லாயர் தோ சொன்னாள்.

''உன் விருப்பம் இல்லாமல் யாரும் உனக்கு வற்புறுத்திக் கல்யாணம் செய்துவிட முடியாது. வேணும்னா உங்கண்ணன் மேல போலீஸ்ல கம்ப்ளெயின்ட் குடு'' என்றாள்.

இறைவி சற்று நேரம் தலை குனிந்து அமர்ந்திருந்தாள். பிறகு சொன்னாள்.

''வேண்டாம். அண்ணன் மேல புகார் குடுத்தா போலீஸ் விசாரணை அப்படி இப்படின்னுட்டு வீட்டுக்கு வருவாங்க. அக்கம் பக்கத்துக்காரவங்கிட்டே கேவலம். என்ன இருந்தாலும் அண்ணன் மரியாதையை அவ்வளவு தூரம் கெடுக்கக் கூடாது'' என்றாள்.

தோ சிரித்தாள். ''என்னடி இது? அடிக்கவும் வேணும் - வலிக்கவும் கூடாதுன்னா எப்படிடி?'' என்றாள்.

இறைவி சோகமாகப் புன்னகைத்தாள்.

''இல்ல தோ! இந்தப் பிரச்சினை ஆரம்பிக்கிற வரைக்கும் அவனைப் போல பாசமான அண்ணன் கிடையாது தெரியுமா? இப்போ வறட்டுக் கோபத்துல என்னென்னவோ செஞ்சுகிட்டிருக்கான். அவரை இந்தப் பிரச்சினையில இறக்கி விட்டா ரொம்பத் தீவிரமாப் போயிடும். அதனாலே

அவருகிட்டே கெஞ்சி அமைதியா இருக்கன்னு சொல்லி விருக்கேன். ஆனா இவன் மேல மேல அவரைக் கோபப் படுத்தவே பாக்கறான். நானேதான் ஏதாவது ஒரு வழியில இவனைச் சமாளிக்கனும்'' என்றாள்.

ரதோ யோசித்தாள்.

பிறகு சொன்னாள்.

''சரி ஒன்னு செய்வோம். ஒரு வக்கீல் நோட்டீஸ் விடு வோம். அதுலயே உங்கண்ணன் அரண்டு போய் விடுவான்'' என்றாள்.

''ம்! அது வேண்ணா செய்யலாம்'' என்று இறைவி ஆர்வ மாக ஒத்துக் கொண்டாள்.

* * *

''என்னம்மா! அம்மாவும் மகளும் சேர்ந்து என்னை முட்டாளாக்கப் பாக்கறீகளா?'' என்று குரலெடுத்துக் கத்துகிற மகனை வேதனையும் வெறுமையுமாகப் பார்த்தார் திலகவதி.

அவன் கையில் வக்கீல் நோட்டீஸ் இருந்தது.

''எனது கட்சிக்காரர் இறைவிக்கு ஏற்கனவே திருவாளர் அறிவழகனுடன் திருமணம் நிச்சயமாகி உள்ள நிலையில் தனது சொந்தப் பிரச்சினைக்காக நடக்க இருக்கிற திருமணத்தை நிறுத்த முயற்சிப்பதோடு வேறொருவரை மணக்கச் சொல்லி வற்புறுத்துவதாகவும் அறியப்படுகிறது. செல்வி. இறைவி மேஜர் என்பதால் அவருக்கு சுயமாக முடி வெடுத்து திருமணம் செய்து கொள்ள உரிமை இருக்கிறது என்பதை திரு.செந்தில்குமரன் அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று இதன் மூலம் எச்சரிக்கை விடப்படுகிறது. இத்துடன் வேறு ஒருவருடனான திருமண ஏற்பாடுகளை நிறுத்தி விட வேண்டுமென அதன் மூலம் எச்சரிக்



கப்படுகிறது. இல்லையெனில் போலீஸ் நிலையத்தில் புகார் கொடுப்பதுடன் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது'' என்று இருந்த அந்த நோட்டீஸைப் பார்த்து விட்டுத்தான் அப்படிக் கத்திக் கொண்டிருந்தான்.

''டேய். சும்மா கத்தாதடா! உன் பக்கம் மட்டும் நியாயம் இருந்திருந்தா... அவகண்டிப்பா அந்தத் தம்பியை எதுத்து இட்டிருப்பா. இப்பவும்.... உன்னை விட்டுக் குடுக்காமத் தான் நடந்துக்கறா. நீ தான் எதையும் புரிஞ்சுக்க மாட் டேங்கறே!'' என்றார்.

வெங்கடாச்சலமும் அந்த நேரம் வந்திருந்தார்.

''ஆமா தம்பி உங்கம்மா சொல்றதுல நியாயம் இருக்கு. பார்ட்னர்ஷிப் குடுத்த ரெண்டே மாசத்துல நீ பாட்டுக்குத் தனியா சம்பாதிக்கறதுங்கறது தப்புப்பா... சும்மா சொல்லக் கூடாது... அந்தத் தம்பியும் பொறுமையாத்தான் இருக்கு...'' என்றார்.

''ஓஹோ! ஒத்துக்கு மத்தளமா? இத பாருங்க மாமா! எது எப்படிப் போனாலும் சரி. எக்காரணத்தைக் கொண்டும் அறிவழகனுக்கும் இறைவிக்கும் கல்யாணம் நடக்காது. நடக்காது...''

''அதைச் சொல்றதுக்குத்தான் உரிமையில்லேன்னு அவனே சொல்லிட்டானே! இதுக்கு மேலயும் எதுக்காக பிரச்சினை பண்ணிகிட்டேயிருக்கே?'' என்றார் திலகவதி.

''அதான்... அதான்... எனக்குத்தான் முடியலே! இப்படி துரோகம் பண்ணிட்டானே!'' என்றான் கோபத்தோடு.

திலகவதியின் கோபம் எல்லை மீறியது.

''போதும்... நிறுத்துடா! தொடர்ந்து தப்புப் பண்றே! இன்னைக்குத் திருந்துவே நாளைக்குத் திருந்துவேன்னு

நானும் பாக்கறேன். திருந்தவே மாட்டேங்கறடா! இவ்வளவு ஆங்காரம் நல்லதுக்கில்லே! இனிமேயாவது அவ விஷயத்துல தலையிடாம இரு! அதுதான் நல்லது'' என்றார்.

''ஏன் தலையிட்டா என்ன செய்வீக?''

''என்ன செய்வேன்? நானும் வீட்டை விட்டுப் போயிடுவேன். உனக்குப் பணம் சொத்து இதெல்லாம்தான் முக்கியம். நானும் என் பொண்ணுகிட்டயே போறேன். எல்லாத்தையும் நீயே கட்டிட்டு அழு!'' என்றார்.

''அவசரப்படாதம்மா... பொறு'' என்று சமாதானம் செய்ய முயன்றார் வெங்கடாச்சலம்.

''அண்ணா நீங்களே சொல்லுங்க... இவன் ஆட்டத்துக்கெல்லாம் ஒரு அளவில்லையா? நான் அப்பவே சொன்னேன் பார்ட்னர்ஷிப் வேண்டாம்னு... போய் பார்ட்னர்ஷிப் போட்டான். அதுலயாவது ஒழுங்கா இருக்கணுமில்லே! அதுலயும் தப்பு செஞ்சு பேரைக் கெடுத்துகிட்டான். இவனோட பேராசைக்கு தங்கையோட வாழ்க்கையை பலி கொடுக்கிறேங்கறான். எப்படிப் பாத்துகிட்டு இருக்கிறது?'' என்று பொரிந்து விட்டார் திலகவதி.

வெங்கடாச்சலம் பெருமூச்செறிந்தார்.

''நீ சொல்றதெல்லாம் உண்மைதான்'' என்றார்.

திலகவதியும் அப்போது முடிவெடுத்தார். தான் உடனிருக்க வேண்டிய அவசியம் மகளுக்குத்தான் இருக்கிறது என்று.

திலகவதியும் பெட்டியைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டவுடன்தான் செந்திலுக்கு விபரீதம் புரிய ஆரம்பித்தது. ஆனாலும் வீம்பு தடுக்கவிடவில்லை.

திலகவதி புறப்பட்டுப் போன பின்தான் தன்னிடமும் ஏதாவது தவறு இருக்கிறதோ என்ற சிந்தனை முதன்



முதலாகத் தோன்றியது. ஆனால் இப்போது எல்லாமே கௌரவப் பிரச்சினையாக மாறிவிட்டது.

முன் வைத்த காலை பின்வைக்க முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது.

திலகவதி செல்வதைச் சற்றே அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தான். திரும்பியும் பாராமல் அவர் நடப்பது அவனுக்குப் பெருத்த அதிர்ச்சியாக இருந்தது.

திலகவதி கிளம்பியே விட்டார்!

* * *

''மதனி. சங்கடப்படாதீங்க! ஒரு பத்து நாள் இருங்க! அதுக்குள்ளே கண்டிப்பா ஏதாவது முடிவு ஏற்படும்'' என்றார் வெங்கடாச்சலத்தின் மனைவி செங்கமலத்தம்மாள்.

''இல்லைங்க மதனி! நான் எதுக்காக வெளியே வந்தேன்னா பையன் தனியா இருந்தாக்கூடத் தப்பில்லே! ஆனா பொண்ணை வெளிய விடப்படாதில்லே! அதுக்குத்தான்.''

''நீ ஏம்மா! கவலைப் படறே! நம்ம காலனிக்குள்ளேயே வீடு இருக்கு பாத்துக்கலாம்'' என்றார் வெங்கடாச்சலம்.

இரண்டே நாளில் வீடு பார்த்தார்கள்.

இறைவியிடம் போய் விஷயம் சொன்னதும் அவள் பெரிதும் வருத்தப்பட்டாள்.

''அம்மா! அண்ணன் ரொம்ப லோன்லியா ஃபீல் பண்ணுவாக'' என்றாள். ''பண்ணட்டும்டி. அப்பத்தான் திருந்துவான்.... திருந்தலேன்னா அப்புறம் அவன் உறவுதான் எதுக்கு?'' என்றார்.

இறைவியும் ஹாஸ்டலில் சொல்லி விட்டு அம்மாவுடன் வந்து விட்டாள்.

வெங்கடாச்சலம்தான் ஒரு பாலம் போல் போய் வந்து கொண்டிருந்தார்.

வீட்டுக்குத் தேவையான பாத்திரங்களைக் கூட அவர்தான் எடுத்துக் கொண்டு வந்தார்.

திலகவதி மனது கேட்காமல் சாப்பாடு கொடுத்தனுப்பி னார். சாப்பிட மறுத்து விட்டான் செந்தில். திலகவதியும் அதற்கு மேல் வற்புறுத்தவில்லை.

* * *

இரவு பத்து மணியிருக்கும்!

தண்ணீர் குடிக்க வேண்டும் போல இருந்தது. எழுந்தான் செந்தில்குமரன்.

சமையல் கட்டுக்குப் போய் தண்ணீர் குடித்து விட்டு வந்தான்.

உறக்கம் வராது போல் தோன்றியது.

அம்மா வீட்டை விட்டுப் போய் ஒரு வாரமாகி விட்டது.

வீடு முழுக்கத் தூசாக இருந்தது. குடிப்பதற்குத் தண்ணீர் மட்டும் பிடித்து வைத்துக் கொண்டான்.

வீட்டுக்கு வருவதற்கே இப்போதெல்லாம் பிடிக்க வில்லை.

அப்போதுதான் சிந்திக்க ஆரம்பித்தான்.

சகோதரி வக்கீல் நோட்டீஸ் விடுகிறாள். அம்மா சற்றும் தயங்காமல் பிரிந்து போகிறார். ஆனால் தனக்கு மட்டும் பிடிவாதம் மாற மாட்டேன் என்கிறதே!

மனதில் குழப்பம் ஏற்பட்டது!



தனிமை அவனைத் தாக்கியது. தனிமையின் வழியில் தான் மெதுமெதுவாக அவன் சுயசிந்தனைக்கு வந்தான் என்று சொல்ல வேண்டும்.

அறிவழகன் எத்தனை பெரிய வாய்ப்பைக் கொடுத்தான். அவனுக்கு உண்மையாக இருந்திருந்தால் பேராசைப் படாமல் இருந்திருந்தால் இப்படி ஒவ்வொருவராக இழந் திருக்க வேண்டியிருந்திருக்காதோ?

இரண்டு விதமாகவும் யோசிக்கிற தெளிவு இப்போது தான் வந்தது. ஆனாலும் வீம்பு விடவில்லை.

''போய்ப் பார்க்கக் கூடாது'' என்று முடிவு செய்து கொண்டான்.

அதே நேரம்!

இறைவியும், திலகவதியும் அங்கே சாப்பிடப் பிடிக் காமல் அமர்ந்து இருந்தார்கள்.

''அம்மா! நீயும் சட்டுன்னு வந்திருக்கக்கூடாது. அண் ணன் ரொம்பத் தவிக்கப் போயிரும்'' என்றாள் இறைவி.

''போ... இறைவி... என்ன தவிச்சாலும் அவன் இடத்துல இருந்து அவன் இறங்கி வரமாட்டான் தெரியுமா? வீம்பு பிடிவாதம். அவங்கப்பா வகையில இருந்து வந்தது'' என்றார் வருத்தத்தோடு.

''அம்மா... சாரிம்மா! என்னாலதானே... எல்லாமே?''

''இல்லடி... எல்லாமே அவனாலதான். தன்னோட நிலைமை என்ன, இடம் என்னான்னு புரிஞ்சுக்காம... ரொம்ப என்னமோ பொறக்கும் போதே பணக்காரனா இருந்தவன் மாதிரி நினைச்சுக்கிட்டிருக்கான் பாத்தியா... அதுதான் தப்பு'' என்றார்.

''அம்மா... திரும்பத் திரும்ப அதையே பேசி... என்னத் துக்கு ஆகுது. இனி நடக்கப் போறது என்னன்னு பாப்போம்'' என்றாள் இறைவி.

"இறைவி! நான் தெளிவான முடிவுல இருக்கேன். எப்பவும் உனக்கும், அறிவழகன் தம்பிக்கும் கல்யாணம், இன்னும் நாலு மாசம் கழிச்சு நடக்கறதாத்தான் இருக்கு... உங்க அண்ணனுக்கு ஒரு மாசம் டைம் குடுக்கலாம்னு இருக்கேன். அதுக்குள்ளே அவன் மனசு மாறினா சரி. இல்லன்னா... நானே முன்னாலே நின்னு உனக்கும், அறிவழகனுக்கும் கல்யாணம் பண்ணி வச்சர்லாம்னு இருக்கேன்" என்றார்.

"அம்மா! நான் வேண்ணா அறிவழகன்கிட்டே பேசறேன். இன்னும் கொஞ்ச நாள் கல்யாணத்தைத் தள்ளிப் போடலாம். அண்ணன் மனசு தேறட்டும்மா..." என்றாள்.

"இல்லடி... பிடிவாதமா இருக்கான். வீணா பாசத்தையும், வாழ்க்கையையும் போட்டுக் குழப்பிக்காதே. உன் வாழ்க்கையை நீ பாரு. அவனை நான் சரி பண்ணிக்கறேன்" என்றார்.

"யோசிப்போம்மா...!" என்றாள் இறைவி. மறுபடியும் அம்மாவின் முகத்தை ஆர்வமாகப் பார்த்தாள்.

"அம்மா... நம்ம சாப்பாடு... குடுத்தனுப்பி விட்டா... அண்ணா... வேண்டாங்கறான். வெங்கடாச்சலம் மாமா வீட்லருந்து சாப்பாடு குடுத்தனுப்புன மாதிரி ஏற்பாடு செய்யலாமா?" என்றாள்.

அம்மா புன்னகைத்தார்.

"ஏன்டி! இறைவி... எனக்கு மட்டும் அவன் நல்ல சாப்பாடு சாப்பிடணும்னு இருக்காதா? ஒரு மாசம் இருக்கட்டும்டி. அப்பத்தான் தனிமைன்னா என்ன தெரியும்? ஏன் நாம ரெண்டு பேருமே இப்படிப் பிடிவாதமா நிக்கறோம்னு யோசிப்பான்" என்றார்.

இறைவிக்கு மனசாகவில்லை.



அதே சமயம்!

அறிவழகன் முகத்தை அழுந்தத் துடைத்தபடி இறைவியின் வீட்டில் என்னென்ன நடக்கிறது என்பதை குறிப்பிட்ட ஒருவர் சொல்ல ஆழ்ந்த மௌனத்துடன் கேட்டுக் கொண்டிருந்தான்.

இறைவி அனுப்பிய வக்கீல் நோட்டீஸ் பற்றிக் கேட்ட போது மட்டும் அவனது முகத்தில் லேசான புன்னகையும், விசித்திரமான முகபாவமும் தோன்றி மறைந்தது.

கண்கள் இரண்டும் நிட்சண்யத்துடன் மின்னின.

தீவிரமாகக் கேட்டுக் கொண்டான். பிறகு பேசியவரைப் பார்த்து

"சரி... நீங்க போங்க...! நான் பாத்துக்கறேன்" என்றான்.

மறுபடியும்... படுக்கைக்குப் போனவன் வெகுநேரம் யோசனையில் ஆழ்ந்தான். சில முடிவுகளை எடுத்துக் கொண்டான். அதன் விளைவாக செந்தில்குமரனின் வாழ்வில் விளையப் போகிற புயல்களின் அளவை யாருமே கணித்திருக்க முடியாது.

## 18

"இப்பத்தான் பயல் முகத்துல லேசா வாட்டம் தெரியுது" என்று வந்தார் வெங்கடாச்சலம்.

"என்னமோ போங்கண்ணா! ஒவ்வொரு வேளையும் எனக்கு சோறே இறங்க மாட்டேங்குது. பையனை அங்கே விட்டுட்டு நமக்கு இங்கே என்ன சாப்பாடு வேண்டிக் கிடக்குன்னு இருக்கு" என்றார் நிலவதி.

"என்னம்மா... செய்யறது... எங்காத்துக்காரி கூட சொன்னா... நா வேண்ணா நேரத்துக்குக் கொண்டு போய் சாப்பாடு குடுக்கறேன்னு. ஆனா, பயல்தான் வேண்டாங்கறான்" என்றார்.

"என்ன சொல்றான்... உங்க மருமகப் புள்ளே!" என்றாள் நிலவதி.

"நேத்திக்குத்தான் கொஞ்சம் புலம்பினான். என்னை விட நேத்து வந்த அறிவழகன் இவுகளுக்குப் பெருசாப் போனானா?ன்னு."

"அப்ப... நான் மெதுவா சொன்னேன். தம்பி! அறிவழகன் பிரச்சினையை விடு. நீ இப்பப் போய் அந்த சபரீஷுக்கும் இறைவிக்கும் கல்யாணம்னு ஆரம்பிச்சிருக்க வேண்டாம் தெரியுமோ? அப்படின்னேன்."

"கொஞ்சம் காது குடுத்துக் கேட்டான். பிறகு சொன்னான்."

"அதுக்காக... வக்கீல் நோட்டீஸ் விட்டுடறதான்னான். அப்ப நான் சொன்னேன். தம்பி! இப்பவும் இறைவி என்ன சொல்லுது. அறிவழகனை அண்ணனுக்கு பிடிக்கலேன்னா... நான் அறிவழகனைப் பண்ணிக்கலே. ஆனா, எத்தனை காலமானாலும் வேற யாரையும் கல்யாணம் பண்ணிக்க மாட்டேங்குது..."

"அதுக்கு என்ன அர்த்தம்!"

"தம்பி! தப்போ... ரைட்டோ அது அறிவழகன் கூட நெருங்கிப் பழகிருச்சு. எத்தனையோ கற்பனையில இருந்திருக்கும். திமிர்ன்னு அந்த இடத்துல வேற ஆளைக் கொண்டு வந்து நிறுத்தினா...! அதுதான் சொல்லுதே... நான் மனசார அவரை ஹஸ்பெண்டா நினைச்சுட்டேன்னு" என்றார்.

"அதுக்காக... அவன்கிட்டே நான் போய்க் கெஞ்ச முடியுமா?"



"தம்பி! நல்லா யோசிச்சுப்பாரு. அவரு உன்னை வெளிய போகச் சொன்னாரா? நீயாத்தானே வெளியே வந்தே! ஒரு தப்பைக் கண்டா முதலாளிக கேக்காம இருப்பாகளா? கேக்கத்தான் செய்வாக... ஏன்... இப்படி யோசியேன். புருஷனாவே நினைச்சுட்டேன்னு சொல்ற ஆள்கிட்டயே... எங்கண்ணன் சம்மதம் கிடைக்கற வரைக்கும் எங்கிட்டப் பேசாதீங்கன்னு சொல்லிப்புட்டு வந்துருக்கே... அது உன்னை விட்டுக் குடுக்கலியே..."

செந்தில்குமரன் மௌனமாகி விட்டான். பிறகு மெதுவான குரலில் கேட்டான்.

"அப்ப... நான் சபரீஷுக்கு நான் என்ன பதில் சொல்லட்டும்? சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டின்னு நான் அவனையுமில்ல கௌப்பி விட்டுட்டேன்" என்றான் சிந்தனையோடு.

வெங்கடாச்சலம் சற்று எழுந்து மேலும் கீழும் நடந்தார்.

"தம்பி... நான் சொல்லுதேன்... கேளு. எனக்குத் தெரிஞ்ச ஒரு பெரிய பார்ட்டி இருக்காரு. அவுக மூலமா சபரீஷ் மறுபடியும் உன்கிட்டே வந்து பேசாத அளவுக்கு நான் தீர்த்து விட்டுர்றேன். சரின்னு சொல்லு..." என்றார்.

செந்தில்குமரனின் முகம் மலர்ந்தது. அவனும் சபரீஷுக்கு வாக்குக் கொடுத்து விட்டு ஆப்பசைத்த குரங்கு மாதிரி விழித்துக் கொண்டிருக்கிறான் என்பது புரிந்த வெங்கடாச்சலம் மாமா உள்ளுக்குள்ளே சிரித்துக் கொண்டார்.

"சரி... அப்படி வேண்ணா... ஏதாவது செய்ங்க" என்றார்.

அந்த பேச்சு வார்த்தையை அப்படியே இப்போது நிலவதி அம்மாவிடம் சொல்லவும் அவரது மனம் சற்றே குளிர்ந்தது.

மேற்கொண்டு தான் சொன்ன மற்றொரு விஷயத்தையும் சொன்னார்.

"பாரு... தம்பி! உங்கம்மாவும், தங்கச்சியும் மட்டும் சந்தோஷமா இருக்காகன்னா நினைச்சே! ரெண்டு பேருக்கும் சாப்பாடே செல்றதில்லே. நம்முளுக்குத்தானே கம்மா ஒரு ரசத்தை வைம்மா. எதுக்கு? அண்ணன் இல்லாம சாப்பிடவே பிடிக்கலேன்னு ரெண்டு பேரும் ஏதோ பேருக்கு வயித்துக்குக் கடனேன்னுதான் கொட்டிக்கறாக..." என்றார்.

செந்தில்குமரனின் மனம் சுத்தமாகக் குளிர்ந்தே போனது.

"நான் மட்டும் என்ன சந்தோஷமாவா இருக்கேன்? கெடந்து தவிச்சிட்டுத்தான் இருக்கேன். எது வாங்கினாலும் இறைவிக்குப் பிடிக்குமான்னு பாத்துப் பாத்து வாங்கிப் ...க்கமாப் போச்சு" என்றான் இறங்கிய குரலில்.

"சரி...விடு... ஏதோ ஒரு சாக்கு சொல்லி மறுபடியும் ...வுகளை வீட்டுக்குக் கூப்பிட்டுக்கிடலாம்."

"என்னா பேசறீக... மாமா! அது எதுக்கு சாக்கு சொல்...? அவுக போன மாதிரியே வந்தே சேர்றதுதானே!"

"ஏதோ! அப்ப நீ கூப்பிட மாட்டியா?"

"நான் என்னத்துக்குக் கூப்பிடணும்?"

"நீதானப்பா... வெளியே போகச் சொன்னது."

"நான் சொன்னா... அவுக... போயிடறதா?"

"இது எனக்கும்தான் வீடுன்னு இருக்க வேண்டியது ...னே!"

"அப்படிப் போடு...!" என்று கலகலவென சிரித்தார் ...கடாச்சலம்.

...போது அதைத் நிலைவதியிடம் சொன்னபோது ...ம் சிரித்தார்.



"இறுக்குப் பய புள்ளே! இப்படித்தான், முதல்ல பேசிப் புடுவான். அப்புறமா... வருத்தப்படுவான்" என்றார்.

வெங்கடாச்சலம் இன்றைக்குக் கொஞ்சம் மனநிறைவாக உணர்ந்தார். ஏதோ ஒரு குடும்பம் சிதைவதிலிருந்து மெது மெதுவாக மன மாற்றம் ஏற்படுத்துகிற கைங்கரியத்தைத் தன்னால் செய்ய முடிகிறதே என்று.

அன்றைக்கு வீட்டுக்குப் போனவுடன் மனைவியிடமும் பகிர்ந்து கொண்டார்.

"ஏதோ... இந்த ஊருக்கு வந்ததுக்கு... இந்த விஷயம் நல்ல படியா முடிஞ்சாச் சரி..." என்றார் வெங்கடாச்சலம் மகிழ்ச்சியாக.

அதே சமயம் வேறொரு நினைவு மனதுக்குள் ஓட வெங்கடாச்சலம் சிரித்துக் கொண்டார்.

"என்னா... சிரிப்பு!" என்று அந்த அம்மையார் கேட்க "ஒன்னும் இல்லே!" என்றார். ஆனால் ஏதோ இருக்கிறது என்பது அந்த அம்மாவுக்கும் புரிந்துதான் இருந்தது.

* * *

இறைவிக்கு இன்றைக்குத்தான் மனசு சற்றே தெளிவாகி இருந்தது.

கிட்டத்தட்ட ஒரு மாதம்!

வீட்டை விட்டு வெளியே வந்தது!

ஹாஸ்டலில் சேர்ந்தது! பிறகு அந்த சபரீஷ் இரண்டு மூன்று முறை வந்து தொல்லை கொடுத்தது. அதற்கு அண்ணனும் உடந்தையாக இருந்தது. இதெல்லாம் ஒருவிதமான அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது.

அறிவழகனைப் பார்த்து அவன் தோளில் சாய்ந்து கொண்டு கதறித் தீர்க்க வேண்டும் போல் இருந்தது. ஆனால் பெரிய

மனுஷியைப் போல் என்னைப் பார்க்காதீங்கன்னு ஆணை விட்டு விட்டு வந்தது தான்தானே.

தன்மீதே அவளுக்குக் கோபம் வந்தது.

நேற்று வெங்கடாச்சலம் மாமா வந்து பேசி விட்டுப் போனதற்குப் பிறகு மனது கொஞ்சம் தெம்பாகி இருந்தது.

தங்கள் பிரிவை அண்ணன் உணர்கிறான் என்பதும் வருத்தப்படுகிறான் என்பது அவளுக்குப் புரிந்தது. நேற்றிரவு அவளும், அம்மாவும் வெகு நேரம் இது குறித்துத்தான் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''ஏண்டி... இறைவி! உங்கண்ணனுக்கு கொழுப்பு அடங்கல பாத்தியா?''

''ஏன்... அப்படி சொல்றீக?''

''பின்னே! அவுகளாத்தானே போனாங்க. அவுகளே வரட்டும்னுதானே சொல்றான்...!''

''இறைவி... சிரித்தாள். அம்மா! அண்ணனுக்கு ரெண்டு பேரையும் விட்டுட்டு இருக்க முடியலே! ஆனா, குப்புற விழுந்தாலும் மீசையில மண் ஒட்டலேன்னு நடிக்கறான்'' என்றாள்.

அம்மா சற்று நேரம் மௌனம் காத்தார். பிறகு கேட்டார்.

''அப்ப திரும்பிப் போயிடலாம்கறியா.''

''அம்மா! நான் எதுவும் சொல்லலே! என்னைப் பெத்தவரை சபரீஷைக் கல்யாணம் பண்ணிக்கோ... ரீக்காவைக் கல்யாணம் பண்ணிக்கோன்னு தொல்லை பண்ணாம இருந்தாச் சரி... நான் வரேன்'' என்றாள்.

அம்மா வழக்கமில்லாத வழக்கமாக குறும்புச் சிரிப்புடன் பார்த்தார்.



''அப்ப... அறிவழகனைப் பத்திப் பேச்சே இல்லையோ!'' மகள் முகம் சிவந்தது. என்ன சொல்வது என்று தெரியாமல் மௌனம் காத்தாள்.

''இத பாருடி! இறைவி... அவன் இப்பத்தான் யோசிக்கவே ஆரம்பிச்சிருக்கான். இன்னும் கொஞ்சம் யோசிக்கட்டும். தன் தவறை உணரட்டும். அதுக்கப்புறமா நாம மறுபடியும் வீட்டுக்குப் போறதைப் பத்தி யோசிக்கலாம். இந்த மாதிரி ஒரு படிப்பினை வந்தாத்தான் அவனும் திருந்துவான்'' என்றார் திலகவதி.

இறைவி சற்று நேரம் அம்மாவைக் கண்கொட்டாமல் பார்த்தாள். பிறகு கட்டிக் கொண்டாள்.

''தேங்க்ஸ்... அம்மா! நீ குடுக்கற மாரல்சப்போர்ட் எனக்கு ரொம்பத் தெம்பா இருக்கு. மகனைக் கூட விட்டுக் குடுத்துட்டு... எனக்காக வீட்டை விட்டு வெளிய வந்திருக்கியே. ரொம்பத் தாங்க்ஸ்'' என்றாள்.

திலகவதி பெருமூச்செறிந்தார்.

''அவனுக்கென்னடி ... ஆண்பிள்ளை! இது இல்லாட்டி இன்னொண்ணும்பான். நாம பொம்பளைகடி. அப்படியெல்லாம் நியாயமில்லாம மனசை மாத்திக்க முடியாதுன்னு அவனுக்குத் தெரியணும். அவன் உன் மனசில ஏற்படுத்தின வலி என்னன்னு எனக்குத்தானே புரியும்'' என்றார்.

தாய் என்பதைக் காட்டிலும், பெண்ணுக்குப் பெண்ணாக அம்மா... தனக்குக் கொடுக்கிற தார்மீக ஆதரவு அவளுக்குப் புரிந்தது. ஆனாலும் சொன்னாள்.

''அம்மா... எல்லா ஆம்பளைங்களும் அப்படின்னு நினைக்காதீங்க... அறிவழகன் கிட்டே எங்கண்ணனுக்கும் எனக்கும் உள்ள பிரச்சினையை நான் பாத்துக்கறேன். நீங்க

தலையிடாதீங்கன்னு ஒரு வார்த்தைதான் சொன்னேன். இன்னைய வரைக்கும் அதைக் காப்பாத்தறார் இல்லே! இன்னொன்னு சொன்னியே... இது இல்லாட்டின்னா இன்னொன்னுன்னு... என் அறிவழகன் எல்லாம் கண்டிப்பா... அப்படி மாறுகிறவர் இல்லே!'' என்றாள்.

அம்மாவின் முகத்தில் மகளின் பெருமிதம் நிறைந்த முகம் பார்த்து குறும்புச் சிரிப்பு மலர்ந்தது.

''கவலைப்படாதடி... இறைவி! கண்டிப்பா கடவுள் உங்க ரெண்டு பேரையும் சேர்த்து வைப்பான்'' என்றார் திலகவதி.

அதையெல்லாம் யோசித்துக் கொண்டே இறைவி தெருவின் ஓரமாக நடந்து கொண்டிருந்தாள்.

வீட்டுக்குக் காய்கறி வாங்கிக் கொண்டு போகலாம் என்றெண்ணியபடி நடந்து கொண்டிருந்தாள்.

''இன்றைக்கு மீனாஷியம்மன் கோவிலுக்குப் போய் வர வேண்டும். அம்மாவையும் அழைத்துக் கொண்டு போக வேண்டும்'' என்று எண்ணிக் கொண்டாள்.

அப்போதுதான் தனக்கு அந்த உள்ளுணர்வு தோன்றியது.

யாரோ தன்னைப் பின்னாலிருந்து கவனிக்கிறார்கள் என்ற உணர்வுதான் அது.

சென்ற முறை சபரீஷ் தனியாக வந்து தன்னிடம் சொல்லி விட்டுப் போன வார்த்தைகள் இப்போது நினைவுக்கு வந்தது.

''சும்மா நான் பாட்டுக்கு நானுண்டு... என் வேலையுண்டு இருந்தேன் என் வீடு தேடி வந்து என் தங்கச்சியைத் தரேண்டான்னு உசுப்பி விட்டுட்டு இப்ப ரெண்டு பேரும் எனக்குத் தண்ணியா காட்டறீங்க'' என்று வம்பிழுத்ததும் நினைவுக்கு வந்தது.



அம்மாவிடமும் வெங்கடாச்சல மாமாவிடமும் அதைச் சொல்லியிருந்தாள். தான் சொன்ன பதிலையும் சொன்னாள்.

''இத பாருங்க. எனக்கும் உங்களுக்கும் பேச்சு இடையாது. உங்ககிட்டே வந்து பேசினது எங்க அண்ணன். அவுக வந்து பேசறதுக்கு முன்னாடி என்கிட்டே சம்மதம் வாங்கலே. அப்ப நான் எப்படிப் பொறுப்பாக முடியும்? அப்புறம்... இப்படி செய்யறது பூச்சாண்டி காட்டறது எல்லாத்தையும் நிப்பாட்டிக்குங்க'' என்றாள்.

அவன் உறுமிக் கொண்டே புறப்பட்டுப் போனான்.

திரும்பிப் பார்ப்பதற்கும் பயமாக இருந்தது. ஆனால் திரும்பிப் பார்க்காமல் உறுதி செய்து கொள்ள முடியாதே.

ஒரு சிறிய பெட்டிக்கடை இருந்தது. சட்டென்று நின்றாள்.

மாதப் பத்திரிகை ஒன்றை வாங்கினாள். காசைக் கொடுத்துக் கொண்டே மெதுவாகத் திரும்பினாள். ஒரு ஆள் ஒளிந்து கொள்வது நன்றாகவே தெரிந்தது.

இப்போது நன்றாகவே உறுதியாகிவிட்டது.

நெஞ்சில் பயம் பிடித்துக் கொண்டது.

கையில் இருந்த கூடையை வேகமாக வீசியபடி நடந்தாள். அந்தப் பெரிய ஸ்டோருக்குள் நுழைந்தாள். மனதுக்குத் தோன்றியதையெல்லாம் வாங்கினாள்.

அப்படி இப்படி ஒரு கால் மணி நேரத்துக்கு மேல் ஓட்டி விட்டுப் பிறகு வெளியே வந்தாள்.

மெல்லக் காலடி எடுத்து வைத்தாள். இரண்டு எட்டுப் போனவுடன் மெதுவாகத் திரும்பிப் பார்த்தாள். ஏனென்றால் அந்தப் பக்கத்தில் அவளது சகோதரனின் நண்பர் ஒருவரின் கடை இருந்தது. அவசியமானால் உள்ளே நுழைந்து

விடலாம் என்று துணிவாக இருந்தாள். ஆனால் எதற்கும் அவசியம் இருக்கவில்லை.

தெரு முனைக்கு வந்து நின்றாள். பஸ்ஸில் போகலாமா, இல்லை நடந்து போகலாமா என்று யோசித்தாள். பஸ்ஸில் ஏறிப் போகிற அளவுக்குத் தன் வீடு அதிக தூரத்தில் இருக்கவில்லை.

யாரோ தொடர்ந்து வந்த மாதிரித்தான் இப்போதும் தோன்றுகிறது. நடந்து போவதென்றால் இன்னும் பதினைந்து நிமிட நடை இருக்கிறது.

சரி... ஆட்டோ ஏதாவது கிடைத்தால் ஏறி விடலாமா என்று பார்த்தாள்.

ஆட்டோ எதுவும் வரவில்லை. அதோடு ஆட்டோ ஸ்டாண்டுக்கும் இன்னும் கொஞ்ச தூரம் நடக்க வேண்டியிருந்தது.

குழப்பத்தில் நிற்கையில் திடீரென்று அது நடைபெற்றது!

ஒரு கார் வந்து சர்ரென்று அருகில் நின்றது. அவள் என்ன ஏது புரிந்து கொள்வதற்கு முன்பாகவே ஒரு கை அவளை உள்ளே இழுத்தது.

கிட்டத்தட்ட அலறியே இருப்பாள். வழக்கமாக சினிமாக்களில் பார்ப்பது போல் காருக்குள் நான்கைந்து அடியாட்களோ மீசைக்கார ரௌடிகளோ இருக்கவில்லை.

மாறாக நன்றாக உடை உடுத்திக் கொண்டு அழகாகச் சிரித்த ஒரு பெண் இருந்தாள். முன்னாலே டிரைவர் இருந்தான்.

"நீங்க... யாரு? எதுக்காக இப்படி வம்படியா என்னைக் கார்ல ஏத்தினீங்க?" என்றாள் கோபமாக.

"மேடம்! கோபப்படாதீங்க. ஜஸ்ட் ஒரு நிமிஷம்... பொறுத்தீங்கன்னா... எல்லாக் கேள்விக்கும் விடை கிடைச்சுரும்."



"வாட் நான்சென்ஸ் பலவந்தமா இழுத்துட்டுப் போறீங்க... எங்க கேள்விக்கெல்லாம் எப்படா விடை கிடைக்கும்னு நாங்க காத்துகிட்டிருக்கணுமா?"

"மேடம்... ப்ளீஸ் கொஞ்சம் பொறுங்க."

"ஹலோ! இப்பக் காரை நிறுத்தலேன்னா... நான் எட்டிக் குதிச்சுடுவேன்" என்று முயற்சித்த போதுதான் புரிந்தது கார்க் கதவுகள் இறுக்கமாக மூடப்பட்டிருந்தன.

அப்போது முன்னால் இருந்த டிரைவரின் குரல் ஒலித்தது.

"இறைவி! ப்ளீஸ்... அமைதியா... உட்கார்" என்று.

அந்தக் குரல்!

மிகவும் பழக்கமான குரல்! எப்போதடா... கேட்போம்... என்று அவள் ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த குரல்.

"நீங்களா...?"

"ம்... நாங்களேதான்!"

"நீங்க... எதுக்கு... இப்படியெல்லாம்... டிராமா... செஞ்சுகிட்டு..." என்று அவள் நிறுத்த.

"அதான்ம்மா...! அவங்க சொன்னாங்களே! ஒரு பத்து நிமிஷம் பொறுத்தா... எல்லாத்துக்கும்... யு அண்டர்ஸ்டாண்ட்... எல்லாத்துக்கும் விடைகிடைக்கும்" என்றது குரல்.

இறைவி முகம் சிவக்கக் குழப்பத்துடன் பக்கத்திலிருக்கிற பெண்ணைப் பார்க்க அவனோ குறும்புத்தனமான குமிழ் சிரிப்புடன் கண்களை வெளியே ஓட விட்டபடி அமர்ந்திருந்தான்.

இறைவி கப்பென்று வாயை மூடிக் கொண்டு அமர்ந்து கொண்டாள். ஆனால் உள்ளே கோபம் குமிழியிட்டுக் கொண்டு கிளம்பியது.

# 19

''நீங்களா... இப்படி செஞ்சீங்க...! அந்த சபரீஷ்தான் ஏதோ விபரீதமா செய்யப் போறான்னு பயந்து போயிருந் தேன். அந்த நேரத்துல... நீங்க...!'' என்று இன்னும் பட படப்பு அடங்காதவளாகவே பேசினாள் இறைவி.

அறிவழகன் சிரித்தான்.

''எந்த சபரீஷும்... என் மகாராணியின் சுண்டு விரல் மேலகூட கை வைக்க முடியாது... மேடம்... தெரிஞ்சுக் குங்க.'' என்றான்.

வாய் பேசிக் கொண்டிருக்கும்போதே... கை அவளைத் தன் அருகில் இழுத்தது.

''கிட்டத்தட்ட... இருபது நாளாச்சு... பேசி... போன்ல கூட வர மாட்டேங்கறே?'' என்று முணுமுணுத்தான். கைகள் இடுப்பை வளைத்துக் கொண்டான்.

முகம் முகத்தோடு இழைய மெல்லிய குரலில் பேசிக் கொண்டிருந்தான்.

இறைவி நிமிர்ந்து பார்த்தாள். ஆனால் அவன் சொன்னான்.

''நீ சொன்ன ஒரே வார்த்தைக்காக... இத்தனை நாள் பேசாம ஒதுங்கி நின்னு வேடிக்கை பாத்துகிட்டிருந்தேனே... துக்காக எந்தப் பாராட்டும்... இல்லையா?'' என்றான்.

அவள் முகம் நிமிர்த்தி அவனைப் பார்க்க முடியாமல் வித்தவள் மெல்ல விலகிக் கொண்டாள். ஆனால் அறி ழகனின் பார்வையின் கனம் தாங்காமல் மீண்டும் அவன் ர்பிலேயே முகம் புதைத்துக் கொண்டாள்.

பத்து நிமிடங்களுக்கு மேல் மெல்லிய குரலில் தன் அன் மொழியால் மனதில் உள்ளதையெல்லாம் கொட்டித்



தீர்த்தான். அவனது வேகத்துக்கு அவளும் சற்றே இடம் கொடுத்தாள்.

சற்றே எல்லை மீறவும் அனுமதித்தாள். பிறகு விலகிக் கொண்டாள்.

சுவற்றைப் பார்த்தபடி முணுமுணுத்தாள். ''இத்தனை நாளா நான் சொன்ன ஒரு வார்த்தைக்காகப் பேசாம இருந்தீங்களே... அதுக்குத் தேவையான அளவு பரிசு குடுத் துட்டேன்... போதுமா!'' என்றாள்.

''யாரைக் கேட்கறே? சுவத்தையா? அது பதில் சொல் லுமா என்ன?''

''நான் உங்களைத்தான் கேட்டேன்!'' என்று மறுபடியும் முணுமுணுத்தாள்.

''அது எங்களைப் பாத்துக் கேட்கணும்'' என்றான்.

அவள் முகம் சிவந்து கிடக்க முகத்தை மெல்ல நிமிர்த்த ''போதுமா?'' என்று கேட்டான்.

''ம்... இப்போதைக்கு...!'' என்று சொல்லு முன்பே அவள் உதடுகள் பிதுங்க... அவள் குழந்தையைப் போல் தேம்பியழ ஆரம்பித்தாள்.

''ஹேய்! என்ன ஆச்சு? கம்... ஹியர்...!'' என்றான். மறுபடியும் அருகில் இழுத்துக் கொண்டான்.

''எத்தனை வேதனையான அனுபவங்கள் தெரியுமா? திடீர்னு அன்பான அண்ணனே எதிரா நிக்கறான். எவனோ சபரீஷாம் அவனைக் கூட்டிட்டு வந்து இவனைத் தான் கல்யாணம் பண்ணணுங்கறான். இவன் இஷ்டத்துக்கு ஆடணுமா... என்ன? அந்த சமயத்துல... அந்த சமயத்துல... நீங்க... ஆதரவுக்கு... இல்லாம...'' என்று தேம்பினாள்.

''ஹேய்... மக்கு! என்ன நீ?'' ரொம்ப தைரியமா அண் ணனை எதுத்துட்டு வெளியே வந்தே. தனியாப் போய்

றாண்டல்ல தங்கிலே...ன்னு... கேள்விப்பட்டு... எவ்வளவு பெருமையா இருந்தேன். நீ என்னடான்னா... இப்ப என்னமோ...இப்படிக் கோழையாட்டமா...'' என்று புன்னகைத்தான்.

தனது பாண்ட் பாக்கெட்டிலிருந்து கர்ச்சீஃபை எடுத்து அவள் கன்னங்களைத் துடைத்து விட்டான். மறுபடியும் முத்திரை பதித்தான்.

''நீதான் உனக்கும்... உங்கண்ணனுக்குமான பிரச்சினை. தலையிடாதிங்கன்னு சொன்னே. ஆனா, அதுக்காக எனக்கும், என் எதிர்கால மனைவிக்குமான தொடர்பை நான் விட்டுடுவேனா... என்ன? ஒண்ணு தெரிஞ்சுக்கடா... என்னோட கைகள் நீளமானவை... என்னோட ராஜ்யம் ரொம்பப் பெரிசு. எவ்வளவு தூரம் வேண்ணா... அது நீளும்!'' என்றான்.

அவள் புரியாதவளாகப் பார்த்தாள்.

''வேண்டாம். விட்ரு...! அப்புறம்... ஒரு நாள் இந்தப் பிரச்சினைகள் முடிஞ்சப்புறம்... நாம சாவகாசமாப் பேசலாமில்ல... அப்ப எல்லாத்துக்கும் நான் விளக்கம் சொல்றேன். ஹேய் அப்படி முழிக்காதே! எனக்கு... எனக்கு...'' என்று மறுபடியும் குனிய அவள் லாவகமாக விலகிக் கொண்டாள்.

சிரித்தான். கலகலவென சிரித்தான்.

''ம்! ஆசை! ஆசை!'' என்று கட்டை விரலை ஆட்டிக் கொண்டு ஒரிரு நிமிடங்களுக்கு நிறுத்தாமல் சிரித்தான்.

அவள் அந்த சிரிப்பை ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒரு மாதம் அடக்கி வைத்திருந்த உணர்வுகள் எல்லாம் வெளிப்படுவதனால்தான் அப்படி சிரிக்கிறான் என்பது புரியவருவாக அருகில் இருந்தாள்.



''சரி... சரி... உட்காரலாம்!'' என்று அமர்த்திக் கொண்டான்.

''அத்தைக்கு... போன் செய்து... ஒரு ஃபிரண்டை பாக்கப் போயிருக்கேன்... அப்புறம் வர்றேன்னு சொல்லு...'' என்றான்.

சொன்னாள்.

''ஹேய்! உங்கண்ணன் என்ன என்னை மாங்காய் மடையன்னு நினைச்சுகிட்டானா? அவன் பாட்டுக்கு... வேற மாப்பிள்ளை பாக்கிறான்... என்னென்னமோ ஏற்பாடு செய்யறான். நல்லவேளை நீயே போராட்டத்திலே இறங்கவும் பேசாம ஒதுங்கி வேடிக்கை பார்த்தேன். அந்த சபரீஷோ கிபரீஷோ... அவன் மட்டும் இனியொரு ஸ்டெப் எடுத்திருந்தான். மகனே... ஆளையே முடிச்சிருப்பேன்... தெரியுமா?'' என்றான்.

இறைவி அவன் தோளில் சாய்ந்து கொண்டாள். அவனது கோபம் அவளுக்கு எவ்வளவோ இதமாக இருந்தது. ஆனால் சொன்னாள்.

''அதுக்குத்தான் அவசரப்பட்டு எங்கண்ணனுக்கு... பார்ட்னர்ஷிப் குடுக்க வேண்டாம்னு சொன்னேன்.''

''அடப்போடி! நான் என்னத்தைக் கண்டேன் பணத்தைப் பார்க்க ஆரம்பிச்சவுடனே பேராசையாயிடும்னு நான் கண்டேனா?'' என்றான்.

அவளிடமிருந்து பதில் வராமல் போகவே திரும்பிப் பார்த்தான். அதற்குப் பிறகுதான் பயன்படுத்திய வார்த்தைகளின் பொருள் உணர்ந்தான்.

''ஐ... ம்... சாரி!'' என்றான்.

''பரவாயில்லே!'' என்றாள். ஆனால், அந்த உரிமைக் கோபம் தனக்கு எவ்வளவு இதமாக இருந்து எப்படி மேலும் ஒட்டிக் கொள்வதன் மூலமாகக் காட்டிக் கொண்டாள்.

அவனும் சிரித்துக் கொண்டான்.

இடக்கையை இறைவியின் தோளுக்கு மேல் லேசாகப் போட்டுக் கொண்டு இறுக்கிக் கொண்டான்.

"இத பார் நான் எதுக்கு இப்பக் கெட்டத்தட்ட உன்னை கடத்திட்டு வந்தேன்னா..." என்று காரணம் சொன்னான். அவள் திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்த்தாள்.

"ம்ஹூம்... நான் மாட்டேன்!" என்றாள்.

"நீ மாட்டேன்னா... யார் விடறா?" என்றான். அவள் எழுந்தாள். அவனிடமிருந்து தப்பிப்பதற்காக ஓட முயன்றாள்.

முடியவில்லை. சிக்கிக் கொண்டாள்.

* * *

சபரீஷ் இன்றைக்கு யோசனையிலேயே இருந்தான்.

இறைவியின் மீது அவனுக்கு ஒரு கண் இருந்தது. முதலிலேயே முயற்சித்தும் பார்த்தான். அந்த சமயத்தில் இறைவிக்கும் கல்யாணம் செய்வதற்கு இன்னும் இரண்டு வருஷமாகும் என்று சொன்னான் செந்தில்குமரன்.

சபரீஷ் அதற்குப் பிறகு அதைப் பற்றி ஒன்றும் பெரிதாக நினைக்கவில்லை. எப்போது கல்யாணப் பேச்சு ஆரம்பிக்கும்மோ அப்போ போய்ப் பெண் கேட்கலாம் என்று முடிவு செய்து கொண்டான். ஆனால் கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தாற்போல் செந்தில்குமரனே வந்து பெண் கொடுக்கிறேன் என்று சொன்னபோது சபரீஷுக்கு உற்சாகம் கொப்பளிக்க ஆரம்பித்தது.

ஒரு பக்கம் உற்சாகம் ஏற்பட்டாலும் இன்னொரு பக்கம் ஒரு விதமான சந்தேகம் ஏற்பட்டது. தானாகப் போய்க் கேட்டுக் கொண்டிருந்த போது பிகு செய்தாற்போல் பேசிக்



கொண்டிருந்தவன். இப்போது தானாக வந்து பெண்ணைக் கொடுக்கிறேன் என்று சொல்கிறானே என்று அக்கம் பக்கம் விசாரித்தான். ஓரளவுக்கு விஷயம் புரிந்தது. ஆனாலும் செந்தில்குமரன் அடித்த வேப்பிலையில் விழுந்து விட்டான்.

"டேய்! சபரீஷ்... நான் சொல்றதை நல்லாப் புரிஞ்சுக்க... எத்தனையோ கல்யாணங்க... மணமேடையில் மாறிப் போயிடும். இப்ப... என்ன... அவன் பணக்காரன்... ஆள் அம்சமா இருக்கான். அப்படிப்பட்ட ஆளை யாருக்குத்தான் பிடிக்காது. அது மாதிரி என் சிஸ்டருக்கும் ஒரு மயக்கம். ஆனா, நிதர்சனம் வேற... உண்மை வேறேன்னு... அவளும் தெளிஞ்சுக்குவா..." என்றான்.

சபரீஷுக்கும் அது சரியென்றே தோன்றியது. ஆனால் ஹாஸ்டலில் போய்ப் பார்த்ததற்குப் பிறகு அவனுக்கு ஒன்று புரிந்தது. அது இறைவி அப்படியெல்லாம் மனம் மாறுகிற பெண்ணல்ல என்பது. அது மட்டுமல்லாமல் துணிவான பெண் என்பதும் புரிந்தது.

இப்போதெல்லாம் யோசனையாக இருந்தது. மிரட்டியும் கூடப் பார்த்து விட்டான். அவள் அதற்கும் மருளுகிறவளாக இல்லை. அதனால்தான் வேறொரு யோசனை செய்தான்.

கடத்திக் கொண்டு போய்த் தாலி கட்டி விட்டால் என்ன? உடனே அவனது இதயமே சொன்னது.

சினிமாவில் வேண்டுமானால் அந்த சென்டிமென்டெல்லாம் சாத்தியம். இறைவி கண்டிப்பாகத் தாலியைக் கழற்றி வீசியெறிந்து விட்டுப் போனாலும் போய் விடுவாள்.

வேலை வெட்டியில்லாமல் சுற்றிக் கொண்டு இருந்த ஒரு ஆளை அழைத்து அவனுக்குக் கொஞ்சம் பணம் கொடுப்பதாக ஆசை காட்டி இறைவி எங்கே போகிறாள் வருகிறாள் என்று கண்காணிக்கச் சொன்னான்.

நேற்று அந்த ஆள் வந்து சொன்னான்.

"ஐயா அந்தப் பொண்ணு யாரோ பின்னால வாராகன்னு கண்டுபிடிச்சப்புடுச்சு. நேத்துத் திரும்பித் திரும்பிப் பாத்துகிட்டே நடமாடுச்சு... அதுக்குள்ள காருக்காரன் எவனோ வந்து கூட்டிகிட்டுப் போனது" என்றான்.

"சரி... ஒரு ரெண்டு மூணு நாட்களுக்கு போக வேண்டாம்... விடுங்க..." என்று செலவுக்குக் காசைக் கொடுத்து அனுப்பி விட்டான்.

வொர்க் ஷாப்புக்குள் வந்து அமர்ந்தான். பிற்பகல் ரெண்டு மணியிருக்கும்.

"போன் மணியடித்தது. எடுத்தான். "யாரு?" என்றான்.

"நான் அறிவழகன் பேசறேன்" என்றவுடன் ஒரு நிமிடம் விதிர்விதிர்த்துப் போனான்.

"என்ன... என்ன வேணும்... உங்களுக்கு?"

"மிஸ்டர்... நான் சொல்றதைத் தெளிவாக கேட்டுக்குங்க. இறைவி எனக்கு நிச்சயிக்கப்பட்ட பொண்ணு. மேஜர் அவளுக்குப் பிரியப்பட்டவனைக் கல்யாணம் செய்யறதுக்கு அவளுக்கு உரிமை இருக்கு. அதைத் தடுக்கறதுக்கு அவனோட அண்ணனுக்கு எந்த உரிமையும் கிடையாது. ஆனாலும், அண்ணன்கறதுனால அந்தப் பொண்ணு தன் அண்ணனோட சம்மதத்துக்குக் காத்துகிட்டிருக்கு. அதுல நீ இடையில நுழையறது எந்த விதத்துலயும் நியாயமில்லே. புரியுதா?" என்றான்.

"நான் ஒன்றும் நுழையலயே! அவங்க அண்ணன்தான் வந்து என்னைக் கூப்பிட்டான்னு."

"கூப்பிட்டான். சரி! ஆனா அந்தப் பொண்ணு எனக்கு இஷ்டமில்லேன்னு சொல்லியிருக்குமில்ல."



"....ஆ...மா...!"

"அப்புறம்... என்ன? எந்த ஒரு நல்ல ஆம்பளையும் தனக்கு இஷ்டமில்லாத பொண்ணைத் தொட மாட்டான் தெரியுமில்லே! அப்படியே நீ என் பாதையில குறுக்கிட்டால் நான் வேடிக்கை பாத்துகிட்டிருப்பேன்னு நினைச்சியா?"

"என்ன பண்ணுவீக?"

"என்ன வேணா செய்வேன். நீ வண்டி ஓட்டிகிட்டிருக்கும்போது... ஆக்ஸிடெண்ட் நடக்கும்."

"என்ன கொலை மிரட்டலா?"

"மிரட்டல் இல்லே...?" நடக்கப் போறதைச் சொன்னேன்.

"நான் இப்பவே... போலீஸ்ல புகார் குடுப்பேன்."

"குடு... குடு... எப்படியெப்படி முடியுமோ அப்படியப்படி பாதுகாப்புப் பண்ணிக்கோ...?" என்றான்.

..........!

"இந்த வயசுல நாலைஞ்சு தொழில் வச்சு நிர்வாகம் பண்றேன்னா... திறமையில்லாமயா செய்வேன்? எல்லாத் திறமையும் இருக்கு... என் சொத்தைக் காப்பாத்திக்கற திறமையும் இருக்கு..." என்றான்.

ஒரு விதமாகச் சிரித்தான்.

அந்தச் சிரிப்பில் ஒரு எச்சரிக்கை ஒலி தொனித்தது. சபரீஷுக்கு முதுகுத் தண்டு சில்லிட்டது.

அந்த நிமிடத்தில் சபரீஷுக்குத் தெரிந்தது. தான் ஒரு பெரிய சக்தியோடு மோதிக் கொண்டிருக்கிறோம் என்று. அது மட்டுமில்லாமல் இன்னொன்றும் தெரிந்தது? தான்

எப்படிப்பட்ட சக்தியோடு மோதிக் கொண்டிருக்கிறோம் என்பது செந்தில்குமாரனுக்குப் புரியவில்லை என்பது.

அறிவழகன் இரும்புக் குரலில் சொன்னான். ''இந்தப் பாயின்டோட விலகிக்க... சபரீஷ்... உன்னைப் புடிச்ச ஒரு பொண்ணைத் தேர்ந்தெடுத்துக் கல்யாணம் பண்ணிக்க... அத விட்டுட்டு மனசால என்னையே நினைச்சுகிட்டிருக்கற பொண்ணோட சுத்து வட்டாரத்துக்குள்ளே வந்தாலே... போதும்... தொலைச்சுக் கட்டிப் புடுவேன்...'' என்றான்.

மேற்கொண்டு சபரீஷ் பதில் சொல்லுவதற்காகக் காத்திருந்தான். ஆனால் சபரீஷ் நடுங்கிப் போய்விட்டான்.

பதில் சொல்லத் திணறும் போதே ''ம்... புரிஞ்சதுல்ல... அது...!'' என்றான். அறிவழகன் போனை ஆஃப் செய்தான்.

அறிவழகன் தனக்குள் சிரித்துக் கொள்கிற அதே நேரத்தில் சபரீஷ் நடுங்கிப் போனவனாய் தனது வீட்டுக்குள் நுழைந்து சோபாவில் ஒடுங்கிக் கொண்டான்.

வீடும் வொர்க் ஷாப்பும் அருகருகிலேயே இருந்தன. புறநகர்ப் பகுதி என்பதால் சற்று விலை குறைவாகவே வாங்கியிருந்தான்.

எதற்காகவோ ஹாலுக்கு வந்த அம்மா.

''என்னடா... இப்படி உட்கார்ந்துகிட்டிருக்கே?'' என்றார்.

''அம்மா... அம்மா... அந்த அறிவழகன்...'' என்று நடந்ததையெல்லாம் சொன்னான்.

''அடப்பாவமே! அந்தப் புள்ளைய வேறொரு மாப்ள்ளைக்கு நிச்சயம் பண்ணியிருக்காகன்னு நீ சொல்லவேல்லையே'' என்றார்.

''அது... அது... செந்தில்குமரன்தான் இப்போதைக்கு ம்மாகிட்டே... சொல்லாதடான்னான்'' என்றான்.



''அட... போச கெட்டவனே! எத்தனை காலமானாலும் பொம்பளைப் புள்ளைக மனசைப் புரிஞ்சுக்க மாட்டீகளா? நல்ல வேளை இப்பன்னாச்சும் சொன்னியே. பெரிய இடத்து மாப்பிள்ளை சும்மா இருப்பானாடா? போதும். அதோட இந்த நாரப் பொழப்பை விட்டுட்டு... ஆகற வேலையைப் பாரு'' என்றார்.

சபரீஷ் தலையை உருட்டினான். பிறகு முணுமுணுப்பாகச் சொன்னான்.

''அப்புறம்... அந்த இறைவி சொன்னால்ல. அப்பவே நான் புரிஞ்சுருக்கணும்'' என்றான்.

''ஓ! அந்தப் பொண்ணு வேற அவனுக்கு இஷ்டமில்லேன்னு சொல்லிப் புடுச்சா?'' சபரீஷ் மௌனம் காத்தான்.

''அடப்போடா! கூறு கெட்டவனே! இதோட அந்த விஷயத்தை விட்டுப் புட்டு அடுத்த வேலையைப் பாரு...'' என்றார்.

சபரீஷ் அமைதியாக அமர்ந்து கொண்டான். அம்மா அவனருகில் அமர்ந்தார்.

''தம்பி! போதும்... இதோட இந்த விஷயத்துல இருந்து விலகிடு. ஏற்கெனவே நிச்சயமான கல்யாணத்துல நாம நுழைஞ்சு... கலாட்டா... செய்யறது எந்த விதத்துலயும் நியாயமில்லே...''

சபரீஷுக்கு அது சரியென்றே பட்டது... அதே நேரம்!

''உனக்காக கொலை மிரட்டலும் செய்தேன்'' என்று அறிவழகன் கொடுத்திருந்த மெசேஜை படித்துவிட்டு மிரண்டு போனாள் இறைவி!

போன் செய்தாள்!

''அறிவழகன்...''

"மேடம்! நான் உங்களை சந்திக்கக் கூடாது... உங்கண்ணனுக்கும், உங்களுக்கும் இடையில்தானே நுழையக் கூடாதுன்னுதானே உங்க கண்டிஷன்...! வேற விதமா... எங்களுக்குப் பாதுகாப்புப் பண்ணிக்கறது எங்க இஷ்டம் தானே...!" என்றான்.

கபகபவென்று சிரித்தான்.

இறைவி விழித்தாள்!

"இறைவி!" என்றான் இறக்கமான குரலில்.

"நீ அங்கே பேந்தப் பேந்த விழிக்கறது எவ்வளவு அழகா இருக்கும்னு... என்னால இங்கே இருந்து கற்பனை செய்ய முடியாது. என்னோட கற்பனைகளுக்கு... நீ எந்தத் தடையும் விதிக்க முடியாது... தெரியுமா?" என்றான்.

சிரித்துக் கொண்டே ஆஃப் செய்தான். இறைவிக்குக் கோபமாகவும் வந்தது. சுகமாகவும் இருந்தது. குழப்பமாகவும் இருந்தது.

## 20

செந்தில்குமாரனுக்கு அதிகாலையிலேயே விழிப்பு வந்து விட்டது.

"வந்து என்ன செய்ய? ஒரு காபி... டீ குடிக்கணும்னாலும் கூட கடைக்குத்தான் போக வேண்டியிருந்தது. ஒரே மாதத்திற்குள்ளாக ஹோட்டல் சாப்பாட்டின் மேல் அவனுக்கு வெறுப்பே ஏற்பட்டுவிட்டது. இத்தனைக்கும் மதுரைக்கே புகழ் சேர்க்கிற மாலை நேரத்துக் கடைகளில்



உணவு நன்றாகத்தான் இருந்தது. ஆனாலும் தனக்குப் பிடித்த பக்குவத்தில் அம்மா தயாரித்துக் கொடுக்கிற உணவு எங்கே கிடைக்கும்."

மிக எளிதாகக் கைக்கெட்டுகிற தூரத்தில் இருக்கும் போது அருமை புரியவில்லை. விஷயங்கள் கைக்கெட்டாமல் போகிற போதுதான் அந்த விஷயங்கள் எப்படி நமது வாழ்க்கையின் ஒரு அங்கமாகக் கூடவே இருந்திருக்கிறது என்று புரிகிறது. அதுபோன்ற நிலைமையில் இருந்தான் செந்தில்குமரன்.

"அண்ணா! எழுந்திருண்ணா! மணி எட்டாச்சு" என்று புரட்டிப் புரட்டித் தன்னை எழுப்புகிற சகோதரியின் குரல் கேட்காமல் விடிகிற பொழுதுகள் பொழுதுகளாகவே இல்லை. கண் விழித்தவுடனே அவளுடைய ஞாபகம் வரும். உடனே கோபமும் வரும். அவளைப் பொறுத்தவரை தான் ஒரு தகப்பனைப் போல் நடந்து கொண்டோம். ஆனாலும் உதறி விட்டுப் போய் விட்டாள்.

"அம்மா...! இந்த அம்மா...!"

அப்பா போனதற்குப் பிறகு பூப்போலத் தாங்கித் தாங்கி வைத்துக் கொண்ட அம்மா... எப்படிப் போகலாம்? இப்போது டீக்கு கூட வழியில்லாமல் கடைக்குப் போக வேண்டியிருக்கிறது.

தனது படுக்கையைச் சுற்றிக் கண்ணை ஓட்டினான். அறை அலங்கோலமாக இருந்தது.

"சே! இனி இதை ஒழுங்கு படுத்துவதற்கு குறைந்தது ஒரு மணி நேரமாவது ஆகும். மொத்த வீடுமே குப்பைத் தொட்டி மாதிரி இருக்கிறது என்று எண்ணிக் கொண்டான்.

பெருமூச்சு விட்டபடி எழுந்தான். ஹீட்டரைப் போட்டுக் குளித்தான். மதுரை வெயிலுக்குச் சில நேரங்களில் வெந்நீர் கூடத் தேவையிருக்கவில்லை.

அம்மாவும், தங்கையும் பிரிந்து போனதற்குப் பின் முதல் பத்து நாட்கள் வெங்கடாச்சலம் மாமாவிடம் வீம்பாக "உங்களுக்கு எதுக்கு மாமா... சிரமம்... நான் கடையில சாப்பிட்டுக்கறேன்" என்று சொன்னவன் பத்து நாட்களுக்குப் பிறகு அவர் மறுபடியும் இரண்டு மூன்று முறை சொன்னவுடனே லேசாகத் தயங்கியது போல் நாடக மாடினான். அவர் புரிந்து கொண்டாரோ என்னவோ...

"இத பாரு! தம்பி! பகல் சாப்பாடு கொண்டு வந்து காரியர்ல வச்சர்றேன். டிபன் வசதி போல செஞ்சுக்கலாம் என்ன?" என்றார்.

அந்த வார்த்தையே அவனுக்குத் தேவாமிர்தமாய் இனித்தது. சில வேளைகளில் போன் செய்து "தம்பி! இன்னைக்கு நம்ம ஊட்டுல நல்ல டிபன் கொண்டுகிட்டு வாரேன். கடைக்குக்கிடைக்குப் போயிராதீக" என்பார்.

"இந்த மாமாவுக்கு என்ன தலையெழுத்து...! விட்ட குறை... தொட்ட குறை என்பார்களே... அதுபோல் நமக்கு சோறு சுமக்கிறாரே" என்று தோன்றும்.

"அதென்னவோ... நேத்துக் கொண்டுகிட்டு வந்த டிபன் நம்ம அம்மா கைப்பக்குவம் மாதிரி இருந்தது" என்று எண்ணிக் கொண்டான்.

கேள்விக் குறியாக அவரைப் பார்த்தான். "நம்ம ஊட்டம்மாவும் நல்லாச் செய்வாக... இல்லே!" என்றார்.

தன் மனதில் நினைப்பதைப் புரிந்து கொண்டாரே என்ற வெட்கம் மேலிடப் பேச்சை மாற்றி விட்டான். சுவர்க் கடிகாரத்தை மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

காலையில் டிபன் கொண்டு வருவதாக இருந்தால் இந்த நேரத்துக்குள்ளாக போன் செய்திருப்பாரே என்ற லேசான ஏக்கத்தோடு கூடிய எண்ணம் மனதுக்குள் ஓடியது.



சரியாக அந்த நேரத்துக்கு போன் ஒலித்தது. எடுத்தான்.

சபரீஷ்!

"செந்தில்! நான் சபரீஷ் பேசறேன்" என்றான். செந்திலுக்குள் கொஞ்சம் குழப்பம் தோன்றியது. கடந்த நான்கைந்து நாட்களாக வெங்கடாச்சலம் அடித்த வேப்பிலையில் சபரீஷை இந்தப் பிரச்சினையில் இழுத்திருக்க வேண்டாமோ என்று தோன்றிக் கொண்டிருந்தது. வருவித்துக் கொண்ட உற்சாகத்துடன்.

"சொல்லு... சபரீஷ்!" என்றான்.

சபரீஷ் அந்தப் பக்கம் தயங்கினான்.

"என்ன... சபரீஷ்! சொல்லு!" என்றான் செந்தில்குமரன்.

"செந்தில்...! நான் சொல்லப் போறதைக் கேட்டு வருத்தப்படாதே! எங்கம்மா இந்த சம்பந்தம் வேண்டாம்னு மக்கர் பண்றாப்பல...!"

"ஓ...! ஏனாம்...!"

"இல்லே! யாரோ அம்மாவை நல்லாப் பயமுறுத்தி விட்டுட்டாக. அந்த அறிவழகன் பெரிய இடமாம். அவனுக்குன்னு பேசி வச்சிருக்கற பொண்ணையெல்லாம் அவ்வளவு சீக்கிரம் வுட்டுக் குடுக்கமாட்டான். பெரிய இடத்துக்கூட என்னாத்துக்கு மோதறீக? ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆயிடப் போகுதுங்கறாகளாம்."

"ஏன்? யாராவது மிரட்டினாகளா?"

"சேச்சே! மிரட்டலுக்கு பயப்படற ஆசாமி நான் இல்லை. ஆனா, இந்தக் கல்யாணத்துல உங்க அம்மாவுக்கும் இஷ்டமில்லேங்கறாக...! உன் தங்கச்சிக்குச் சுத்தமா விருப்பமில்லேங்கறாக...! அப்புறம் அது என்னாத்துக்குடா கல்யாணம் என்று அம்மா கேட்கறாங்க...!"

செந்தில்குமாரனுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. ஒரு பக்கம் பாரம் இறங்கினாற் போல் தோன்றியது. இன்னொரு பக்கம் அம்மாவும், தங்கையும் கூட உதவிக்கு வராத நேரத்தில் இந்த சபரீஷ் உதவிக்கு வந்தானே என்ற பெருமிதத்துக்குப் பெரிய அடி விழுந்த மாதிரியும் இருந்தது. மெல்ல சுதாரித்துக் கொண்டான்.

''சரிடா...! பரவால்லடா...! விடு...!'' என்று வார்த்தைகளையே திரும்பத் திரும்பப் போட்டு சமாதானமாகப் பேசி விட்டு போனை வைத்து விட்டுத் திரும்ப வெங்கடாச்சல மாமா நேரிலேயே வந்து விட்டார்.

''தம்பி! எங்கயாவது கௌம்பிடுவீகளோன்னு... அரக்கப் பரக்க... ஓடியாந்தேன்'' என்று டிபன் கேரியரோடு நின்றார்.

''நேரத்துக்கு வயிற்றுக்காவது கொட்டிக்குவோம்'' என்று கசப்புடன் நினைத்துக் கொண்டான்.

சாப்பிட்டுக் கொண்டே மனதில் இருந்த சங்கடங்களையெல்லாம் கொட்டித் தீர்த்து விட்டான்.

முழுவதும் கேட்டுக் கொண்ட வெங்கடாச்சலம் மாமா மெதுவாக ஆனால் தயக்கமான குரலில் சொன்னார்.

''தம்பி! நீங்க கோவத்துல இருந்தீக! ஒரு மனுஷன் கோவத்துல இருக்கறப்ப... என்னதான்... சொன்னாலும் எடுபடாது. அதேன்... நான் அந்தப் பேச்சையே எடுக்கலை. இப்பச் சொல்லுறேன்... கேளுப்பா... நீங்க... செஞ்ச எதுவுமே நியாயம் இல்லை... தம்பி!''

செந்தில்குமரன் திடுக்கிட்டுப் போனான்.

''ஆமா...! தம்பி! எப்பவோ ஒண்ணா இருந்தீக... ஒண்ணாப் படிச்சீக... சரி...! ஆனா அந்தப் பளக்கத்துக்குப்



பார்த்தவுடனே அந்தத் தம்பி படக்குன்னு வேலை குடுத்துச்சு... அப்புறம்... மானேஜராக்குச்சு... அப்புறம்... பார்ட்னராவே ஆக்கிப்புடுச்சு. இத்தனைக்கும் நீங்க செஞ்ச பதில் மரியாதை என்ன! அவருக்குத் தெரியாம... டீலிங்... செஞ்சீக...! யாருதேன்... ஒத்துக்குவாங்க! ஆனாலும் அவரு உங்களை போகச் சொல்லலை! நீங்களாத்தான் வெளியே வந்தீக!''

''.........!''

''அதோட வுட்டீகளா? உங்க தங்கச்சி கல்யாணத்தை எடுத்துகிட்டு... பிளாக் மெயில் செஞ்சீக... சரியா?''
''நியாயமா?''

செந்தில்குமரன் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''தம்பி...! நான் ஒண்ணு சொல்லுதேன்; கேட்டுக்குங்க. நான் கேள்விப்பட்டவரையில் அறிவழகனும், அவுக அப்பாவும்... இந்த மதுரையில் முக்கியமான ஆளுக. இப்பவும்... அந்தத் தம்பி... நினைச்சா... என்னவும்... செய்யும். ஆனா... இப்பவும் அந்தத் தம்பி பெரும்படியாப் போகுதுதான்... நான் நெனக்கறேன் கொஞ்சம்... லேசா... சமரசத்துக்கு... வந்தாக்கூடப் போதும் பக்குன்னு புடிச்சுகிட்டு அதோட பிரச்சினையை முடிங்க...'' என்றார்.

செந்திலின் நீண்ட மௌனம் பார்த்துப் புறப்படுகிற நேரம் சொன்னார்.

''தம்பி! ஏதோ நாலு நாளைக்கு சோத்தைக் கொண்டு வந்துக் கொடுத்துப்புட்டு அறிவுரை சொல்றானேன்னு நினைக்காதீக... தம்பி! நான் உங்க நல்லதுக்குத்தேன்... சொல்றேன்...! கேட்டீகன்னா, உங்க எல்லாத்துக்கும் நல்லது. அம்புடுதேன்...'' என்றார் புறப்பட்டார்.

வெங்கடாச்சலம் புறப்பட்டுப் போனதற்குப் பிறகு வெகு நேரம் யோசித்தான்.

''உண்மைதான்! அறிவழகனுடைய சக்தி என்ன என்று அவனுக்குத் தெரிந்ததுதான் இருந்தது. ஆனாலும், அறிவழகன் தன் விஷயத்தில் அளவு கடந்த பொறுமை காக்கிறான் என்று தோன்றியது.

''சமரசத்திற்குப் போய்விடலாமா?'' என்று யோசிக்கும் போதுதான் அறிவழகன் தனது முதல் அம்பை விட்டான். அவ்வளவுதான் வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறிக் கொண்டது.

* * *

இறைவி கையிலிருந்த புகைப் படங்களை எடுத்து எண்ணி எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தாள். பத்து போட்டோக்கள். பத்து விதமான போட்டோக்கள்.

பத்து விதமான உணர்வுகளை வெளிப்படுத்திய போட்டோக்கள். அன்றைக்குக் கடத்திக் கொண்டு போனாற் போல் போனானே அன்றைக்கு நடந்த நிகழ்வுகள் நினைவுக்கு வந்தன.

''ஹேய்! எனக்கு ரொம்ப ஆசையா இருக்கு. அது மட்டுமில்லாம முக்கியமான ஒரு காரணத்துக்குத் தேவையாவும் இருக்கு'' என்று அவன் சொன்ன போது முதலில் மறுத்தாள்.

தன் கைகளுக்குள் சிக்காமல் ஓடுகிற அவளைப் பின்னாலே விரட்டிப் பிடித்து மறுபடியும் கைகளுக்குள் அணைத்துக் கொண்டான்.

அதே நேரம்!

காரில் அவளை அழைத்து கொண்டு இல்லையில்லை இழுத்துக் கொண்டு வந்த அந்தப் பெண்மணி வாசலில் வந்து நின்றாள்.



இருவரும் விலகினார்கள்.

''ஸாரி... ஸார்! நான் அப்புறம்... வரட்டுமா? என்று அந்தப் பெண் தர்மசங்கடத்துடன் விளக்கம் சொல்ல முயல...''

''ஓ... நோ! மிஸ் கனிதா. வாங்க... வாங்க! அது...'' என்று லேசாகச் சிவந்த முகத்துடன் இறைவியை பார்த்தான். பிறகு சட்டென்று சிரித்து விட்டான்.

''அது... இறைவியைப் பார்த்தே... ஒரு இருபது நாளைக்கு மேலாயிருக்க...'' என்றான்.

இறைவியும் முகம் சிவக்க நின்றாள்.

''ஸாரி! நீங்க உங்க வேலையை ஆரம்பிக்கலாம்...'' என்று சொல்லி விட்டு அடுத்த அறைக்குள் நுழைந்து கம்ப்யூட்டரில் வேலையிருப்பது போல் அமர்ந்து கொண்டான்.''

''மேடம்! அறிவழகன் சாரை எங்களுக்கு ரொம்ப நல்லாத் தெரியும். ஜென்டில்மேன். ஆனா, உங்க மேலே க்ரேஸியா இருக்காரு...'' என்று சொல்லிச் சிரித்த வண்ணம் தன் வேலையை ஆரம்பித்தாள்.

மணப்பெண் போல அலங்காரம் செய்து கொஞ்சம் போட்டோக்கள் எடுக்க வேண்டும் என்பது அறிவழகனின் ஆசையாம். அதில் சில போட்டோக்களை அவன் அழைப்பிதழுக்கும் பயன்படுத்திக் கொள்ளப் போகிறானாம். இதெல்லாம் அந்த கனிதாவிடம் இருந்து அவள் தெரிந்து கொண்ட விஷயங்கள்.

அழகான மென்மையான ரோஸ் நிறத்தில் புடவை... பட்டுப் புடவையுடுத்தி... அலங்காரம் செய்து முகத்துக்கு மேக்கப் போட்டு... அவள் தயார்.

''ஸார்! நீங்களும் ரெடியாகுங்க!'' என்று குரல் கொடுக்க... இன்னொரு ஆள் உள்ளே வந்தார். அவர் கையில் காமிரா.

அறிவழகன் இருந்த அறைக்குள் நுழைய ஐந்தே நிமிடத்தில் பட்டு வேஷ்டி பட்டு சட்டையில் பாந்தமாக வந்து நின்றான். கனிதாவுக்குப் பின்னால் நின்ற இறைவி அந்த அலங்காரத்தில் அவனைப் பார்த்து உண்மையாலே நெகிழ்ந்து போனாள். கண் கொட்டாமல் தன்னை மறந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் பார்ப்பதை அவனும் கண்டு கொண்டான்.

குறும்பாகச் சிரித்தான். அவள் சட்டென்று பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

தனித்தனியாக நிற்க வைத்து கொஞ்சம் போட்டோக்கள் எடுத்தார்கள்.

மெல்லிய குரலில் அவன் கனிதாவிடம் ஏதோ சொல்லவும் இருவரும் பார்த்து சிரித்துக் கொண்டதையும் பார்த்து இறைவிக்குக் கஷ்டமாகப் போய்விட்டது.

''நீங்க ரெண்டு பேருமா... என்னை டீஸ்... பண்றீங்க!'' என்று சிணுங்கினாள்.

உள்ளேயிருந்த போட்டோ கிராஃபர் வந்தார். அவர் கனிதாவின் கணவராம். பெயர் துரை என்றார்கள்.

''மேடம்! இவங்க ரெண்டு பேரும் சேர்ந்தா இப்படித் தான் கலாட்டா... செய்வாங்க!'' என்றான் துரை.

''இறைவி... மேடம்! தப்பா நினைக்காதீங்க... என்னை ஆங்கிள உங்க போட்டோ வேணும்னு சொல் றார்'' என்றார்.

இறைவி அவனை முறைத்தாள். சற்றும் எதிர்பாராத விதமாக அவள் முறைப்பதையும் போட்டோ கிராஃபர் போட்டோ பிடித்தார்.

எல்லாரும் சிரித்தார்கள்.



இரண்டு மூன்று போட்டோக்கள் இருவரும் சேர்ந்து நின்றும் எடுத்தார்கள். அப்படி ஒரு போட்டோ எடுக்கையில் சட்டென்று தனது இடது கையால் அவளது இடுப்பை வளைக்க அவள் வெட்கத்துடன் நிமிர்ந்து பார்க்க அவன் குறும்பாக அவளைப் பார்த்துக் கலகலவென சிரிக்க அதை அப்படியே ஹாண்டி காமிராவில் பதிவு செய்தார்கள்.

அந்த போட்டோவைத்தான் அழைப்பிதழில் போட்டிருந்தான். அந்த போட்டோவைப் பார்க்கப் பார்க்க இறைவிக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. அதே சமயம் போன் வந்தது.

''ஹேய்! இறைவி... போட்டோ பிடிச்சதா?'' என்றான்.

''ம்...!''

''பத்திரிகை நல்லா வந்திருக்கா?''

''ம்...! ஆனா... என்ன அண்ணன் பாட்டுக்கு அங்கே முறுக்கிகிட்டு இருக்கான். நீங்க பாட்டுக்கு எல்லா ஏற்பாடுகளையும் செஞ்சுகிட்டிருக்கீங்க...'' என்றாள்.

''அந்தக் கவலையை என்கிட்டே விட்டுடு... குறிச்ச முகூர்த்தத்துல... கல்யாணம் நடக்கும்'' என்றான்.

''ப்ளீஸ் அண்டர்ஸ்டாண்ட் பண்ணிக்குங்க... நான் அண்ணனை விட்டுட்டு... வரமாட்டேன். அவன் இல்லாம கல்யாணம் நடக்காது.''

''நானும் அதேதான்... சொல்றேன்... அவன் இல்லாமக் கல்யாணம் நடக்காது. அதை நான் பாத்துக்கறேன்'' என்றான்.

அவள் நிம்மதியானாள்.

''இறைவி! என்ன உன்னோட பெரிய தொல்லையாப் போச்சு... அண்ணனை விட்டுட்டு வரமாட்டேன்... வர

மாட்டேன்னுட்டு... கல்யாணம் ஆனதுக்கப்புறமும் இதே பல்லவியைப் பாடுவியா!'' என்றான்.

''பாடினா...நீங்க விட்டுடுவீகளா?''

''விடறதா? அப்படியே ''பாக்'' பண்ணிக் கொண்டு வந்துடுவேன். தெரியுமா?'' என்றான்.

''என்னவோ... செய்யங்க'' என்றாள்.

அறிவழகன் திடீரென்று கேட்டான்.

''ஏன்... இறைவி...! உங்க அண்ணனுக்கு வக்கீல் நோட்டீஸ் விட்டியாமே?'' என்றான் ஆச்சரியக் குரலில்.

அவள் சற்றே சங்கடத்துடன் மௌனம் காத்தாள். பிறகு சொன்னாள்.

''அப்புறம்... என்ன பண்றது? எவ்வளவு சொன்னாலும் புரிஞ்சுக்க மாட்டேங்கறான். அதுதான் அதிர்ச்சி வைத்தியம் குடுத்தேன்...'' என்றாள்.

''ஐ லைக் தட்'' என்றான் அறிவழகன்.

''எதை?''

''அதான் அதிர்ச்சி வைத்தியம்...! உனக்கும் செய்யணும்'' என்றான்.

''வாட்!''

''ஆமா... பின்னே! என் வாழ்க்கையில மேல வந்து விழுந்ததும் இல்லாம... இத்தனை நான் பார்க்கமாட்டேன்... பாக்காதீங்க... பேசாதீங்கன்னு.... எத்தனை கண்டிஷன் போட்டே! அத்தனைக்கும் பின்னாடி இருக்கு... அதிர்ச்சி வைத்தியம்...'' என்றான்.

''பரவாயில்லை! நான் தாங்கிப்பேன்...'' என்றாள்.



''வேறவழி...?'' என்று மேலும் சற்று நேரம் பேசி விட்டு போனை வைத்தாள்.

அதற்குப் பிறகு கிட்டத்தட்ட பத்து நாட்கள் வரை அவன் தொடர்பு கொள்ளவில்லை. பிறகு அவனாகத் தொடர்பு கொண்டபோது நிலைமை தலை கீழாக மாறியிருந்தது.

## 21

எந்த அழைப்பிதழைப் பார்த்து இறைவி மகிழ்ச்சியடைந்து கொண்டிருந்தாளோ அதே அழைப்பிதழைப் பார்த்து செந்தில் கொதித்துக் கொண்டிருந்தான்.

தன் தங்கையைப் பார்த்து நேசம் வழிய அறிவழகன் சிரித்துக் கொண்டிருப்பதையும் வெட்கமும், மகிழ்ச்சியும் ததும்ப தன் தங்கை அறிவழகனைப் பார்த்துக் கொண்டிருக்கும் அந்தப் படம்

முன்பகுதியில் அச்சடிக்கப்பட்டு இரண்டாவது பக்கம் முழுவதுமாக அழைப்பிதழ் அச்சடிக்கப்பட்டு இருந்தது. இரு வீட்டு அழைப்பு என்று அச்சாகி இருந்தது.

செந்திலுக்கு அப்போது ஒரு விஷயம் புரிந்தது. தான் நினைத்தது போல் அறிவழகன் அமைதியாக இருந்தது அச்சத்தினாலோ, கவலையினாலோ அல்ல. ''நீ ஆடும் வரை ஆடு'' என்பது போல் தன்னை, தன் செயல்களை அனுமதித்து விட்ட சரியான கட்டத்தில் அவன் செயலில் இறங்குகிறான் என்று தோன்றியது.

அன்றைக்கு போனில் சொன்னது போல ''என்னுடைய விஷயங்களை நடத்திக் கொள்வதற்கு எனக்குத் தெம்பிருக்கிறது'' என்று காட்டுகிறான் போலும்.

எல்லாவற்றைக் காட்டிலும் வருத்தமான விஷயம் என்னவென்றால் யாருமே தன் பக்கம் நியாயம் இருப்பதாகச் சொல்ல மாட்டேன் என்கிறார்கள். அதனால் ஆரம்பத்தில் இருந்த துணிவு இப்போது குறைந்து விட்டது.

யோசிக்க ஆரம்பித்தான்.

அறிவழகனுக்கு போன் செய்தான். வருத்தமான குரலில் கேட்டான்.

''ஏன்... அறிவழகா? எது எப்படிப் போனால் என்ன? உன் காரியம் நடந்தால் சரி... இல்லே!'' என்றான்.

''ஏம்ப்பா...! ரொம்ப வருத்தப்படறே! எது எப்படிப் போயிருக்கு? என்னைப் பொறுத்தவரைக்கும் நான் அதே அறிவழகன்தான். நீதான் மாறியிருக்கிறதா நெனச்சுகிட்டிருக்கே?''

''என்னப்பா... இப்படிச் சொல்றே. நான் உன் கன்சர்னை விட்டு வெளியே வந்திருக்கேன். எங்க வீட்ல குழப்பமா இருக்க. என் தங்கையும், அம்மாவும் என்னை விட்டுப் பிரிந்திருக்காங்க... இதெல்லாம் இருக்க... நீ பாட்டுக்கு ஜெனியைத் தூக்கி மணையில வைன்னு ஏற்பாடு பண்ணிகிட்டிருக்கறே''

''செந்தில்... இது நியாயமேயில்லை...''

''எது!''

''உன் தங்கையைக் ஜெனின்னு சொல்றயே... அது...'' என்று தன் ஜோக்குக்கு தானே சிரித்தான்.



''அடப்போப்பா...! நீ ஜோக்கடிக்கறே! என் வருத்தம் புரியாம?''

''செந்தில் நான் உன்னைக் கன்சர்னை விட்டுப் போகச் சொல்லலே... நீயாத்தான்... போனே... இந்தக் கல்யாணம் உங்கம்மா... எங்க பேரண்ட்ஸ் எல்லாம் உட்கார்ந்து பேசி முடிவு செஞ்சிக்காங்க... கல்யாணத்தை நிறுத்துவோம்கற பேச்சு எந்தப் பக்கமும் இருந்து வர்லே. அதனால் ஏற்பாடுகள் தொடருது. ஏற்கனவே பேசினபடி... ஏற்பாடுகள் எல்லாமும் எங்களது. உன்னால முடிஞ்சதை நீ செய்ய வேண்டியது... அது அப்படியே போயிட்டிருக்கு...!''

............!

''உன் குடும்பத்துப் பிரச்சினையை நீ தீர்த்துக்க வேண்டியது. அதுல நான் தலையிட முடியாது. கம்பெனியை பொறுத்தவரைக்கும் கதவு எப்பவும் திறந்தே இருக்கு வா. மறுபடியும் பேசுவோம்... பிரச்சினைகளைத் தீர்க்கப் பார்ப்போம்... தட்ஸ் ஆல்..! பை தி... பை உங்களுக்கு எத்தனை பத்திரிகைகள் தேவையிருக்கும்னு சொல்லு... அனுப்பி வைக்கிறேன்'' என்றான்.

மேற்கொண்டு செந்தில் பேசுமுன் ஆஃப் செய்து விட்டான்.

செந்திலுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. என்னவென்றால் மெதுமெதுவாகக் கட்டுப்பாடு தன் கையை விட்டுப் போய்க் கொண்டுள்ளது. மறுபடியும் அறிவழகனிடம் இருந்து போன்

''செந்தில்...! ஒன்னு சொல்ல மறந்துட்டேன்ப்பா. உனக்கும் கொஞ்சம் ஆறுதலான செய்தி உன் சிஸ்டர் ''எங்க அண்ணன் வராம என் கல்யாணம் நடக்காதுன்னு... உறுதியா சொல்லியிருக்காப்ல. அதுக்கு என்ன செய்யற

தன்னு... பாரு! இன்னொண்ணும் சொல்றேன். என்னை யில்லாம என்னத்தாண்டி எந்த மாப்பிள்ளையும் வர முடியாதுப்பா... புரிஞ்சுக்க'' என்றான்.

செந்தில்குமரன் ஒன்றும் பேசவில்லை. ''சரிப்பா! வைக்கறேன்...'' என்றான் சுரத்தேயில்லாமல்.

அறிவழகன் சிரித்துக் கொண்டான்.

* * *

வெளியே போய்விட்டு அப்போதுதான் உள்ளே நுழைந்தான் செந்தில்குமரன்.

அப்போது ஏழு மணி இருக்கும்.

இப்போதெல்லாம் வீட்டுக்கு வருவதற்கே பிடிக்க வில்லை. ஆனால் வெளியேயும் பொருளில்லாமல்தான் அலைந்து கொண்டிருக்க வேண்டும்.

வசதியான இடத்தில் இருக்கிறான் என்றவுடன் சல்யூட் போட்டவர்கள் எல்லாம் இப்போது பார்த்தாலும் பார்க்காதவர்கள் போல் போக ஆரம்பித்தார்கள். இல்லா விட்டால் அவன் பேச ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே அவர்கள் புலம்ப ஆரம்பித்தார்கள்.

உலகம் என்றால் என்னவென்று அவனுக்கு மெதுவாகப் புரிய ஆரம்பித்தது.

அறிவழகனின் நிழல் எவ்வளவு சுகமானது. பாதுகாப் பானது என்றும் புரிந்தது. தங்கையும் பெரிதாக ஒத்துழைக்கக் காணோம். பேசாமல் ''சரணம் சாமி!'' என் காலில் விழுந்து விடலாமா என்று தோன்றியது. ஆனால் கௌரவம் தடுத்தது.

வேதனையுடன் உள்ளே நுழைந்தவனுக்கு உள்ளே ஒரு பேரிடி காத்திருந்தது தெரியவில்லை. ஏதோ தபால் வந்திருக்கிறதே என்று எடுத்துப் பார்த்தான்.



நாயரிடம் இருந்து நோட்டீஸ் வந்திருந்தது. ''எங் களுடைய வண்டியை சர்வீஸுக்காகக் கம்பெனிக்கு விட் டிருந்தோம். ஆனால் எங்களுடைய ஒப்புதலும் இல்லாமல், கம்பெனியின் ஒப்புதலும் இல்லாமல் தனியார் நிறுவன மொன்றில் வண்டி பழுது பார்க்கப்பட்டுள்ளது. முறையான ரசீதும் வழங்கப்படவில்லை. வாடிக்கையாளரின் நம்பிக் கையைக் குறைக்கும் வகையில் நடந்து கொண்டமைக் காகவும், தரமற்ற உதிரி பாகங்களைப் பொருத்தியமைக் காகவும் உங்கள் மீது ஏன் வழக்கு போடக் கூடாது? எங்களுக்கேற்பட்ட மன உளைச்சலுக்காக எங்கள் நிறுவனத் தினர் தங்களிடம் மூன்று லட்ச ரூபாய் நஷ்ட ஈடாகக் கோர உத்தேசித்துள்ளார்கள்... இது பற்றி ஏதாவது விளக்கம் இருந்தால் கொடுக்கலாம்'' என்பது போல் வந்திருந்த அந்த நோட்டீஸைப் பார்த்தவுடன் செந்தில்குமரன் இடிந்து போய்விட்டான்.

அறிவழகனிடம் பேசலாமா என்று யோசித்தான். ஆனால் எந்த முகத்தை வைத்துக் கொண்டு பேசுவது. கடனைக் கடனை வாங்கி இந்த ஆளுக்கு மூன்று லட்ச ரூபாய் கொடுத்தாலும் இப்படி ஒவ்வொருவராகக் கேட்டால் எங்கிருந்து கொடுப்பது. அதிலும் பத்து முப்பது வண்டி களுக்கு மேல் அவன் தனியாக இது போல் சர்வீஸ் செய்திருந் தான்.

அடிவயிற்றில் பயம் பிடித்துக் கொண்டது. கிலியடித் தாற் போல் சற்று நேரம் அமர்ந்து விட்டான். பிறகு மெது வாக அறிவழகனிடம் பேச வேண்டாம். அவன் கம்பெனி யில் தங்கள் பிரச்சினையை பற்றி மற்றவர்களிடம் என்ன சொல்லியிருக்கிறான் என்று தெரிந்து கொள்வோம்'' என்று முடிவு செய்தான். ஜி.எம். இடம் பேசினான்.

ஜி.எம். உற்சாகமாகத்தான் பேசினார்.

''சார்! கல்யாண ஏற்பாடெல்லாம் எப்படிப் போயிட்டிருக்கு?...'' என்றார்.

''ம்... நல்லாப் போயிட்டிருக்கு!'' என்றான் மெல்லிய குரலில்.

''என்ன... சார்! குரல்ல சக்தியையே காணோம். கல்யாண ஏற்பாட்டுக்காகத்தான் உங்களுக்கு நாலு மாசம் லீவு குடுத்திருக்குன்னு எம்.டி. சொன்னாரு. எதுக்காகவும் உங்களைத் தொல்லை செய்யக் கூடாதுன்னு வேற சொல்லியிருக்காரு''

''ஓ...! '' என்றான்.

அந்தக் கணத்தில் உள்ளுக்குள்ளே ஏதோ ஒன்று நெகிழ்கிறாற் போல் உணர்ந்தான்.

''பரவாயில்லை! தான் இத்தனை தூரம் அவமதித்தும்... மற்றவர்களிடம் தன்னைக் காட்டிக் கொடுக்கவில்லை என்று எண்ணிக் கொண்டான். அதே நேரம் ஜி.எம். மறுபடியும் உற்சாகமாகச் சொன்னார்.

''ஆமா... சார்! பொண்ணு வீட்ல எல்லா ஏற்பாடும் பாக்கறதுக்கு அவரு ஒருத்தர்தான். அதனாலதான் லீவு குடுத்திருக்குன்னு... சொன்னாரே'' என்றார்.

''ஆமா!'' என்றான் செந்தில். பிறகு மெதுவாக விஷயத்துக்கு வந்தான்.

''அது சரி! எம்.டி. கிட்டே ஒரு விஷயம் பேசணும். அதுக்கு முன்னாடி எதுக்கும் உங்ககிட்டே ஒரு வார்த்தை கேட்கலாம்னு...'' என்று இழுத்தான்.

''சொல்லுங்க...!'' என்றார்.

''இல்ல... சார்! இந்த நாயர்... இல்லே அந்தாளு... ஒரு நோட்டீஸ் அனுப்பியிருக்காரு... அதான்... சார் நம்ம



சர்வீஸ் ஸ்டேஷன்ல எல்லாம் டைட்டா இருந்துச்சுன்னு நான் வெளியே எடுத்து சர்வீஸ் செஞ்சனே அதுக்கு...'' என்று ஒரு மாதிரி இட்டு நிரப்பினான்.

ஜி.எம். ஒரு மாதிரி அந்தப் பக்கம் குரல் இறங்கினாற்போல பேசினார்.

''நாயரா? ஒரு மாதிரி விவகாரமான ஆளாச்சே? எங்ககிட்டேயே உதார் விடுவாரு... அந்தாளுக்கு சரிக்குச் சரியா பதில் சொல்றதுக்கு எம்.டி.யாலதான் முடியும். நீங்க எதுக்கும் அப்ப அவருகிட்டே ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம். நம்ம சர்வீஸ் ஸ்டேஷன்ல செய்யற சர்வீஸையே அந்தாள் ஏகத்துக்கும் குறை சொல்லுவாரு. கேள்வி கேட்பாரு. குடைகுடைன்னு குடைஞ்சுடுவாரு. நான் சொல்றதைக் கேளுங்க. பேசாம எம்.டி. கிட்ட பேசுங்க.'' என்றார்.

செந்தில்குமரனுக்குப் புரிந்து விட்டது.

''ஆமா... அப்படித்தான் செய்யணும்'' என்றான். சுரத்தில்லாமல் போனை வைத்தான். மேலும் கீழும் நடந்தான்.

தலைக்கு மேலே தொங்குகிற கத்தி போல நாயரின் நோட்டீஸை உணர்ந்தான்.

என்ன செய்வது என்று தெரியவில்லை.

கடைசியாக ஒரு எண்ணம் தோன்றியது. வெட்கம், மானம், ரோஷம் பார்க்கிற நேரம் இதுவல்ல என்று தோன்றவே செல்போனை எடுத்தான்.

* * *

''அண்ணா. எதுக்குண்ணா உனக்கு புத்தி போச்சு.!''

''ஆனாலும் ரொம்ப அவசரப்பட்டுட்டே!'' என்று தங்கை விதவிதமாகத் திட்டினாலும் தங்கை வந்து விட்டாள் என்பதே இதமாக இருந்தது.

ஜி.எம்மிடம் பேசியதும் அவனுக்குத் தோன்றிய ஒரே எண்ணம் இறைவியிடம் கலந்தாலோசிப்பது என்பதுதான் செல்போனில் தங்கையிடம் பேசினான்.

"இறைவிக் குட்டி!" என்றான்.

அவன் குரலில் இருந்த கலக்கமோ என்னவோ இறைவியை ஒரு கணம் அசைத்துப் பார்த்து விட்டது.

"அண்ணா!" என்றாள் பாசம் தொனிக்கும் குரலில். குரல் தழுதழுத்தது. ஒரு நிமிடம் உணர்ச்சி மேலீட்டால் திணறி விட்டான்.

"என்னண்ணா!"

"டேய்! எனக்கு ஒரு பிராப்ளம்!"

"அண்ணா! ஒண்ணும் வொரி பண்ணிக்காதே. நான் இப்ப அங்கே வர்றேன்." என்று கிளம்பினாள்.

அம்மாவும் வீட்டைப் பூட்டிக் கொண்டு அவனோடு ...ளம்பினாள்.

வீட்டுக்குள் நுழைந்ததும் அம்மா அங்கலாய்த்து விட்டார்.

"ஏண்டா. என்னடா. இது வீடா! இப்படிக் கிடக்கு" ...று சத்தம் செய்ய ஆரம்பித்தார்.

இறைவிதான் முறைத்தாள். "அம்மா! அண்ணன். ...ணவே ஏதோ பிராப்ளத்துல இருக்கு... நீ என்னம்மா! ...ப இதுவா முக்கியம்." என்று கண்டித்தாள். பிறகு அம் ...வையும் சமாதானம் செய்வது போல்.

"சரி! நீங்க வேண்ணா சமையல் ரூமை சுத்தம் செய்ங்க... ...க பேசறோம்" என்று சொல்லி விட்டு இரண்டு சேர் ...ர எடுத்து வெளியே போட்டாள்.

...ன் முகத்தையே ஆழ்ந்து பார்க்கிற அண்ணன்... அன் ...று பின்னாடியே சுத்துவியே... என்னைக் கூட



உதறிட்டு..." என்று பேச முன்னே அவள் தன் மலர்க்கரத்தால் அவன் வாயைப் பொத்தினாள்.

"ம்ஹூம்... நான் உன்னை உதறவேயில்லை. நான் அவருகிட்டே என்ன சொன்னேன் தெரியுமா? எது எப்படியானாலும் சரி... எங்கண்ணன் இல்லாம நம்ம கல்யாணம் நடக்காதுன்னு சொன்னேன்" என்றாள்.

"ஆமா. சொன்னான்." என்றான் முணுமுணுப்பாக. இறைவி தொடர்ந்தாள்.

"சரி விடு. உனக்குத்தான் ஏதோ கெட்ட நேரம். நாங்க சொன்ன எதையுமே நீயும் மனகல வாங்கிக்கலையே!" என்றான்.

"அதுக்குத்தான்... வேணுமட்டும் தண்டனை குடுத்துட்டீங்களே... இப்ப என்ன பிரச்சினைன்னு கேளு." என்றான்.

"சொல்லுண்ணா" என்றாள் இறைவி பாசத்தோடு.

சொன்னான்.

நாயரின் நோட்டீஸைக் காட்டினான். இறைவியும் கலங்கித்தான் போனாள்.

"அண்ணா இது என்ன புதுத் தலைவலி!" என்றாள்.

"ஆமம்மா! இப்பத்தான் என்னோட மடத்தனம் எனக்குப் புரியுது. என்ன இருந்தாலும் பெரிய கம்பெனின்னா அவங்க பார்ட்ஸை ரீப்ளேஸ் பண்ணிக் குடுப்பாக. அல்லது கேஸைச் சமாளிப்பாக. ஆனா நான் என்ன செய்ய?"

"அண்ணா பிரச்சினை அது இல்லை. அவரு நோட்டீஸ் விட்டிருந்த மாதிரி ... நீங்க அவுக ஒப்புதலோட செய்யலை. உங்க எம்.டி.கிட்டயும் கன்செண்ட் வாங்கலை." என்றாள்.

"ஆமா. எல்லா மடத்தனமும் இப்பப் புரியுது." என்றான்.

இப்போது தங்கை மேல் அவனுக்கு கோபம் இருக்கவில்லை. தனக்குப் பிரச்சினை என்றவுடன் கௌரவம் பார்க்காமல் உடனே ஓடி வந்திருக்கிறாள். தன் பிரச்சினையைக் காது கொடுத்துக் கேட்கிறாள். ஆலோசனைகள் சொல்கிறாள். அதிலேயே யானை பலம் வந்தாற்போல் உணர்ந்தான்.

''அண்ணா! நான் சொல்றதைப் புரிஞ்சுக்கோ! நீ இந்த மாதிரி செஞ்சதுல கூட கோபம் இல்லை அவருக்கு. ஆனா என்னைப் பகடைக்காய் மாதிரி நினைச்சுகிட்டு கல்யாணத்தை நிறுத்தறேன்னு சொன்ன பாரு. அதுதான் வருத்தம். இல்லேன்னா... கண்டிப்பா உன்னைத் தேடி வந்திருப்பாரு...'' என்றான்.

அந்த உண்மையை அவனும் நன்றாக உணர்ந்ததாலோ என்னவோ செந்தில் குமரன் மௌனமாக வாங்கிக் கொண்டான்.

''இப்ப என்ன செய்யலாம். சொல்லு!'' என்றான்.

இறைவி சற்று யோசித்தாள்.

''நான் பேசறேன். அவர்கிட்டே பேசறேன். இந்தப் பிரச்சினையிலிருந்து காப்பாத்தி விடுங்கன்னு கேட்கறேன்.''

''ஏன். அதை அவன் கேட்கட்டுமேன்னு சொன்னா!''

''சொன்னா. அப்புறம் நீ கேளு! அண்ணா! காரியம் பெருசா வீரியம் பெருசான்னு யோசி. இப்படி அவரு கம்பெனியில நடந்துருக்குங்கறது வெளியே தெரிஞ்சா... அவருக்கும்... அவங்க கம்பெனிக்கும்... அது ஒரு பேட் மார்க் தான். கண்டிப்பா 'ஹஷ் அப்' செய்யத்தான் பார்ப்பார்.'' என்றாள்.

''சரி! நீ பேசு!'' என்று அவர்கள் ஆலோசித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில் அறிவழகன் கன்னத்தில் கை



வைத்தபடி ஜி.எம். சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''செந்தில் எப்ப போன் பண்ணினாரு'' என்றான்.

''இப்பத்தான் ஒரு ஒரு மணி நேரத்துக்கு முன்னாலே...'' என்றார் ஜி.எம்.

''என்கிட்டே பேசணும்னாரா?''

''அது ஒண்ணும் சொல்லலே! ஆனா உங்ககிட்டே பேசு வாருன்னு நினைக்கறேன்.'' என்றார்.

அவன் கைகள் மேஜைமேல தாளமிட ''நாயரா? அவர் விவகாரமான பேர்வழியாச்சே!'' என்றான் தனக்குத்தானே பேசுவது போல்.

''ஆமா! சார். அதேதான் நானும் சொன்னேன்.'' என்றார் அவரும்.

''சரி. நீங்க போங்க...'' என்றான்.

தள்ளு கதவு வரை போன அவரை மறுபடியும் அழைத்தான்.

''மிஸ்டர்... கணேசன் கீப் இட் கான்ஃபிடென்ஷியல்... ஏன்னா அது லீக்கானா... நம்ம கம்பெனி நேமும் டேமேஜாகும். நம்ம பிரெஸ்டீஜும் அதுல அடங்கியிருக்கில்ல. இட் இஸ் பிட்வீன் யூ அண்ட் மீ!''

''ஓ.கே. சார்! ஐ அண்டர்ஸ்டாண்ட் சார்! என்று பேசுகிற ஜி.எம்மை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

செல்போனைக் கையிலெடுத்தான்.

''இறைவி. உங்கண்ணன் கிட்டே பேசணும்.'' என்றான்.

''நான்... இப்ப எங்க வீட்லதான் இருக்கேன்... அண்ணன் பக்கத்துலதான் இருக்கான். நானே உங்ககிட்டே பேசணும்னு இருந்தேன்.'' என்றாள் படபடப்பாக.

உள்ளே பாரம் இறங்கினாற் போல உணர்ந்தான்.

''என்கிட்டே பேசுவானா... கேளு'' என்றான் அறிவழகன்.

''ஏன் பேசாம? அண்ணா... இந்தா அவரு பேசறாரு...'' என்று கையில் கொடுத்தாள்.

## 22

''லாபம் மட்டும்தான் உன் கண்ணுக்குத் தெரிஞ்சுது. எல்லாத் தொழிலுக்கும் ரெண்டு பக்கம் இருக்கு. அது உனக்கும் புரியலே. அப்ப இப்படி ஒரு பிராப்ளம் வந்திருக்கு... எப்படி சால்வ் பண்ணப் போறே?'' என்று பொரிகிற அறிவழகனை ஒரு கையாலாகாத் தனத்துடன் பார்த்தான் செந்தில்குமரன்.

''எப்படி... சால்வ் பண்றது? மூணு லட்சரூபா குடுத்துத் தான்'' என்றான்.

''நாயர் எப்படி ஆள் தெரியுமா? நீ என்னோட பாது காப்பில இல்லேன்னு தெரிஞ்சா... உன்னைப் பந்தாடிப் புடுவாரு... ஒரு உதாரணம் சொல்றேன்... கேட்டுக்க... நான் இப்பவும் நீ என்னோட பார்ட்னர்தான். நான்தான் மூணு மாசம் லீவு குடுத்திருக்கேன்னு மெயின்டெயின் பண்ணிகிட்டிருக்கேன். ஜி.எம். கூட நம்பற அளவுக்கு... போயிட்டிருக்கு. ஆனா, நாயர் மோப்பம் புடிச்சுட்டாரு. போனவாரம் எனக்கு போன் பண்ணி, ஏன் கல்யாணம் நின்னு போச்சானு பொண்ணுக்கும் அண்ணனுக்கும்



பிராப்ளமான்னெல்லாம் விசாரிச்சார். எவன் சொன்னான்? அப்படியெல்லாம் ஒண்ணும் கிடையாதேன்னு அடிச்சுப் பேசினேன்... நான். அப்படியிருந்தும் உனக்கு நோட்டீஸ் விட்டுருக்காரு... அது மட்டுமில்ல.. அந்த வொர்க் ஷாப்புக்குப் போய்... எந்தெந்தக் கார் அங்க சர்வீஸ் பண்ணினதுன்னு லிஸ்ட் கேட்டு வாங்கி வச்சிருக்காரு. அந்த ஆளுங்களையெல்லாம் கான்டாக்ட் பண்ணி நான் மூணு லட்சம் வாங்கியிருக்கேன். உங்களுக்கும் வாங்கித் தர்றேன்... ஆனா, எனக்கு கமிஷன் குடுத்தரணும்னு பேரம் பேசுவாரு என்றான்.

செந்தில்குமரன் விழித்தான்.

ஏற்கனவே எஸ்டாப்ளிஷ் ஆயிருக்கிற ஒரு பிளினைவட்டு மாதிரி உன்கிட்டே கொடுத்தேன். அதனால அதுல இருக்கிற ரிஸ்க் ஃபேக்டர்ஸ் பத்தி உனக்குத் தெரியலே... இப்ப என்னோடது கம்பெனி. எந்த நஷ்டத்தையும் சமாளிப்பேன். கம்பெனி கணக்கில கொண்டு வருவேன். நிகர லாபம் நின்னாப் போதும். நீ ஒரு தனியாள். எப்படி சமாளிப்பே!'' என்றான்.

செந்தில்குமரன் ''தலையைக் குத்திக் கொண்டு'' என்பார்களே அது போல் தலையைக் குனிந்து கொண்டு அமர்ந்திருந்தான். அறிவழகன் பொரிந்த விதத்துக்கு தலையே தூக்கவில்லை.

அத்தனை கோபத்துக்கும் பின்னாலே அக்கறை இருந்தது என்று புரிந்ததால் மௌனமாக வாங்கிக் கொண்டான்.

எவ்வளவு சிறுபிள்ளைத் தனமாக நடந்து கொண்டோம் என்று தோன்றவே கவலையுடன் நின்று கொண்டிருந்தான்.

''உட்காருடா!'' என்று சற்று எரிச்சலாகவே சேரை இழுத்துப் போட்டான் அறிவழகன்.

ஜி.எம்மிடம் பேசியதும் அவனுக்குத் தோன்றிய ஒரே எண்ணம் இறைவியிடம் கலந்தாலோசிப்பது என்பதுதான் செல்போனில் தங்கையிடம் பேசினான்.

''இறைவிக் குட்டி!'' என்றான்.

அவன் குரலில் இருந்த கலக்கமோ என்னவோ இறைவியை ஒரு கணம் அசைத்துப் பார்த்து விட்டது.

''அண்ணா!'' என்றாள் பாசம் தொனிக்கும் குரலில். குரல் தழுதழுத்தது. ஒரு நிமிடம் உணர்ச்சி மேலீட்டால் திணறி விட்டாள்.

''என்னண்ணா!''

''டேய்! எனக்கு ஒரு பிராப்ளம்!''

''அண்ணா! ஒன்னும் வொரி பண்ணிக்காதே. நான் இப்ப அங்கே வர்றேன்.'' என்று கிளம்பினாள்.

அம்மாவும் வீட்டைப் பூட்டிக் கொண்டு அவளோடு கிளம்பினாள்.

வீட்டுக்குள் நுழைந்ததும் அம்மா அங்கலாய்த்து விட்டார்.

''ஏண்டா. என்னடா. இது வீடா! இப்படிக் கிடக்கு'' என்று சத்தம் செய்ய ஆரம்பித்தார்.

இறைவிதான் முறைத்தாள். ''அம்மா! அண்ணன். ஏற்கனவே ஏதோ பிராப்ளத்துல இருக்கு... நீ என்னம்மா! இப்ப இதுவா முக்கியம்.'' என்று கண்டித்தாள். பிறகு அம்மாவையும் சமாதானம் செய்வது போல்.

''சரி! நீங்க வேண்ணா சமையல் ரூமை சுத்தம் செய்ங்க... நாங்க பேசறோம்'' என்று சொல்லி விட்டு இரண்டு சேர்களை எடுத்து வெளியே போட்டாள்.

தன் முகத்தையே ஆழ்ந்து பார்க்கிற அண்ணன்... அண்ணன்னு பின்னாடியே சுத்துவியே... என்னைக் கூட



உதறிட்டு...'' என்று பேச முன்னே அவள் தன் மலர்க்கரத்தால் அவன் வாயைப் பொத்தினாள்.

''ம்ஹூம்... நான் உன்னை உதறவேயில்லை. நான் அவருகிட்டே என்ன சொன்னேன் தெரியுமா? எது எப்படியானாலும் சரி... எங்கண்ணன் இல்லாம நம்ம கல்யாணம் நடக்காதுன்னு சொன்னேன்'' என்றாள்.

''ஆமா. சொன்னான்.'' என்றான் முணுமுணுப்பாக. இறைவி தொடர்ந்தாள்.

''சரி விடு. உனக்குத்தான் ஏதோ கெட்ட நேரம். நாங்க சொன்ன எதையுமே நீயும் மனகல வாங்கிக்கலையே!'' என்றாள்.

''அதுக்குத்தான்... வேணுமட்டும் தண்டனை குடுத்துட்டுங்களே... இப்ப என்ன பிரச்சினைன்னு கேளு.'' என்றான்.

''சொல்லுண்ணா'' என்றாள் இறைவி பாசத்தோடு.

சொன்னான்.

நாயரின் நோட்டீஸைக் காட்டினான். இறைவியும் கலங்கித்தான் போனாள்.

''அண்ணா இது என்ன புதுத் தலைவலி!'' என்றாள்.

''ஆமம்மா! இப்பத்தான் என்னோட மடத்தனம் எனக்குப் புரியுது. என்ன இருந்தாலும் பெரிய கம்பெனின்னா அவங்க பார்ட்ஸை ரீப்ளேஸ் பண்ணிக் குடுப்பாக. அல்லது கேஸைச் சமாளிப்பாக. ஆனா நான் என்ன செய்ய?''

''அண்ணா பிரச்சினை அது இல்லை. அவரு நோட்டீஸ் விட்டிருந்த மாதிரி ... நீங்க அவுக ஒப்புதலோட செய்லை. உங்க எம்.டி.கிட்டயும் கன்செண்ட் வாங்கலை.'' என்றான்.

''ஆமா. எல்லா மடத்தனமும் இப்பப் புரியுது.'' என்றான்.

இப்போது தங்கை மேல் அவனுக்கு கோபம் இருக்க வில்லை. தனக்குப் பிரச்சினை என்றவுடன் கௌரவம் பார்க்காமல் உடனே ஓடி வந்திருக்கிறாள். தன் பிரச் சினையைக் காது கொடுத்துக் கேட்கிறாள். ஆலோசனைகள் சொல்கிறாள். அதிலேயே யானை பலம் வந்தாற்போல் உணர்ந்தான்.

''அண்ணா! நான் சொல்றதைப் புரிஞ்சுக்கோ! நீ இந்த மாதிரி செஞ்சதுல கூட கோபம் இல்லை அவருக்கு. ஆனா என்னைப் பகடைக்காய் மாதிரி நினைச்சுகிட்டு கல் யாணத்தை நிறுத்தறேன்னு சொன்ன பாரு. அதுதான் வருத்தம். இல்லேன்னா... கண்டிப்பா உன்னைத் தேடி வந்திருப்பாரு...'' என்றாள்.

அந்த உண்மையை அவனும் நன்றாக உணர்ந்ததாலோ என்னவோ செந்தில் குமரன் மௌனமாக வாங்கிக் கொண் டான்.

''இப்ப என்ன செய்யலாம். சொல்லு!'' என்றான்.

இறைவி சற்று யோசித்தாள்.

''நான் பேசறேன். அவர்கிட்டே பேசறேன். இந்தப் பிரச்சினையிலிருந்து காப்பாத்தி விடுங்கன்னு கேட்கறேன்.''

''ஏன். அதை அவன் கேட்கட்டுமேன்னு சொன்னா!''

''சொன்னா. அப்புறம் நீ கேளு! அண்ணா! காரியம் பெருசா வீரியம் பெருசான்னு யோசி. இப்படி அவரு கம் பெனியில நடந்துருக்குங்கறது வெளியே தெரிஞ்சா... அவ ருக்கும்... அவங்க கம்பெனிக்கும்... அது ஒரு பேட் மார்க் தான். கண்டிப்பா 'ஹுஷ் அப்' செய்யத்தான் பார்ப்பார்.'' என்றாள்.

''சரி! நீ பேசு!'' என்று அவர்கள் ஆலோசித்துக் கொண் டிருந்த அதே நேரத்தில் அறிவழகன் கன்னத்தில் கை



வைத்தபடி ஜி.எம். சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந் தான்.

''செந்தில் எப்ப போன் பண்ணினாரு'' என்றான்.

''இப்பத்தான் ஒரு ஒரு மணி நேரத்துக்கு முன்னாலே...'' என்றார் ஜி.எம்.

''என்கிட்டே பேசணும்னாரா?''

''அது ஒண்ணும் சொல்லலே! ஆனா உங்ககிட்டே பேசு வாருன்னு நினைக்கறேன்.'' என்றார்.

அவன் கைகள் மேஜைமேல தாளமிட ''நாயரா? அவர் விவகாரமான பேர்வழியாச்சே!'' என்றான் தனக்குத்தானே பேசுவது போல்.

''ஆமா! சார். அதேதான் நானும் சொன்னேன்.'' என்றார் அவரும்.

''சரி. நீங்க போங்க...'' என்றான்.

தள்ளு கதவு வரை போன அவரை மறுபடியும் அழைத் தான்.

''மிஸ்டர்... கணேசன் கீப் இட் கான்ஃபிடென்ஷியல்... ஏன்னா அது லீக்கானா... நம்ம கம்பெனி நேமும் டேமே ஜாகும். நம்ம பிரெஸ்டீஜும் அதுல அடங்கியிருக்கில்ல. இட் இஸ் பிட்வீன் யூ அண்ட் மீ!''

''ஓ.கே. சார்! ஐ அண்டர்ஸ்டாண்ட் சார்! என்று பேசுகிற ஜி.எம்மை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

செல்போனைக் கையிலெடுத்தான்.

''இறைவி. உங்கண்ணன் கிட்டே பேசணும்.'' என்றான்.

''நான்... இப்ப எங்க வீட்லதான் இருக்கேன்... அண்ணன் பக்கத்துலதான் இருக்கான். நானே உங்ககிட்டே பேச ணும்னு இருந்தேன்.'' என்றாள் படபடப்பாக.

உள்ளே பாரம் இறங்கினாற் போல உணர்ந்தாள்.

''என்கிட்டே பேசுவானா... கேளு'' என்றான் அறிவழகன்.

''ஏன் பேசாம? அண்ணா... இந்தா அவரு பேசறாரு...'' என்று கையில் கொடுத்தாள்.

## 22

''லாபம் மட்டும்தான் உன் கண்ணுக்குத் தெரிஞ்சது.
எல்லாத் தொழிலுக்கும் ரெண்டு பக்கம் இருக்கு. அது
உனக்கும் புரியலே. அப்ப இப்படி ஒரு பிராப்ளம் வந்
திருக்கு... எப்படி சால்வ் பண்ணப் போறே?'' என்று பொரி
கிற அறிவழகனை ஒரு கையாலாகாத் தனத்துடன் பார்த்
தான் செந்தில்குமரன்.

''எப்படி... சால்வ் பண்றது? மூணு லட்சரூபா குடுத்துத்
தான்'' என்றான்.

''நாயர் எப்படி ஆள் தெரியுமா? நீ என்னோட பாது
காப்பில இல்லேன்னு தெரிஞ்சா... உன்னைப் பந்தாடிப்
டுவாரு... ஒரு உதாரணம் சொல்றேன்... கேட்டுக்க... நான்
ப்பவும் நீ என்னோட பார்ட்னர்தான். நான்தான் மூணு
ட்சம் லீவு குடுத்திருக்கேன்னு மெயின்டெயின் பண்ணி
ட்டிருக்கேன். ஜி.எம். கூட நம்பற அளவுக்கு...
யாவிட்டிருக்கு. ஆனா, நாயர் மோப்பம் புடிச்சுட்டாரு.
னவாரம் எனக்கு போன் பண்ணி, ஏன் கல்யாணம்
னு போச்சானு பொண்ணுக்கும் அண்ணனுக்கும்



பிராப்ளமான்னெல்லாம் விசாரிச்சார். எவன் சொன்னான்? அப்படியெல்லாம் ஒண்ணும் இடையாதேன்னு அடிச்சுப் பேசினேன்... நான். அப்படியிருந்தும் உனக்கு நோட்டீஸ் விட்ருக்காரு... அது மட்டுமில்லை.. அந்த வொர்க் ஷாப்புக்குப் போய்... எந்தெந்தக் கார் அங்க சர்வீஸ் பண்ணினதுன்னு லிஸ்ட் கேட்டு வாங்கி வச்சிருக்காரு அந்த ஆளுங்களையெல்லாம் காண்டாக்ட் பண்ணி நான் மூணு லட்சம் வாங்கியிருக்கேன். உங்களுக்கும் வாங்கித் தர்றேன்... ஆனா, எனக்கு கமிஷன் குடுத்தரணும்னு பேரம் பேசுவாரு'' என்றான்.

செந்தில்குமரன் விழித்தான்.

ஏற்கனவே எஸ்டாப்ளிஷ் ஆயிருக்கிற ஒரு பிஸினஸை லட்டு மாதிரி உன்கிட்டே கொடுத்தேன். அதனால அதுல இருக்கிற ரிஸ்க் ஃபேக்டர்ஸ் பத்தி உனக்குத் தெரியலே... இப்ப என்னோடது கம்பெனி. எந்த நஷ்டத்தையும் சமாளிப்பேன். கம்பெனி கணக்கில கொண்டு வருவேன். நிகர லாபம் நின்னாப் போதும். நீ ஒரு தனியாள். எப்படி சமாளிப்பே!'' என்றான்.

செந்தில்குமரன் ''தலையைக் குத்திக் கொண்டு'' என்பார்களே அது போல் தலையைக் குனிந்து கொண்டு அமர்ந்திருந்தான். அறிவழகன் பொரிந்த விதத்துக்கு தலையே தூக்கவில்லை.

அத்தனை கோபத்துக்கும் பின்னாலே அக்கறை இருந்தது என்று புரிந்ததால் மௌனமாக வாங்கிக் கொண்டான்.

எவ்வளவு சிறுபிள்ளைத் தனமாக நடந்து கொண்டோம் என்று தோன்றவே கவலையுடன் நின்று கொண்டிருந்தான்.

''உட்காருடா!'' என்று சற்று எரிச்சலாகவே சேரை இழுத்துப் போட்டான் அறிவழகன்.

ஆசிரியரிடம் மாட்டிக் கொண்ட குறும்புக்கார ஜெயவன் போல் அவன் விழிப்பதைப் பார்த்து இறைவிக்கு சிரிப்பு.

''அப்படி ஏதும் சிரித்து விடாதே!'' என்பது போல் கண்ணாலேயே அறிவழகன் எச்சரிக்கவும் சமையல் அறைக்கு அம்மாவுக்கு உதவப் போனாள்.

''அண்ணா... அவரு பேசறாரு! என்று செல்போனை இறைவி நீட்ட ஏதோ கனவுலகத்தில் இருப்பது போல் வாங்கிக் கொண்ட செந்தில்குமரன் இறைவி சற்றும் எதிர்பாராத அந்தக் காரியத்தைச் செய்தான்.

குலுங்கிக் குலுங்கி அழுதான்!

இறைவி தலையிடாமல் கண்கள் கலங்க அதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இரண்டு மூன்று நிமிடங்களுக்கு மேல் அழுது தீர்த்து விட்டான்.

அறிவழகன்தான் அந்தப்புறம் தவித்துப் போனான். "டேய்! டேய்! எதுக்கு இப்படி அழறே! உலகத்துல எல்லாப் பிரச்சினைக்கும் ஏதாவது ஒரு வழி இருக்கும். எதுக்கு... இப்படி... அழறே! ஓ.கே.... ''ஐ.ம் கமிங் தேர்... நல். வரலாம்தானே?'' என்றான்.

''சரி...!'' என்றான் செந்தில்குமரன் ஒற்றைச் சொல்லாக சொல்ல அடுத்த இருபதாவது நிமிடம் அறிவழகனின் கார் அவர்களது வீட்டுக் காம்பவுண்டுக்குள் நுழைந்தது. அதே சமயம்!

திலகவதி புலம்பிக் கொண்டு நடமாடிக் கொண்டிருந்தார்.

''வீடா... இது! கோயில் மாதிரி வச்சிருந்தேன்... எப்படி வச்சிருக்கான்... பாரு'' என்று ஒழுங்கு படுத்த ஆரம்பிக்க இறைவி அம்மாவிடம் வந்து சொன்னாள்.



''அம்மா...! நாம கிட்டத்தட்ட ஒரு மாசமா வீட்டுப் பக்கம் வர்லே. வீடு எப்படி இருக்கும்...! ஆனா... அதெல்லாம் பேசறதுக்கு இது நேரமே இல்லை. அண்ணன் பெரிய பிரச்சனையில இருக்காரு. இப்ப அவரு இங்க வரப் போறாரு...'' என்றாள்.

திலகவதி அடுப்பு மேடையைத் துடைத்துக் கொண்டிருந்தவர் நிறுத்தி விட்டு அவளைப் பார்த்தார்.

''மாப்பிள்ளையா?'' என்றார்.

''ம்...!'' என்று இறைவி முன்னறையைச் சுத்தம் செய்வதற்கு ஓடினாள்.

ஓரளவுக்கு அவன் வந்தால் அமர்வதற்கு ஏற்ற வகையில் இரண்டு மூன்று சேர்களைப் போட்டு விட்டு அம்மாவுக்கு உதவ உள்ளே ஓடினாள்.

திலகவதியம்மாவுக்கு இந்தப் பிரச்சினையின் முழு வீச்சும் புரியவில்லை. அவர் படபடப்பாக வெங்கடாசலத்துக்கு போன் செய்து சமையல் செய்வதற்குத் தேவையான பொருட்களை சேகரிக்க ஏற்பாடு செய்தார்.

இறைவி அண்ணனை ஆறுதல் படுத்துகிற விதமாக ''அவுக வர்றாக இல்லண்ணா... எல்லாப் பிரச்சினையும் தீந்துரும்'' என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

காத்துக் கொண்டிருந்தார்கள்.

கார் நுழைவதை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

காரிலிருந்து இறங்கித் தனது கம்பீர நடையுடன் அவன் வருவதைப் பார்த்தவுடன் ஏதோ சர்வரோக நிவாரணியாக ஒரு சஞ்சீவினி கிடைத்த மாதிரி உணர்ந்தார்கள்.

எப்போதும் எந்தப் பிரச்சினையின் போதும் உணர்ச்சிகளை வெளிக்காட்டாது வைத்துக் கொள்கிற அவனது

முகபாவம் பார்த்து செந்தில்குமரன் அலுவலக நேரங்களில் கூட ஆச்சர்யப்படுவான். ஆனால் வந்து பேச ஆரம்பித்த பிறகு பொரிந்து தள்ளிவிட்டான்.

செந்தில்குமரனும் அதில் இருக்கற நியாயம் புரிந்து அமைதியாக வாங்கிக் கொண்டான்.

இடையிலே வேறு ஒன்றும் நடந்தது. ''வாங்க... தம்பி!'' என்று வரவேற்ற திலகவதி அவசரமாகக் கூடையைத் தூக்கிக் கொண்டு ஏதோ வாங்கப் போகிறேன் என்று கிளம்ப அதைக் கவனித்த அறிவழகன் நின்று டிரைவரை அழைத்து,

''அம்மா! வெளியே போறாக... என்ன வேணும்னு கேட்டு ஹெல்ப் பண்ணு...'' என்று சொல்லிவிட்டு உள்ளே போனான்.

திலகவதி புத்திசாலித்தனமாக ஒரு காரியம் செய்தார். காரிலேயே அந்த வீட்டுக்குப் போய் தேவையானவை யெல்லாம் அள்ளிப் போட்டுக் கொண்டு வந்து உற்சாக மாகச் சமையலை ஆரம்பித்தார்.

பேச்சுக்கு நடுவே எட்டிப் பார்த்த அறிவழகன் ''அத்தை! உங்க ஆசைக்காக சாப்பிடறேன். சிம்பிளா ஏதாவது செய்ங்க'' என்று சொல்லி விட்டுப் போனான்.

ஒரு சின்ன விஷயம் கூட அவன் கண்களுக்குத் தப்புவதில்லை என்பதை உள்ளார்ந்த ஒரு பெருமையுடன் கவனித்துக் கொண்டாள் இறைவி.

அதற்குப் பிறகுதான் இவ்வளவு நேரம் பேச்சு வார்த்தை நடந்தது.

''சரிடா! கொஞ்ச நேரம் இந்தப் பிரச்சினையைத் தூக்கி வச்சுட்டு... நான் சொல்றதைக் கேளு...'' என்றான்.

செந்தில்குமரன் ஆவலாகப் பார்க்க...



''நாளைக்கே அம்மாவும் நீயும் நம்ம வீட்டுக்கு வந்து கல்யாண வேலைகளை ஆரம்பிங்க...'' என்றான்.

''எனக்கு... எனக்கு உங்க பேரண்ட்ஸைப் பார்க்கவே ரொம்ப வெட்கமா... இருக்கு...!''

''எதுக்கு... வெட்கம்! இது வேற... அது வேற...'' என்றான் ஆசுவாசப்படுத்துவது போல்.

எழுந்து மறுபடியும் அடுப்படிக்குச் சென்றான். ''அத்தை...! பசிக்குது! ஏதாவது சாப்பிடக் குடுத்தீங்கன்னா... தேவலை'' என்றான்.

திலகவதி பரபரப்பாக தயார் செய்திருந்த வெஜிடபிள் உப்புமாவையும், பரிமாறி தேங்காய் சட்டினி, ஊறுகாய் என்று சமாளித்தார். கடையில் இருந்து ஸ்வீட் வாங்கி வந்திருந்தார்.

''பாத்தீங்களா! என்ன இருந்தாலும் அடிக்கடி வந்தா மரியாதை இருக்கறதில்லே! எப்பவாவது வந்தாத்தானே... பரபரப்பா இருக்கு...'' என்றான். சிரித்தான்.

''அது... சரிங்க... மாப்பிளே! ஆனாலும் அதுக்காக இப்படி வராம இருக்க வேண்டாம். நீங்க மட்டுமா வராம இருந்தீங்க... நாங்களுந்தேன். நாங்களே ஒரு மாசம் கழிச்சு இந்த வீட்டுக்குள்ள நுழைஞ்சிருக்கோம்... பாருங்க...!'' என்றார்.

''அத்தை... வெஜிடபிள் உப்புமா... சூப்பர்'' என்று அவன் பேச்சை மாற்றவும் திலகவதி ஒரு நிமிடம் திகைத்துப் போனார். ஆனால் இங்கிதம் புரிந்து அவரும் பேச்சை மாற்றினார்.

உணவுண்டு முடித்தவுடன் ''நான் கிளம்பட்டுமா?'' என்று கிளம்பினான். அந்த நேரம் செந்தில்குமரன் தனது சோகமெல்லாம் துடைத்தெறிந்தவன் போல்,

''அறிவழகா! ரொம்பத் தேங்க்ஸ்டா! எ ஃப்ரெண்டு இன் நீட் இஸ் எ ஃப்ரெண்டு இன்டீட்... என்று நிரூபிச்சுட்டே! இதுக்கு என்ன கைம்மாறு செய்யப் போறேன்...!'' என்று உருகினான்.

''ஏன்... தாராளமா செய்யலாமே! என் தங்கையை வெளிய கூட்டிட்டுப் போடா பயலேன்னு ஒரு நாள் அனுப்பி வைக்கலாம்'' என்றான்.

இதை எதிர்பார்க்காத செந்தில்குமரன் ஒரு நிமிடம் திகைத்தாலும் பிறகு முகம் மலரச் சிரித்தான்.

''பயங்கரமான காரியவாதிடா... நீ'' என்று சிரித்தான்.

''ஓ.கே...டா நாளைக்கு வேண்ணா எங்காவது கூட்டிட்டுப் போ...!'' என்றான்.

''நேரம்டா... உன்கிட்டே பர்மிஷன் கேட்க வேண்டியிருக்கு.''

''எல்லாம் கல்யாணமாகற வரைக்கும்தானே!'' என்று மறுபடியும் செந்தில்குமரன் சிரித்தான்.

முகம் மலர இறுக்கம் இளகினாற் போல் சகோதரன் சிரிப்பதை ஒரு விதமான நிம்மதியுடன் கவனித்துக் கொண்டாள் இறைவி.

வாசல் வரை வழியனுப்ப வந்தாள். காரில் ஏறுவதற்கு முன்ப மெல்லிய குரலில் கேட்டான்.

''நான் பயங்கரமான காரியவாதியாமே...? உங்கண்ணன் சொல்றான். அப்படியா?'' என்று.

அவள் வெட்கத்துடன் அவன் தோளில் தட்டினாள்.

''நாளைக்குப் பூராவும் இப்படித்தானே பேசுவீங்கன்னு பயந்து போயிருந்தேன். இப்பவே ஆரம்பிச்சுட்டீங்களா?'' என்றாள்.



இங்கிதம் அறிந்து சற்றுத் தள்ளி வேறு பக்கம் பார்த்தபடி நின்றிருந்த டிரைவரை அழைத்தான். அதற்குள்ளாகவே அடிக்குரலில்.

''சரி... இதுக்கு... பதில் நாளைக்கு சொல்றேன்? நீ ஸ்கூலுக்குக் கட் அடிச்சுட்டு... வா. அது மிட்டுமில்ல ரெனிக்னேஷன் நோட்டீஸ் குடுத்துடு'' என்று சொல்லி விட்டுப் போனான்.

* * *

பழமுதிர்ச் சோலையில் மேலே இருந்த கோவிலைப் பார்ப்பதற்காக நடந்து கொண்டிருந்தார்கள்.

அழகர் கோவிலில் தரிசனம் முடித்து மேலே முருகன் கோவில் பார்க்கலாம் என்று போனார்கள்.

''திருப்பரங்குன்றமா, பழமுதிர்ச்சோலையா'' என்று முதல் நாளிரவு பட்டி மன்றம் நடந்தது.

''பழமுதிர்ச்சோலைதான்'' என்று பிடிவாதமாக நின்றான் அறிவழகன்.

இப்போது கேட்டாள். இறைவி. ''ஏன் திருப்பரங்குன்றம் பிடிக்காதா?''

''பிடிக்காம... என்ன? இங்கவேண்ணா... இந்தக் காட்டுப் பாறைக்குள்ள... கொஞ்சம் ஓய்வா நடந்து போலாம். அதிர்ஷ்டம் இருந்தா ஏதாவது ஒத்தை யானை கினை வந்தா... வேற சில விஷயங்களும் கிடைக்குமில்ல...'' என்றான்.

இருவரும் சிரித்தார்கள்.

அதிகாலை ஏழு மணி இருக்கும்.

ஓய்வாக நடக்க ஆரம்பித்தார்கள்.

''இறைவி...! இந்த மாதிரி நாம அடிக்கடி எங்கயாவது போயிரலாம்'' என்றான்.

''ம்...'' என்றாள்.

இளம் காலைப்பொழுதில் நடந்து செல்வது சுகமாக இருந்தது. நடப்பதற்கும் வசதியாகவே இருந்ததால் அந்த நடை பயணத்தை மிகவும் அனுபவித்து நடந்தார்கள்.

மேலே முருகன் சன்னதி சென்று சாமி கும்பிட்டுவிட்டு சுனைக்குப் போனார்கள். இறைவி எதிர்பார்த்ததற்கு நேர் மாறாக அந்த நடைப் பயணத்தில் பொதுப்படையாகவே பேசினான் அறிவழகன். பெரிதும் மௌனம் காத்தான். அதற்கான காரணத்தையும் சொன்னான்.

''இறைவி! இந்த ஒரு மந்த் டென்ஷனே போதும். இப்ப உன்னோட இப்படி நடக்கறதே சுகமா இருக்கு. இந்தச் சின்ன மலையேற்றத்தை நான் முழுமையா அனுபவிக்கறதுன்னு முடிவு செஞ்சேன்'' என்றான்.

லேசாக இளைத்தபடிதான் நடந்தான். ஆனால் ''இறைவி... அந்த மரம் பாரு... இந்தக் கொடி பாரு... ஹேய்... மான்!'' என்று விளையாட்டாக்கினானே தவிர வேறு விதமான பேச்சே பேசவில்லை.

இறைவியும் அவன் மனம் புரிந்து அமைதியாகவே நடந்தாள். உண்மையாகவே இதமாக இருந்தது. அதிகாலை நேரம் என்பதால் கூட்டமும் குறைவாகவே இருந்தது.

இடையிலே சிறிது நேரம் அமர்ந்தார்கள்.

முருகன் கோவிலின் தினைமாவை வாங்கி ஆசையாக உண்டார்கள். அங்கேயே கிடைத்த பிரசாதப் பொட்டலங்களையும் வாங்கி கொண்டார்கள். வழியில் ஒரு இடம் பார்த்து அதைச் சாப்பிட்டார்கள்.



''தினைமாவு பாத்தியா... எவ்வளவு டேஸ்ட்...'' என்று ரசித்தார்கள்.

திரும்பி வரும்போது காரை ஒரு தோப்புக்குள் திருப்பினான்.

''இறைவி! இது நம்ம தோட்டம்...'' என்றான். ரோட்டுக்கு அந்தப்புறமும் இந்தப்புறமுமாக இருபத்தைஞ்சு... ஏக்கர்... இருக்கு'' என்றான்.

ஒரு பெரிய வேப்ப மரத்துக்கருகில் காரை நிறுத்தினான். செல்போனில் யாருக்கோ தகவல் கொடுத்தான்.

ஐந்து நிமிடங்களுக்குள்ளாக காலை உணவு பண்ணையாட்கள் கொண்டு வந்து வைத்து விட்டு ஒரு பெரிய ஜமுக்காளம் விரித்து விட்டு ஒதுங்கி நின்றார்கள்.

இறைவியைக் குறுகுறுவென்று பார்த்தார்கள். அறிவழகன் சிரித்தான்.

''என்ன பாக்கறீக! இவுகதான்... எஜமானியம்மா...'' என்றான்.

''அதேன்... பாக்கறோம்...! எம்புட்டு அளகா இருக்காங்க...'' என்றாள் ஒரு பெண்.

''நீங்களே பார்த்து எல்லா அளகையும் அள்ளிகிட்டுப் போயிராதீக... எங்களுக்கும் கொஞ்சம் மிச்சம் சொச்சம் வைங்க...'' என்றான்.

''ஐயா... இப்படித்தேன்... குசும்பு பேசுவாக எப்பவும்'' என்று சிரித்துச் சென்றார்கள்.

இருவருமாகப் பரிமாறிக் கொண்டு சாப்பிட்டார்கள். தங்கள் தோட்டத்தைச் சுற்றிக் காட்டினான். அந்த ஊரில் சற்று தொலைவில் இருந்த பண்ணை வீட்டைக் காட்டினான்.

''இறைவி. இப்ப வேலை நடக்குது. மகாராணியும் மகாராசாவும் வந்தாத் தங்கணுமில்லே! இந்த வாட்டி இங்கனயே பொழுதைக் கழிச்சப்புட்டு மூட்டையைக் கட்டிக்கிட வேண்டியதுதேன்'' என்று அவன் பேசுகிற வட்டார மொழியைக் கேட்டு அவள் சிரித்தாள்.

தலைக்கு இரண்டு கைகளையும் அணையாகக் கொடுத்து வானம் பார்த்துப் படுத்துக் கொண்டான். வலது காலை எடுத்து ட வடிவில் இடது முழங்காலின் மேல் வைத்துக் கொண்டான். காலை ஆட்டிக் கொண்டு விசிலடித்தான்.

சட்டென்று திரும்பிப் படுத்தான். இறைவி முழங்கால்களைக் கட்டிக் கொண்டு இரண்டு ஜாண் இடைவெளியில் அமர்ந்திருந்தாள். அந்த இடைவெளியை அளந்தான்.

''இது நியாயமா! ஒரு மாசம் கழிச்சுப் பேசலாம்னு வந்திருக்கோம். நீ பாட்டுக்கு... இத்..த...னை இடைவெளி விட்டு...'' என்று சீண்டி நடிக்க அவள் வெட்கத்துடன் சிரித்தாள்.

அந்த இடைவெளியில் அவள் அமர்ந்தாற்போல் இருக்க சட்டென்று அருகில் இழுத்தான். இதை எதிர்பாராததால் இறைவியும் சட்டென்று அவன் மார்பில் சாய்ந்தாள்.

''தட்ஸ்... குட்'' என்று கைகளால் இறைவியை பிடித்துக் கொண்டான். ஆனால் அவள் வெட்கம் பார்த்து உடனே விடுவித்து விட்டான்.

எழுந்து அமர்ந்த அவள் ''என்ன இப்படியெல்லாம்... செய்யறீக...!'' என்றாள்.

''இதுக்குப் பேருதான் கிருத்திரியங்கறது...!'' என்றான். அவள் விழித்தாள்.

''நீயாகத்தானே மேல வந்து விழுந்தே!'' இப்ப என்னைக் கேக்கிறே...? என்றான்.



''யங்கப்பா... சாமி!'' என்று அவனை பார்த்து சிரித்தாள். எழுந்து அமர்ந்தாள். அவன் காதைப் பிடித்துத் திருகினாள்.

மார்பில் சாய்ந்தபடி வேப்ப மரத்தில் சாய்ந்து அமர்ந்து கொண்டாள்.

சற்று நேரம் வேடிக்கையாகப் பேசிக் கொண்டார்கள். ஆனாலும் அவளுக்குள் அந்தக் கேள்வி ஓரமாக இருந்து கொண்டே இருந்தது. அதைப் புரிந்து கொண்டாற் போல்.

''அவுட்... வித் இட்... ஸ்வீட் ஹார்ட்!'' என்றான்.

''இல்லே! நேத்து எங்கண்ணன் ஒரு பிராப்ளம் சொன்னான். காது குடுத்துக் கேட்டதோட சரி... அதுக்கப்புறம் எந்த ஸ்டெப்பும்... எடுக்கலையே!'' என்றாள்.

''யார்... சொன்னா? முதல் ஸ்டெப் எடுத்தாச்சே!'' என்றான்.

''என்ன?'' என்பது போல் அவனைப் பார்க்க

''இப்ப அங்க என்ன நடக்குது? உங்கண்ணன், அம்மா வெங்கடாச்சலம் சித்தப்பா... எல்லாரும் எங்க வீட்டுக்குப் போயிருக்காக.. பொதுவானவங்க முக்கியமானவங்க... எல்லாரும் சேர்ந்து போய் அழைப்பு வைக்கப் போறாக... இதுல இருந்தே நாயருக்கு... நம்ம குடும்பங்களுக்குள்ளே... எந்தப் பிரச்சினையும் இல்லேன்னு... புரிஞ்சிரும்...'' என்றான்.

''ஓ!'' என்றாள் பிரமிப்பாக. அதைக் கவனிக்காதவன் போல் மேலே தொடர்ந்தான்.

''அது மட்டுமில்லே! இந்தப் பிரச்சினை தீராமயும் பாத்துக்கிடுவேன்'' என்றான்.

அவள் திடுக்கிட்டுப் போனாள்.

''ஆமா! நம்ம கல்யாணம் முடியற வரைக்கும். பிரச்சினை தீராது... அப்புறம்தான் தீர்ப்பேன்'' என்றான்.

இறைவி விழிக்க... மறுபடியும் இழைந்தான்.

''என்னா! உங்கண்ணன் கிறுக்குப் பய இருக்கானே! சரியான... என்று ஏதோ சொல்ல வந்தவன் புன்னகைத்தான். பிரச்சினையை முடிச்சுட்டா... அப்புறம்... அண்ணா... முறுக்கிக்கிட்டாருன்னு வை... என்பாடு திண்டாட்டம் ஆயிடுமில்ல...'' என்றான்.

இறைவிக்கு எப்படி அவன் இந்த இளம் வயதிலேயே தொழில் நிர்வாகத்தில் கெட்டிக்காரனாக இருக்கிறான் என்று புரிந்தது. பிரமிப்பு மாறாமலே அவன் கைகளுக்குள் அடங்கிக் கொண்டாள். அவனும் விவரமாகப் பயன் படுத்திக் கொண்டான்.

## 23

திருமண ஏற்பாடுகள் வேகமாக நடைபெற்றுக் கொண் டிருந்தன.

நாயரின் வக்கீல் நோட்டீஸ் பிரச்சினை அப்படியே டெப்பில் போடப்பட்டாற் போல் இருந்தது. இடையிலே ''நமக்குள் ரிலேஷன்ஷிப் சரியாகத்தான் இருக்குதுன்னு காட்டறதுக்காவது ஒரு பத்து நாள் ஆபீசுக்கு வா'' என்றான் அறிவழகன்.

செந்தில்குமாரனும் தட்டாமல் வந்தான். அந்தக் காலக் கட்டத்தில் போர்ட் மீட்டிங், எல்லா தடபுடலும் செய்தான்.

எம்.டி. அறிவழகன் என்றாலும் சேர்மன் என்ற முறையில் சாம்பசிவமும் ஒரு மீட்டிற்கிற்கு வந்தான். அபபோதுதாான்



அவரது ஆளுமையை முழுமையாகப் புரிந்து கொண்டான் செந்தில்குமரன்.

ஆளுமைத் திறன் அறிவழகனுக்கு எங்கிருந்து வந்தது என்றும் பரிந்தது.

''சேர்மன்... சேர்மன்'' என்று எல்லாரும் நடுங்கினார்கள். வீட்டில் இருக்கும் போது அறிவழகனும், அவரும் பழகு வதைப் பார்த்திருக்கிறான் செந்தில்குமரன். தந்தையிடம் உரிமையுள்ள குழந்தையாக கிளுகிளுவென்று சிரிப்பான் அறிவழகன். சில நேரங்களில் வீட்டின் பின்புறத்தில் உள்ள கோர்ட்டில் தந்தையும், மகனும் ஷட்டில்காக் கவிளையாடு வார்கள்.

டீ ஷர்ட் அணிந்து கொண்டு இளமையாக தந்தையாக நடமாடுவார். சில நேரங்களில் முழுக்கை ஷர்ட் அணிந்து கொண்டு வேட்டி உடுத்தியபடி நடமாடுவார். ஆனால் அவரது மனைவியோ முழுக்க முழுக்கத் தமிழ்நாட்டுக் குடும்பத் தலைவி.

தொழில் பிரச்சினைகளை அலசும்போது இருவரும் தீவிரமாக அலசுவார்கள். அலுவலகத்தில்

''அப்பா!'' என்று பணிவாக நிற்கிற அறிவழகனைப் பார்த்தார்.

இரண்டு மணி நேரம் எல்லா ஃபைல்களையும் கொண்டு வரச் சொல்லிப் பார்வையிட்டார். பிறகு விர்ரென்று கிளம்பிப் விட்டார்.

சேர்மன் இருக்கிற நேரம் முழுதும் அறிவழகன் உட்பட எல்லாரும் ஒருவிதமான உதறலோடுதான் இருந்தார்கள். அவர் கிளம்பியதற்குப் பிறகுதான் எல்லாரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள்.

இரண்டு மணி நேரம் நடந்த அந்த போர்ட் மீட்டிங்கில் அவர் கேட்ட நீட்சண்யம் மிக்க கேள்விகளும், அறிவழகன் தயாராக வைத்திருந்த பதில்களும் செந்தில்குமரனை வியப்பில் ஆழ்த்தின.

''மெஜஸ்டிக்'' என்று கிட்டத்தட்ட அவன் வாயைப் பிளக்காத குறைதான்.

சாம்பசிவம் கிளம்பிப் போனதற்குப் பின் மெதுவாக அறிவழகன் சொன்னான்.

''அப்பா... தொழில்ன்னு வரும்போது ரொம்ப ஸ்ட்ரிக்ட்'' என்று.

நேர்மாறாக அன்றைக்குக் கல்யாண விஷயமாக அவர்கள் வீட்டிற்கும் போன போது மிகவும் எளிமையாக உபசரித்தார்கள்.

நடந்து போன விஷயங்களைப் பற்றி அவரோ அவரது மனைவியோ, பேசவில்லை. இடைப்பட்ட காலத்தில் எதுவுமே நடக்காதது போல் மேற்கொண்டு ஏற்பாடுகளைப் பற்றிப் பேசினார்கள்.

ஏற்பாடுகள் என்ன ஏற்பாடுகள்? கிட்டத்தட்ட இறைவியின் குடும்பத்தினர் ஏதோ விருந்தாளிகள் போல் திருமணத்தில் கலந்து கொள்கிற நிலைமைதான் இருந்தது.

மெது மெதுவாக செந்தில்குமரனுக்கு ஒரு விஷயம் புரிந்தது. அவர்கள் நிலைமைக்குத் தான் செய்த தவறுகளுக்குத் துவம்சம் செய்திருக்கலாம். ஆனால் மனது வைத்துத் தன்னை விட்டு வைத்திருக்கிறார்கள் என்று.

மெதுவாக அறிவழகனிடம் கேட்டான். ''ஏன்... அறிவழகன்... இவ்வளவு ஸ்ட்ரிட்டா இருக்கிற சேர்மன் என் பிரச்சினைக்கு ஒன்னும் சொல்லலையா?'' என்று கேட்டான்.



அறிவழகன் அழுத்தமாகச் சிரித்தான்.

''கேள்வி கேட்கறதா... குடைஞ்செடுத்துட்டார்... முதல்லயே இந்த பார்ட்னர்ஷிப் ஐடியா அவருக்குப் பிடிக்கலே. வேண்டாம்ப்பா... ஃபிரண்ட் ஷிப் கெட்டுடும்னார். ஆனா நான்தான் கேட்கலே'' என்றான்.

முதல் முறையாக செந்தில்குமரன் தனக்குப் பார்ட்னர்ஷிப் கொடுப்பதற்காக தன் நண்பன் எவ்வளவு மெனக்கெட்டிருக்கிறான் என்பது புரிந்தது.

ஆழ்ந்த வருத்தத்துடன் சொன்னான். ''ஐ... ம்... சாரி! அறிவு... என்னால உனக்கு நிறையப் பிரச்சினைகள்'' என்றான்.

''அது பரவாயில்லை. என் என்னோட நம்பிக்கையைக் காப்பாத்தி இருந்தேன்னா.. நான் சேர்மன்கிட்டே அடிச்சுப் பேச முடிஞ்சிருக்கும். இப்ப... நான் சொன்னது சரி தானேன்னு அவரு கேட்கும் போது நான் தலை குனிய வேண்டியதாய் போச்சு...'' என்றான்.

மறுமுறையும் ''ஐ..ம்... சாரி...'' என்றான் செந்தில் குமரன்.

''ஓ.கே...! ஓ.கே! பரவாயில்லை... இனிமே... எந்தப் பிரச்சினையையும் வராம செட்ரைட் பண்ணிக்கலாம்...'' என்றான்.

செந்தில்குமரன் சிந்தனையில் ஆழ்ந்தான். அதனாலோ என்னவோ அவன் அதற்குப் பிறகு தாயரின் பிரச்சினை என்ன ஆனது என்று கேட்கவில்லை.

தான் மட்டும் நல்லபடியாகப் பணியாற்றினால் எதிர் காலத்தில் தனக்குத் தேவையான எல்லாம் அறிவழகன் தனக்குச் செய்வான் என்ற நம்பிக்கை இல்லாமல் போன

தான்தானே இடையிலே குறுக்கு வழியில் போகும் எண்ணம் தோன்றியது. ஆனாலும் எப்போது தன் பிரச்சினையைக் கேட்ட மறுபடியும் அறிவழகன் வீடு தேடி வந்தானோ அப்போதிருந்தே எல்லையில்லாத நிம்மதியை உணர்ந்தான். எல்லாப் பிரச்சினைகளையும் அவன் தீர்த்துக் கொடுப்பான் என்று உறுதியாக நம்பினான்.

அதனாலோ என்னவோ "நாயர் பிரச்சினை என்ன ஆச்சு?" என்ற வார்த்தையை அவன் இதுவரை கேட்கவே யில்லை.

அறிவழகனுக்கு அது குறித்து ஒரு திருப்தி ஏற்பட் டிருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

"செந்தில்... மேரேஜ் மேட்டர் முடியட்டும்... நாயர் பிராப்ளம் என்னன்னு நான் பார்த்துக்கறேன்" என்று ஒரே ஒரு முறை சொன்னான். அதையும் கூட அவனாகத்தான் சொன்னான். செந்தில்குமரன் எதுவும் சொல்லவில்லை.

"உனக்கு எப்படி வசதியோ... அப்படி செய்" என்று ஒரே வார்த்தையில் முடித்து விட்டான்.

ஒரு நாள் மாலையில் வீட்டுக்கு வந்தான்.

"செந்தில்.. வா! நீயும், நானும் சேர்ந்து போய் நாயருக்குக் கல்யாணப் பத்திரிகை குடுத்துட்டு வரலாம்."

"நாயருக்கா... நானா...?" என்று தயங்கினான் செந்தில் குமரன்.

"ஆமாடா! வா சொல்றேன். ரெண்டு பேரும் சேர்ந்து தான் போகணும். அதுவும் அப்பாவே சொல்லியிருக்காரு..." என்றான்.

செந்தில்குமரன் உள்ளே போய் இறைவியிடம் அதைப் பகிர்ந்து கொண்டான்.



இறைவி "அண்ணா! அவரு என்ன சொல்றாரோ அப்படியே செய்!" என்றாள்.

தயங்கிக் கொண்டேதான் போனார்கள். ஆனால், நாயர் மிகவும் உபசரித்து வரவேற்றார். தான் அனுப்பிய வக்கீல் நோட்டீஸ் பத்திப் பேசவில்லை. பத்திரிகையைக் கொடுத்து விட்டு சென்றார்கள்.

அதற்கு மேலும் பொறுக்க முடியாமல் செந்தில்குமரன் ஜி.எம்.மிடம் ஜாடையாக விசாரித்தான்.

ஜி.எம். சிரித்தார்.

"சார்! நாயர் பயங்கரமான ஆள். நம்ம எம்.டி. பேச்சு வார்த்தைக்கு முயற்சி செஞ்சுட்டேதான் இருக்காரு. ஆனா, விலாங்கு மீன் மாதிரி நழுவிகிட்டே இருக்கான்" என்றார்.

"ஓ...!"

"கவலைப்படாதீக...! எம்.டி.கிட்டே விஷயத்தை விட்டுப் புட்டீகள்ல... நாயரை நம்ம எம்.டி. அழகா சமாளிச்சுக்கிடுவாரு..." என்றார்.

"............!"

அது மட்டுமில்லே! அவரை சமாளிக்க நம்ம எம்.டி.. யாலதான் முடியும்" என்றார்.

செந்தில்குமரன் மேற்கொண்டு பேசுவதற்கு எதுவும் இருக்கவில்லை.

* * *

திருமணத்திற்கு நான்கு நாட்களுக்கு முன்!

"டேய்! செந்தில்... புறப்பட்டு... வா. நாயரை ஒரு வழியா மடக்கியிருக்கேன்... பேச்சு வார்த்தை நடத்திரு வோம்..." என்றான்.

செந்தில்குமரன் அரக்கப் பரக்கப் புறப்பட்டுப் போனான்.

நாயர் அலட்டிக் கொள்ளாமல் பேசுகிற விதம் பார்த்து செந்தில்குமரன் அரண்டு போனான். அன்றைக்கு அப்படி உபசரித்த நாயரா இந்த ஆள் என்றிருந்தது.

''பாருங்க! உங்க கம்பெனி நல்ல கம்பெனின்னுதான் எங்க காருகளை சர்வீஸ்க்கு விடுது. நீங்க... எங்களுக்குத் தகவல் தராம வேற இடத்துல எப்படிக் கொடுக்கலாம்...''

''வேற இடத்துல குடுத்தனுப்புவது எப்படித் தெரியும்?'' என்றான் அறிவழகன்.

''நான் சோதிச்சது. அந்த ஜோசப்பை எனக்குத் தெரியும். அவனல்லே சொன்னது...''

''பாருங்க...! நாயர்! சில நேரங்கள்ள... எங்க கம்பெனியில செய்ய முடியாத சூழ்நிலை இருந்தா... வெளியில குடுத்தும் செய்யறதுதான்.''

''அது நாங்களே செய்வமில்லே. எதுக்காக... உங்ககிட்டே வருது...?''

''ஓ.கே.! நீங்க நினைக்கற மாதிரி அது என்னோட நாலெட்ஜ் இல்லாம நடந்த விஷயம். இல்லே..! செந்தில் என்கிட்டே கேட்டுட்டுத்தான் செஞ்சது...''

''அப்படி... அந்த ஜோசப் சொல்லலையே!''

''நாயர்...! நீங்க என்னை நம்பணும்.. அந்த ஜோசப்பை நம்பற அளவுக்குக் கூட நீங்க என்னை நம்பலையா?'' என்றான்.

நாயர் மௌனமாக அமர்ந்திருந்தார். ஆனால் அழுத்தமான முகபாவத்தில் இருந்தார்.

''அப்போதுதான்... அறிவழகன் அந்த விஷயத்தைச் சொன்னான்.



''நாயர்! விஷயம் முடியட்டும்னு... சொல்லாம இருந்தேன். அந்த ஜோசப்போட வொர்க் ஷாப்பை நாங்க விலைக்கு வாங்கறோம். பேசி முடிச்சாச்சு. ஜோசப் ரொம்ப ரிக்வெஸ்ட் பண்ணினதாலே நாங்க வெளிய சொல்லலை. ''சார்! முழுப்பணமும் வாங்கி கிரயம் முடிச்சப்புறம் வெளிய சொன்னா மதிப்புனு சொல்லியிருந்தாரு...

''ஓ! அங்ஙனயோ!''

''ஆமா! நல்ல இடத்துல இருந்த பிரைம் பிராப்பர்ட்டி. ஜோசப் கேரளா போகுதாம். அதனால் நல்ல விலை ஆஃபர் பண்ணியிருக்கு. வேணும்னா... அக்ரீமெண்ட் பாருங்க...'' என்றான்.

அக்ரீமெண்ட் எடுத்துக் காண்பிக்கும் போதுதான் செந்தில்குமரனே அதைப் பார்த்தான்.

எந்தத் தேதிகளில் அவன் கார்களை சர்வீசுக்கு விட்டிருந்தானோ அதற்கு முந்தைய தேதியிலேயே கிரய ஒப்பந்தம் கையெழுத்தாகி இருந்தது.

''உண்மையைச் சொல்றேன்.. நாயர். ஜோசப்புக்கு அந்த இடத்தை விக்க விருப்பமில்லை. ஆனா, நான் ஆஃபர் செஞ்ச விலை ஜோசப் வாழ்க்கையிலேயே நினைச்சுப் பார்க்க முடியாது. ஆனா சொத்தை வித்துட்டான்னு சொந்தக்காரவுக... பேசுவாகன்னு யோசனை செய்தாரு. அதனாலதான் நாயர் யாரும் எதுவும் வெளியே சொல்லலே. அதனாலதான் செந்தில் உங்ககிட்டே அதை சொல்லலே'' என்றான்.

செந்தில் வியப்பின் எல்லைக்கே போனான். நாயர் சற்று நேரம் மௌனம் சாதித்தார். பிறகு சிரித்தான்.

''யு ஆர்... வெரி கிளவர், அறிவழகன்'' என்றான்.

அறிவழகன் கண்களில் குறும்பு மின்னியது. ஒரே கணம்தான் மறைத்துக் கொண்டான்.

''சொல்லப்போனா... நான் சொல்லக் கூடாதுன்னு சொன்ன காரணத்துக்காக செந்தில் எல்லாப் பழியையும் தன் மேல ஏத்துவிட்டாரு. அதான் உண்மை'' என்றான்.

மனசாட்சியின் உறுத்தல் முகத்தில் தெரிந்து விடாமல் மிகவும் கஷ்டப்பட்டு முக பாவத்தைத் தீவிரமாக வைத்துக் கொண்டான் செந்தில்குமரன்.

நாயர் ''சரி... அறிவழகன்! முதல்ல உங்க கல்யாணம் நடக்கட்டும். அதுக்கப்புறம் என்ன செய்யணும்னு பார்க்கலாம்...'' என்று அமர்த்தலாக விடை பெற்றுக் கொண்டான்.

நாயர் போனவுடனேயே கண்கள் கலங்க அறிவழகனின் கைகளைப் பிடித்துக் கொண்டான் செந்தில்குமரன்.

''அறிவு... ஜோசப்போட இடத்துக்கு நீ பேசியிருக்கிற விலை ரொம்ப அதிகம்னு தோணுது...'' என்றான்.

''இல்லயே... வொரி... பண்ணிக்காதே! எப்படியும் இன்னும் ஆறே மாசத்துல ரியல் எஸ்டேட் நிலைமை மாறும். கண்டிப்பா... விலையேத்தம்... இருக்கு... அதனால சரியாயிடும்...'' என்றான்.

அதற்குப் பிறகு செந்திலின் நிலைமை முற்றிலும் மாறிப் போனது.

மாலையே வீட்டுக்குச் சென்றவுடன் தங்கையிடம் பகிர்ந்து கொண்டான். தங்கையின் முகத்தில் நிறைகிற மகிழ்ச்சியையும், ஏற்படுகிற மாற்றங்களையும் பார்த்த செந்தில்குமரனே போன் செய்து ''அறிவு! இறைவிக்கு... உன்னை பாக்கணுமாம்...!'' என்றான்.

''இல்லே! நாங்களே வர்றோம். முறைப்படி உங்க வீட்டுக்கு அழைப்பு வைக்கணுமாம். எங்க அம்மாவும் அப்பாவும் வந்துகிட்டிருக்காக'' என்றான்.

வந்தார்கள்!



திலகவதியம்மா அவசரமாக ஒரு விருந்தே தயார் செய்தார். இறைவியும் ஆர்வமாக உதவி செய்தாள்.

கலகலப்பாகப் பேசி அழைப்பு வைத்து விட்டு புறப் பட்டுப் போகையில்

''நாங்க போய்க் கார் அனுப்பறோம். இனி ரெண்டு மூணு நாளைக்கு... புள்ளையப் பாக்க முடியாதில்லே... நீ கொஞ்ச நேரம் பேசிட்டு... வா...'' என்று குறும்பாகச் சிரித்து விட்டுப் போனார் அப்பா.

செந்திலும் கூட ''நானும் அம்மாவும் காய்கறி வாங்கிட்டு வரோம்...'' என்று கிளம்பினார்கள்.

பெற்றோரை வழியனுப்பி விட்டு வருங்கால மனைவியை பார்த்தான். அதற்குள் அவள் உள்ளே போயிருந்தாள்.

''ஹாலில் இருந்த டேபிளின் மேல் சாய்ந்தபடி... அவன் முகம் பார்க்கும் சக்தியில்லாதவள் போல் நின்று கொண் டிருந்தாள்.

இறக்கமாகப் பார்த்தபடி... ''எவ்வளவு பெரிய பிரச் சினையெல்லாம் சால்வ் பண்ணிக் குடுத்திருக்கேன்...'' என்று இழுத்து நிறுத்தினான்.

இறைவி... தயக்கமாக இரண்டடி எடுத்து வைத்தாள். பிறகு வேகமாகப் பாய்ந்து அவன் மார்பில் சாய்ந்து கொண் டாள்.

தன் இரண்டு கைகளாலும் வளைத்துக் கொண்டான். ஆனால் மேற்கொண்ட எதுவும் பேசாமல் குனிந்து தன் நேசப்பார்வையை மட்டும் வீசிக் கொண்டு நின்றிருந்தான்.

மெல்ல நிமிர்ந்து பார்த்த இறைவி... கண்களை மூடிய வண்ணம் தன் பரிசுகளைக் கொடுத்தாள். கண்மூடி நின்ற வண்ணம் அந்தப் பரிசுகளை வாங்கிக் கொண்ட அவன் மெல்லிய குரலில்.

"கல்யாணத்துக்கு அழைப்பு இடையாதா?" என்றான். அவள் சட்டென்று விலகினாள். குறும்பாகப் பார்த்தாள். விலகி ஓடிப் போய் ஒரு தட்டை எடுத்துக் கொண்டு வந்து அதில் ஒரு பத்திரிகை வைத்து "உங்களுக்கும்... எனக்கும்... கல்யாணம்... கண்டிப்பா... வந்துருங்க.." என்றாள்.

அவன் சிரித்தான். பிறகு சொன்னான்.

"மக்கு... மக்கு...!" என்று இறுக அணைத்துக் கொண்டான்.

"நீ என்னை அழைக்க வேண்டிய விதம் இது இல்லை அது வேற மாதிரி..." என்றான்.

"எப்படி?" என்றாள்.

செய்கையில் காட்டினான்... அவள் சிரித்துக் கொண்டே விலகிக் கொண்டாள்.

"ஆசைதான்!" என்றாள்.

"ஆமா... ஆசைதான்!" என்றான். வெட்கத்துடன் பணிந்து கொடுத்தாள். மறுபடியும் விலகிக் கொண்டார்கள்.

"இன்னும் மூணே நாள்! அப்புறம் நீ என் வழிக்கு வந்துதான் ஆகணும்..." என்றான். அவள் வெட்கத்துடன் முறுவலித்தாள். பிறகு கேட்டாள்.

"ஏங்க..! அந்த ஜோசப்போட இடத்தைத் தேவையில்லாம அதிக விலை கொடுத்து வாங்கறீகளோ..." என்று கவலையாகக் கேட்டாள்.

"இல்லையில்லை. அது அருமையான இடம்... இறைவி. இந்தப் பிரச்சினைக்காக அந்த ஜோசப்பைப் பார்க்கப் போனேன். அப்பப் பார்த்தப்ப இடம் பிடிச்சுப் போய்த் தான்... பேசினேன்... என்றான். ஆனால் முகம் உடனே தீவிர முகபாவத்துக்கு மாறியது.



"இறைவி! இன்னும் பிரச்சினை முடிஞ்சர்லை. அடுத்த ரவுண்ட் டாக்ஸ்லதான். அந்த நாயரைச் சரிக்கட்டணும்" என்றான்.

"ஓ...!" என்றாள்.

"ஆள் கொஞ்சம் டஃப்தான். விடு... பார்த்துக்கலாம்..." என்றான்.

மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தான். சீண்டி விளையாடினான். சிரித்து மகிழ்ந்தான்.

# 24

"டேய், போதும்டா! கையை விடு. வுட்டா விதைச்சு அறுவடை செய்வியாட்ட இருக்கு" என்று சிரித்து கேலி செய்தான் நண்பன் ஒருவன்.

"தெரியும்டா! எப்படா கல்யாண வீட்ல இந்த மாதிரி ஜோக்கெல்லாம் அடிக்கலாம்னே ஒரு கூட்டம் காத்துகிட்டுக் கெடப்பீக! உங்க ஆசையைக் கெடுப்பானேன்னுதான் இந்த சேட்டை செய்யறது" என்று சிரித்தான் அறிவழகன்.

மணமகனிடம் அட்சதையைக் கொடுத்து அதை மணமகளின் கையில் கொடுத்து கலசத்தின் மீது போடச் சொன்னார் அய்யர். அட்சதையை இறைவியின் கையில் வைத்த அறிவழகன் சற்று நேரம் கையை எடுக்காமல் இருக்கவேதான் நண்பர்கள் சிரித்தார்கள்.

இறைவியின் முகமும் சிவந்து போனது. அப்போதுதான் ஒரு நண்பன் இந்த மாதிரி ஒரு ஜோக்கை அடிக்க, அறிவழகன் பதிலுக்கு அவனை வாரினான்.

ஆண்டாள் மாலை என்று அழைக்கப்படும் அந்தப் பந்து போல உருண்ட மாலை இருவருக்கும் பொருத்தமாக இருந்தது. லேசாக முகத்தில் வியர்வை அரும்பியிருக்க முகம் மலர்ந்து சிரிக்கிற தன் மனம் கவர்ந்தவன் கைகளில் மற்றவர் அறியா வண்ணம் தனது கைக்குட்டையைத் திணித்தாள் இறைவி.

மற்றவர்கள் கேட்காதவண்ணம் "ஏன், துடைச்சே விடலையில்லை?" என்றான்.

"முதல்ல... ஐயர் என்ன சொல்றார்ன்னு கேட்டு... அதை கரெக்டா... செய்ங்க..." என்றாள் அவளும் பதிலுக்கு.

"கெட்டி... மேளம்... கெட்டி... மேளம்..!" என்று யாரோ குரல் கொடுக்க பந்தி பரிமாறுகிற இடத்தில் நின்று கொண்டிருந்த செந்தில்குமரன் ஓடி வந்து மணவறை தெரிகிற இடத்தில் நின்றான்.

தாலி கட்டிக் கொள்வதற்கு முன்பாக இறைவியின் கண்கள் அண்ணன் எங்கேயென்று தேடின. மணவறைக்கு சற்று அருகில்தான் நிற்கிறான் எனத் தெரிந்தவுடனே நிம்மதியடைவதைக் கண்ட செந்திலின் மனம் பூரித்தது.

அம்மாவும் நல்ல இடத்தில் அமர்ந்திருந்தார்.

அறிவழகன் வழக்கம் போல் பெரிய அளவில் உணர்வுகளை வெளிக்காட்டாதவனாய் ஆனால் புன்னகை முகத்துடன் தாலியைக் கட்டினான்.

தாலி கட்டி முடிந்த அந்தக் கணத்தில் இறைவியின் முகத்தில் எல்லையற்ற நிம்மதி தோன்றியதென்றால் மாலை மாற்றி அதற்குள் செய்ய வேண்டிய சடங்குகளையெல்லாம் செய்து சற்று கூட்டம் அகன்றதன் பின் இறைவியை நோக்கி இயல்பாகவும், ஆசையாகவும் சிரித்தான்.

"அப்பாடா! இறைவி... பெரிய சாதனைதான். என் கம்பெனி ஆரம்பிக்கிறப்ப கூட இவ்வளவு ரிஸ்க் நான் ஃபீல் பண்ணினதே இல்லை" ஆனா... என்று சிரித்தான்.



அவளும் தன் உள்ளத்துக் காதல் எல்லாம் கண்ணில் நிறைய அவனை நிமிர்ந்து பார்த்து சிரித்தாள்.

"ம்க்கும்! என்று யாரோ கனைக்கிற சத்தம் கேட்டுத் திரும்பினார்கள்.

நாயர் சிறிய நகைப்பெட்டிகளுடன் சிரித்தபடி நின்று கொண்டிருந்தார்.

இறைவிக்கு அழகான ஒரு நெக்லஸ்! அறிவழகனுக்கு ஒரு மோதிரம் என்று பரிசளித்தார்.

அறிவழகன் அவரிடம் கலகலவென்று பேசுவதை இறைவி ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவர் அந்தப்புறம் நகர்ந்தவுடன் அவன் இழைந்தபடி சொன்னான்.

"ஹேய்! எதுக்கு அந்த முழி முழிக்கறே. நாயருக்கும் நமக்கும் இருக்கறது பிஸினஸ் பிரச்சினை. அது வேற... இது வேற..." என்று.

இறைவிக்கு அது புரியவில்லை. அது மட்டுமல்ல சற்றுக் கழித்து அவள் கவனித்தபோது நாயர் எல்லா ஏற்பாடுகளிலும் தலையிட்டு மேற்பார்வை செய்து கொண்டிருந்தார்.

சிறிது நேரம் கழித்துப் பார்த்தால் சாம்பசிவமும் அவரும் ஆளுக்கொரு சேரில் அமர்ந்தபடி சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அதைவிட அவளுக்கு இன்னொரு ஆச்சரியம் காத்திருந்தது. அவளது சகோதரனிடம் சொன்னாள்.

"அண்ணா! அந்த நாயரைப் பாத்தியா. அந்தப் பக்கம் அவ்வளவு பிராப்ளம் பண்ணிட்டு இங்க வந்து இப்படிக் குழையடிக்கறாரு..." என்றாள்.

செந்தில்குமாரனும் சம்பந்தியும், நாயரும் அமர்ந்து சிரித்துப் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். பிறகு தங்கையிடம் சொன்னான்.

''இறைவி! ஒரு தடவை கெட்டிக்காரத் தனம்னு நினைச்சு... நான் பண்ணின மடத்தனம் எல்லாம் போதும். இப்ப பிரச்சினையை மச்சான்கிட்டே விட்டுப்புட்டேன். அவன் பாத்து என்னமோ செய்யட்டும்'' என்றான்.

முதல் முறையாகத் தன் கணவரை அவன் மச்சான் என்று குறிப்பிடுவது அவளுக்குள் சிரிப்பை ஏற்படுத்தியது. அவனே தொடர்ந்தான்.

''அது மட்டுமில்லே இறைவி! இந்த பிஸினஸ் உறவுகளை யும், சொந்த உறவுகளையும் எப்படி வச்சுக்கறதுங்கறதுன்னு நம்மளை விட அவுக குடும்பத்துக்கு நல்லாவே தெரியும்'' என்றான்.

அண்ணன் ஒரேயடியாக அடித்த பல்டியைப் பார்த்து இறைவிக்கு சிரிப்புத்தான் வந்தது.

அதற்குள் அங்கே வந்த வெங்கடாச்சல மாமா ''இறைவிப் பொண்ணே! மாப்பிள்ளையும், நீயும் போய் சாப்பிட்டுட்டு வந்துருங்க... மறுபடியும் ரிசப்ஷன் பதினோரு மணிக்கு வச்சிருக்கு'' என்றார்.

திருமணம் ஞாயிற்றுக்கிழமை நாளில் வைத்திருந்தார் கள். திருமணத்திற்கு நெருங்கிய வட்டம் சொந்தம் என்று அமர்ந்திருந்தார்கள். அதுவே ஆயிரம் பேருக்கு மேல் இருந்தது.

பதினோரு மணிக்கு வரவேற்பு என்று அடுத்த வட்டத்தில் அழைப்பும் கொடுத்திருந்தார்கள். அது இறைவிக்கும் தெரி யும் என்பதால் கணவன் எங்கே இருக்கிறான் என்று பார்த்தாள்.

நண்பர்களின் அருகில் நின்றிருந்தான். அதற்குள் இறைவி யின் கண்கள் அவனைத் தேடுவதைக் கண்ட நண்பன் ஒருவன்



''அவுக கண்ணைக் காமிச்சுட்டாக... போப்பா... போய்... சேவகம் பண்ணு...'' என்று தள்ளி விடவும் அங்கே கலகலவென்று சிரிப்பு எழுந்தது.

அறிவழகன் சிரித்துக் கொண்டே இறைவியை நோக்கி வரவும்

''சாப்பிடச் சொல்றாக!'' என்றாள்.

''ஆமா...! சாப்பிடணும் இல்லே! வரேன்... எனக்கு சாப் பிடணும்னு... நினைப்பே வர்லே. அது ஏன்டா!'' என்றான்.

''போதும்... பேசாம... வாங்க!'' என்றாள் இறைவி.

இருவரும் காலை டிபன் முடித்து வந்தவுடன் அரை மணி நேரம் ஓய்வு எடுத்தார்கள்.

மணமகளின் அறைக்குப் போனவுடன் சற்று நேரம் தனிமை கொடுத்து மற்றவர்கள் விலக அவன் நெருங்கி நின்றான்.

''ஆரம்பிச்ச வேலையை முடி!'' என்றான்.

அவள் புரியாமல் விழிக்க ''கர்ச்சீஃபை மட்டும் கையில் குடுத்தியே!'' என்று நிறுத்த அவள் வெட்கத்துடன் அவன் கையில் இருந்த கர்ச்சீஃபை வாங்கி முகம் துடைத்து விட்டாள்.

அதையே காரணமாக வைத்து அவன் இன்னும் இறை யவும் அவள் விலகினாள்.

''அதான்... தாலி கட்டியாச்சல்ல... அப்புறம்... நான் எங்கே போயிடப் போறேனாம். இங்க... திடீர்னு யாரும் வருவாங்க'' என்றாள்.

''ஆமா...!'' என்றான் சோகமாக. அவள் சிரித்தாள். அப்போதுதான் இறைவி அவனிடம் கேட்டாள். இல்லை சொன்னாள்.

''நாயர் இப்படி ரொம்ப உரிமையா இந்த விசேஷத்துல கலந்துக்கறாரு. ஆனா... நோட்டீஸும் விட்டிருக்காரேன்னு

அண்ணன்கிட்டே சொன்னேன். அதுக்கு அவரு சொன்னாரு ஒரு தடவை மடத்தனமான காரியம் செஞ்சே... நான் பட்டது போதும். இது மாதிரி விஷயமெல்லாம் மச்சானுக் குத்தான் நல்லாத் தெரியும். அவரு டீல் பண்ணிக்கு வாருன்னு... மறுபடியும் முழுமையா உங்க மேல நம்பிக்கை வந்துருச்சு... போல...'' என்று.

''ரியலி!'' என்றான் மகிழ்ச்சியாக. அதைக் கொஞ்சம் உரிமையோடு கொண்டாடிக் கொள்ளவும் செய்தான். அனுமதித்த இறைவி... சிந்தனையிலேயே இருந்தாள்.

''இந்த நாயர் எப்படிப்பட்ட ஆளு!'' என்றாள் இறைவி.

''ஹேய்! இப்பத்தான் நமக்குக் கல்யாணம் ஆகியிருக்கு...'' நீ என்ன நாயர்... நாயர்ன்னு நாயர் புராணம் பாடிகிட்டு...'' என்று வேகமாக அருகில் இழுத்து அவள் வாயடைத்தான்.

இறைவி திணறிக் கொண்டிருக்கையில் யாரோ கனைத்த படி அந்தப் பக்கம் வர இருவரும் விலகிக் கொண்டார்கள்.

''டேய்! தேங்காயை ஒழுங்கா உருட்டுடா... போதும்டா... பார்வை!'' என்பதும்.

''அப்படி உடை!'' என்று அவர்கள் இருவரும் அப்பளத்தைத் தலையில் போட்டு உடைக்கவும் எல்லாரும் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

அவசர அவசரமாகச் சடங்குகளை முடித்து மீண்டும் வேறு அலங்காரம் செய்து வேறு உடை மாற்றி வரவேற்புக் காக கணவன் அருகில் அமரும் வரை இறைவிக்கு வேறெ தையும் யோசிக்க நேரமில்லை. ஆனால் மீண்டும் மேடைக்கு வந்து அமர்ந்தவுடன் நாயரைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

அந்த முற்பகலுக்குள்ளாக ஆயிரம் பேருக்கு மேல் வந்திருப் பார்கள். அத்தனை பேரிடமும் சிரித்துப் பேசி... நின்று கைகுலுக்கி... வணக்கம் செய்து என்று களைத்துப் போனார்கள்.



மகளின் திருமணம் கோலாகலமாக நடப்பது கண்டு இலகவதி ஏதோ கனவில் நடப்பது போல் நடந்து கொண் டிருந்தார்.

செந்திலும் நண்பர்களும், உறவினர்களும் நிற்க நேரமில் லாமல் அலைந்து கொண்டிருந்தார்கள். உறவினர்களை செந்திலும், சாம்பசிவமும், அவர் மனைவியும் கவனித் தார்கள் என்றால் தொழில் வட்டத்துப் பிரமுகர்கள் அனைவரையும் நாயர்தான் நின்று வரவேற்றார்.

அலுவலகத்தைச் சேர்ந்த ஜி.எம். மேனேஜர் எல்லாரும் பம்பரமாகச் சுழன்றார்கள்.

இறைவிக்கு பிரமிப்பாக இருந்தது. ''கிராண்டுவர்'' என்பார்களே அந்த மாதிரி பிரமாண்ட ஏற்பாடுகளையும், ஏழை, பணக்காரன் என்று வித்தியாசம் இல்லாமல் எல்லாரும் உபசரிக்கப்படுவதையும் பார்த்து அவளுக்கு வியப்பு மட்டு மல்லாமல் கணவனைப் பற்றிய பெருமை உணர்வும் ஏற்பட்டது.

பிற்பகல் மூன்று மணியளவில்தான் ஓய்வு கிடைத்தது. களைப்பாக இருந்தாலும் மகிழ்வாக இருந்தாள். அப்போது அங்கே வந்த நாயர்.

''அறிவழகன்! பேசாம... மேடத்தைக் கூட்டிட்டு வீட்டுக்குப் போங்க... ஒரு ரெண்டு மணி நேரம் ரெஸ்ட் எடுத்துட்டு... வாங்க... அது வரைக்கும்... நான் சமாளிக்கறேன்.'' என்றார்.

இத்தனைக்கும் நடுவில் காலை திருமணம் முடிந்த வுடன்... பக்கத்தில் இருந்த கோயிலுக்குப் போய் வந்தார்கள். தொடர்ந்த அலைச்சல் உடலுக்கும் களைப்புக் கொடுத்தது.

தங்கள் பங்களாவிற்குள் வந்து தன்னறைக்குப் போன வுடனே இறைவியைத் தன் கைப்பிடியில் கொண்டு வந்த அறிவழகன் மெல்லிய சிரிப்புடன் தன் முத்திரைகள் பதித்தான்.

''இத்தனை... நாளா... பயந்து பயந்து மேடம் ஒத்துக்கு வாங்களோன்னு அனுமதி கேட்டுக் கேட்டு... அப்பாடா... இப்பதான்... உரிமையாக...!'' என்று முகம் நிமிர்த்தி சிரித்தான்.

இறைவி வெட்கத்துடன் நிற்பதைப் பார்த்து மெல்லக் கன்னத்தில் ஒற்றை விரலில் தட்டினான்.

''ஹேய்! நானும் டயர்ட்... நீயும் டயர்ட். திரும்ப அஞ்சு மணிக்கு நாம மண்டபத்துல இருக்கணும். ஈவ்னிங் ஒரு ரிசப்ஷன். அதுக்கு வேற தனியா வருவாங்க.. நீ அந்த ரூம்ல ரெஸ்ட் எடு'' என்று அறையைக் காட்டினான்.

உண்மையாகவே அயர்ந்து உறங்கி விட்டார்கள்! திரும்பவும் ரிசப்ஷன் என்று புத்துணர்வோடு வந்து நின்றார்கள்.

* * *

பரிசுகள் மலையாகக் குவிந்து கிடந்தன. நெருங்கிய உறவினர்கள் கூட்டமே வீடு நிறைய இருந்தது.

''அறிவு! இன்னைக்குக் கல்யாணத்துக்கு வர முடியாதவங்க எல்லாம் நாளைக்கு வருவாக. அதனால மறு அழைப்புக்கு இன்னைக்கே இறைவி வீட்டுக்குப் போயிட்டு வந்திருங்க'' என்றார் அம்மா.

அன்றிரவு இறைவியின் வீட்டில் தங்கினார்கள். ஆனால் பெரியவர்கள் எல்லாம் பேசி முதலிரவுச் சடங்கை ஒரு வாரம் கழித்து ஏற்பாடு செய்திருந்தார்கள்.

''கோவிலுக்கு வேண்ணா போயிட்டு வாங்க!'' என்று அனுப்பி வைத்தார்கள்.

மதுரை மீனாட்சியம்மனையும், சொக்கநாதரையும் தரிசனம் செய்து விட்டு வந்தார்கள். அப்போதும் உறவினர்கள் உடன் வந்தார்கள்.



செந்தில் அவசர அவசரமாக மைத்துனன் வந்தால் தங்குவதற்காக என்று அந்தப் பெரிய பெட்ரூமைப் பெயிண்ட் அடித்து எல்லா வசதிகளும் இருக்கிற மாதிரி ஏற்பாடுகள் செய்திருந்தான்.

''எதுக்கு இவ்வளவு சிரமப்பட்டான். நான் இருப்பதுலேயே அட்ஜஸ்ட் பண்ணிக்குவேன்!'' என்றான் அறிவழகன் இறைவியிடம்.

''இல்லே நீங்க வசதியாவே வாழ்ந்தவுகளாம். அதனால உங்களுக்கு ஒரு குறையும் இருக்கக்கூடாதாம்.''

''ஆமா... ஞாபகம் வச்சுக்க.. எனக்கு ஒரு குறையும் இருக்கக் கூடாதாம்'' என்று சிரித்தான் அறிவழகன்.

''எல்லாப் பெரியவர்களும் அந்த முன்னாடி ஹால்லதான் இருக்காங்க. ஏமாந்து போய்க் கொஞ்ச நேரம் பேசிட்டுவான்னு அனுப்பி வச்சாங்க. நீங்க என்னடான்னா வம்பு பேசறீகளே'' என்றாள்.

''பேசறதுன்னா... இப்படித்தான் பேசணும். பின்னே என்ன ராமாயணம், மகாபாரதமா... படிப்பாக?'' என்றான்.

''ஐயோ! உங்ககிட்டே பேசவே முடியாது...''

''பேசாதே...!'' என்று அருகில் இழுத்துக் கொண்டு சற்று நேரம் கலாட்டா செய்தான்.

அவள் விலகிக் கொண்டாள்.

கொஞ்சம் பொறுப்பீகளாம். இனித்துத் தண்ணியை ஆத்து வெள்ளமா கொண்டு போயிடும்...?'' என்றாள் இறைவி.

''ஹேய்! இந்த மாதிரி சமயத்துல கடுப்பேத்துக்கறதுக்குன்னே... இந்த மாதிரிப் பழமொழியெல்லாம் வச்சிருப்பீகளாக்கும். முதல்ல இந்த மாதிரிப் பழமொழியையெல்லாம் நாடு கடத்தணும்டி...'' என்றான்.

அவன் சிரித்தான். அவன் கைப்பிடிக்குள் விருப்பத்துடன் அடங்கிக் கொண்டாள். அவன் அதே அதே கடுப்புடன் தொடர்ந்தான்.

''ஆத்துத் தண்ணி, ஊத்துத்தண்ணி என்ன கடல் தண்ணி வந்தாக் கூட அடிச்சுகிட்டுப் போக முடியாதபடி பாத்துக்கிட எங்களுக்குத் தெரியுமில்லே!'' என்றான்.

இறைவி அவனிடமிருந்து விலகி நிமிர்ந்து அவன் முகத்தை பார்த்தாள்.

''நீங்க... என்ன செய்தீக? நான் போராடிக்கிட்டுக் கிடந்தேன். என்ன உதவி செய்தீக?'' என்றாள் சற்றே மனத் தாங்கலுடன்.

''அங்கதான்ம்லே. நீ என்னைப் புரிஞ்சுக்கலை. நாங்க என்னென்ன செய்தோம்னு எங்களுக்கில்லே.. தெரியும்?'' என்றான்.

அப்போதுதான் இறைவிக்குள் அந்த சந்தேகம் வலுத்தது. விலகிப் போய் சோபாவில் எதிரில் அமர்ந்தாள்.

''எனக்கென்னவோ ஒரு சந்தேகம் இருக்கு...!'' என்றாள் சிந்தனையுடன்.

அறிவழகன் தலையில் அடித்துக் கொள்கிறாற் போல பாவனை செய்தான்.

''அடிப்பாவி! கல்யாணமான முதல் நாள் புருஷன் கிட்டே என்னென்னவோ பேசுவாக. நீயென்ன இப்படி சந்தேகம் சந்தேகம்னுட்டுக் கிடக்கறே!'' என்றான்.

''இல்லை...! எனக்கென்னமோ சந்தேகமாத்தான் இருக்கு...''

''சரி... சொல்லு!'' என்றான் குறும்புச் சிரிப்புடன். இறைவி சொன்னாள்.

அறிவழகன் குறுகுறுவென்று பார்த்தான். பிறகு குபீரென்று சிரித்தான்.



''ஹேய்! நான் நினைச்சதுக்கு மேல நீ புத்திசாலிதான்'' என்று எழுந்து மறுபடியும் நெருங்கினான்.

அவள் எழுந்தாள். ''பரவாயில்லே! இப்ப எனக்கு சந்தேகம் தீரல்லைன்னாலும் பரவாயில்லை. நான் போறேன். அப்புறம் எல்லாரும் தப்பா நினைச்சுக்குவாக...'' என்றாள்.

''இத பார்றா! நான் தள்ளிகிட்டா வந்திருக்கேன். தாலி கட்டி கூட்டியாந்திருக்கேன்.'' என்று அவன் மதுரை வட்டார மொழியிலேயே ஆரம்பிக்க அவள் களுக்கென்று சிரித்து விட்டு அழகு காட்டினாள். ஆனால் ஓடி விட்டாள்.

## 25

''செங்கமலம். நம்ம புள்ளே ரெண்டாயிரம் ரூபா மணியார்டர் அனுப்பியிருக்கு'' என்று வந்தார் வெங்கடாச்சலம்.

செங்கமலத்தின் முகத்தில் மகிழ்ச்சி. ஆனால் வெங்கடாச்சலத்தின் முகத்திலோ சிந்தனை.

வெங்கடாச்சலத்துக்கு ஒரே மகள் ரமாமணி என்று பெயர். அவளைப் பட்டப் படிப்பு படிக்க வைக்க வேண்டுமென்று பெரிதும் விரும்பினார் வெங்கடாச்சலம். ஆனால் அவளுக்கு படிப்பிலே ஆர்வம் இல்லாமல் போய் விட்டது. அதனால் இருபது வயதில் ஒரு மாப்பிள்ளை பார்த்து கல்யாணம் செய்து விட்டார்.

இருமணம் செய்து ஒரு மாதம் தான் ஆகியிருந்தது. இருந்த சேமிப்பையெல்லாம் கரைத்து திருமணத்திற்கு செலவு செய்து விட்டார். கணவரிடம் அது பற்றியெல்லாம் ரமாமணி சொல்லவும் அவன் தங்கவேல்.

''நாம மாசம் ரெண்டாயிரம் ரூபா... அவங்களுக்குன்னு குடுத்தராலாம்.'' என்றான். அந்த விஷயத்தைக் கூட சர்ப்ரைஸாக வைத்துக் கொண்டு நிமடரென்று அனுப்பி விருந்தார்கள்.

பெற்றவர்களுக்கு மகிழ்ச்சிதான். வெங்கடாச்சலத்துக் கென்று ஒரு ஓட்டு வீடும், இரண்டு ஏக்கர் நிலமும் இருந்தது. அந்த இரண்டு ஏக்கரில் இனிமேல் என்ன பயிரிடுவது என்பது பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தார்கள். அதை வைத்துக் கொண்டு என்ன பெரிதாக வாழ்ந்து விட முடியும் என்ற கவலை உள்ளூர இருந்தது.

ஒருவகையில் மகளின் செய்கை அவருக்கு மகிழ்ச்சியைத் தந்த போதும் உள்ளம் சிந்தனையில் ஆழ்ந்தது.

''எத்தனை நாள் மகள் தனக்குப் பணம் கொடுக்க முடியும்? எத்தனை நாள் இப்படி வாங்கிக் கொள்வது? அது சரியாக இருக்குமா...?'' என்றெல்லாம் யோசிக்க ஆரம்பித் திருந்தார் வெங்கடாச்சலம்.

இரண்டாயிரம் ரூபாய் என்பது அந்தக் கிராமத்தில் போதுமான தொகைதான். எளிமையான வாழ்க்கை வாழ் கிறவர்கள் என்பதால் பற்றாக்குறை ஏற்படப் போவதில்லை. ஆனால்... எத்தனை நாளைக்கு...!'' என்ற கேள்வியும் அவரைப் பெரிதும் தாக்கியது.

யோசனையிலேயே இருந்தார்.

அப்போதுதான் அது நிகழ்ந்தது!

கப்பல் போன்ற கார் ஒன்று அவர்கள் காம்பவுண்டிற்குள் நுழைந்தது.

''யாராக இருக்கும்?'' என்ற யோசனையுடன் வெளியே வந்தார் வெங்கடாச்சலம்.



காரிலிருந்து ஒரு இளைஞன் இறங்குவது தெரிந்தது. பார்த்த முகம் போல் இருந்தது. தெரிந்தவராக இருந்தது.

யோசனையுடன் வரவேற்றார்!

''வாங்க...'' என்று.

''பெரியப்பா! என்னை அடையாளம் தெரியலையா?'' என்று கேட்கவும் லேசாகப் புரிய ஆரம்பித்தது.

''அடடே! சாம்பசிவனோட பையந்தானே!'' என்று வரவேற்றார்.

''பரவாயில்லை! கண்டுபிடிச்சுட்டீங்க!'' என்று அழகாகச் சிரித்துக் கொண்டு உள்ளே வந்தான் அறிவழகன்.

''வாப்பா!'' என்று கணவனும் மனைவியும் உற்சாகமாக வரவேற்றார்கள்.

''போன மாசம் உங்க டாட்டர் கல்யாணத்துக்கு நான் அம்மா, அப்பா... எல்லாரும் வந்திருந்தோமே... ஞாபகம் இருக்கா...'' என்று நினைவுபடுத்தினான் அறிவழகன்.

''ஆமப்பா! கூட்டத்தில் பார்த்தது. இப்ப நினைவுக்கு வருது. அதுலயும் நீ சின்னப் பையனா இருந்தப்ப பார்த்தது. இப்ப... எப்படி வளர்ந்து நிக்கறே!'' என்று சிரித்தார் வெங்க டாச்சலம்.

''பெரியப்பா! நீங்க எனக்கு ஒரு உதவி செய்யணும்..!'' என்றான்.

''சொல்லுப்பா...!'' என்றார். இயல்பான உரிமை எடுத்துக் கொண்டு அவர் ஒருமையில் பேசவும் அவனுக்கு மிகவும் பிடித்தது.

தனக்கும், செந்திலுக்கும் இடையே நடந்த பிரச்சினை களை எல்லாம் சொன்னான். அப்போது செந்தில் கோபித்துக் கொண்டு போயிருந்த சமயம். ஆனால், சபரீஷுடனான திருமணப் பேச்சு எதுவும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

''சரி... நான் இதுல என்ன செய்யணும்?'' என்றார் வெங்கடாச்சலம்.

சொன்னான்.

''பெரியப்பா! அப்பா... செந்திலுக்கு பார்ட்னர்ஷிப் குடுக்க வேண்டாம்னு சொன்னாரு... நான் அப்பப் புரிஞ்சுக் கலை. ஆனா, இப்பப் புரியுது. இப்ப அவனுக்கு என்ன நினைப்புன்னா... என்ன இருந்தாலும் இறைவிக்காக நான் பணிஞ்சுக் குடுப்பேன்னு... ஒரு எண்ணம்... ஆனா... அது எப்படி முடியும்.''

''ம்...!''

''ஆபீஸ் பிரச்சினையைக் கொண்டு போய்க் குடும்பச் சிக்கலாக்கிட்டான்.''

''ஓ! இறைவி... என்ன சொல்லுது?''

''அது என்ன சொல்லுது? இது எனக்கும் எங்க அண்ண னுக்கும் உள்ள பிரச்சினை. நான் சால்வ் பண்ணிக்கிறேன்னு சொல்லுது.''

''ஓ!''

''ஆமா! எனக்கு... என்ன சந்தேகம்ன்னான் இவன் சும்மா இருக்க மாட்டான். உடனே வேற மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிப்பான். அந்தப் பொண்ணுக்கு டார்ச்சர் குடுப்பான். அதைப் புரிஞ்சுக்காம இறைவி வேற நீங்க வராதீகங்கறா'' என்றான்.

''அது சரி! அதுக்கு அண்ணனையும் விட்டுக் குடுக்க முடியலே!'' என்றவர் முகவாய்க் கட்டையை நீவிக் கொண்டார்.

''சரி... நான் இதுல என்ன செய்யணும்?'' என்றார்.



''பெரியப்பா! திலகவதி அத்தைக்கு நீங்க நெருங்கிய உறவாமே! அதனாலே அப்பா... என்ன சொல்றார்ன்னா.. நீங்க அவங்க வீட்டுக்குப் பக்கத்துல குடி போனா அந்தக் குடும்பத்தை உங்க நேரடிப் பார்வையில வச்சுக்க முடியும். அங்க என்ன நடக்குதுன்னு அப்பப்ப தெரிஞ்சுக்கவும் முடியும்ங்கறாரு.''

வெங்கடாச்சலம் எதுவும் சொல்லவில்லை. மௌனமாக அமர்ந்திருந்தார்.

''பெரியப்பா! விஷயம் முழுசையும் கேளுங்க! இந்தப் பிரச்சினை வர்றதுக்கு முன்னாடியே அப்பா என்ன சொல்லிகிட்டிருந்தாகன்னா... பழமுதிர்ச் சோலைகிட்ட இருக்கிற நம்ம நிலத்தையோ... இல்லேன்னா... திருப்பரங் குன்றம் போற வழியில இருக்கிற நிலத்தையோ பாத்துக் கிடறதுக்கு உங்களைக் கூப்பிட்டுக்கலாம்னு சொல்லிகிட் டிருந்தாக. மகளைக் கல்யாணம் பண்ணிக் குடுத்துட்டு அந்த ரெண்டு ஏக்கரை வச்சுகிட்டு என்ன செய்வாரு! நமக்கும் நம்பிக்கையான ஆள் வேணும்னு சொல்லிகிட்டிருந்தாரு. அதுக்குள்ள இந்தப் பிரச்சினை வந்துருச்சு...'' என்றான் அறிவழகன்.

வெங்கடாச்சலத்தின் முகத்திலும், செங்கமலத்தின் முகத்திலும் இப்போது ஆர்வரேகைகள் குதிபோடத் துவங்கின.

''ஒரு ஆறு மாசம்... இந்தக் கல்யாணம் முடியற வரைக் கும்... நீங்க அவுக குடும்பத்து ஆள் மாதிரி அவுகளோடயே இருந்து அப்பப்பத் தகவல் குடுத்தீகன்னா... சௌகரியமா இருக்கும்'' என்றான்.

வெங்கடாச்சலமும், செங்கமலமும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

* *

''மாமா! என்னடா... வேவு பாக்கச் சொல்றாகன்னு நினைச்சுக்காதீக. இது என்னோட நன்மைக்காக. இறைவி...

நீங்க தலையிடாதீங்கன்னு சொல்றா. அதையும் மதிக்க வேண்டியிருக்கு. ஆனா... செந்தில் விவரமில்லாம செய்யற விஷயத்தையெல்லாம் வேடிக்கை பார்க்கவும் முடியாது... என்ன செய்யட்டும்.. சொல்லுங்க!'' என்றான்.

செங்கமலம்தான் இடையில் குறுக்கிட்டார்.

''தம்பி... சொல்றது கரெக்ட்தான். தப்பு அந்தத் தம்பி மேலதான் இருக்கு. நாம போவோம்... இங்கயே கெடந்து என்ன சாதிக்கப் போறோம்'' என்றார்.

''பெரியப்பா! இங்கயும் ஒரு ஆள் போட்டர்லாம். தென்னை வச்சு வுட்டுப் புடலாம்... நீங்க நம்ம நிலத்தை யெல்லாம் மேற்பார்வை பார்க்கலாம். ஏதாவது ஒரு இடத்துல தங்கிக்கலாம். அப்பா... உங்களுக்குப் பதினைந்தா யிரம் சம்பளம் தரேங்கறாக...'' என்றான்.

செங்கமலத்துக்கு தலை கிறுகிறுக்கிறாற் போல் வந்தது.

''பதினைந்தாயிரமா?'' என்று வாயைப் பிளந்தார்.

''ஆமா! அது மட்டுமில்ல... ஆயுசுக்கும் நீங்க எங்க நிலத்துலயே இருந்துக்கலாம்'' என்றான்.

இதைவிடப் பொன்னான வாய்ப்பு வாழ்க்கையில் தனக்குக் கிடைக்கவே கிடைக்காது என்பதைப் புரிந்து கொண்டார்.

மகனிடம் பேசினார்.

அடுத்த வாரத்திலேயே மதுரைக்குக் குடிபெயர்ந்தார். ஆனால் மறந்தும் கூட அறிவழகன் பெயரையோ, சாம்ப சிவத்தின் பெயரையோ திலகவதியின் வீட்டில் உச்சரிக் கவேயில்லை.

* * *

முகவாய்க்கட்டையை நீக்கிக் கொண்டான் அறிவழகன்.



''ஆமா! தம்பி...! வெறி புடிச்ச மாதிரி அலையறான்... அந்த சபரீசைக் கல்யாணம் பண்ணிக்கோன்னு ஒரே வற்புறுத்தல்தான்.''

''இறைவி... என்ன சொல்லுது?''

''சொல்றதா...? பொட்டியைத் தூக்கிட்டுக் கிளம்பிருச்சு. ஹாஸ்டலில் போய்ச் சேர்ந்துகிச்சு. நான்தான் கார்டியனாப் பேர் குடுத்து சேர்த்துட்டு வந்தேன்'' என்றார் வெங்கடாச் சலம்.

அந்தக் கணத்தில் அறிவழகனின் கண்கள் மின்னின. ''பரவாயில்லையே.. இறைவி!'' என்று எண்ணிக் கொண்டவ னுக்கு உடனே போய் அவளைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது.

கஷ்டப்பட்டு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். அன்றைக்கெல்லாம் மனது இறக்கை கட்டிக் கொண்டு பறக்கிறாற் போல் இருந்தது. தன் மனம் கவர்ந்தவள் தனக்காகப் போராடுகிறாள் என்ற எண்ணம் ஒரு உத்வேக டானிக் மாதிரி அவன் மனதுக்குள் ஓடிக் கொண்டிருந்ததால் அடுத்த பத்து நாட்களுக்குள் வந்த செய்தி அவனுக்குள் இன்னும் ஆச்சரியத்தைக் கிளப்பியது.

வெங்கடாச்சலமே அன்றைக்கு வாய் நிறையச் சிரிப் போடு வந்தார்.

''தம்பி! உங்க இறைவியை என்னமோன்னு நினைச் சோம். ஆனா, அந்த செந்தில் பயலை ஒரே மிரட்டா... மிரட்டிப்புடுச்சு... தெரியுமா?'' என்றார்.

குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்.

''சொல்லிட்டு சிரிங்க பெரியப்பா!'' என்றான் அறிவழகன் அவ்வளவு அவசரம் அவனுக்கு.

"அந்தப் பொண்ணே எதுத்துகிட்டு ஹாஸ்டல் போயிடுச்சல்ல... அப்பவாவது பேசாம இருக்கணும் இல்ல. மறுபடியும் அந்த சபரீஷைக் கூட்டிக்கிட்டுப் போய் மிரட்டினான். "பொண்ணா! நீயுமாச்சு. உங்க மிரட்டலு மாச்சன்னா... இறைவி! அப்படியும் இவன் கல்யாண ஏற்பாடு பண்ணினான். அது பாத்துச்சு. நேரா வக்கீல்ட்ட போய்... அண்ணனுக்கு வக்கீல் நோட்டீஸ் விட்டுடுச்சு..." என்றார்.

"என்ன? வக்கீல் நோட்டீஸா?" என்று அறிவழகன் உண்மையாகவே அதிர்ச்சியானான்.

"ஆமா! மரியாதையா... கல்யாண ஏற்பாட்டை நிறுத்திடு. இல்லேன்னா... சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன்னு..."

மறுபடியும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு வெங்கடாச்சலம் கிளம்பிப் போனார். போகும் போது நிலகவதியும் வெளியேறி விட்டதாக சொன்னார்.

அறிவழகனுக்கு ஒருபுறம் வருத்தமாக இருந்தது. தன்னால் அந்தக் குடும்பத்தில் பிளவு ஏற்பட்டுவிட்டதே... என்று.

அப்போதுதான் போட்டோவுக்காக இறைவியை இழுத்து வந்து பேசினான். அதற்குப் பிறகு செய்திகளை மட்டும் சேகரித்துக் கொண்டானே தவிர நேரடியாகத் தலையிட வில்லை.

இப்போது தானும் இறங்கி ஏதாவது செய்ய வேண்டிய நேரம் வந்து விட்டது என்று தோன்றியது. அதற்குப் பிறகு தான் சபரீஷிடம் போனில் பேசினான்.

சபரீஷுக்கு அப்போதுதான் தான் எத்தனை பெரிய க்தியோடு மோதுகிறோம். என்பது புரிந்தது. அவன் சட் டென்று பின் வாங்கினான்.



கணவனின் மார்பில் சாய்ந்து கொண்டு அவன் விவரித்த அத்தனை விஷயங்களையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள் இறைவி.

மெதுவான குரலில் சொன்னான்.

"அப்பவும் நான் நினைச்சேன்! நாம தலையிடாதீங் கன்னு சொன்ன ஒரே காரணத்துக்காக நம்மையை மட்டும் தனியாப் போராட விட்டுட்டு வேடிக்கை பாக்கற ஆள் அவுக இல்லையேன்னு..." என்றாள்.

அவன் சிரித்தான்!

அவள் மேலும் தொடர்ந்தாள்!

"கடைசியில... எங்க வூட்டுக்குள்ளயே வேவு பாக்க ஆள் வச்சுட்டீங்க..." என்றான்.

"வேவு.. பாக்க... இல்ல... புள்ளே! உதவிக்கு... நீயே சொல்லு... அவரு வந்தது.. அத்தைக்கு அந்த சமயத்துல எவ் வளவு தெம்பா... இருந்தது?" என்று கேட்டான்.

"ஆமா! அது என்னவோ நெஜம்தான்!" என்றாள் இறைவி. அறிவழகன் தொடர்ந்தான்.

"இத்தனை நடந்தும்... உங்கம்மா... பிரிஞ்சும்... நீயும்... பிரிஞ்சும் கூட அவனுக்கு வீம்பு விடலே. ஆனா, மெது மெதுவா யோசிக்கறான்னு வெங்கடாச்சலம் பெரியப்பா... வந்து சொன்னாக. அப்பத்தான் எனக்குத் தோணுச்சு... இந்த சமயத்துல ஏதாவது ஒரு அதிரடித் தாக்குதல் குடுத்தா... ஒரு சம்மட்டி அடி மாதிரி விழுந்தா... பய பயந்து போய்த் திருந்திடுவான்னு. ஆனா... என்ன செய்யன்னு தெரியலே!" என்றான். மறுபடியும் சிரித்தான்.

அன்றைக்கு வீட்டில் போய் "அப்பா... இறைவி... இப்படி வக்கீல் நோட்டீஸ் விட்டுட்டான்னவுடனே அம்மா வுக்கும் அப்பாவுக்கும் ஒரே சிரிப்பு. ஆனா, கூடவே

கலாட்டாவும் செஞ்சாக. பாத்துக்கடா... தம்பி... நாளைக்கு உனக்கும் அந்த மாதிரி வக்கீல் நோட்டீஸ் விடப்போறா''ன்னு.

நான் சொன்னேன். ''அவ எனக்காக வக்கீல் நோட்டீஸ் விடற ஆளு. எனக்கே வக்கீல் நோட்டீஸ் விடற ஆள் இல்லன்னு'' என்றான். இப்போது கூட அந்த நினைப்பில் சிரித்துக் கொண்டான்.

இன்றைக்கும் பழமுதிர்ச்சோலை போய் விட்டு அன்றைக்குப் போலவே தங்களது வயலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

இறைவி அவனை மறுபடியும் நிமிர்ந்து பார்த்துச் சொன்னாள்.

''உங்களுக்குப் பெருமையா இருந்துச்சு. ஆனா, எனக்கு எவ்வளவு வருத்தமா இருந்துச்சு தெரியுமா? என்ன இருந்தாலும் செந்தில் என்னை ரொம்ப நல்லாப் பாத்துகிட்டவன். பிரியமா வளர்த்தவன். அவனைப் போய் இப்படி வருத்தறமேன்னு. ஆனா, எனக்கு வேற வழியில்லை'' என்றவள் சற்று நேரம் மௌனம் சாதித்தாள்.

''புரியுது'' என்றான்.

''ஆனா, எனக்கென்னமோ உங்க மேல இன்னும் சந்தேகம்... தீரலை'' என்றாள்.

''என்ன சந்தேகம்? நான்தான் சொல்லிட்டேனே. நீ என்னதான் பேசாம உன் வேலையைப் பாத்துகிட்டு இருங்கன்னு சொன்னாலும் என்னால அப்படி இருக்க முடியலை. பேக்கிரவுண்டில என் வேலையை நான் செஞ்சுகிட்டுத்தான் இருந்தேன்னு.''

''அது இல்லை என் சந்தேகம்!''

''பின்னே... வேற என்ன சந்தேகம்?''



''நாயர் வக்கீல் நோட்டீஸ் விட்டதுல தான் சந்தோசம். ஒரு பக்கம் வக்கீல் நோட்டீஸ் விடறாக. இன்னொரு பக்கம் இந்த வீட்டு விசேஷத்துல முன்னால நின்னு எல்லாரையும் உபசரிக்கறாக...'' என்றாள்.

''இறைவி அதுக்கு நீதான் காரணம்'' என்றான் அறிவழகன் அலட்டிக் கொள்ளாமல்.

''நானா?''

''ஆமா! ஐடியா... குடுத்ததே நீதானே!'' என்றான் அறிவழகன்.

இறைவி சரேலென்று அவனிடமிருந்து விலகினாள். நிஜமாகவே அதிர்ந்து போய் அவனை வெறித்துப் பார்த்தாள்.

## 26

''வாங்க... நாயர்...!'' என்று வரவேற்றார் சாம்பசிவம்.

''வர்றேன்.. சார்!'' என்று கலகலப்பாய் உள்ளே நுழைந்தார் மனோகரன் நாயர்.

''என்ன... கல்யாண ஏற்பாடெல்லாம் எப்படிப் போயிட்டிருக்கு...!''

''அந்த ஏற்பாடெல்லாம்... நல்லாத்தான்... போயிட்டிருக்கு... ஆனா, அதுக்குள்ளே கொஞ்சம் குழப்பம் நடந்து போச்சு...'' என்றார் சாம்பசிவம்.

''ஓஹோ! அதான் ஒண்ணும் கலகலப்பைக் காணோம்'' என்றார் நாயர். பிறகு அவரே,

''அப்படி என்னதான் நடந்துச்சு?'' என்றார் நாயர்.

சாம்பசிவம் செந்திலுக்கும் பார்ட்னர்ஷிப் கொடுத்ததை தன் மகனுக்கு இறைவியின் மேல் நாட்டம் இருப்பதை எல்லாம் சொன்னார்.

அந்த செந்தில் பயலுக்கு அருமையான வாய்ப்புக் குடுத்து அதை அவன் பயன்படுத்திக்காம... குறுக்கு வழியில போக ஆரம்பிச்சுட்டான்'' என்று வருத்தப்பட்டார்.

''ஆமா...எங்கிட்டக் கூட ஏதோ கஸ்டமர் பிடிச்சுக் குடுக்கச் சொல்லிக் கேட்டான். நான் முடியாதுன்னுட் டேன்'' என்றார் நாயர்.

சாம்பசிவம் அதற்குப் பிறகு இறைவி வீட்டை விட்டு வெளியேறியதையும், நிலகவதியும் கூட வெளியேறி விட்டதையும் விவரமாகச் சொன்னார்.

நாயர் கலகலவென்று சிரித்தார்.

''ஐயோ! குட்டி ரொம்ப போல்டா இருக்கும் போலே இருக்கு...'' என்று. அந்த நேரம் அறிவழகனும் வந்து சேர்ந் தான்.

''அறிவழகா! நின்டே ஆளு பயங்கர போல்ட் மாதிரி இருக்கு'' என்று மறுபடியும் கலாட்டா செய்தார்.

அறிவழகன் உச்சுக் கொட்டினான். ''என்ன இருந்து என்ன செய்ய? எப்படியும் குறிச்ச முகூர்த்தத்துக்குள்ளே கல்யாணம் நடக்கணும். இல்லேன்னா அப்பாவோட கௌரவம் என்ன ஆகறது?'' என்று கவலைப்பட்டான்.

நாயரும் சாம்பசிவமும் சிரித்தார்கள்.

நாயர் ''எந்தா... அறிவழகா? அப்பா கௌரவத்துக்குக் கவலைப்படுதா? நின்டே... கல்யாணம் தள்ளிப் போகுன்னு கவலைப்படுதா...?'' என்று கேலி செய்தார்.

அறிவழகன் அலட்டிக் கொள்ளாமல் ''ரெண்டும்தான்'' என்றான்.



மறுபடியும் சிரித்தார்கள். புறப்படும் போது நாயர் அவன் தோளில் தட்டிக் கொடுத்து விட்டு சொன்னார்.

''ஆ... வக்கீல் நோட்டீஸ்... ஐடியா... நல்ல ஐடியா கேட்டயோ..!'' என்று.

அவர் போனதற்குப் பிறகு அறிவழகன் சிந்தனையில் ஆழ்ந்தான். நாயர் சொல்லி விட்டுப் போன வார்த்தைகளே அவனுக்குள் ஓடிக் கொண்டிருந்தது. அதிலிருந்து அவனுக் கும் ஏதோ ஒரு ஐடியா கிடைத்த மாதிரி இருந்தது.

அப்பாவிடம் போய் நின்றான்.

''சொல்லுப்பா...!'' என்றார்.

சொன்னான்.

''அப்பா! நாயர் மூலமா வக்கீல் நோட்டீஸ் விட வைப் போம்..''

''வக்கீல் நோட்டீஸ் விட்டா?''

''ரெண்டு விஷயம் செந்திலுக்குப் புரியும்... ஒண்ணு பார்ட்னர்ஷிப்ங்கறது விளையாட்டான விஷயமில்லே... அதுல இந்த மாதிரிப் பிரச்சினைகளும் உருவாகுங்கறது இன்னொண்ணு... அந்தச் சூழ்நிலையில எப்படியாவது என் உதவி கேட்டு வரணும்'' என்றான்.

''வரலேன்னா?'' என்றார் அப்பா!

அறிவழகன் குறும்பாகச் சிரித்தான். ''வரலேன்னா... என்ன? நாம போயிட வேண்டியதுதான்'' என்று.

அப்பாவும் புன்னகைத்தார்.

அறிவழகன் மேலும் சொன்னான். ''அப்பா...! நீங்க நாயர் அங்கிள்கிட்டே சொல்லுங்க...! நீங்க சொன்னா... ஒத்துக்குவாரு...!'' என்றான்.

அப்பா ஒரு பெருமூச்சு விட்டு விட்டு சொன்னார். ''அது ஒன்னும் பிரச்சினையில்லே! நாயர் ஹெல்ப் பண்ணுவாரு. ஆனா, உன் கிறுக்குப் புத்தி ஃபிரண்டு குறுக்கால திரும்பிக்கப் போறான்'' என்றார்.

''இல்லப்பா! இதுக்கு மேலயும் அவனுக்குத் தாங்கற சக்தியில்லை. இறைவி வெளிய போவான்னு அவன் எதிர்பாக்கவே இல்லை. அதைவிட அதிர்ச்சி நிலகவதி அத்தை வெளிய போனது. இப்பவே வெக்ஸ் ஆய்த்தான் இருக்கான்.''

**''பிலிசெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்**
**சால மிகுத்துப் பெயின்.**

அப்படீன்னு ஒரு குறள் கேட்டிருக்கீளா... மயிலிறகேயானாலும் கூட அளவுக்கு மேல ஏத்தினா வண்டி குடை சாய்ஞ்சடும். ஒரு கட்டத்துல இன்னும் ஒரேயொரு மயிலிறகை வைத்தாலும் கூட வண்டி சாயற நிலைமை வரும்பாங்களே! அது மாதிரி இன்னும் ஒரே ஒரு மில்லிகிராம் பிரச்சினைன்னாலும் சரி... பய நொந்து போயிடுவான். அப்ப நான் உள்ளே நுழைஞ்சர்றேன்'' என்றான்.

''என்னமோ... செய்!'' என்றார். எழுந்து உள்ளே போனவர் மனைவியிடம் சொன்னார்.

''ஏய்! அந்த இறைவிப் புள்ளை மேல் எவ்வளவு பைத்தியம் இருந்தா... இப்படித் திட்டம் போட்டுட்டு அலைவான்'' என்று சிரித்தார்.

அறிவழகனுக்கும் அது காதில் விழுந்தது. ஆனால் எதையும் காட்டிக் கொள்ளாதவன் போல் போய்விட்டான்.

தனியாய் அறைக்குப் போனவுடன் அவனும் நாயரிடம் பேசினான்.



நாயர் கடகடவென்று சிரித்தார். ஆனால் ஒத்துக் கொண்டார்.

வக்கீல் நோட்டீஸ் போய்ச் சேர்கிற நாளன்று வெங்கடாச்சலத்தையும் கூடவே இருக்கச் சொன்னான். அவரும் கூடவே இருந்தார்.

நோட்டீஸைப் பார்த்துத் துவண்டு போய் அமர்ந்திருந்தவனிடம் அவர்தான் சொன்னார்.

''தம்பி... செந்தில்... இது மாதிரி... விஷயமெல்லாம்... உன்னாலயும், என்னாலயும் சமாளிக்க முடியாது. நீ பேசாம அறிவழகன்கிட்டே பேசு...''

''எந்த முகத்தை வச்சுகிட்டு... பேச?'' என்றான் செந்தில்.

யோசனையைச் சொல்லும் போதே ''அது மட்டும் முடியவே முடியாது'' என்று சொல்லுவானோ என்று நினைத்துக் கொண்டுதான் சொன்னார். ஆனால் அவன் கேட்ட கேள்வியே அவன் கிட்டத்தட்ட உருகிப்போன நிலையில் இருக்கிறான் எனக் காட்டியது.

''சரி... வேண்டாம்! இறைவியிடம் பேசு! இறைவி அறிவழகன்கிட்ட பேசட்டும்'' என்றார்.

தயக்கத்துடன் ஒத்துக் கொண்டான். ஆனால் இறைவி லைனில் வந்ததுமே தனது சோகமெல்லாம் குரலில் இழைய கொட்டித் தீர்த்து விட்டான். உடனே இறைவியும் அறிவழகனிடம் தொடர்பு கொண்டாள்.

எல்லாவற்றையும் சொல்லிவிட்டு மேலும் சொன்னான். ''அதுக்கு மேல நடந்ததெல்லாம் உனக்குத் தெரியுமே!'' என்றான் அறிவழகன்.

இறைவி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். ''அதானே... பாத்தேன். எங்கே நான்தான் ஐடியா குடுத்தேன்னு சொல்லிவீங்களோன்னு பாத்தேன்.''

''இறைவி... தெரிந்தோ தெரியாமலோ ஐடியா குடுத்தது நீதான். நீ வக்கீல் நோட்டீஸ்ன்னு ஒன்னு விட்டதுக்கு அப்புறம்தான். செந்திலுக்கு நிலைமையோட விபரீதமே புரிஞ்சது. இது மாதிரி அவன் தனிப்பட்ட முறையில செஞ்ச விஷயம்... இப்படிப்பட்ட விளைவுகளையும் ஏற்படுத்தும்னு அவன் புரிஞ்சுக்கனுமில்லே.''

''புரிஞ்சுக்குவான். அதுக்காகத்தான் நாயர்கிட்டே சொல்லி மூணு லட்ச ரூபா கேட்கச் சொல்லுச்சு.'' என்றான்.

இப்போது இறைவி பொய்க்கோபத்துடன் விலகிக் கொண்டாள்.

''அப்புறம்... எதுக்கு... கல்யாணம் முடிச்சாத்தான் பிராணம் சால்வ் ஆகும்ன்னு பில்டப் பண்ணினீங்க.''

''ஏய்! இதென்ன கேள்வின்னு கேக்கறே! அப்படி பயமுறுத்தவும்தானே... உங்கண்ணன் வழிக்கு வந்தான்.''

''இல்லைங்க...! நானும், அம்மாவும் பிரிஞ்சு போன வுடனே அவன் யோசிக்க ஆரம்பிச்சுட்டான். அதிலயும் அம்மா வெளிய வந்தது அவனுக்குப் பெரிய ஷாக். ஒரு மாசம் கழிச்சு... வீட்டுக்குள்ளே நுழைஞ்சா... வீடு... வீடாவா... இருந்துச்சு. நீங்க வர்றதுக்குள்ளே அவசர அவசரமா... சுத்தம் செய்தோம்'' என்றாள்.

அப்போது செல்போன் அடித்தது.

இறைவி செல்போனை காதுக்குக் கொடுத்தாள்.

''ஏங்க... அண்ணன்... பேசறான்'' என்று கொடுத்தாள். செல்போனை காதுக்குக் கொடுத்த அறிவழகனின் நெற்றி சுருங்கியது. இறைவியைப் பார்த்து சொன்னான்.

''இறைவி உங்கண்ணன் பேசறான் குரல் என்னமோ இறுக்கமா... இருக்கு... அடுத்தது என்ன குண்டைப் போடலாம்னு யோசிப்பான் போல் இருக்கு...'' என்றான்.



இறைவியின் முகத்தில் கவலை கூடியது.

* * *

அறிவழகன் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டான்.

''செந்தில்... நான்தான் சொல்லிட்டேனே. நீ செஞ்ச எல்லாத்தையும் மன்னிச்சுட்டேன்னு'' என்றான் அறிவழகன்.

''நீங்க மறக்கலாம்... மச்சான்... நான் மறக்க முடியாதில்லே! நான் எவ்வளவு மடத்தனமெல்லாம் செய்திருக்கேன்னு ஒரு நேரம் இல்லாட்டியும் ஒரு நேரம் எனக்குத் தோணுமில்லே. அப்பக் குற்ற மனப்பான்மை என்னை கொல்லுமில்லே!'' என்றான்.

புதிதாக மச்சான் என்று அழைக்க ஆரம்பித்திருந்தான் ''வாங்க... போங்க!'' என்று பேச ஆரம்பித்திருந்தான் கேட்டால்.

''வீட்டு மாப்பிள்ளையாம்! மரியாதைக் குறைவாக பேசக் கூடாதாம்.''

அறிவழகன் ''டேய்! புதுசா... புதுசா... என்னடா... இதெல்லாம்'' என்று கேட்க.

''இல்லே மச்சான்...! இனிமே அப்படித்தான்'' என்றான். ஒரு நிமிடம் கழித்து ஒரு பெருமூச்சு விட்டு விட்டுச் சொன்னான்.

''போதும்... செஞ்ச மடத்தனமெல்லாம் போதும்... நீங்கன்னங்காட்டி என்னைக் காப்பாத்திவுட்டீங்க...'' என்றான்.

அப்போது அறிவழகன் நடந்த விஷயமெல்லாம் சொன்னான்.

''அது நிஜமான வக்கீல் நோட்டீஸ் இல்லை'' என்றான் அறிவழகன்.

''பரவாயில்லை. அப்படியும் வக்கீல் நோட்டீஸ் வரதுக்கான வாய்ப்பும் இருக்குன்னு எனக்குப் புரிஞ்சுதில்லே!'' என்றான்.

''இப்ப முடிவாக் கேக்கறேன்... என்னதான் சொல்றே'' என்றான் அறிவழகன்.

''அதேதான்... சொல்றேன்! எனக்குப் பார்ட்னர்ஷிப் வேண்டாம். அது மட்டுமில்ல மேனேஜர் ரேங்க்கும் வேண்டாம். எனக்கு வேற ஏதாவது கம்பெனியில கௌரவமா... ஒரு வேலை வாங்கிக் குடுங்க...'' என்றான்.

அறிவழகன் இறைவியைப் பார்த்தான். இறைவி வாய் திறந்து பேசவில்லை. மௌனமாக அமர்ந்திருந்தாள்.

''என்ன இறைவி!'' என்றான்.

''நீங்களும் அண்ணனும்தான் பேசி முடிவு செய்யணும்'' என்றாள்.

அறிவழகன் அப்பாவிடம் போய்ப் பேசினான். அவர் சிந்தனையுடன் சொன்னார்.

''அறிவழகா! இப்பத்தான் செந்தில் கரெக்டா யோசனை செய்ய ஆரம்பிச்சிருக்காப்ல... விட்ரு... அவன் போக்கில விட்ரு'' என்றார்.

அறிவழகன் திரும்பி வந்து செந்திலிடம் சொன்னான்.

''செந்தில் மச்சான்! எதுக்கும் ஒரு ரெண்டு நாள் டைம் குடுங்க... நானும் இறைவியும் அடுத்த வாரம் மலேஷியா... போறோம். அதுக்குள்ளே இந்த விஷயத்தை முடிச்சுக்கலாம்'' என்றான்.



அந்த சமயம் செந்தில் சற்றும் எதிர்பாராத விதமாக அறிவழகனைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

''அறிவு... உன்னை மாதிரி ஒரு நண்பன் கிடைச்சதும், நீயே என் சிஸ்டருக்கு ஹஸ்பெண்டா அமைஞ்சதும்... எனக்குக் கிடைச்ச வரங்கள் தெரியுமா?'' என்றான் நெகிழ்வுடன்.

அறிவழகனும் இதை எதிர்பார்க்கவில்லை. ஆனால், அவனும் நெகிழ்ந்து போய்க் கட்டிக் கொண்டான்.

''எப்பவும் நாம நண்பர்கள்தான்'' என்றான்.

இறைவி சகோதரன் விடைபெற்றுப் போனவுடன் கேட்டாள்.

''ஏங்க... என்ன முடிவு செய்யப் போறீங்க!''

''இறைவி...! யோசிக்கணும். இங்க பார்ட்னரா இருந்ததுக்கப்புறம்... அவன் வேற எந்தக் கம்பெனியில வேலை செஞ்சாலும் நல்லாயிருக்காது. ஏதாவது ஏற்பாடு செய்வோம்.'' என்றான் திரும்பி அவளைப் பார்த்து சிரித்தான்.

''போதும்... டூ மச் ஆஃப் சீரியஸ் டாக்கிங். பக்கத்துல வா...'' என்றான்.

''ஆரம்பிச்சுட்டீங்களா?''

''எங்க போய் ஆரம்பிக்கிறது? இன்னும் நல்ல நாளே குறிக்க மாட்டேங்கறாங்க'' என்றான்.

சற்று நேரம் இதே போல் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அறிவழகன் கேட்டான்.

''ஏய் இறைவி! அதென்ன... நான் மறுபடியும் பிக்சர்ல வந்ததுல இருந்து மேடம் எதுவும் பேசறதே இல்ல.''

அவள் வாஞ்சையாகப் புன்னகைத்தாள்!

"அதான்... பிக்சர்ல நீங்க வந்ததுக்கப்புறம் எனக்கு என்ன வேலை? என்ன இருந்தாலும் உங்க பிஸினஸ் மூளை எல்லாப் பிரச்சினைக்கும் ஏதாவது ஒரு தீர்வு கண்டு பிடிக்கும்னு எனக்குத் தெரியும்" என்றாள்.

"போச்சுரா... எல்லாப் பொறுப்பையும் என் மேல தள்ளி விட்டுட்டு... தப்பிச்சுக்கறீங்க..." என்றான்.

"தப்பிக்கலே! உங்க மேல அவ்வளவு நம்பிக்கை. எங்கண்ணன் இப்பத்தான் புரிஞ்சிருக்கான். நான் முதல்லயே உங்களைப் புரிஞ்சிருக்கேன்" என்றாள் இறைவி.

"தாங்க்ஸ்... இறைவி..." என்றான் தன் நன்றியை விதவித மாக வெளிப்படுத்தினான்.

அவளும் இழைந்து கொடுத்தாள். சற்று நேரத்துக்கு பிறகு.

"இறைவி! இந்த மாதிரி ஒரு சிச்சுவேஷன் வரும்... செந்தில் இந்த மாதிரி ஒரு முடிவு எடுப்பான்கிறதும் நான் எதிர்பார்த்ததுதான். அதனாலதான் ஜோசப்கிட்டே அந்த வொர்க் ஷாப்பை வாங்கினேன்" என்றான்.

தனது யோசனையையும் சொன்னான்.

இறைவி பிரமித்துப் போனாள். நிஜமாகவே தன் கண வனின் முன்யோசனை அவளுக்குள் ஆச்சரியமாக இருந்தது.

"இறைவி...! நெப்போலியன் செஸ் விளையாடும் போது ரெண்டு பக்க மூளையும் தானே விளையாடுவாராம். அது மாதிரி நம்மனோட கவுண்டர் பார்ட் மாதிரி சிந்திக்கணும். அது மாதிரி யோசிச்சேன். எனக்குத் தோணுச்சு. கண் டிப்பா... இந்த மாதிரி அனுபவங்களுக்குப் பிறகு செந்தில் கிட்டே ஒரு தெளிவு வரும். இப்படித்தான் முடிவெடுப் பான்னு யோசிச்சேன்" என்றான்.



"ஓ..!"

"ஆமா! செந்தில் இப்ப ஓரளவுக்குப் பக்குவமாயிருப் பாப்ல. இனிமே பொறுப்பாயிருப்பான். மெதுமெதுவான ஆனால் நிலைத்த முன்னேற்றம்னா என்னன்னு அவனுக் குப் புரிஞ்சு போச்சு. இனிமே அவன் நல்லா வருவான்" என்றான்.

இறைவியும் ஒத்துக் கொண்டாள். அப்படி ஒரு யோசனையை அறிவழகன் சொன்னான். மேலும் சொன் னான்.

"இறைவி! உனக்கு நான் சொன்ன யோசனை பிடிச் சிருக்கா.. இந்த யோசனையினால நாங்க ரெண்டு பேரும் எப்பவும் ஃப்ரெண்ட்ஸா இருப்போம். ரெண்டு பேரோட கௌரவமும் பாதிக்காம இருக்கும்" என்றான்.

"ஆமாங்க... நிஜமாவே ரொம்ப நல்ல ஐடியாங்க."

"அப்பப் பாராட்டு இல்லையா?"

"ம்... கண்டிப்பா..."

"அப்ப... எப்படிப் பாராட்டணும்னு சொல்றோம்... அது படி... பாராட்டணும்" என்றான்.

அது படியே பாராட்டினாள்.

## 27

அறிவழகன் குழுமங்களின் இணைப்பாக "திலகவதி என்ஜினியரிங் வொர்க்ஸ்" என்ற கம்பெனி அன்றைக்கு ஆரம்பிக்கப்பட்டது.

பூஜை போட்டார்கள்! விழாவின் ஆச்சரியம் என்ன வென்றால் நாயர் முக்கியமான விருந்தாளிகளில் ஒருவராக வந்திருந்தார்.

திருமணம் முடிந்த புதுமணப் பெண்ணுக்கேயுரிய மெருகோடும், லேசான வெட்கச் சிரிப்போடும் நடமாடிக் கொண்டிருந்தாள் இறைவி.

சாம்பசிவம்தான் ரிப்பன் வெட்டித் திறப்பு விழா செய்தார்.

போன வாரத்தில் ஒரு நாள் சாம்பசிவம் செந்திலிடம் கேட்டார்.

''ஏம்ப்பா! நான் பார்ட்னர்ஷிப் வேண்டாம்னு எதிர்த் தேன்னு கேள்விப்பட்டா... நீ விலகறதுன்னு முடிவு செஞ்சே'' என்றான்.

செந்தில் புன்னகைத்தான்.

''இல்லை... மாமா! ஒரு தொழிலைக் கஷ்டப்பட்டு வளர்த்தவங்களுக்குத்தான் அதோட அருமை புரியும். இடையில நுழையறவங்களுக்கு அதைப் பத்தி என்ன தெரியும்? எனக்கே தொழிலோட நன்மை தீமைகள் பத்தித் தெரியாமத்தானே நான் அப்படி ஒரு தப்பு செஞ்சேன். அது மட்டுமில்ல... இப்போ உறவுக்காரங்க வேற ஆயிட்டோம். அதனால ரிலேஷன் ஷிப் ஸ்ட்ரெயின் ஆகாம இருக்க ணும்னா... நான் தனியா ஏதாவது செய்வதுதான் நல்லது...'' என்றான்.

அன்றிரவு சாம்பசிவம் தன் மகனிடம் சொன்னார். ''அறிவழகா! இப்ப உன் மச்சான் நல்ல பக்குவத்துக்கு வந்திருக்காப்ல. நீ என்ன வேண்ணா அவனுக்கு செஞ்சு குடு. பிரச்சினை வராது'' என்றார்.



அறிவழகனுக்கும் செந்திலிடம் ஏற்பட்ட மாற்றம் நன்றாகவே புரிந்தது. அதோடு கூட இன்னொரு விஷயமும் புரிந்தது. அது இப்போதைய முடிவில் செந்தில்குமரன் தெளிவாக இருக்கிறான் என்பதுதான் அது. எனவே அவனும் தெளிவாக யோசித்துத்தான் அந்த முடிவுக்கு வந்தான்.

அறிவழகன் குழுமம் அந்த ஷெட்டை நில வாடகைக்கு செந்தில்குமரனுக்குக் கொடுக்கும். ஒரு ''டை அப்'' அமைப்பு என்பார்களே அது போல் கம்பெனியிலிருந்து கார்கள் அனுப்பப்படும். செந்தில்குமரன் தேவையான முறையில் பழுது பார்த்து அனுப்ப வேண்டும். அதற்கான தொகை கிடைக்கும். அது போக புதிய கார்கள் மற்றும் பழைய கார்கள் விற்பனையிலும் அவர்களுக்குக் கமிஷன் உண்டு.

செந்தில்குமரன் யோசித்தான். முதலில் ஒத்துக் கொள்வ தற்குத் தயங்கினான். ஆனால், அறிவழகன் சொன்னான்.

''செந்தில்! என் மச்சினன்னு ஆனதுக்கப்புறம் நீ எங்கயும் போயி எந்த ஒரு மேனேஜ்மென்டுக்கும் கீழே வேலை செய்யக்கூடாது. அது நல்லாயிருக்காது. என்கிட்ட வேலை செய்வதும் உனக்குப் பிடிக்கலேன்னா... விட்ரு... உன் னோட எண்ணமும் நியாயம்தான். அதனாலதான் இந்த ஏற்பாடு.''

செந்தில் கசப்பாகச் சிரித்தான்.

''அதாவது... நான் எந்தக் காரியத்தை உனக்குத் தெரியாம திருட்டுத் தனமா செஞ்சனோ அதையே வெளிப்படையா செய்யறதுக்கு எனக்கு வாய்ப்புக் குடுக்கறே!'' என்றான்.

அறிவழகன் ''அட என்னப்பா நீ எல்லாத்தையும் தப்பாவே எடுத்துக்கறே! உன்னோட ஐடியாவும் நல்ல ஐடியாதான். மெத்தட்தான் தப்பாய் போச்சு. விடு.

அதையே பேசிகிட்டு... அந்த சின்ன கன்ஸர்னுக்கு... நீயே முதலாளி. இதெல்லாம் சும்மா செய்யறேன்னு நினைச்சுக்காதே! ஏதோ நீங்க நிம்மதியா இருந்தா... உன் சிஸ்டரும் நிம்மதியா... இருப்பா...அவ்வளவுதான்'' என்றான்.

செந்தில்குமரனும் ஒத்துக் கொண்டான். அது மட்டுமில்ல கிட்டத்தட்ட ஏஜென்சி மாதிரி என்பதால் பெரிய அளவில் ரிஸ்க் இல்லை என்றும் புரிந்தது.

**"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண**
**நன்னயம் செய்து விடல்''**

என்பது மாதிரி தன் மைத்துனன் தான் செய்த தீமைகளையெல்லாம் தூரத் தள்ளி வைத்து விட்டுத் தனக்கு இப்படியொரு ஏற்பாடு செய்கிறான் என்று நன்றியறிதலையும் வெளிப்படுத்திக் கொண்டான்.

நாயர் மிக மகிழ்ச்சியாகக் கலந்து கொண்டார்.

''ஆனாலும்... அந்த சமயத்துல வயித்தைக் கலக்கிட்டீங்க... நாயர்'' என்று அவ்வப்போது கேலி செய்து கொண்டான் செந்தில்குமரன். அவரும் ''ஹோ ஹோ'' வென்று சிரிப்பார்.

எல்லாருக்கும் டிபன் ஏற்பாடு செய்திருந்தார்கள். விருந்தினர்கள் கிளம்பிய பின் அறிவழகனும், இறைவியும் மட்டும் சற்று நேரம் இருந்தார்கள்.

அறிவழகன் சகோதரி சகோதரனிடம் பேசிக் கொள்ளட்டும் என்று நினைத்தானோ என்னவோ பத்து நிமிடம் இடம் முழுதும் சுற்றிப் பார்த்து வேலையாட்களை அழைத்து ஆணைகள் பிறப்பித்துக் கொண்டிருந்தான்.

செந்தில்குமரன் நின்று பார்த்துக் கொண்டிருந்தான் திரும்பித் தங்கையிடம் புன்னகைத்தான்.



''ஏம்மா! எல்லா நேரமும் இப்படித்தான் மிரட்டுவானா?'' என்றான்.

அவள் லேசாக முகம் சிவக்க... ம்.. சில நேரம். அவர் மிரட்டுவாரு... சி... நேரம்... நான்...'' என்று முடிக்காமல் விட்டாள்.

செந்தில் கடகடவென்று சிரித்தான். ''ஐயோ! நீ எப்படி மிரட்டுவேன்னு எல்லாருக்கும் தெரிந்ததுதானே! வக்கீல் நோட்டீஸ் விடற ஆளாச்சே!'' என்றான்.

''அண்ணா! ப்ளீஸ்!'' என்ற அவள் நெளிய அந்த சமயம் அங்கே வந்த அறிவழகன் மனைவியை ஒட்டினாற் போல் நின்றான்.

''இல்லே... நான் கேட்டேன்... அவளை நீ மிரட்டுவியா. இல்லே...!''

அறிவழகன் சிரித்தான். ''விடப்பா! அதையெல்லாம் கேட்டுக்கிட்டு...! உனக்கும் கல்யாணம் ஆனா... புரியும்...'' என்றான்.

செந்தில் சிரித்தான்.

''பொண்ணு பார்க்க ஆரம்பிக்கலாமா?'' என்றான் அறிவழகன்.

''பாக்கலாம்.. பாக்கலாம்... இன்னும் ஒரு வருஷம் போகட்டும். அதுக்குள்ள எனக்கு ஒரு மருமகளோ... மருமகனோ... பொறக்கட்டும்.. ஆனா, பொண்ணு பாக்கறப்ப மட்டும்... ஒரு கண்டிஷன்...'' என்றான்.

''ம்... சொல்லு... சொல்லு!''

''பொண்ணுக்கு அண்ணன்... ம்... இருக்கலாமா... வேண்டாமா...? இருந்துட்டுப் போகட்டும். ஆனா என்னை மாதிரிக் கிறுக்குப் பயலா மட்டும் இருக்கக் கூடாது...'' என்றான்.

மூவரும் சிரித்தார்கள்.

அறிவழகன் குறுக்கிட்டு "அதிருக்கட்டும்! நானும் இறைவியும் நாளை மறுநாள் மலேஷியா கிளம்பறோம். ஒரு பத்து நாள் அங்க செலவு பண்ணிட்டு அப்புறம்தான் திரும்பறோம்" என்றான்.

"போயிட்டு... வாங்க! இங்க அத்தை மாமாவைப் போய் நான் அப்பப்ப கவனிச்சுக்கறேன்" என்றான் செந்தில்.

* * *

"ஹல்லோ...!" என்று குரல் கொடுத்து விட்டு கலகலவென சிரித்தாள் இறைவி.

"ஹல்லோ..." என்றது பச்சைக்கிளி!

"ஹைய்யோ... என்ன அழகாச் சொல்லுது..." என்று மகிழ்ந்து கொண்டாள்.

"பார்ட் பார்க்" என்ற இன்டோர் பறவைகள் பூங்கா ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அழகழகான பறவைகள்! பார்க்கப் பார்க்க கண்ணுக்கு விருந்தாக இருந்தன.

மலேஷியாவுக்கு வந்து ஒரு வாரமாகி இருந்தது. ஃபர்ஸ்ட் வேர்ல்ட் என்ற ஓட்டலில் தங்கியிருந்தார்கள் முதலில்.

"ஹேய்! இறைவி... இந்த ஹோட்டல்ல மட்டும் ஆறாயிரம் ரூம்ஸ் இருக்காம்.." என்றான் அறிவழகன்.

"ஒரே சமயத்துல... குறைந்தது பத்தாயிரம் பேராவது இங்க தங்குவாங்க... இல்லே!"

"ஆமா...! உலகின் முக்கியமான மனிதர்கள் எல்லாம் வந்தா தங்கறது இங்கதான்.." என்றான்.



ஹனிமூன் மலேஷியாவில் என்றவுடன் இறைவி மிகவும் யோசித்தாள்.

"இறைவி! இது அனாவசிய செலவு இல்லே! நீ ஒரு மாசம் கூட இருந்து பார்த்தேன்னா என்னோட உழைப்பு என்னன்னு உனக்கும் புரியும். எவ்வளவு டென்ஷன் இருக்கு. எத்தனை முடிவுகள் எடுக்க வேண்டியிருக்குன்னு புரியும். அதனால... என்னோட வருமானத்துல ஒரு பங்கை இந்த மாதிரி உலகப் பிரயாணங்களுக்காக ஒதுக்குவேன். அதுலயும் இந்தப் பிரயாணம் ரொம்ப முக்கியமான பிரயாணம்டி... என் கண்ணே!" என்று விளக்கம் சொல்லிச் சீண்டியபோது அவளுக்கும் புரிந்தது.

விமானத்தில் முதல் முதலாகப் பயணம் என்ற "த்ரில்" அவளுக்குள் இருந்தது.

"ஏங்க.. கூரையேறி கோழி பிடிக்கத் தெரியாதவன் எல்லாம் வானமேறி வைகுண்டம் போன கதை... தெரியுமா? அது மாதிரித்தான் நான் மலேஷியா போவது" என்று சிரித்தாள் இறைவி.

"ஹேய்! உனக்குக் கோழி பிடிக்கத் தெரியாட்டி என்ன? ஒரே பார்வையில ஆளைப் பிடிச்சுப் போடறதுக்குத் தெரியுதில்ல..." என்றான்.

அவள் கேள்விக் குறியாக அவனைப் பார்த்தாள்.

"பின்னே! முதல் முதலா... உங்க வீட்டுக் கதவு ஃப்ரேம் மாதிரியிருக்க... ஒரு ஓவியம் போல நின்னயே! அன்றைக்கு விழுந்த ஆள்தான்... நான்" என்றான்.

விமானம் மேலே கிளம்பியவுடன் சொன்னான். "லேசா காதடைக்கிற மாதிரி இருக்கும். கஷ்டமா இருந்தா.. என்னை பிடிச்சுக்கலாம். கோழியை அமுக்கற மாதிரி" என்று சிரித்தான்.

அப்படியொன்றும் பிரயாணம் கடினமானதாக இருக்க வில்லை. ஃபர்ஸ்ட் வோர்ல்ட் ஹோட்டலில் தங்கிக் கொண்டார்கள்.

ஜென்டிங் என்ற இடம் போனார்கள் நிறைய தீம் பார்க்குகள் காஸினோ என்று கை கோர்த்துக் கொண்டு சுற்றினார்கள்.

விருப்பம் போல் சுற்றினார்கள். மகிழ்ந்தார்கள். ஓய்வெடுத்தார்கள். உறவில் களித்தார்கள்.

"ஏங்க... பத்து மலை..ன்னு இருக்காமே... போய்ப் பார்க்கலாம்.." என்றார்கள்.

போனார்கள்.

அன்றைக்கு பக்தி மயமாய் இருந்தார்கள். இறைவி குகைக்குள் போய் மறுபடியும் படிகள் ஏறி "எவ்வளவு அழகுங்க..." என்று சிலிர்த்துக் கொண்டாள்.

"இறைவி! முருகன் தமிழ்க் கடவுள்னா... ரொம்ப ரசனையானவருன்னு நினைக்கறேன். பாரேன் கோபம் வந்தா... பழனியாம்... தெய்வானையைக் கல்யாணம் செய்த வுடனே... திருப்பரங்குன்றமாம். அப்புறம்.. வள்ளியோட பழமுதிர்ச்சோலையாம்" என்றான்.

"அதான்... முருகனை... குன்று தோராடும் குமரன் கறாங்க" என்றாள் இறைவி. உடனே ஏதோ நினைத்துக் கொண்டவள் போல.

"அதெல்லாம்... சரி! அவரு மாதிரி... ரெண்டு வைஃப் னெல்லாம் ஐடியா வச்சுக்காதிங்க..." என்றாள்.

"அது நீ என்டர்டெயின் பண்றதைப் பொறுத்து... இருக்கு..."



அவள் உடனே பக்கத்தில் கிடந்த கைப்பையை எடுத்து... பொய்யாக மிரட்ட அவன் பயந்தாற் போல் நடிக்க பிறகு அதைக் காரணமாகக் கொண்டு மறுபடியும் ஒரு நாடகம்.

"நாளைக்குக் கோலாலம்பூர்" என்றான்.

"பெட்ரோனாஸ்" என்ற இரட்டைக் கோபுரங்கள் மாதிரியான கட்டிடங்களைப் பார்த்தார்கள் ரசித்தார்கள்.

"யப்பா! எவ்வளவு உயரம்...!" என்றாள்.

"என்ன இருந்தாலும்... நம்ம தஞ்சாவூர் கோபுரம் மாதிரி வராதுங்க..." என்றான்.

"இங்க உள்ற போய்ப் பார்க்க முடியாதா?" என்றாள்.

"ம்ஹூம்...! ஆக்சுவலா... இது ஆபீஸ் மாதிரிக் கட்டிடம். உள்ளே அனுமதிக்க மாட்டாங்க... வா... வேற ஒரு கட்டிடம் இருக்கு... கே.எல். டவர்ஸ்னு பேரு. அங்க போலாம்.." என்றான்.

போனார்கள்!

"இங்க ஜன்னல்கள் இருக்கே. ஒவ்வொண்ணுலயும் நின்னு... கோலாலம்பூரை பார்க்கலாம்" என்றான்.

பார்த்தார்கள்!

லெஜண்ட் ஹோட்டலில் தங்கியிருந்தார்கள். அறைக்கு வந்தார்கள்.

ஒரு வகையில் களைப்பாகவும் இருந்தது. ஆனாலும் அந்தக் களைப்பிலும் ஒரு நிறைவு இருந்தது.

கட்டிலில் சாய்ந்தபடி "தமிழ் நேசன் பத்திரிகை படித்தாள் இறைவி எதிர்பாராத நேரம் அருகில் இழுத்தான். அவள் "பொத்" என்று விழுந்தாள்.

"இறைவி! போன முறை மலேஷியா வந்தப்ப... உன்னை ரொம்ப மிஸ் பண்ணினேன்னு ஒரே ஒரு ஏக்கம்தான். ஆனா,

அப்ப எனக்குத் தெரியலே! திரும்பி வந்தவுடனே பெரிய பிரச்சினைகள் வரப் போகுது. இட்டத்தட்ட நீயும் நானும் பிரியற நிலைமை ஏற்படும்னு...'' என்றான்.

இறைவி அவனது முன் நெற்றி முடியை நீவி விட்டாள்.

''அதெல்லாம்... மரணபரியந்தம். நம்மை யாரும் பிரிக்க முடியாது... அண்ணன் என்னமோ கெட்டிக்காரத்தனம்னு நினைச்சு... ஏதேதோ செஞ்சுட்டான்'' என்றாள்.

''இறைவி! ஒன்னு சொல்லட்டா! நீ உங்கண்ணனையும் விட்டுக் குடுக்காம... என்னையும் விட்டுக் குடுக்காம போராடினியே... அது எனக்கு ரொம்பப் பிடிச்சது. அதனாலதான்... நீ போட்ட ஆர்டருக்கெல்லாம் கட்டுப்பட்டேன்'' என்றான்.

''பொய் சொல்லாதீங்க....'' நீங்க பயங்கரமான ஆளு! வெங்கடாச்சல மாமாவைக் கொண்டு வந்து எங்க... வீட்டுக்குள்ளயே வேவு பார்த்த ஆளாச்சே!'' என்றாள். அவன் காதைப் பிடித்துத் திருகினாள்.

அவன் சிரித்தான்.

''இல்ல... இறைவி! என் உள்மனசு சொல்லுச்சு.. எப்படியும் இறைவி அண்ணன் இஷ்டத்துக்கெல்லாம்... ஆட மாட்டா... போராடுவான்னு... அதனாலதான். உங்களுக்கு மாரல் சப்போர்ட் மாதிரி அவரைக் கொண்டு வந்தேன்.. அவரும் அவரோட வயசுக்கேயுள்ள பக்குவத்தோட அப்பப்ப.. செந்திலுக்கு... புத்தி சொல்லி வழிக்குக் கொண்டு வந்தாரு...'' என்றான்.

மெல்ல அவள் கன்னத்தை நிமிர்த்திச் சிரித்தான்.

''அதென்ன... மரண பரியந்தம்னு நிறுத்திட்டே! அதுக்கப்புறமும் கூட ஆவியா வருவேன் தெரியுமா?'' என்றான்.



ஆக மொத்தம்... பிடிச்ச பிடியை விடமாட்டீக...'' என்றாள்.

''ஆம்மா...!'' என்றான் அழுத்தமாக. அதை செயலிலும் காட்டினான்.

அவளும் இணைந்தபடியே சொன்னாள். ''அப்படி ஆவியாவெல்லாம் வர வேண்டிய அவசியம் எனக்கு இருக்காது. உங்களை விட்டுட்டு நான் இருந்தாத்தானே...'' என்று அவள்முடிக்கு முன்னே வேண்டாம். அந்த மாதிரி எதுவும் பேசாதே'' என்று வாயடைத்தான்.

''ஆனாலும்... உங்களை மாதிரி... ஏமானி இருப்பாங்களா எப்பவோ... கூடப் படிச்ச ஃப்பிரண்டு... கிடைச்சவுடனே... ரொம்ப உயரத்துக்கு உயர்த்தி பார்ட்னராக்கி...'' என்னும் போது அவன் குறுக்கிட்டான்.

''இறைவி! வாழ்க்கையோட உயர்வான விஷயங்கல்ல... நட்பும் ஒன்று. செந்திலைப் பார்த்தவுடனே எங்களோட இனிமையான அந்தக் காலம்தான் தோணுச்சு. அவனையும் தப்பு சொல்லக் கூடாது. அவனும் புதுசாப் பணத்தைப் பார்த்தவுடன் கொஞ்சம் ஆசைப்பட்டுட்டான். இப்பத்தான் ரியலைஸ் பண்ணிட்டான் இல்ல...'' என்றான்.

''ஆமா! நான் கூட அண்ணன் பார்ட்னர்ஷிப் வேண்டாம்னு சொல்லுவான்னு எதிர்பார்க்கலை'' என்றாள்.

''ஆமா...! இப்பத்தான் உங்க அண்ணனுக்கு... உலகம் புரியுது'' என்றவன் மேலும் சொன்னான். ''இறைவி உன்கிட்டேயும் ஒரு விஷயம் எனக்கு ரொம்பப் பிடிச்சது. உறவுகள் தொடர்பான உன்னோட நிலைப்பாடு. உங்க அண்ணனையும் விட்டுக் கொடுக்கலே! அதே சமயம் உன் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கற உன்னோட உரிமையையும் நிலை நாட்டிகிட்டே. ஐ லைக்ட் இட்.''

''ஆமாங்க. மனசுக்குப் பிடிக்காத ஒரு வாழ்க்கையை நிர்ப்பந்தத்துக்காக ஏத்துகிட்டு புழுங்கிச் சாகறதை விட நிம்மதியா ஒத்தையில இருந்துட்டுப் போயிடலாமில்லே!''

அவன் சட்டென்று அவளைத் தள்ளிவிட்டான்.

''ஹேய்! நீ எந்திரி...!'' என்று மிரட்டினான். அவள் திடுக்கிட்டுப் போய்ப் பார்க்க...

''என்ன விளையாடறியா! நான் மலேஷியா எதுக்குக் கூட்டிட்டு வந்திருக்கேன். ஹனிமூன் கொண்டாட... தத்துவமாப் பேசறே! நீயென்ன பார்ட்னர்ஷிப் நியாயம் பேசிக் கிட்டிருக்கறே...'' என்றான்.

''சரி... அதுக்கு என்ன தண்டனை குடுக்கணுமோ... குடுங்க...'' என்றாள்.

கொடுத்தான். தண்டனையை வாங்கிக் கொண்ட அவள் மெல்ல முணுமுணுத்தாள்.

''நானும் உங்க பார்ட்னர்தான்...'' என்று.

......................!

''மொத்த வாழ்க்கைக்கும் பார்ட்னர்..'' என்றான். அவனும் மகிழ்ச்சியுடன் சிரித்தான்.